# பயிலுந் தமிழ்

(முதலாம் பாகம்)

1965

எம். வி. ஆசீர்வாதம்

# பயிலுந் தமிழ்

(உயர்தர வகுப்புகளுக்கு உரியது)

முதலாம் பாகம்

எம். வி. ஆசீர்வாதம்
யாழ்ப்பாணம்.

ஆசீர்வாதம் அச்சகம்,
யாழ்ப்பாணம்.

பத்தாம் பதிப்பு : 1965

உரிமை பதிவு]

[விலை ரூபா 2-00

# முன்னுரை

தமிழ், ஆங்கில கலாசாலைகளிற் கல்விபயிலும் மாணவர் தமிழ் மொழியிற் பயிற்சி பெறுவதற்கு உதவியாகச் சிறந்த ஒரு கைநூலில்லாது பெரிதும் இடர்ப்படுகின்றனர் நன்னூல் போன்ற இலக்கண நூல்களை மாணவர் வேம்பென வெறுக்கின்றனர். மலரின்றி மாலை கட்ட முயல்வதுபோல இலக்கண அறிவின்றி அவர்கள் பேச எழுத விழைதல் பயற்கனவாகும்.

உயர்தரவகுப்புகளிற் கற்பவர்களுக்கும் எழுத்துக்களின்பேதம் தெரிவதில்லை. அவர்கள் எழுதும் வசனங்களில் எழுத்து. சொல் வழுஉக்கள் மலிந்து காணப்படுகின்றன. சொற்களின் சரியான அர்த்தத்தை அறியாது அவைகளைப் பிழையாகப் பிரயோகிக்கின்றனர். சொற்றொடர்களைப் பொருட்பேதமின்றி வசனங்களில் அடுக்கிவிடுகின்றனர். உவமை, மரபு, முதுமொழி முதலாம் பொருட்செறிவுடைய சொற்றொடர்களை அழகுற அமைத்து எழுதத் தெரிவதில்லை. இவை காரணமாகஅன்னூர் பரீட்சைகளிற் சித்திபெறுவது முயற்கொம்பாகுமென்பது வெள்ளிடைமலை.

தமிழ்மொழியில் உள்ள இலக்கிய அமைதியை இலக்கண உருவமாக எடுத்துக் காட்டாமல், கசப்புடைய மருந்துக் குளிகையை வெல்லத்திற் பொதிந்து கொடுப்பதுபோல, மாணவர் இலகுவாகவும், விருப்புடனும் கற்றுக்கொள்ளக்கூடிய விதமாக எழுத்து, சொல், சொற்றொடர் என்ற பகுதிகள் விளக்கம், உதாரணம், எடுத்துக்காட்டு, பயிற்சியென வகுக்கப்பட்டு முதலாம் பாகமாக இந்நூலிற் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவை உயர்தர வகுப்புப் பரீட்சை வினாக்களுக்கு விடையளிப்பதற்குரிய அத்திவார அறிவைக் கொண்டிருக்கின்றனவென்பது இவற்றைப் படிப்பவர்க்குத் தெற்றெனப் புலனாகும்.

பல்லாயிரக் கணக்கான சொற்களையுடைய வளம்பொருந்திய தண்டமிழில் உள்ள சொற்கள் எல்லாம் இந்நூலில் அடங்கியிராவிடினும் அதிகமாகப் பயின்றுவரும் சொற்கள் வகைப்படுத்தப்பட்டுக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பல வருடங்களாக உயர்தர வகுப்புகளிற் தமிழ் கற்பித்த அனுபவத்தைக்கொண்டு நீண்டகாலமாக ஆராய்ந்து ஆக்கிய இந்நூல் உயர்தர மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் பெரிதும் பயன்படுமென்பது உறுதி.

இந்நூலை அச்சேற்றுங்கால் வேண்டிய உதவிகளைச் செய்த ஆசிரிய நண்பர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றி உரியதாகும்.

தமிழுலகு இந்நூலை உவந்தேற்று இம் முயற்சியை மேலும் மேலும் ஊக்கப்படுத்துவதாக.

29, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
26-5-65

'ஆக்கியோன்'

## உள்ளுறை

பக்கம்

## I எழுத்துப் பயிற்சி

1. எழுத்துறுப்புகள் (Formation of Letters) ... 1
2. ழகர, ளகர, லகரங்களின் வேறுபாடு (Paronyms—ழ, ள, ல) ... ... 2
3. ரகர, றகர வேறுபாடு (Paronyms—ர, ற) ... 11
4. ணகர, னகர வேறுபாடு (Paronyms—ண, ன) ... 16
5. வடமொழி எழுத்துப் பிரயோகம் (Sanscrit letters in Tamil) ... ... 19
6. வழூஉச்சொற்கள் (Erroneous Words) ... 24
7. எழுத்திலக்கணம் (Orthography) ... 28
மாதிரிகை வினாக்கள்—1 (Model Questions-1) 34
மாதிரிகை விடைகள்—1 (Model Answers-1) 35

## II சொற் பயிற்சி

1. எதிர்ப்பாற் சொற்கள் (Opposite Genders) ... 38
2. எதிர்ப்பொருட் சொற்கள் (Antonyms) ... 41
3. ஒரு பொருட் பல சொற்கள் (Synonyms) ... 46
4. பல பொருள் ஒரு சொல் (Homonyms) ... 52
5. பெயர்ச் சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வழங்கும் சில சொற்கள் ... 58
6. மரூஉச் சொற்கள் (Corrupted Words) ... 60
7. தொகைப் பெயர்கள் (Nouns with the proverbial Numeral adjectives) ... 62
8. பல சொற்களுக்கு ஒருசொற் பிரயோகம் (Single-words for groups of words) ... 66
9. சில அருஞ்சொற்கள் (Selected words) ... 69
10. வழக்கிலுள்ள சில மரபுச் சொற்கள் (Idiomatic-words) ... 72
11. சொல்லிலக்கணம் (Etymology) ... 77
மாதிரிகை வினாக்கள்—2 (Model Questions—2) 83
மாதிரிகை விடைகள்—2 (Model Answers—2) 84

## III. சொற்றொடர்ப் பயிற்சி


1. இணை மொழிகள் (Words used in Pairs) ... 86
2. இரட்டைக்கிளவி (OnomatopoticWords& Phrases) ... ... 91
3. சில அருஞ்சொற்றொடர்கள் (Seleceted Phrases) 94
4. உவமைச் சொற்றொடர் (Similes) ... 95
5. மரபுச்சொற்றொடர் (Idiomatic Phrases) ... 107
6. முதுமொழிகள் (Proverbs) ... 116
7. சிலேடை மொழிகள் (Pun) ... 128
8. சொற்றொடரிலக்கணம் (Syntax) ... 131

மாதிரிகை வினாக்கள்--3 (Model Questions--3) 145

மாதிரிகை விடைகள்--3 (Model Answers--3) 146

பரீட்சை வினாக்கள்(Examination Questions)... 148

# பயிலுந் தமிழ்

## I எழுத்துப் பயிற்சி

### 1 எழுத்துறுப்புகள்

விளக்கம் : மேற்றர வகுப்புகளிற் கற்கும் மாணவர்தாமும் எழுத்துக்களின் உறுப்புக்களைச் சரியாக அறிந்து கொள்ளாது பிழையாக எழுதுதல் சாதாரணமாகக் காணப்படுகின்றது. சிலர் "ஞெ" என்னும் எழுத்தை "ஜெ" என்று எழுதுகிறார்கள். இவ்விதமெழுதுவது தமிழ் மரபன்று. சில தமிழ் எழுத்துச் சீர்திருத்தவாதிகளும், சென்னை அரசாங்கத்தாரும் இதுபோன்ற பல மாற்றங்கள் செய்ய வேண்டுமெனப் பல காரணங்கள் காட்டிக் கிளர்ச்சி செய்கின்றனர். சிலவற்றை நடைமுறையிலுங் கொண்டு வந்திருக்கின்றனர். ஆனால், தமிழ்ச் சமூகம் முழுவதும் இதனை ஏற்றுக்கொள்ள வில்லை. ஏற்றுக் கொண்டாலும் பல்லாயிர வருடங்களாக வழங்கிவரும் மரபை மாற்றவும், அம் மரபுபற்றி எழுதப்பட்டுள்ள எண்ணற்கரிய நூல்களை மாற்றியமைக்கவும் அதிக காலஞ் செல்லும். ஆகவே, இப்போது வழக்கில் இருந்துவரும் எழுத்து வடிவங்களை மாணவர் திருத்தமாகத் தெரிந்து கொண்டு அவற்றை அப்படியே எழுதுவது நல்லது.

**உதாரணம் : 1**

பிழை : மன்னா ! நாலைந்து மாதங்களின் முன்னரே நீயெனக் குறைத்த வாக்குறுதியை நிறைவேற்றாது விட்ட காரண மென்னோ ? பெற்றோரை இழந்த எனக்கு உன்னையன் றிக் கதியாவார் வேறுயாருமுளரோ ?

சரி : மன்னா ! நாலைந்து மாதங்களின் முன்னே நீயெனக் குரைத்த வாக்குறுதியை நிறைவேற்றாது விட்ட காரண மென்னோ ? பெற்றோரை இழந்த எனக்கு உன்னையன் றிக் கதியாவார் வேறு யாருமுளரோ ?

மேல்வருவன சாதாரணமாகப் பிழையாக எழுதப்பட்டு வரும் எழுத்துக்களாகும்.

(எடுத்துக்காட்டு)

| சரி | பிழை | சரி | பிழை |
|---|---|---|---|
| ணா | ணா | ளை | ளை |
| ரா | ாா | னை | னை |
| று | றா | ொர | ொா |
| னா | னா | ெறு | ெறா |
| ஈ | ஈ | ெனு | ெனா |
| ெர | ொ | ெணு | ெணா |
| ேர | ோ | ேரா | ோா |
| ரை | ைா | ேறு | ேறா |
| லை | லை | ேனு | ேனா |

## பயிற்சி 1

1. மேல்வரும் பகுதிகளில் உள்ள எழுத்துறுப்புப் பிழைகளைத் திருத்தி எழுதுக:

   i "கர்லை மாலை கடவுளை வணங்கு"
   ii "பதறாத காரியம் சிதறாது"
   iii "பெற்றோரைப் பேணாப் பிள்ளை"
   iv "விளையாட்டு வினையாயும் முடியுமன்றோ ?"

2. மேல்வரும் எழுத்துக்களைச் சேர்த்து எழுதுக:

| | |
|---|---|
| ர் + ஆ = | ண் + ஆ = |
| ர் + ஏ = | ன் + ஒ = |
| ற் + ஒ = | ள் + ஐ = |
| ன் + ஆ = | ற் + ஆ = |

## 2. ழகர, ளகர, லகரங்களின் வேறுபாடு

விளக்கம்: வீதிகளிலுள்ள சுவர்களிலே "விழம்பரம் ஒட்டக் கூடாது" என்று விளம்பரம் எழுதப்பட்டிருப்பதையும், மலங்கழித்தற்குரிய இடங்களிலே "மலம் கழிக்கும் இடம்" என்று எழுதப்பட்டிருப்பதையும் நாம் கண்டுவருகிறோம். இவை ழகர ளகரங்களின் வேறுபாடுணராது எழுதப் பட்டவைகளாகும். சாதாரண வழக்கில் உள்ள ழகர, ளகர, லகரச் சொற்களையும், அவற்றின், பொருள்களையும் நன்ருக விளங்கிக் கொண்டால் இவ்வித பிழைகள் ஏற்படமாட்டா. ஆகவே, மேல்வரும் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் மனதிற் பதித்து அவற்றின் கருத்து விளங்கக் கூடிய வகையில் வசனங்கள் அமைத்துப் பழகிக்கொள்ள வேண்டும்.

### உதாரணம் : 2

**வினா :** கிழி, கிளி, கிலி என்பனவற்றின் பொருள் வேறுபாடு விளங்க ஒவ்வொரு சொல்லையும் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக.

**விடை :**

கிழி : தமிழாசிரியர் சங்கத்தார், ஆசிரியர்களிடம் சேகரித்த பணத்தைக்கொண்டு, இசைப்புலவர் சண்முகரத்தினம் அவர்களுக்குப் பொற்கிழி வழங்கி அவரைச் சன்மானித்தனர்.

கிளி : பேசும் பறவைகளில் ஒன்றாகிய கிளி பச்சை நிறமுடையதால், அது பச்சைக் கிளி என்று அழைக்கப்படுகின்றது.

கிலி : தனிமையாகக் காட்டுவழியே செல்பவர்கள் சிங்கம், புலி முதலிய காட்டுமிருகங்கள் எதிர்ப்படுமோ என்று கிலி கொள்வது இயல்பு.

(எடுத்துக்காட்டு)

## (அ) சாதாரணமாகவும் ஒத்தொலிப்பவைகளாகவும் வழங்கிவருஞ் சொற்கள்

அழகு-அலங்காரம், சருக்கரை
அளகு-கோழி, அன்னப்பெடை பறவைப்பேடு
அலகு-பறவைமூக்கு, எண், ஆயுதப்பொது, வாயின் அலகு
அழி-கெடு, இல்லாமற்செய், வைக்கோல்
அளி-வண்டு, அன்பு, சோறு, கொடு, அருள், கள்
அலி-பேடி
அழை-கூப்பிடு
அளை-குகை, புற்று, தயிர், வளை; குழையென்னேவல்
*அலை-திரை, கடல்; அலையென்னேவல்
அள்ளல்-அள்ளுதல்
அல்லல்-துன்பம்

ஆழம்-தாழ்வு
ஆலம்-ஒரு மரம், நஞ்சு
ஆழி-சக்கரம், கடல், மோதிரம்
ஆளி-யானை, யாளி, ஆள்வோன்
ஆலி-அமுதம், மழைத்துளி; களியென்னேவல்
ஆழ்-அமிழ், மூழ்கு, ஆழமாகு
ஆள்-ஆண்மகன்; அரசுசெய், பயன்படுத்து
ஆல்-ஒரு மரம்
இழ-இழந்துவிடு
இள-மெல்லிய, இளமை, மெலி, மென்மையாக்கு
இல-இல்லை
இலகு-இலேசு
இளகு-கரையென்னேவல்

இளக்கம்-இளகிய தன்மை
இலக்கம்-எண்
இலக்கு-குறி
இளக்கு-இளகச்செய்
இழவு-மரணம்
இலவு-இலவமரம்
இழி-தாழ், இறங்கு; இழியென்னேவல்
இலி-எலி, இல்லாதவன்
இழை-ஆபரணம்; இழையென்னேவல்
இளை-காவற்காடு; மெலி, மூச்சுவாங்கு, இளையென்வேவல்
இலை-மரங்களின் இலை, இல்லை
உழவு-உழுதல், முயற்சி, வருத்தம், பயிர்த்தொழில்
உளவு-வேவு
உலவு-உலவுதல், குழைதல்; குறை, உலாவு
உழி-இடம், ஏழாம் வேற்றுமை உருபு
உளி-இடம், ஏழாம்வேற்றுமை உருபு, ஓராயுதம்
உழு-உழுவென்னேவல்
உளு-புளுவால் அரிக்கப்படு
உழை-இடம், மான், ஏழாம் வேற்றுமை உருபு, முயன்று வேலைசெய்
உளை-சேறு; நோவென்னேவல்
உலை-நெருப்புள்ள அடுப்பு, சமைக்கும் நீருலை; உலையென்னேவல்
உழைத்தல்-முயற்சி செய்தல்
உளைத்தல்-ஒலித்தல்
உலைத்தல்-சீரழித்தல்
உள்ளம்-மனம்
உல்லம்-ஒரு மீன்
எள்ளி-நகைத்து
எல்லி-சூரியன்
ஒழி-அழி, நீக்கு
ஒளி-பிரகாசம், புகழ், அன்பு மறை
ஒலி-ஆரவாரம், ஓசை; ஒலியென்னேவல்
கள் மது
கல்-கல்லு; கல்லென்னேவல்
கழகம்-சங்கம்
கலகம் சண்டை
கழி-கோல், மிகுதி, நீக்கு
களி-மகிழ்ச்சி, வெறி, மாவிற் கிண்டிய உணவு
கலி-ஒரு பா, கடல், சனியன், ஒலி, ஆரவாரஞ்செய்
கழை-மூங்கில், கரும்பு, தடு
களை-உதவாத வேற்றுப் பயிர், இளை, நீக்கு
கலை-ஆண்மான், வித்தை, சந்திரனின்பங்கு, துரத்து
காலை-முற்பகல், அடைப்பு
காளை-எருது, ஆண்மகன்
காழி-ஓர் ஊர்
காளி-பேய்த்தலைவி
காலி-காட்டு முருக்கு, பசுக்கூட்டம், ஒரூர்
காழ்-வைரம், பகை, ஒளி; வைரமாகு
கால்-இடம், காற்று, பாதம், நாலிலொருபங்கு
கிழவி-வயது சென்றவள்
கிளவி-சொல்

கிழி-படம், பணமுடிச்சு, கிழித்துத் துண்டஞ்செய்
கிளி-ஒரு பறவை
கிலி-பயம்
கீழ்-கீழ்ப்பக்கம், தாழ்ந்த, இழிவான
கீள்-தோண்டு, கிழி
குழவி-பிள்ளை, அரைக்கஉதவும் உருளை
குளவி-ஈ
குலவி-உறவாடி
குழம்பு-நீர்த்தன்மையான கறி, மயங்கு, நிலைகலங்கு
குளம்பு-விலங்குகளின் பாதம்
குளம்-ஏரி, தடாகம்
குலம்-சாதி, இனம், கூட்டம்
குழி-பள்ளம், துவாரம், ஓட்டை, பள்ளமாக்கு
குளி-நீராடு
குழை-குண்டலம், தொளையுடைப் பொருள், குழையென்னேவல்
குலை-கொத்து, பழத்தொகுதி, ஈரற்குலை; குலையென்னேவல்
கூழம்-எள்ளு
கூளம்-தும்பு, தூசி
கூலம்-பலபண்டம்
கூழி-குள்ளப்பசு
கூளி-பேய், தூசி
கூலி-வேலை செய்து பெறும் பணம், வேலை செய்யும் ஆள்
கேழ்-நிறம்
கேள்-உறவு, இனம், செவிகொடு, உசாவு
கொழு-கலப்பை, ஊசி, மழு, செவி, கொழுப்பாகு
கொளு-பொருத்து, பொருத்திவை
கொலு-இராச சமுகம், உல்லாச வீற்றிருப்பு
கொழுத்து-கொழுப்பு மிகுந்து
கொளுத்து-தீ மூட்டு
கோளம்-உருண்டை
கோலம்-அலங்காரம்
கோழி-ஒரு பறவை
கோளி-கோள் சொல்பவன், கொள்பவன், ஆலமரம்
கோலி-உடும்பு விளையாட்டுக் குண்டு, வளைத்து
கோள்-புறங்கூற்று, குணம், வலிமை, கிரகம்
கோல் செங்கோல், தடி; கோலென்னேவல்
சழி-சப்பையாக்கு
சளி-கபம், பிசின்
சலி-இளை, துக்கப்படு
சுழி-வட்டம், பிள்ளையார்சுழி, வட்டமாக்கு, வளைத்துவிடு
சுளி-கோபி, கோணு
சூழ் சூழ்ந்துகொள், முற்றுகையிடு, ஆராய்
சூள்-சபதம், ஆணை
சூல்-கருப்பம்
சோழம்-தமிழ் நாடுகளில் ஒன்று
சோளம்-ஒரு தானியம்
தளம்-இலை, படை, வீட்டின் தளம்
தலம்-பூமி, இடம்
தழை-இலை, குழை, இலைவிட்டு வளர்
தளை-விலங்கு, கட்டு, செய்யுள் இலக்கணத்தொன்று; கட்டென்னேவல்
தலை-சிரம், இடம், தலைமை

தாழம்-ஆழம், தாழ்வு
தாளம்-இசையின் கால அளவு காட்டும் அடையாளம்
தாலம்-பனை, பூமி, தட்டம், அங்கை
தாழ்-கதவுத்தாழ், பணி, கீழாகு இறங்கு
தாள்-பாதம், முயற்சி, சிலபயிர் களின் இலை
தால்-தாலாட்டு, பிள்ளைக்கவி யுறுப்புகளில் ஒன்று
தாழி-பெரும்பானை, குடம், சாடி
தாளி-சமையலின் ஒருவகை, ஒரு வகைக்கள்ளி, பனை
தாலி-மணமகளின் அணி, மங் கல நாண்
தெழி-அதட்டு
தெளி-தெளிவடை, ஐயம் நீங்கு, சிதறு
தோழி-பாங்கி, சிநேகிதி
தோளி-தோளையுடையவள்
தோலி-ஒரு மீன், தழுக்குணிப் பெண்
தோழன்-பாங்கன், சிநேகிதன்
தோளன்-தோளையுடையவன்
தோலன்-தழுக்குணி
தோல்-சருமம்
தோள்-புயம்
நாழி-கொத்து, நாழிகை
நாளி-நாய், கள்
நாலி-கார்த்திகைப்பூ, முத்து
நீளம்-தூரம், நெடுமை
நீலம்-ஒரு நிறம், நவமணியி லொன்று
நுழை-வலைஞர்குலம், பலகணி, துவாரம், உட்செல், புகு
நுளை-ஈனம், குருடு

பழி-குற்றம், நிந்தை, விரோ தம்; பழியென்னேவல்
பலி-காணிக்கை, பூசை, தேவ ருணவு
பழு-ஒரு நிறம், முதிர், விலா, கனியென்னேவல்
பளு-பாரம்
பழம் கனி, பலன்
பலம்-வலி, உறுதி
பாழி-சிறுகுளம், நகர்
பாளி-பாலுறை, ஒரு மொழி
பாலி-அணை, பாற்பசு, பாலி யென்னேவல்
பாழை-மொழி
பாளை-மடல், பதர்
பாலை-ஒரு மரம், ஒரு மீன், பாலை நிலம்
பாழ்-அழிவு, வீண்
பாள்-கம்பி
பால் இடம், இயல்பு, குணம், பக்கம், பங்கு, பசுப் பால்
பீழை-துன்பம்
பீளை-கண் அழுக்கு
புளி-அறு சுவைகளில் ஒன்று, ஒரு மரம்
புலி-ஒரு மிருகம்
புழுகு புனுகு
புளுகு-பொய், விசித்திரம், வீம்பு பேசுதல்; புளு கென்னேவல்
புல்-புல்லு
புள்-பறவை
புழை-சிறுவாசல், துவாரம்
பூளை-ஒரு செடி

பொழி-ஊற்று, பெய்
பொளி-வரம்பு, கொத்து, துளை
பொலி-தூற்று நெல்; பொலி யென்னேவல்
மழை-மாரி, மேகம்
மலை-குன்று, மயங்கு; போர் செய்தல்
மால்-திருமால், பெருமை, மயக்கம்
மாள்-இற
மாளிகை-அரசன் மனை, பெருமனை
மாலிகை-மாலை, கழுத்தணி வரிசை
முழவு-மேளம், மத்தளம்
முளவு-முள்ளம்பன்றி
முழை-குகை
முளை-விதைமுளை, தோன்று
முலை-கொங்கை, மடி
மூழை-அகப்பை, மத்து
மூளை-தலை உட்பொருள், அறிவு
மூலை-கோணம், வீடு
வழமை-வழக்கம்
வளமை-செழிப்பு
வளம்-செழுமை, அழகு, செல்வம்
வலம்-வலப்பக்கம், ஏழாம் வேற்றுமையுருபு, இடம் வெற்றி
வழி-பாதை, தெரு, ஏழாம்வேற்றுமையுருபு, நிரம்பிவிழு
வளி-காற்று
வலி-ஒரு நோய், வல்லமை; வலியென்னேவல்
வழு-குற்றம்; வழுவென்னேவல்
வலு-பலம், கனம்

வழை-சுரபுன்னை
வளை-புற்று, முகட்டு விட்டம், வட்டமாக்கு, கோணலாக்கு, சூழ், முற்றுகையிடு
வலை-மீன் பிடிக்கும் வலை
வாழி-வாழ்த்து; வாழியென்னேவல்
வாளி-நீர் மொள்ளும் பாத்திரம், அம்பு, காதணி
வாலி-பலதேவன், அங்கதன் தந்தை
வாழை-வாழைமரம்
வாளை-ஒரு மீன்
வாலை-சுத்தம், இளம்பெண்
வாழ்-சீவி, உயிரோடிரு
வாள்-ஓராயுதம், ஒளி
வால்-சுத்தம், வெண்மை, தோகை, ஒருறுப்பு
விளக்கு-தீபம், தெளிவுபடுத்து
விலக்கு-வழு, தடை, தடு, தவிர்
விளங்கு-பிரகாசி
விலங்கு-மிருகம், தளை
விழா-கொண்டாட்டம், விழமாட்டா
விளா-ஒரு மரம்
விலா-பழு
விழி-கண், பார், கண்திற
விளி-ஏழாம்வேற்றுமை, கூப்பிடு இற
விழை-விரும்பு
விளை-வயல், பயிராகு, முதிர், விளைவி
விலை-கிரயம், விற்றல்
வெள்ளம்-தண்ணீர்ப் பெருக்கு
வெல்லம்-சருக்கரை

வேள்-ஆசை, மன்மதன், குமாரன்
வேல்-சூலம், மூங்கில்
வேழம் மூங்கில், கரும்பு, யானை
வேலம்-தோட்டம்
வேளை-பொழுது, ஒரு பூடு, காலம்
வேலை-கடல், உத்தியோகம்

---

## (ஆ) தம்முள் ஒத்தொலியாது தனித்துவரும் சில ழகர, ளகரச் சொற்கள்

உதாரணம்: 3

வினா: முழக்கம், முளக்கம், முலக்கம் என்னும் சொற்களில் சரியான சொல் எது?

விடை: முழக்கம் என்னும் சொல்லுக்கு ஒத்து ஒலிக்கும் முளக்கம், முலக்கம் என்னும் சொற்கள் தமிழ் மொழியில் கருத்தற்றவைகளாகும். ஒலித்தல், முழங்குதல் என்னும் கருத்துடைய முழக்கம் என்னும் சொல்லே சரியானது

### ழ

அழுகல்-கெடுதல், பதனழிதல், அழுகிய பொருள்
அழுகை-அழுதல்
அழுக்கு-அசுத்தம்
இழு-ஈர்த்தல்
இழுக்கு-குற்றம், வழு
ஈழம்-இலங்கை, கள்
ஊழல்-கெட்டது, அசுசியானது, நரகம்
ஊழி-உலகம், உலகு முடியுங் காலம்
ஊழ்-பழையவினை, பழமை
எழுத்து-அட்சரம்
ஏழை தரித்திரன்
ஒழுக்கம்-நடை, பண்பு, முறைமை
கழுதை-வேசரி
கிழக்கு-கீழ்த்திசை
கிழங்கு-வள்ளிக்கிழங்கு முதலிய கிழங்குகள்
குழல்-கொண்டை, கூந்தல், தொளையுடையபொருள்
கூழ் சோறு, ஒருவகை உணவு பயிர்
கொழுந்து-இளந்தளிர்
கொழும்பு-இலங்காபுரியின் தலைநகர்
கொழுப்பு-நிணம்
கோழை-கபம், கட்குளி, மனத்திட்பமில்லாதவன்
சூழல் இடம், சுற்றுப்புறம், ஆராய்தல்
செழித்தல் செழுமையடைதல்
தழல்-நெருப்பு
தாழை-ஒரு மரம்
தொழுகை-தொழுதல்
பழக்கம்-பலகாற் பயிலல்

பழமை-தொன்மை
பழுதை-கயிறு, வைக்கோற்புரி
பிழை-குற்றம்
புழை-உட்டொளை
புழக்கம்-வழக்கம், பயிலல்
புழு-கிருமி
புழுதி-மண்துகள்
பேழை-பெட்டி
பொழுது-காலம்
மழலை-குழந்தைகளின் திரம் பாதசொல்
முழக்கம்-ஒலி, மேகமுழக்கம்
முழம்-ஓர் அளவு
மேழி-கலப்பை, கலப்பையின் கைபிடி
யாழ்-வீணை
வழுக்குதல்-சறுக்குதல்
வழக்கம்-வழங்கிவருதல்
வாழ்க்கை-சீவியம்
வாழ்த்தல்-துதித்தல், ஆசி கூறுதல்
விழுகை-விழுதல்
விழ்-மர விழுது, வீழென்னேவல்

ள

அளத்தல்-அளவிடல்
இளமை-பாலப்பருவம்
களவு-திருட்டு
கிளம்பு-வெளிப்படு
குளிர்-குளிர்ச்சி
சுளகு-முறம்
தளிர்-தழை, துளிர்
தளர்ச்சி-சோர்வு
தாளாண்மை-ஊக்கம், முயற்சி
தூளி-புழுதி
தேள்-ஒரு செந்து, விருச்சிக இராசி
நுளம்பு-காய்ச்சல் உண்டு பண்ணும் ஒருவகைக் கொசு
பிளத்தல்-பிரித்தல், பாகுபடுத்துதல்
புளகம்-மகிழ்ச்சி, மயிர்சிலித்தல்
மாளல்-சாதல், மடிதல்
மிளகு-திரிகடுகத்தொன்று
மீளல்-திரும்புதல், திரும்ப எடுத்தல்
மூளல்-நெருப்பு மூளுதல், சினம் கிளம்புதல்
மேளம்-பறை
யாளி-சிங்கம், ஒரு மிருகம்
வளவு-குடியிருக்கும் நிலம்
விளிம்பு-ஓரம்
விளம்பல்-சொல்லல்
வெளி-ஆகாயம், மறைப்பற்ற இடம்

## (இ) பொருட்பேதமின்றி வருஞ் சில ழகர, ளகரச் சொற்கள்

### உதாரணம் : 4

வினா : "துழாய்மாலை" என்பதோ "துளாய்மாலை" என்பதோ சரியானது ?

விடை : துழாய், துளாய் என்னும் சொற்கள் இரண்டும் தமிழ் மொழியில் பொருட்பேதமின்றி வழங்கப்பட்டு வருவன வாகும். ஆகவே, இரண்டு சொற்களும் சரியானவை.

(மேல்வருஞ் சொற்கள் ழகர, ளகர வித்தியாசமின்றி ஒத்த பொருள் தருவனவாகும்.)

| | | | |
|---|---|---|---|
| இழிவு | — இளிவு | ... | தாழ்வு, நிந்தை |
| ஈழை | — ஈளை | ... | ஒரு நோய் |
| உழி | — உளி | ... | இடம் |
| உழுந்து | — உளுந்து | ... | ஒரு சிறு தானியம் |
| உழுவை | — உளுவை | ... | ஒருவகை மீன் |
| குழறுதல் | — குளறுதல் | ... | தெளிவின்றிப் பெருஞ் சத்தமிடுட்டுப் பேசுதல் |
| குழிகை | — குளிகை | ... | மாத்திரை |
| குழைச்சு | — குளைச்சு | ... | பொருத்து, சந்து |
| துழாய் | — துளாய் | ... | துளசி |
| பவழம் | — பவளம் | ... | நவமணிகளில் ஒன்று |
| வழும்பு | — வளும்பு | ... | நிணம் |

## பயிற்சி 2

1. மேல்வரும் இனசொற்களை அவற்றின் பொருள் வேற்றுமை தோன்ற வசனங்களில் அமைக்குக:

   ஒழி, ஒளி, ஒலி ; வாழ், வாள், வால் ; ஆழம், ஆலம் ;
   காழ், கால் ; கிழி, கிளி ; கழி, களி ; தழை, தளை

2. மேல்வரும் வசனத்திற் கீறிட்ட இடத்துக்கு, தரப்பட்ட சொற்களிற் பொருத்தமானதை வைத்து எழுதுக:

   (1) வயலில் நெல்— —யும், (விழை, விளை, விலை)

   (2) நெற்பயிரோடு— —ப் பூண்டுகளும் வளரும். (கழை, களை, கலை)

   (3) பவனத்தின் அசைவு— —எனப்படும். (வழி, வளி, வலி)

   (4) "யானையுண்ட— —ங் கனிபோல்" (விழா, விளா, விலா)

   (5) "— —அறிவித்தவன் இறைவன்" (எழுத்து, எளுத்து)

   (6) "— —வடை உருசி மிக்கது" (உழுந்து, உளுந்து)

3. மேல்வரும் வசனங்களிற் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்த மான சொற்கள் வைத்து எழுதுக:

   (அ) "ஏழை— கண்ணீர் கூரிய— ஒக்கும்"

(ஆ) "— — கல்வி சிலையில் — —"
(இ) சுக்கு — — திற்பலி என்பன திரிகடுகம் என்று கூறப்படும்.

4. மேல்வரும் வசனங்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக:
(அ) பளம் நளுவிப் பாலும் விளுந்தது.
(ஆ) விலையும் பயிரை முலையிலே தெரியும்.
(இ) உண்பது நாளி உடுப்பது நான்கு முலம்.
(ஈ) "குளல் இனிது யாள் இனிது என்பர் தம் மக்கல் மளலைச் சொள் கேழாதவர்"

## 3. ரகர, றகர வேறுபாடு

விளக்கம்: சில சொற்களின் ஓசை ஒற்றுமை காரணமாக ரகரத்தை றகரமாகவும், றகரத்தை ரகரமாகவும் மாற்றி எழுதுவதினுற் பொருள்வேறுபாடு உண்டாகிவிடுகின்றது. அதனுல், சாதாரண வழக்கில் உள்ள ரகர, றகரச் சொற்களை அறிந்து அவற்றைப் பிழையறப் பிரயோகிக்கத் தெரிந்து கொள்ள வேண்டும்.

### உதாரணம்: 5

வினு: (அ) பிரதேசம், பிறதேசம் என்னும் சொற்களின் பொருள் வேறுபாடு தோன்ற இவைகளை வசனங்களில் அமைக்குக.

விடை: பிரதேசம்: புல்வெளிகள் நிறைந்த பிரதேசங்களில் உள்ளவர்கள் மந்தை மேய்த்தலையே பிரதான தொழிலாகக் கொண்டிருக்கின்றனர்.

பிறதேசம்: இலங்கை மக்கள் பிறதேசங்களில் இருந்து வரும் உணவுப் பொருள்களையே நம்பி வாழ்கின்றனர்.

வினு: (ஆ) கரை என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் அமைய ஒவ்வொரு வசனத்தில் எழுதுக.

விடை: வினை: நாம் வெந்நீரிற் கோப்பித் தூளையிட்டு அந்நீரைக் கசப்புடையதாக்கி, பின்பு சீனியிட்டுக் கரைத்து இனிமையாக்கிப் பருகுகின்ருேம்.

பெயர்: மக்கள் மாலைவேளைகளிலே கடற்கரைக்குச் சென்று உலாவுவது நல்லது.

(எடுத்துக்காட்டு)

| | |
|---|---|
| அரம்-ஓர் ஆயுதம் ... | அறம்-தருமம் |
| அரவு-பாம்பு, ஒலி ... | அறவு-ஒடிவு, அறுபட்ட இடம் |
| அரன்-சிவன் ... | அறன்-அறம் |
| அரா-அரவு ... | அறா-நீங்காத |
| அரி-(வி) அறு, அரித்தல் (பெ) திருமால், அரிக்கட்டு, சிங்கம், வண்டு ... | அறி-தெரி, உணர் |
| அரு-(பெ) வடிவற்றது (வி) அரிய, அருமையான ... | அறு-நீங்கு, தொடர்பு நீக்கு, வெட்டு |
| அருகு-(வி) குறைவாக (பெ) பக்கம், விளிம்பு ... | அறுகு-ஒரு புல், ஆண்புலி |
| அருந்து-உண், பானஞ்செய் ... | அறுந்து-துண்டுபட்டு |
| அரை-(வி) மாவாக்கு அரையென்னேவல் (பெ) இரண்டில் ஒருபங்கு, இடை ... | அறை-(வி) அடி ; அறையென்னேவல் (பெ) இல்லத்தின் ஒருபகுதி |
| அலரி-ஒரு மரம், சூரியன் ... | அலறி-அழுது, கதறி |
| ஆரல்-ஒரு மீன், மதில் ... | ஆறல்-ஆறுதல், சூடுதணிதல் |
| ஆரை-ஒரு கீரை, வட்டத்தின் ஒருபகுதி, மதில், புற்பாய் ... | ஆறை-ஓர் ஊர் |
| ஆர-நிறைய ... | ஆற-சூடுதணிய |
| இர-பிச்சை எடு ... | இற-சா, கட |
| இரக்கை-பிச்சை எடுத்தல் ... | இறக்கை-சிறகு, சாவு |
| இரக்கம்-மனவுருக்கம் ... | இறக்கம்-சரிவு, இறக்கும் தன்மை |
| இரங்கு-மனமுருகு ... | இறங்கு-கீழே செல் |
| இரா-இரவு, இருக்கமாட்டா ... | இறா-இறால் |
| இரு-(வி) உட்கார், தங்கு (பெ) இரண்டு ... | இறு-செலுத்து, முடி, வடி |
| இருக்கு நால் வேதங்களில் ஒன்று ... | இறுக்கு இறுகச்செய் |
| இருப்பு-இருக்கை ... | இறுப்பு-கடன் செலுத்துகை |
| இரும்பு-கரும்பொன் ... | இறும்பு சிறுமலை |
| இரை-பட்சிகள், மிருகங்களின் உணவு, ஒலி, இருப்பு, இரையென்னேவல் ... | இறை (வி) வெளியேற்று, இழு, சிதறு (பெ) அரசன், கடவுள், சிறிது, வரி |
| ஈரல்-ஓர் உள்ளுறுப்பு ... | ஈறல்-துக்கம் |
| உரவு-வலிமை ... | உறவு-இனம், சேர்ந்து வாழ்தல் |

(பெ) = பெயர், (வி) = வினை

| | |
|---|---|
| உரல்-நெல் முதலிய குத்தும் கருவி | உறல்-பொருந்துதல் |
| உரி-(வி) கழற்று<br>(பெ) தோல் | உறி-பாத்திரங்கள் வைக்க உதவும் தொடங்குவடம் |
| உரிஞ்சு-உராய், தேய் | உறிஞ்சு உள்ளே இழு |
| உரு-உருவம், நிறம், அச்சம், மந்திரம் | உறு-மிகுதியான, பொருந்து |
| உருமு-இடி | உறுமு-கர்ச்சி, சீறு |
| உரை-(வி) சொல், உராய்<br>(பெ) அர்த்தம், சொல், புகழ் | உறை-(வி) தங்கு, இறுகு<br>(பெ) மூடி, உறைமோர் |
| ஊரல்-நகர்தல் | ஊறல்-ஊறுதல் |
| ஊரி-ஒருவகைச் சங்கு | ஊறி-கசிந்து |
| எரி-(வி) நெருப்பு மூட்டி அழி, சின<br>(பெ) நெருப்பு, நரகம் | எறி-உந்து, வீசு |
| ஏரல்-கிளிஞ்சில் | ஏறல்-ஏறுதல் |
| ஏரி-குளம், திமில் | ஏறி-மேலே சென்று |
| ஒரு-ஒன்று | ஒறு-வருத்து, தண்டி |
| ஒருத்தல்-யானை | ஒறுத்தல்-தண்டித்தல் |
| கர்ப்பம்-சினை | கற்பம்-உலக முடிவு |
| கர-மறை | கற-பிதுக்கு |
| கரம்-கை | கறம்-வர்மம் |
| கரி-(வி) உறை<br>(பெ) யானை, சாட்சி இருந்தை | கறி-(வி) கறியென்னேவல்<br>(பெ) உணவுவகை |
| கருப்பு-அரிது, குறுவிலை | கறுப்பு-கருமை, கோபம் |
| கரு-கருப்பம், முட்டை, கரிய | கறு-கோபி, கறுப்பாகு |
| கரை-(வி) கத்து, அழு, இல்லாமற் செய், கரையென்னேவல்<br>(பெ) சீலைவிளிம்பு, அருகு, கடற்கரை | கறை-களங்கம் |
| கீரி-ஒரு பிராணி | கீறி-பிளந்து |
| குரவர்-பெரியோர், குருக்கள் | குறவர்-ஒரு சாதியார் |
| குரங்கு-ஒரு மிருகம் | குறங்கு-தொடை |
| குரவை-ஒருவகைக் கூத்து | குறவை-ஒருவகை மீன் |
| குரு-குரவன், நிறம், கொப்புளம், பிதா, வியாழன் | குறு-குட்டையான, குறிய |
| குருகு-கொக்கு, அன்னம் | குறுகு-கிட்டு |
| குருக்கு-ஒரு செடி | குறுக்கு-சுருக்கு, ஊடு |

| | | |
|---|---|---|
| குரை-ஒலி, குரையென்னேவல் | ... | குறை-(வி) குறுக்கு, குறையச் செய்<br>(பெ) குற்றம், நிரம்பாமை |
| கூரியது-கூர்மையுள்ளது | ... | கூறியது-சொல்லியது |
| கூரை-வீட்டின் மேற்பகுதி | ... | கூறை-சேலை, மணமகளணியும் ஆடை |
| கோரல்-வேண்டுதல் | ... | கோறல்-கொல்லுதல் |
| சருகு-உலர்ந்த இலை | ... | சறுகு-வழுகு |
| சீரிய-சிறப்பான, மேன்மையுள்ள | ... | சீறிய-கோபித்த, இரைந்த |
| சூரை-ஒருசெடி, ஒருமீன், மது | ... | சூறை-கொள்ளை, சுழல்காற்று |
| செரி-சீரணி | ... | செறி-திணி, அடக்கு, நெருங்கு |
| செரு-போர் | ... | செறு-(வி) கோபி, அழி<br>(பெ) வயல் |
| சேரல்-இணைதல் | ... | சேறல்-செல்லுதல் |
| சொரி-பொழி | ... | சொறி-(வி) தேய், சொறியென்னேவல்<br>(பெ) ஒரு நோய், தினவு |
| தரி-தங்கு, அணி | ... | தறி-(வி) வெட்டு [தறி<br>(பெ) கம்பம், நெய்வோர் |
| திரம்-உறுதி | ... | திறம்-வலிமை, வகை, முதற்றரம் |
| திரை-(வி) திரள்<br>(பெ) அலை, எழினி, தோற் சுருக்கு | ... | திறை-சிற்றரசர் செலுத்தும் காணிக்கை |
| துர-செலுத்து | ... | துற-நீக்கு, பற்றுவிடு |
| துரத்தல்-செலுத்தல், தொடர்தல் | ... | துறத்தல்-நீக்குதல், துறவு பூணுதல் |
| துரவு-கிணறு | ... | துறவு-துறத்தல் |
| துரை-பிரபு | ... | துறை-கப்பல் தங்குமிடம், வண்ணான் துணி கழுவுமிடம் |
| தெரி-தேர், தோன்று, அறி | ... | தெறி-பெயர்ந்துவிழு, சுண்டு |
| தெரு-வீதி | ... | தெறு-வருத்து, அழி |
| தேரல்-தேர்தல், ஆராய்தல் | ... | தேறல்-தேன், சித்திபெறுதல், தெளிதல் |
| நரை-(வி) வெளு<br>(பெ) வெண்மயிர், கருமை கலந்த வெண்மை | ... | நறை-தேன், நறும்புகை, வாசனை |

| | | |
|---|---|---|
| நிரை-(வி) வரிவரியாக வை<br>(பெ) வரி, மந்தை | ... | நிறை-(வி) நிரப்பு, நிரவு<br>(பெ) பாரம், நிறுத்தல்<br>நிறைவு, மன அடக்கம் |
| நெரி-நெருக்கு, உடை | ... | நெறி-வழி, மார்க்கம் |
| பர-பிற, பரவு | ... | பற-சிறகடித்து மேல் எழு |
| பரந்தது-விருத்தியானது, பர<br>வியது | ... | பறந்தது-காற்றிற் சென்றது<br>விரைவாகச் சென்றது |
| பரம்பு பரம்பென்னேவல்<br>வரம்பு, விசாலி | ... | பறம்பு-ஒரு மலை |
| பரவை-கடல், வழக்கு | ... | பறவை-பட்சி |
| பரி-(வி) வருந்து, அன்புகூர்,<br>இரங்கு<br>(பெ) குதிரை | ...<br><br>... | பறி-(வி) பிடுங்கு, அபகரி,<br>தோண்டு<br>(பெ) பொன், மீன்பெய்<br>கருவி, கொள்ளை |
| பரை-பார்வதி [பாறை | ... | பறை-மேளம், ஒரு சாதி, |
| பாரை-ஒருகருவி, ஒருமீன், கற் | ... | பாறை-கற்பாறை |
| பிரதேசம் விரிந்த இடம் | .. | பிறதேசம்-வேற்றுநாடு [ரன் |
| பிரை-உறை, உறைமோர் | ... | பிறை-சந்திரன், குறைச்சந்தி |
| புரம்-நகர் | ... | புறம்-வெளி, பக்கம், முதுகு |
| புரவு-காத்தல் | ... | புறவு-புறா, போக்கு |
| பெரு-பெரிய | ... | பெறு-அடை, பெற்றுக்கொள் |
| பொரி-(வி) வறு, பொரியென்<br>னேவல்<br>(பெ) தானியப்பொரி | ... | பொறி-(வி) எழுது, செதுக்கு<br>(பெ) அடையாளம், இயந்<br>திரம், தீப்பொறி, எழுத்து,<br>எலிமுதலிய பிடிக்குங்கருவி |
| பொரு-போர் செய், ஒப்பாகு | ... | பொறு-சகி, சும, காத்திரு |
| பொருக்கு-மரமேற்றோல் | ... | பொறுக்கு-தெரிந்து எடு |
| பொருப்பு-மலை | ... | பொறுப்பு-உத்தரவாதம் |
| மர-உணர்ச்சியற்று, விறை | ... | மற-நினைவுஅறு, அயர் |
| மரம்-விருட்சம் | ... | மறம்-அதர்மம், வீரம் |
| மரி-சா | ... | மறி-(வி) தடு, மடக்கு<br>(பெ) பெண் ஆடு |
| மரு-வாசனை, ஒரு பூண்டு | ... | மறு-குற்றம், களங்கம், பிறிது |
| மரை-தாமரை, ஒரு மிருகம் | ... | மறை-(வி) ஒளி<br>(பெ) வேதம், இரகசியம் |
| மாரன்-மன்மதன் | ... | மாறன்-பாண்டியன், மாறுன<br>வன் |
| மாரி-மாரிகாலம் | ... | மாறி-மாற்றமடைந்து [வேகு |
| முருகு-வாசனை, அழகு, இளமை | ... | முறுகு-திருகு, பதங்கடந்து |

| | | |
|---|---|---|
| முருக்கு–ஒரு மரம், கொலை | ... | முறுக்கு–ஒருவகைச்சிற்றுண்டி<br>மிடுக்கு |
| வரை–(வி) எழுது,விவாகம்செய்<br>(பெ) மலை, முகில், அளவு | ... | வறை–துவட்டற்கறி, வறுவல் |
| வருத்தல்–துன்புறுத்தல் | ... | வறுத்தல்–வறுவல் செய்தல் |
| விருகு–தந்திரம், வஞ்சகம் | ... | விறகு–எரிகொள்ளி |
| விரல்–ஓர் உறுப்பு | ... | விறல்–வல்லமை, வெற்றி<br>மெய்ப்பாடு |
| விரை–விதை, வேகமாகு | ... | விறை–மரத்துப்போ, நடுங்கு |
| வெரு–அச்சம் | ... | வெறு–(வி)பகை<br>(பெ)வெறுமை |

## பயிற்சி 3

1. மேல்வரும் சோட்டுப் பதங்களை அவற்றின் பொருள் வேற்றுமை விளங்க வசனத்தில் அமைக்குக :
   *அரி, அறி ; பரி, பறி ; பொருப்பு. பொறுப்பு ; கூரிய, கூறிய ; வருத்தல், வறுத்தல்.*

2. மேல்வரும் சொற்களுக்குப் பொருள் தந்து விரும்பிய ஐந்து சொற்களை வசனத்தில் அமைத்துக்காட்டுக :
   அறம், குரவர், தேறல், பிரதேசம், நெரி, பறி, திறை, பரவை

3. மேல்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வர ஒவ்வொன்றையும் இவ்விரண்டு வசனங்களில் அமைக்குக :
   *மறை, நிரை, அரி, உரை*

---

## 4. ணகர, னகர வேறுபாடு

**விளக்கம் :** ணகர, னகரங்களின் வேறுபாட்டை உணராது சொற்பிரயோகஞ் செய்வதினுல் ஏற்படும் பிழைகளை நீக்கச் சாதாரண வழக்கில் உள்ள ணகர, னகரச் சொற்களையும் அவற்றின் பொருள்களையும் அறிந்து அவற்றைப் பிழையறப் பிரயோகிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்.

## உதாரணம் : 6

வினா : வாணம், வானம் என்னும் சொற்களின் பொருள் வேறுபாடு விளங்க அவற்றை வசனத்தில் அமைக்குக.

விடை : வாண விளையாட்டுகளில் ஒன்றாகிய மத்தாப்பு வாணம், வானத்தை நோக்கி உயரச் சென்றமை எல்லோருக்கும் ஆனந்தத்தைக் கொடுத்தது.

### (எடுத்துக்காட்டு)

| | |
|---|---|
| அண்ணம்-உள்நாக்கு, மேல்வாய் ... | அன்னம்-சோறு, கவரிமா, ஒரு புள் |
| அண்மை-அணிமை, அருகு ... | அன்மை-அல்லாமை |
| அணு-உயிர், சிறுமை, நுண்மை... | அனு-கதுப்பு, தொடர்ச்சி |
| அண்ணார்-பகைவர் ... | அன்னார்-அப்படிப்பட்டவர் |
| அரண்-காவல், மதில் ... | அரன்-சிவன் |
| ஆண்-ஆண்மகன் ... | ஆன்-பசு |
| ஆணி-எழுத்தாணி, இரும்பாணி ... | ஆனி-ஒருமாதம், கேடு |
| ஆணை-சத்தியம், ஏவல் ... | ஆனை-யானை |
| இணைதல்-சேர்தல் ... | இனைதல்-இறங்குதல்; |
| உண்ணி-ஒரு செந்து ... | உன்னி-நினைத்து, குதிரை |
| உண்ணல்-புசித்தல் ... | உன்னல்-நினைத்தல் |
| ஊண்-உணவு ... | ஊன்-இறைச்சி |
| எவண்-எவ்விடம் ... | எவன்-யார், ஆர் |
| எண்-இலக்கம், நினை, கணிதம் ... | என்-எனது |
| ஏணம்-மான், எலும்பு ... | ஏனம்-பன்றி |
| ஏணை-சீலைத்தொட்டில் ... | ஏனை-ஒழிந்த |
| கணம்-காலநுட்பம், கூட்டம், பிரகாசம் ... | கனம்-அகலம், தடிப்பு, சீர்மை, கூட்டம் |
| கணி-வேங்கைமரம், கணியென்னேவல் ... | கனி-பழம், தித்திப்பு |
| கணை-அம்பு, திரட்டு, ஒரு நோய் ... | கனை-ஒலி, கனையென்னேவல் |
| கண்ணன்-திருமால் ... | கன்னன்-குந்தியின் முதல் மகன் |
| கண்ணி-அரும்பு, மாலை, பூங்கொத்து, கண்ணையுடையவள் ... | கன்னி-குமரி, இளமை |

| | |
|---|---|
| காணம்-செக்கு, கொள்ளு, பொற்காசு | கானம்-காடு, இசைப்பாட்டு |
| காணல்-பார்த்தல் | கானல்-காங்கை, பேய்த்தேர் |
| காண்-பார் | கான்-காடு, மணம், சலதாரை |
| குணி-ஊமை, பண்பி | குனி-வில், குனியென்னேவல் |
| கோண்-வளை | கோன்-அரசன் |
| சணம்-கணம், பொழுது | சனம்-மக்கள் |
| சுணை-சுரணை | சுனை-நீரூற்று, குளம் |
| சுண்ணம்-சுட்டசாந்து, புழுதி | சுன்னம்-வட்டம் |
| தணி-ஆறு, குறை | தனி-தனிமையான |
| தண்மை-குளிர்மை | தன்மை-குணம், மூவிடத்தொன்று |
| தண்-குளிர் | தன்-தனது |
| திணை-சாதி, ஒழுக்கம் | தினை-ஒரு தானியம் |
| துணி-துணியென்னேவல், ஏணி, துண்டம், சீலை | துனி-அச்சம், துன்பம், கோபம் |
| துணை-அளவு, ஒப்பு, இரண்டு சகாயம் | துனை-நெருப்பு, விரைவு |
| நாணம்-வெட்கம் | நானம்-முழுக்கு. கத்தூரி |
| நாண்-கயிறு, வெட்கம் | நான்-தன்மையொருமைப் பெயர் |
| பணி-ஆபரணம்,பாம்பு, ஏவல் தொழில், பணியென்னேவல் | பனி-அச்சம், குளிர், துன்பம், நடுக்கம் |
| பணை பருமை, பந்தி, மூங்கில் | பனை-ஒருமரம் |
| பண்ணல்-செய்தல் | பன்னல்-சொல்லுதல் |
| பண்-இசைப்பாட்டு, இராகம் | பன்-ஒருவகைப்புல் |
| பாணி-கை,மது,சாறு, தன்மை | பானி-படை, பானஞ்செய்வோன் |
| பாணம்-அம்பு | பானம்-கள், பருகுவன |
| பிணை-கட்டு, ஆடை, உத்தரவாதம், சில விலங்குகளின் பெண் | பினை-ஒன்றோடொன்று சேரென்னேவல் |
| புணை-தெப்பம், மூங்கில் | புனை-நீர், சீலை, புதுமை |
| புண்கண்-ஊன்கண் | புன்கண்-துன்பம், நோய், மெலிவு |
| பேண்-காப்பாற்று | பேன்-ஒரு செந்து |
| மணம்-வாசனை, கலியாணம் | மனம்-உள்ளம் |
| மணை-மழுங்கல், பாதபடி, வதுவைத் திண்ணை | மனை-வீடு, மனைவி |

| | |
|---|---|
| மண்–பூமி ... | ... மன்–அரசன், ஓரிடைச்சொல் |
| மண்ணவன்–மனிதன் | ... மன்னவன்–அரசன் |
| மாணி–பிரமசாரி, குறள் | ... மானி–மானமுடையோன் |
| மாண்–மாட்சிமை | ... மான்–ஒரு மிருகம் |
| வாணம்–அம்பு, மத்தாப்பு முதலியன ... | ... வானம்–ஆகாயம் |
| வண்மை–அழகு, ஈகை, வளமை... | வன்மை கருத்து, வலி |

## பயிற்சி 4

1. மேல்வருஞ் சொற்களின் கருத்தை எழுதுக:
   காணம், கானம், நாண், புணை, கானல், வண்மை, வன்மை.

2. மேல்வருஞ் சோட்டுப் பதங்களின் வேறுபாடு விளங்க ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக:
   தணி, தனி; காண், கான்; அரண், அரன்; ஆணி, ஆனி; சணம், சனம்.

3. மேல்வரும் வசனத்திற் கீறிட்ட இடத்துக்கு அடைப்புக் குறிக்குள் இருக்கும் சொற்களிற் பொருத்தமானதை வைத்து எழுதுக:
   (1) பூவோடு கூடிய நாரும்——பெறும். (மணம், மனம்)
   (2) துணை போனாலும்——போகாதே. (பினை, பிணை)
   (3) முகில் அற்ற——நீலநிறமாகத் தோன்றும். (வாணம், வானம்)
   (4) —உறக்கமின்றி உழைத்தவர் உயர்வடைந்தார். (ஊண், ஊன்)

---

# 5 வடமொழி எழுத்துப் பிரயோகம்

**விளக்கம்:** வடமொழிச் சொற்களைத் தமிழில் வழங்கும்போது அச் சொற்களில் உள்ள வடமொழி எழுத்துக்களைத் தமிழ் உருவமாக்கி எழுதுவது சிறந்ததாகும். ஆகவே, தமிழிற் சாதாரணமாக வழங்கும் வட எழுத்துக்களையும் அவைகளுக்கு இணையான தமிழ் எழுத்துக்களையும் அறிந்து அவற்றைப் பிரயோகிக்கத் தெரிந்துகொள்ள வேண்டும்.

உதாரணம் : 7

வடஎழுத்து விரவியது :

" வேஷதாரிகள் சாஸ்திர முறைப்படி பூஜைகள் புரிந்து ஜாலம் செய்யினும் சிருஷ்டிகர் மட்டில் அவர்களது ஹிதயம் பயப்பாடுடையதாயும் மோக்ஷம் அடைவது பற்றி அவஸ்தைப் படுவதாயுமே இருக்கும் "

தமிழ் எழுத்துக்களால் ஆக்கப்பட்டது :

" வேடதாரிகள் சாத்திர முறைப்படி பூசைகள் புரிந்து சாலம் செய்யினும், சிருட்டிகர் மட்டில் அவர்களது இதயம் பயப்பாடுடையதாயும், மோட்சம் அடைவதுபற்றி அவத்தைப் படுவதாயுமே இருக்கும் "

ஜ =ச, ய
ஷ = ட, ச
ஸ = த, ச
ஹ = அ
க்ஷ = ட்ச, ச், ச

## (அ) ஜ, ஷ, ஸ, ஹ, க்ஷ என்னும் எழுத்துக்களையுடைய வடமொழிச் சொற்களின் தமிழாக்கம்

(எடுத்துக்காட்டு)

ஜ=ச, ய

| வடமொழி | தமிழாக்கம் | வடமொழி | தமிழாக்கம் |
|---|---|---|---|
| ஜலம் | –சலம் | ராஜ்யம் | –இராச்சியம் |
| ஜனம் | –சனம் | சமாஜம் | –சமாசம் |
| ஜகம் | –சகம் | விஜயன் | –விசயன் |
| ஜடம் | –சடம் | துவஜம் | –துவசம் |
| ஜங்கமம் | –சங்கமம் | ஜாதி | –சாதி |
| ஜநகன் | –சனகன் | ஜாலம் | –சாலம் |
| ஜனனம் | –சன்னம் | ஜாதகம் | –சாதகம் |
| ஜன்னி | –சன்னி | ஜாக்கிரதை | –சாக்கிரதை |
| ஜயம் | –சயம் | ஜீவன் | –சீவன் |
| அஜம் | –அசம் | ஜீவியம் | –சீவியம் |
| அம்புஜம் | –அம்புயம், அம்புசம் | ஜீரணம் | –சீரணம் |
| | | ஜுவாலை | –சுவாலை |

| | | | |
|---|---|---|---|
| இராஜன் | -இராசன் | ஜெந்து | -செந்து |
| பங்கஜம் | -பங்கயம், பங்கசம் | ஜெயம் | -செயம் |
| | | ஜெபம் | -செபம் |
| பீஜம் | -பீசம் | ஜென்மம் | -சென்மம் |
| புஜம் | -புயம், புசம் | பிரஜை | -பிரசை |
| புஜங்கம் | -புயங்கம், புசங்கம் | பூஜை | -பூசை |
| | | ஜோதி | -சோதி |
| போஜனம் | -போசனம் | ஜோடி | -சோடி |

### ஷ=ட, ச

| | | | |
|---|---|---|---|
| அஷ்டம் | -அட்டம் | கஷ்டம் | -கட்டம் |
| அனுஷ்டானம் | -அனுட்டானம் | கிருஷ்ணன் | -கிருட்டிணன் |
| அதிஷ்டம் | -அதிட்டம் | குஷ்டம் | -குட்டம் |
| இஷ்டம் | இட்டம் | சந்தோஷம் | -சந்தோடம் |
| சிரேஷ்டம் | -சிரேட்டம் | சீஷன் | -சீடன் |
| சிருஷ்டி | -சிருட்டி | சேஷம் | -சேடம் |
| சேஷ்டை | -சேட்டை | தூஷணம் | -தூடணம் |
| திருஷ்டி | -திருட்டி | நிமிஷம் | -நிமிடம் |
| திருஷ்டாந்தம் | -திருட்டாந்தம் | புருஷன் | -புருடன் |
| திஷ்டி | -திட்டி | பொக்கிஷம் | -பொக்கிசம் |
| துஷ்டன் | -துட்டன் | வருஷம் | -வருடம் |
| நஷ்டம் | -நட்டம் | விஷம் | -விடம் |
| நிஷ்டூரம் | -நிட்டூரம் | வேஷம் | -வேடம் |
| புஷ்பம் | -புட்பம் | அபிஷேகம் | -அபிடேகம் |
| பாஷை | -பாடை | ஷண்முகம் | -சண்முகம் |
| ஆதிஷேசன் | -ஆதிசேடன் | ரிஷி | -இருடி |
| ஒளஷதம் | -ஒளடதம் | | |

### ஸ=த, ச

| | | | |
|---|---|---|---|
| அஸ்திவாரம் | -அத்திவாரம் | புஸ்தகம் | -புத்தகம் |
| அஸ்திரம் | -அத்திரம் | மத்தியஸ்தன் | -மத்தியத்தன் |
| அஸ்தமனம் | -அத்தமனம் | மஸ்தகம் | -மத்தகம் |
| அவஸ்தை | -அவத்தை | வஸ்து | -வத்து |
| உத்ஸவம் | -உத்சவம், உற்சவம் | வாஸம் | -வாசம் |
| | | விஸ்தாரம் | -வித்தாரம் |
| கஸ்தூரி | -கத்தூரி | ஸபா | -சபை |
| சரஸ்வதி | -சரசுவதி | ஸ்வாமி | -சுவாமி |
| சாஸ்திரம் | -சாத்திரம் | ஸக்தி | -சக்தி, சத்தி |
| தபஸ் | -தபசு | ஸப்தம் | -சத்தம், சப்தம் |

### ஹ=அ

"ஹ" என்னும் வட எழுத்து மொழி முதலில் தமிழ் உருவ மாகும்போது மெய்யெழுத்து மறைய அதனோடு சேர்ந்து நின்ற உயிரெழுத்து மாத்திரம் எழுதப்படும்.

| | | | |
|---|---|---|---|
| ஹரி | –அரி | ஹிதம் | –இதம் |
| ஹரிசனம் | –அரிசனம் | ஹிருதயம் | –இருதயம் |
| ஹனுமன் | –அனுமன் | ஹீனம் | –ஈனம் |
| ஹாரம் | –ஆரம் | ஹேது | –ஏது |
| ஹிமம் | –இமம் | ஹோமம் | –ஓமம் |
| | | ஸ்நேகம் | –சிநேகிதம் |

### ஷ=ட்ச, ச், க்

| | | | |
|---|---|---|---|
| க்ஷணம் | –சணம், கணம் | லக்ஷ்மி | –இலட்சுமி, இலக்குமி |
| பக்ஷணம் | –பட்சணம் | தீக்ஷா | –தீட்சை |
| பக்ஷி | –பட்சி | பிக்ஷா | –பிச்சை |
| அக்ஷரம் | –அட்சரம் | தாக்ஷணியம் | –தாட்சணியம் |
| க்ஷேமம் | –சேமம் | பரீக்ஷை | –பரீட்சை |
| மோக்ஷம் | –மோட்சம் | சூக்ஷ்மம் | –சூட்சம் |

## (ஆ) சில ரகர, லகர வடமொழிச் சொற்களின் தமிழாக்கம்

**விளக்கம் :** தமிழில் ரகர, லகரங்கள் சொற்களின் முன்னர் வருவதில்லை. லகர ரகரத்தை முதலாகவுடைய வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கப்படும் போது தமக்கு முன்னர் உரிய உயிர் எழுத்துக்கள் பெற்று வழங்கப்படும்.

**உதாரணம் : 8**

**வடசொல் விரவியது :** "அன்புள்ள ருக்மணி, ராத்திரி லக்குமியும், ரம்பையும் ராவணனுடன் ரங்கத்தில் இருந்து இங்கு வரக் கனவு கண்டேன்"

**தமிழ் உருவமாக்கப்பட்டது :** "அன்புள்ள உருக்குமணி, இராத்திரி இலக்குமியும், அரம்பையும் இராவணனுடன் அரங்கத்தில் இருந்து இங்கு வரக் கனவு கண்டேன்"

(எடுத்துக்காட்டு)

| | | | |
|---|---|---|---|
| ரகசியம் | –இரகசியம் | ரதம் | –இரதம் |
| ரங்கம் | –அரங்கம் | ரதி | –இரதி |
| ரங்கன் | –இரங்கன் | ரம்மியம் | –இரம்மியம் |
| ரசாயனம் | –இரசாயனம் | ரம்பை | –அரம்பை |
| ரஞ்சிதம் | –இரஞ்சிதம் | ரவி | –இரவி |
| ரட்சகர் | இரட்சகர் | ராகம் | –இராகம் |
| ரட்சி | –இரட்சி | ராகு | –இராகு |
| ரணம் | –இரணம் | ராசன் | –இராசன் |
| ரத்தம் | –இரத்தம் | ராசி | –இராசி |
| ரத்தினம் | –இரத்தினம் | ராட்சதன் | –இராட்சதன் |
| ரசம் | –இரசம் | ராட்டினம் | –இராட்டினம் |
| ராணி | –இராணி | ரோசம் | –உரோசம் |
| ராணுவம் | –இராணுவம் | ரோகம் | –உரோகம் |
| ராத்திரி | –இராத்திரி | ரோமம் | உரோமம் |
| ராமர் | –இராமர் | லக்குமி | –இலக்குமி |
| ராமாயணம் | –இராமாயணம் | லகு | –இலகு |
| ராவணன் | –இராவணன் | லஞ்சம் | –இலஞ்சம் |
| ரீதி | –இரீதி | லட்சணம் | –இலட்சணம் |
| ருக்குமணி | –உருக்குமணி | லயம் | –இலயம் |
| ருசி | –உருசி | லாபம் | –இலாபம் |
| ருத்திரன் | –உருத்திரன் | லிங்கம் | –இலிங்கம் |
| ருது | –இருது | லிகிதம் | –இலிகிதம் |
| ரூபம் | –உரூபம் | லிபி | –இலிபி |
| ரேகை | –இரேகை | லோகம் | –உலோகம் |
| ரொட்டி | –உரொட்டி | லோபம் | –உலோபம் |
| ரோகிணி | –உரோகிணி | | |

## பயிற்சி 5

1. மேல்வரும் வடமொழிச் சொற்களைத் தமிழ் உருவமாக்கி வசனங்களில் அமைக்குக :

   ஜீரணம், கஷ்டம் அஸ்திவாரம், ஹநுமன், சாஸ்திரம், சிருஷ்டி, ஜெந்து, வேஷம், ராஜ்யம்.

2. மேல்வரும் வடமொழிச் சொற்களைத் தமிழ் உருவமாக எழுதுக :

   ராகு, ரீதி, ராட்டினம், ரோமம், ரகசியம், ரம்பை, லாபம், மோக்ஷம், தாக்ஷணியம், ஸக்தி, ஷண்முகம்.

## 6. வழூஉச் சொற்கள்

விளக்கம் : உச்சரிப்பு மயக்கத்தினாலும், கருத்து விளக்கவீனத்தினாலும் சில சொற்கள் பிழைபாடாக வழங்கப்பட்டு வருகின்றன. இங்கு சில பிழையான சொற்களும் அவற்றின் திருத்தங்களும் தரப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்ந்து மனதிற் பதித்து வசனங்களில் அமைத்துப் பழகிக்கொள்ளுக.

### உதாரணம் : 9

வழூஉ வசனம் : கருப்பணி, நொங்கு, பிணாட்டு முதலிய உணவுப் பொருள்கள் தந்துதவும் கர்ப்பகதருவாகிய பனமரத்தை விருத்தி செய்பவரை இப்போ காண்பதரிது. ஆட்சியாளராவது அதனை விருத்திபண்ணும் முயர்ச்சி செய்வார்களாக.

திருத்திய வசனம் : கருப்பநீர், நுங்கு, பனாட்டு முதலிய உணவுப் பொருள்கள் தந்துதவும் கற்பகதருவாகிய பனைமரத்தை விருத்தி செய்பவரை இப்போது காண்பதரிது. ஆட்சியாளராவது அதனை விருத்திபண்ணும் முயற்சி செய்வார்களாக.

(எடுத்துக்காட்டு)

அ

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| அப்ப<br>அப்போ | அப்போது | உடமை<br>உடம்பாடு | உடைமை<br>உடன்பாடு |
| அதுகள் | அவைகள் | உசிர் | உயிர் |
| அவன்கள் | அவர்கள் | உமிநீர் | உமிழ்நீர் |
| அண்டாடு | அன்றாடு | உலந்து | உலர்ந்து |
| அண்டைக்கு | அன்றைக்கு | உருத்து | உரித்து |
| அப்பாவி | அற்பஆவி | உவற்றை | உவருடைய |
| அமக்களம் | அமர்க்களம் | உன்ரை | உன்னுடைய |
| அய்யா | ஐயா | ஊந்து | ஊர்ந்து |
| அருவாள் | அரிவாள் | ஊத்துதல் | ஊற்றுதல் |
| அறணுக்கொடி<br>அறநாக்கொடி | அரைஞாண் | எண்ணை<br>எத்தினை | எண்ணெய்<br>எத்தனை |
| அறுதலி | அறுதாலி | எலிமிச்சம்பழம் | எலுமிச்சம்பழம் |
| அவன்ரை | அவனுடைய | எனி | இனி |
| அவற்றை | அவருடைய | என்ரை | என்னுடைய |
| அதாவது | அஃதாவது | ஏப்பை | அகப்பை |
| ஆத்தங்கரை | ஆற்றங்கரை | ஒண்டு | ஒன்று |

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| ஆம்பிளைப் பிள்ளை | ஆண்பிள்ளை | காதுக்குடும்பி | காதுக்குறுமி |
| | | குடுத்தல் | கொடுத்தல் |
| ஆக்கள் | ஆள்கள் | கும்புடுதல் | கும்பிடுதல் |
| ஆயிதம் | ஆயுதம் | கைமாத்து | கைமாற்று |
| இப்ப<br>இப்போ | இப்போது | கைமாறு | கைம்மாறு |
| | | கோர்வை | கோவை |
| இண்டைக்கு | இன்றைக்கு | கோடாலி | கோடரி |
| இத்தனை | இத்துணை | சவுக்காரம் | சவர்க்காரம் |
| இத்துப்போதல் | இற்றுப்போதல் | சம்பாரித்தல் | சம்பாதித்தல் |
| இளனி | இளநீர் | சவுக்காலை | சவக்காலை |
| இறச்சி | இறைச்சி | சந்தணம் | சந்தனம் |
| ஈக்கு | ஈர்க்கு | சமயல் | சமையல் |
| ஈர்வல்லி | ஈர்கொல்லி | சாற்றுக்கவி | சாத்துக்கவி |
| ஈர்வலி | ஈர்கோலி | சிதல் | சீழ் |
| உணத்து | உலர்த்து | சித்தப்பன் | சிற்றப்பன் |
| ஒம்பது | ஒன்பது | சிலது | சில |
| ஒத்தணம் | ஒற்றடம் | சிலவு | செலவு |
| கட்டிடம் | கட்டடம் | சிவர் | சுவர் |
| கண்முழித்தல் | கண்விழித்தல் | சிறங்கை | சேரங்கை |
| கறடி | கரடி | சிகப்பு | சிவப்பு |
| கரக்கடை<br>கடக்கரை | கடற்கரை | சிரோன்மணி | சிரோமணி |
| | | சீயாக்காய் | சிகைக்காய் |
| கதியால் | கதிகால் | சீத்துவம் | சீவத்துவம் |
| கம்பிளி | கம்பளி | சுடுதண்ணி | சுடுநீர் |
| கருப்பணி | கருப்பநீர் | சுகயீனம் | சுகவீனம் |
| களவாணி | களவாளி | சுற்றவாளி | சுத்தவழி |
| கடைமை | கடமை | சுறுட்டு | சுருட்டு |
| கண்பூளை | கண்பீளை | செலவழித்தல் | செலவுசெய்தல் |
| கண்டுக்குட்டி | கன்று | சேதி | செய்தி |
| கண்டியா | கண்டாயா | சோத்துப்பானை | சோற்றுப்பானை |
| கத்திரிக்கை | கத்தரிக்கோல் | தலகணி | தலையணை |
| கருவப்பிலை | கறிவேப்பிலை | தவக்கை | தவளை |
| காச்சல் | காய்ச்சல் | தண்ணி | தண்ணீர் |
| கார்த்தல் | காத்தல் | தாவாரம் | தாழ்வாரம் |
| காலமை | காலை | திரத்து | துரத்து |
| கிணத்தடி | கிணற்றடி | திருவுதல் | துருவுதல் |
| கிடாய் | கடா | திண்டது | தின்றது |
| கிராணம் | கிரகணம் | தின்மை | தீமை |
| குடும்பி | குடுமி | தீவட்டி | தீவர்த்தி |

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| திவாளி | தீபாவலி | புணையல் | பிணையல் |
| | தீபாவளி | புழுக்கை | பிழுக்கை |
| துடை | தொடை | புட்டு | பிட்டு |
| துறப்பு | திறப்பு | புடவை | புடைவை |
| தெண்டம் | தண்டம் | பிடவை | |
| தெத்துவாய் | தெற்றுவாய் | புக்கை | புற்கை |
| தேங்காய்எண்ணை | தேங்காய்நெய் | புண்ணுக்கு | பிண்ணுக்கு |
| தேள்வை | தேவை | புத்து | புற்று |
| தேழ்வை | | பூர்க்கும் | பூக்கும் |
| தேத்தண்ணி | தேநீர் | பூட்டன் | பீட்டன் |
| தேப்பன் | தகப்பன் | பெம்பிளைப் பிள்ளை | பெண்பிள்ளை. |
| தோர்வி | தோல்வி | | |
| நாத்தம் | நாற்றம் | பெரிசு | பெரிது |
| நாநூறு | நானூறு | பொக்களம் | கொப்புளம் |
| நிம்மதி | நிர்மதி | பொட்டை | பெட்டை |
| நிறம்ப | நிரம்ப | பொயிலை | புகையிலை |
| நெத்தி | நெற்றி | பொக்குள் | கொப்பூழ் |
| நேத்தி | நேர்த்தி | மதவு | மதகு |
| நேத்து | நேற்று | மம்பட்டி | மண்வெட்டி |
| நொங்கு | நுங்கு | மறவணை | மணவறை |
| பட்டிணி | பட்டினி | மகிடம் | மகுடம் |
| பண்டி | பன்றி | மாத்தல் | மாற்றல் |
| பரியாரி | பரிகாரி | மாதாளை | மாதுளை |
| பன்ரண்டு | பன்னிரண்டு | மினைக்கேடு | வினைக்கேடு |
| பலது | பல | முசுப்பாத்தி | முசிப்பாற்றி |
| பயித்தங்காய் | பயற்றங்காய் | முத்துதல் | முற்றுதல் |
| பத்தை | பற்றை | முடுக்கு | மிடுக்கு |
| பறண் | பரண் | முளகாய் | மிளகாய் |
| பாவக்காய் | பாகற்காய் | மிதுவடி | மிதிதடி |
| பாச்சல் | பாய்ச்சல் | முகந்து | முகர்ந்து |
| பிலாமரம் | பலாமரம் | முதளை | முதலை |
| பிலாக்காய் | பலாக்காய் | முந்தானை | முன்றானை |
| பிசுக்கு | பீர்க்கு | முன்னூறு | முந்நூறு |
| பிராந்து | பருந்து | மூண்டு | மூன்று |
| பிரையாணம் | பிரயாணம் | ரூபாய் | ரூபா |
| பிச்சு | பிய்த்து | ரெண்டு | இரண்டு |
| பீத்தல் | பீற்றல் | ரொம்ப | நிரம்ப |
| புடல் | புடோல் | லெக்கு | இலக்கு |
| புடுங்குதல் | பிடுங்குதல் | வகிறு | வயிறு |

| பிழை | திருத்தம் | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| வாணீர் | வாய்நீர் | வெண்ணே | வெண்ணெய் |
| வாய்வு | வாயு | வெய்யில் | வெயில் |
| விதரம் | விரதம் | வென்னீர் | வெந்நீர் |
| விறுத்தி | விருத்தி | வைக்கல் | வைக்கோல் |
| வீடுமேய்தல் | வீடுவேய்தல் | வேர்வை | வியர்வை |
| வெத்திலே | வெற்றிலே | வெயர்வை | |
| வெங்கலம் | வெண்கலம் | வேணும் | வேண்டும் |

ஆ

| | | | |
|---|---|---|---|
| அற்ப்பம் | அற்பம் | தேற்சி | தேர்ச்சி |
| அற்ப்புதம் | அற்புதம் | பயிற்பு | பயிர்ப்பு |
| ஆட்ச்சி | ஆட்சி | வாருர் | வருகிருர் |
| உற்ச்சவம் | உற்சவம் | போருர் | போகிருர் |
| கற்ப்பு | கற்பு | ஆச்சு | ஆயிற்று |
| கட்ச்சி | கட்சி | போச்சு | போயிற்று |
| காட்ச்சி | காட்சி | உத்திரவுபெற்ர | உத்தரவு பெற்ற |
| தற்ப்பெருமை | தற்பெருமை | உற்ரார் | உற்ருர் |
| நற்ப்பெயர் | நற்பெயர் | கற்ரவன் | கற்றவன் |
| நட்ப்பு | நட்பு | சிற்ரினம் | சிற்றினம் |
| நுட்ப்பம் | நுட்பம் | பெற்ரார் | பெற்ருர் |
| புட்ப்பம் | புட்பம் | விற்ரல் | விற்றல் |
| பொறப்பு | பொற்பு | இகட்சி | இகழ்ச்சி |
| மாட்ச்சி | மாட்சி | தாட்சி | தாழ்ச்சி |
| மீட்ச்சி | மீட்சி | வாட்கை | வாழ்க்கை |
| முற்ப்பிறப்பு | முற்பிறப்பு | வீட்சி | வீழ்ச்சி |
| முயற்ச்சி | முயற்சி | பாத்தல் | பார்த்தல் |
| வெட்க்கம் | வெட்கம் | பிராத்தனே | பிரார்த்தனே |
| விற்ப்பன்னர் | விற்பன்னர் | முகூத்தம் | முகூர்த்தம் |
| வேட்க்கை | வேட்கை | வாத்தல் | வார்த்தல் |
| அதர்க்கு | அதற்கு | குடிகாறன் | குடிகாரன் |
| பயிர்ச்சி | பயிற்சி | கெட்டிக்காறன் | கெட்டிக்காரன் |
| முயர்ச்சி | முயற்சி | பணக்காறன் | பணக்காரன் |
| உயற்சி | உயர்ச்சி | வீட்டுக்காறன் | வீட்டுக்காரன் |
| சொப்பனம் | சொர்ப்பனம் | வேலேக்காறன் | வேலேக்காரன் |

## பயிற்சி 6

1. மேல்வருஞ் சொற்களைத் திருத்தி ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக :

 முயல்ச்சி, பூர்த்தது, தின்மை, மிதுவடி, வைக்கல், ஆள்ச்சி, முகூத்தம், விற்ரல், வெய்யில்

2. மேல்வரும் வசனங்களிற் தடித்த எழுத்துக்களாற் காட்டப் பட்டிருக்கும் பிழையான சொற்களைத் திருத்தி எழுதுக :

 (அ) காலமையிற் கற்ர பாடம் வீண்போகாது.

 (ஆ) பரியாரி வருத்தக்காறனைப் பரிசோதித்து மருந்து குடுத்தான்.

 (இ) புட்டு வித்த பணத்துக்கு வெத்திலையும் பொயிலை யும் வேண்டினன்.

 (ஈ) மூண்டுபேர் கடக்கரையில் நிண்டு சூரிய அத்த மனக் காட்ச்சி பாத்தனர்.

---

# 7. எழுத்திலக்கணம்

விளக்கம் : தமிழ் மொழிக்குரிய எழுத்துக்களையும், அவ்வெழுத்துக்கள் ஒலிக்கும் தன்மையையும் அறியாததினாலேயே சிலர் பன்மொழி எழுத்துக்கள் விரவிய சொற்களை எழுதுகின்றனர். அவ்வித பிழைகள் ஏற்படாதிருப்பதற்கு, தமிழ் எழுத்துக்களையும் அவற்றுக்குரிய இலக்கணங்களையும் அறிந்துகொள்வது நல்லது.

### (1) தமிழ் எழுத்துக்களின் வகைகள்

சொல்லுக்கு முதற்காரணமாக உள்ளது ஒலியாகும். அவ் ஒலி எழுதப்படும்போது வரிவடிவ எழுத்து எனப்படும். தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும்.

அவை : (அ) உயிர் எழுத்து
(ஆ) மெய் எழுத்து
(இ) உயிர்மெய் எழுத்து
(ஈ) ஆய்த எழுத்து

(அ) உயிர் எழுத்து: உயிர் எழுத்தானது குற்றெழுத்து. (உயிர்க்குறில். நெட்டெழுத்து (உயிர்நெடில்) என இருவகைப்படும்.

உயிர்க்குறில்: அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் உயிர்க் குற்றெழுத்துக்கள் எனப்படும்.

உயிர்நெடில்: ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ ஔ என்னும் ஏழும் உயிர் நெட்டெழுத்துக்கள் எனப்படும்.

(ஆ) மெய்எழுத்து: மெய்யெழுத்தானது வல்லின மெய், மெல்லினமெய், இடையினமெய் என மூன்றுவகைப்படும்.

வல்லினமெய்: க், ச், ட், த், ப், ற், என்னும் ஆறும் வல்லின மெய்களாகும். இவை வலிய ஒலியுடையன

மெல்லினமெய்: ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறும் மெல்லின மெய்களாகும். இவை மெலிய ஓசையுடையன.

இடையினமெய்: ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறும் இடையின மெய்களாகும். இவை வல்லினத்துக்கும் மெல்லினத்துக்கும் இடைப்பட்ட ஓசையுடையன.

(இ) உயிர்மெய்யெழுத்து: மெய்யெழுத்துக்களுடன், உயிர் எழுத்துக்கள் சேருவதினல் உண்டாகும் எழுத்துக்கள் உயிர்மெய் எழுத்துக்கள் எனப்படும். க் என்னும் மெய் யுடன் அ என்னும் உயிர் சேர க என்னும் உயிர்மெய் உண்டாகும். இப்படியே 18 மெய்களுடன் 12 உயிர் கள் சேர 18×12=இருநூற்றுப்பதினுறு உயிர்மெய் கள் உண்டாகும்.

வல்லினமெய்கள் ஆறுடன் உயிர்க்குறில் ஐந்தும் சேர 6×5=30 உயிர்மெய்க்குறில்

மெல்லினமெய்கள் ஆறுடன் உயிர்க்குறில் ஐந்தும் சேர 6×5=30 மெல்லின உயிர்மெய்க்குறில்

இடையின மெய்கள் ஆறுடன் உயிர்க்குறில் ஐந்தும்சேர 6×5=30 இடையின உயிர்மெய்க்குறில்

உயிர்மெய்க்குறில் மொத்தம்=90

(இது 18 மெய்களுடன் 5 உயிர்க்குறில்கள் சேரவருவதாகும்.)
வல்லினமெய்கள் ஆறுடன் உயிர்நெடில் ஏழும் சேர
6×7=42 வல்லின உயிர்மெய் நெடில்

மெல்லினமெய்கள் ஆறுடன் உயிர்நெடில் ஏழும் சேர
$6 \times 7 = 42$ மெல்லின உயிர் மெய்நெடில்

இடையின மெய்கள் ஆறுடன் உயிர்நெடில் ஏழும் சேர
$6 \times 7 = 42$ இடையின உயிர்மெய்நெடில்

உயிர்மெய்நெடில் மொத்தம் = 126

(இது 18 மெய்களுடன் 7 உயிர்நெடில்கள் சேர வருவதாகும்)
உயிர்மெய் எழுத்துக்கள் மொத்தம் = 90 + 126 = 216

(ஈ) ஆய்த எழுத்து : மூன்று புள்ளி வடிவினதாக வரும் ஃ என்னும் எழுத்து ஆய்த எழுத்து எனப்படும்.

தமிழ் எழுத்துக்களின் மொத்தம் :

| | | |
|---|---|---|
| உயிர் எழுத்து | = | 12 |
| மெய் எழுத்து | = | 18 |
| உயிர்மெய் எழுத்து | = | 216 |
| ஆய்த எழுத்து | = | 1 |
| | | 247 |

## 2 சுட்டெழுத்துக்கள்

விளக்கம் : தமிழ் எழுத்துக்களிற் சில, சொற்களாகும் போது சிறப்பான பொருள் தந்து நிற்பதுண்டு. அவைகளில் அ, இ, உ என்னும் மூன்று எழுத்துக்களும் சொற்களின் முதலில் நிற்கும் போது சுட்டிக்காட்டும் பொருள் கொண்டு நிற்பதினால் சுட்டெழுத்துக்கள் என்று கூறப்படுகின்றன உதாரணமாக ; அவன், இவன், உவன் ; அது, இது, உது என்று கூறப்படும்போது இவ் எழுத்துக்கள் சுட்டுப் பொருள் தந்து நிற்பதைக் காணலாம்.

சுட்டெழுத்துக்கள் சொல்லுடன் சேர்ந்து நிற்பன, சொல்லுக்குப் புறம்பாக நிற்பன என இருவகைப்படும். சொல்லுடன் சேர்ந்து நிற்பன அகச்சுட்டு என்றும், சொல்லுக்குப் புறம்பாக நிற்பன **புறச்சுட்டு** என்றும் கூறப்படும்.

அகச்சுட்டு : 'அது' என்பதில் சுட்டெழுத்தாகிய 'அ'வை நீக்கினல் 'து' என்பது பொருளின்றி நிற்கும். ஆகவே 'அ' சொல்லுடன் சேர்ந்து நிற்கின்றது.

(உ-ம்) அது, இவை, உவன்.

புறச்சுட்டு : 'அவ்வீடு' என்பதில் சுட்டெழுத்தாகிய 'அ' என்பதை நீக்கினால், வீடு என்பது பொருள்பட்டு நிற்கும்; ஆகவே 'அ' சொல்லுக்குப் புறம்பாக நிற்கின்றது.

(உ-ம்) அவ்வீடு, இம்மாடு, உம்மனிதன்.

## 3. வினா எழுத்துக்கள்

விளக்கம் : சுட்டெழுத்துக்களைப்போலவே சிறப்பான பொருள் தந்து நிற்கும் எழுத்துக்களில் ஆ, எ, ஏ, ஓ, யா என்னும் ஐந்து எழுத்துக்களும் வினாப்பொருள் தருவதினால் வினா எழுத்துக்கள் எனப்படும். உதாரணமாக: ஆர், அவனா, எது, ஏது, அவனோ, யாவன் என்று கூறப்படும் போது இவ் எழுத்துக்கள் வினாப்பொருள் தந்து நிற்பதைக் காணலாம்.

இவ் ஐந்து எழுத்துக்களிலும் எ, யா என்பன சொல்லின் முதலிலும், ஆ, ஓ என்பன சொல்லின் இறுதியிலும், ஏ என்பது சொல்லின் முதலிலும் இறுதியிலும் நின்று வினாப் பொருள் தருவனவாகும்.

அகச்சுட்டு, புறச்சுட்டு என்பன போலவே வினாவும் அகவினா புறவினா என இருவகைப்படும். சொல்லுடன் சேர்ந்து நிற்பன அகவினா என்றும், சொல்லுக்குப் புறம்பே நிற்பன புறவினா என்றும் கூறப்படும்.

அகவினா : எவன்? ஏது? யார்? என்பன (இவற்றில் வினா எழுத்துக்களை நீக்கின் எஞ்சிய எழுத்துக்கள் பொருள்தரா)

புறவினா : அவளா? அவனோ? அவள் உன் தங்கையோ? என்பன (இவற்றில் வினா எழுத்துக்களை நீக்கின் எஞ்சிய எழுத்துக்கள் பொருள் தரும்)

## 4. மாத்திரை

விளக்கம் : தமிழ் எழுத்துக்களை உச்சரிக்கும் கால அளவு மாத்திரை எனப்படும். கண்ணிமைக்கும் நேரமாயினும் கைநொடிக்கும் நேரமாயினும் அக்கால அளவாகும்.

உயிர்க்குறிலுக்கு மாத்திரை ஒன்று. உயிர்நெடிலுக்கு மாத்திரை இரண்டு. மெய்க்கு மாத்திரை அரை. உயிர்மெய்க்குறிலுக்கு உயிர்க்குறிலின் மாத்திரையும், உயிர்மெய் நெடிலுக்கு உயிர்நெடிலின் மாத்திரையும் அமையும். ஆய்த எழுத்துக்கு மாத்திரை அரை.

## மாத்திரை குறைந்து ஒலிக்கும் எழுத்துக்கள்

தமிழ்ச்சொற்கள் சிலவற்றில் சில எழுத்துக்கள் தம் மாத்திரையிற் குறைந்தும், கூடியும் ஒலிப்பதுண்டு. நாம் இங்கு மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும் எழுத்துக்களை அறிதல் நல்லது. மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும் எழுத்துக்கள் குற்றியல் எழுத்துக்கள் - குறுக்கங்கள் என்று கூறப்படும். அவையாவன :-

(அ) குற்றியல் உகரம் :- காசு என்று கூறும்போது 'சு' வின் மாத்திரை அரையாகக் குறைந்து ஒலிக்கும். 'சு' என்பதைத் தனியே கூறின் அதற்கு மாத்திரை ஒன்று. ஆனால் காசு என்று கூறும்போது அஃது இயல்பாகக் குறைந்தே ஒலிக்கின்றது. இவ்விதம் ஒலிக்கும் குறுகிய உகரங்கள் குற்றியல் உகரங்கள் என்று கூறப்படும். அவை தனிக் குற்றெழுத்தல்லாத மற்றைய எழுத்துக்களுக்குப் பின்னே சொல்லினிறுதியில் வல்லின மெய்யின்மேல் ஏறி நிற்பனவாகும்.

இவ்விதிக்கு அமையாது ஒலிக்கும் மற்றைய உகரங்கள் முற்றியல் உகரங்கள் எனப்படும். உதாரணம் : பசு, சில்லு.

குற்றியல் உகரம், ஈற்று அயல் எழுத்தை நோக்கி ஆறுவகையாகப் பிரிக்கப்படும். காசு என்பதில் 'சு' வுக்கு முன் உள்ள எழுத்து நெட்டெழுத்தாயினமையின் அது நெடிற்றொடர்க்குற்றியலுகரம் எனப்படும். இவ்விதமே மற்றவைகளும் வகுக்கப்படும்.

1. நெடிற்றொடர்........................நாகு, ஆடு,
2. உயிர்த்தொடர் — — — — — — — — வரகு, அரசு
3. வன்றொடர் — — — — — — — — பாக்கு, பூட்டு.
4. மென்றொடர் — — — — — — — வண்டு, பிஞ்சு,
5. இடைத்தொடர் — — — — — மார்பு, நொய்து.
6. ஆய்தத்தொடர் — — — — — — — — அஃது, கஃசு,

(ஆ) குற்றியலுகரம் :- குற்றியலுகரச் சொற்களுடன் யகரத்தை முதலாகவுடைய சொற்கள் வந்து சேரும்போது உண்டாகும் மாற்றத்தில் தோன்றும் இகரம், தனக்குரிய ஒருமாத்திரையிற் குறைந்து அரைமாத்திரையாக ஒலிக்கும். வரகு + யாது—வரகியாது என்பதில் 'இ' ஓசை குறைந்து ஒலிப்பதைக் காண்க.

(இ) ஐகார, ஔகாரக் குறுக்கங்கள் :— ஐ, ஔ என்னும் எழுத்துக்கள் தனித்து உச்சரிக்கப்படும்போது இரண்டு மாத்திரையுடையன. ஆனால் சொற்களில் வரும்போது அவற்றின் மாத்திரை ஒன்றாகக் குறையும். ஐப்பசி, ஔவை என்பவற்றை உச்சரித்துக் கண்டுகொள்க.

(ஈ) மகரக்குறுக்கம் :— 'ம்' என்னும் எழுத்து சில இடங்களில் தனக்குரிய அரை மாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாக ஒலிக்கும். மருளும், போலும் என்னும் சொற்கள் பாட்டில் ஓசை நோக்கி மருண்ம் போன்ம் என வரும்போது மகர ஒற்று தனக்குரிய மாத்திரையிற் குறைந்து ஒலிப்பதைக் காணலாம். இவ்விதமே தரும்+வளன் = தரும் வளன் என்னும்போது வகரத்திற்கு முன்னர் உள்ளதாகிய மகர ஒற்று தன் மாத்திரையிற் குறைந்து ஒலிக்கும்.

## பயிற்சி 7

1. தமிழ் எழுத்துக்களை வகைப்படுத்தி, தொகையுடன் எழுதுக
2. மேல்வரும் பந்தியில் இருந்து, அப்பந்திக்குக் கீழ் உள்ள. வினாக்களுக்கு விடை தருக :

"அப்பொழுது கண்ணபிரான், நீ உடன்பட்டவாறே, நீ தேடிய புண்ணியங்களனைத்தையும் ஈவாயாக, என்று கேட்டான். அதற்குக் கண்ணன், என்னுயிர் கலங்குகின்றது. அஃது உடம்பின் உள்ளிடத்ததோ, புறத்துச் செல்லா நின்றதோ அறிகிலேன். எனினும், யான் செய்துள்ள புண்ணியங்களனைத்தையும் ஓர் இம்மியும் ஒழிதலின்றி உதவினேன், என்றான்."

(அ) உயிர்க்குறிலை முதலாகவுடைய மூன்று சொற்கள் எழுதுக.

(ஆ) உயிர்நெடிலை முதலாகவுடைய இரண்டு சொற்கள் எழுதுக

(இ) ஆய்த எழுத்துடைய ஒரு சொல்லை எடுத்து அதில் உள்ள ஆய்த எழுத்தை நீக்கி அச்சொல்லை எழுதுக.

(ஈ) "புண்ணியங்க ளனைத்தையும்" என்னும் சொற்றொடரில் உள்ள ஒவ்வொரு எழுத்தையும் எழுத்தின் இனம் நோக்கிக் குறிப்பிடுக.

1. அகச்சுட்டு, புறச்சுட்டு, அகவினா, புறவினா, என்பவற்றை விளக்கி உதாரணங்கள் தருக.

"பால், தெளிதேன், பாகு, பருப்பு என்னும் நாலு பொருள்களும் கலந்து நான் உனக்குத் தருவேன். நீ எனக்கு மூன்று சங்கத் தமிழ்களும் தருவாயோ ?

இவ்வசனங்களிலிருந்து மேல்வரும் வினுக்களுக்கு விடை தருக :

(அ) வன்றொடர்க் குற்றியலுகரச் சொல் ஒன்று எழுதுக.

(ஆ) நெடிற்றொடர்க் குற்றியலுகரச் சொல் ஒன்று எழுதுக.

(இ) முற்றியலுகரச் சொல் ஒன்று எழுதுக.

(ஈ) வினுச்சொல் ஒன்று எழுதி அஃது அகவினுவோ, புறவினுவோ என்றும் கூறுக.

(உ) "உனக்குத் தருவேன்" என்னும் சொற்களுக்குரிய மொத்த மாத்திரை எவ்வளவு ?

(ஊ) கலந்து, உனக்கு என்னும் சொற்கள் எந்த எந்த இனத்தைச் சேர்ந்த குற்றியலுகரச் சொற்கள் ?

---

## மாதிரிகை வினுக்கள் 1

1. மேல்வருவனவற்றில் உள்ள எழுத்துறுப்புப் பிழைகளைத் திருத்தி எழுதுக :

   சோலைப்புறா, பொற்றொடி, கண்ணோய், பரோபகாரம்.

2. மேல்வரும் எழுத்துக்களைச் சேர்த்து எழுதுக :

   ற் + ஆ, ர் + ஈ, ன் + ஐ, ன் + ஒ

3. அழி, அளி, அலி என்பவற்றின் பொருள் வேறுபாடு விளங்க தனித்தனி வாக்கியங்கள் அமைக்குக.

4. மேல்வரும் வசனங்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி எழுதுக ;

   (அ) பாளும் பளமும் களந்துண்

   (ஆ) தோளனே ! என விளித்தளைத்து வாளி என வாள்த்தினுன்.

5. மேல்வரும் ஒவ்வொரு வசனத்திலும் அடைப்புக்குறியுள் இருக்கும் சொற்களிற் பிழையானதை நீக்கி எழுதுக.

   (அ) பெரிய மீன்களுக்குச் சிறிய மீன்கள் (இரை, இறை)

   (ஆ) (முருக்கு, முறுக்குப்) பருத்து தூணுக்கு உதவுமா ?

6. மேல்வரும் சோட்டுப் பதங்களின் பொருள் வேறுபாடு விளங்க அவற்றை வசனத்தில் அமைக்குக.

காணல், கானல் ; கரை, கறை.

7. மேல்வரும் வடமொழிச் சொற்களைத் தமிழ் உருவமாக எழுதுக :

ஔஷதம், புஷ்பம், ராணி, ஹீனம், லோபம், அம்புஜம், ரதி, ஹேது.

8. மேல்வரும் சொற்கள் பிழையானவை, அவைகளைத் திருத்தி எழுதுக :

தேள்வை, பெற்றார், வெத்திலை, கோர்வை, ஆட்சி.

9. மேல்வரும் வசனங்களில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக :

(அ) காட்டுக் காச்சலாற் சுகயீனமடைவோர் தொகை இப்போ இலங்கையிற் குரைந்து வருகிரது.

(ஆ) பாவக்காய், புடலங்காய், பிலாக்காய் என்பன இண்டைக்கு வேண்டி வருவினம்.

10. ''எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும், ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'' என்பவற்றில் இருந்து மேல்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக :

(அ) மூன்று உயிர்க்குறில் எழுதுக.

(ஆ) இடையின உயிர்மெய்நெடில் ஒன்று எழுதுக.

(இ) எழுத்து, வாழ்வு என்பன எவ்வெவ்வகை உகரச் சொற்கள் என்று எழுதுக.

(ஈ) ''ஒன்று'' என்னும் சொல்லின் மொத்த மாத்திரை எவ்வளவு ?

(உ) வல்லின, மெல்லின, இடையின மெய் எழுத்துக்களுள்ள ஒவ்வொரு சொல் எழுதி, அவ் எழுத்துக்களின் கீழ் ஒரு கீறு இடுக.

11. கதவு, ஆறு, செப்பு, ஒன்பது, பசு, சுக்கு, நாடு, புல்லு, இஃது பஞ்சு என்பவற்றில் உள்ள குற்றியல் உகரச் சொற்களை எழுதி அவை எவ்வெவ் இனக் குற்றியலுகரங்கள் எனக் குறிக்குக.

## மாதிரிகை விடைகள் 1

1. எழுத்துறுப்புப் பிழைகளைத் திருத்தி எழுதுதல் :

| பிழை | சரி |
|---|---|
| சோலைப்புறா | சோலைப்புறு |
| பொற்றொடி | பொற்றொடி |
| கண்ணோய் | கண்ணோய் |
| பரோபகாாம் | பரோபகாரம் |

2 எழுத்துக்களைச் சேர்த்து எழுதுதல் :

ற் + ஆ = று ண் + ஒ = ணெ
ர் + ஈ = ரீ ன் + ஐ = னை

3 பொருள் வேறுபாடு விளங்க வாக்கியங்கள் அமைத்தல் :

அழி : அனுமான் அசோகவனத்தைச் சின்னபின்ன மாகச் சிதைத்து அழித்தான்.

அளி : கன்னன் இரப்போருக்கு இல்லை என்னாது அளித்தான்.

அலி : அஞ்ஞாதவாச காலத்தில் அருச்சுனன் அலி வடிவத்திற் கரந்து வாழ்ந்தான்.

4 எழுத்துப் பிழைகள் திருத்தி எழுதுதல் :

(அ) பாலும் பழமும் கலந்துண்.

(ஆ) தோழனே! என விளித்தழைத்து வாழி என வாழ்த்தினான்.

5 பிழை நீக்கி எழுதல் :

(அ) பெரிய மீன்களுக்குச் சிறிய மீன்கள் இரை.

(ஆ) முருக்குப் பருத்துத் தூணுக்கு உதவுமா ?

6 பொருள் வேறுபாடு விளங்க வசனம் அமைத்தல் :

காணல் : கடவுளின் குன்றாத நீதியை, பல தருணங்களில் நாம் கண்ணாரக் காணல் கூடும்.

கானல் : காங்கையான நேரத்திலே தூரத்திற் காணப்படும் கானலை, விடாய் கொண்ட மான்கள் நீரென் றெண்ணி ஓடி ஏமாற்ற மடையும்.

கரை : ஆற்றிற் கரைத்த புளிபோல, பயனேற்படாத செயல்களைச் செய்தல் கூடாது.

கறை : ஆடையில் மை படுவதினால் ஏற்படுங் கறையைப் புளியிட்டு நீக்குவார்கள்.

7 வடமொழிச் சொற்களைத் தமிழ் உருவமாக எழுதுதல் :

| வடமொழி உருவம் | தமிழ்மொழி உருவம் |
|---|---|
| ஔஷதம் | ஔடதம் |
| புஷ்பம் | புட்பம் |
| ராணி | இராணி |
| ஹீனம் | ஈனம் |
| லோபம் | உலோபம் |
| அம்புஜம் | அம்புசம், அம்புயம் |
| ரதி | இரதி |
| ஹேது | ஏது |

8 பிழையான சொற்களைத் திருத்தி எழுதுதல் :

| பிழை | சரி |
|---|---|
| தேள்வை | தேவை |
| பெற்றார் | பெற்றூர் |
| வெத்திலே | வெற்றிலே |
| கோர்வை | கோவை |
| ஆட்ச்சி | ஆட்சி |

9 பிழைகளைத் திருத்தி எழுதுதல் :

(அ) காட்டுக் கா்ய்ச்சலாற் சுகவீனமடைவோர் தொகை இப்போது இலங்கையிற் குறைந்து வருகின்றது.

(ஆ) பாகற்காய், புடோலங்காய், பலாக்காய் என்பன இன்றைக்கு வாங்கி வருவார்கள்.

10 (அ) உயிர்க்குறில்கள் மூன்று : எ, ஒ, உ.

(ஆ) இடையின உயிர்மெய்நெடில் ஒன்று : வா.

(இ) உகரச் சொற்களின் வகை :

எழுத்து :- வன்றொடர்க் குற்றியலுகரச் சொல்
வாழ்வு :- முற்றியலுகரச் சொல்.

(ஈ) 'ஒன்று' என்னும் சொல்லின் மொத்த மாத்திரை :
$1 + \frac{1}{2} + \frac{1}{2} = 2$

(உ) வல்லினம் :- எழுத்து
மெல்லினம் :- ஒன்று
இடையினம் :- வாழ்வு

11 குற்றியலுகரங்கள் :

ஆறு : நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.
செப்பு : வன்றொடர்க் குற்றியலுகரம்.
ஒன்பது : உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.
சுக்கு : வன்றொடர்க் குற்றியலுகரம்.
நாடு : நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.
இஃது : ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்.
பஞ்சு : மென்றொடர்க் குற்றியலுகரம்.

# II. சொற் பயிற்சி

## 1. (அ) எதிர்ப்பாற் சொற்கள்

விளக்கம் : மக்கள், ஆண் பெண் என இருபாலாராக வகுக்கப்படுவர். அவர்களுள் ஆண்கள் விசேட சிறப்பு நோக்கி வெவ்வேறு ஆண்பாற் பெயர்களால் அழைக்கப்படுவதுபோலவே, பெண்களும் அவ்வவற்றிற் கொத்த பெண்பாற் பெயர்களால் அழைக்கப்படுவர். ஈண்டு, சாதாரண வழக்கிலிருக்கும் சில ஆண்பாற் பெயர்களும் அவ்வவற்றிற் கொத்த எதிர்ப்பாற் பெயர்களும் தரப்படுகின்றன. ஒப்பு நோக்கிப் பயின்று கொள்க.

உதாரணம் : 10

வினு : மேல்வரும் வசனத்தில் உள்ள ஆண்பாலைப் பெண்பாலாகவும், பெண்பாலை ஆண்பாலாகவும் மாற்றி எழுதுக:

''குருடனாயினும் அடியவனுகிய அச் சிறுவனைப் பண்டிதன் தனது புத்திரன்போற் பாவித்துக் கல்வி கற்பித்து ஒரு புலவனுக்கினான்.''

விடை : ''குருடியாயினும் அடியவளாகிய அச் சிறுமியைப் பண்டிதை தனது புத்திரிபோற் பாவித்துக் கல்வி கற்பித்து, ஒரு புலமையள் ஆக்கினுள்.''

(எடுத்துக்காட்டு)

| ஆண் | பெண் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| அப்பன் | -அம்மை | இரவலன் | -இரவலள் |
| அமைச்சன் | -அமைச்சி | இயக்கன் | -இயக்கி |
| அரசன் | -அரசி | இடும்பன் | -இடும்பி |
| அடியான் | அடியாள் | ஈசன் / ஈசுவரன் | -ஈசுவரி |
| அழகன் | -அழகி | | |
| ஆசிரியன் | -ஆசிரியை | உத்தமன் | -உத்தமி |
| ஆயன் | -ஆய்ச்சி | உபாத்தியாயன் | -உபாத்தியாயனி |
| ஆடவன் | -பெண்டு | உழவன் | -உழத்தி |
| ஆடூஉ | -மகடூஉ | ஊமையன் | -ஊமைச்சி |
| ஆண்டவன் | -ஆண்டவள் | ஊரான் | -ஊராள் |
| இடையன் | -இடைச்சி | எசமான் | -எசமானி, எசமாட்டி |
| இந்திரன் | -இந்திராணி | | |

| ஆண் | பெண் |
|---|---|
| ஐயன் | –ஐயை |
| ஒருவன் | –ஒருத்தி |
| கள்ளன் | –கள்ளி |
| கனவான் | –கனவதி |
| கன்னான் | –கன்னாத்தி |
| கணவன் | –மனைவி |
| காமுகன் | –காமுகி |
| காவற்காரன் | –காவற்காரி |
| காதலன் | –காதலி |
| கிழவன் | –கிழவி |
| கிழவன் | –கிழத்தி |
| குறவன் | –குறத்தி |
| குமரன் | –குமரி |
| குமாரன் | –குமாரி |
| குரு | – குரத்தி, குருத்தினி |
| குணவான் | –குணவதி |
| குருடன் | –குருடி |
| கூனன் | –கூனி |
| கொல்லன் | –கொல்லிச்சி |
| கோமான் | –கோமாட்டி |
| கோபாலன் | –கோபிகை |
| சகோதரன் | –சகோதரி |
| சிறுவன் | –சிறுமி |
| சீமான் | –சீமாட்டி |
| செட்டி | –செட்டிச்சி |
| செல்வன் | –செல்வி |
| செவிடன் | –செவிடி |
| சேவகன் | – சேவகி, சேவகத்தி |
| தட்டான் | –தட்டாத்தி |
| தச்சன் | –தச்சிச்சி |
| தம்பி | –தங்கை |
| தலைவன் | –தலைவி |
| தமிழன் | –தமிழிச்சி |
| தனவான் | –தனவந்தி |
| தனையன் | –தனையை |
| தந்தை | –தாய் |
| தாசன் | –தாசி |
| தாதன் | –தாதி |
| திருவாளன் | –திருவாட்டி |
| திருடன் | –திருடி |
| தூர்த்தன் | –தூர்த்தை |
| தேவன் | –தேவி |
| தோழன் | –தோழி |
| நல்லான் | –நல்லாள் |
| நண்பன் | –நண்பி |
| நம்பி | –நங்கை |
| நடிகன் | –நடிகை |
| நாயன் | –நாய்ச்சி |
| நாயகன் | –நாயகி |
| நிபுணன் | –நிபுணை |
| பண்டிதன் | –பண்டிதை |
| பகவன் | –பகவதி |
| பல்லன் | –பல்லி, பல்லிச்சி |
| பரிசோதகன் | –பரிசோதகி |
| பத்தா | –பத்தினி |
| பாணன் | –பாடினி, விறலி |
| பாலன் | –பாலிகை |
| பாக்கியவான் | பாக்கியவதி |
| பாதகன் | –பாதகி |
| பாட்டன் | –பாட்டி |
| பாங்கன் | –பாங்கி |
| பார்ப்பான் | –பார்ப்பாத்தி |
| பார்ப்பனன் | –பார்ப்பினி |
| பிக்கு | –பிக்குணி |
| பிரான் | –பிராட்டி |
| பிராமணன் | –பிராமணத்தி |
| பிரியன் | –பிரியை |
| பின்னவன் | –பின்னவள் |
| பின்னோன் | –பின்னை |
| பீட்டன் | –பீட்டி |
| புத்திரன் | –புத்திரி |
| புதல்வன் | –புதல்வி |

| ஆண் | பெண் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| புண்ணியவான் | –புண்ணியவதி | முடவன் | –முடத்தி |
| புலவன் | –புலமையள் | மூதாதை | –மூதாட்டி |
| புருடன் | –மனைவி | மைத்துனன் | –மைத்துனி |
| புலைஞன் | –புலைச்சி | யுவன் | –யுவதி |
| பெருமான் | –பெருமாட்டி | யௌவனன் | –யௌவனை |
| பேரன் | –பேர்த்தி | வணிகன் | –வணிகச்சி |
| மணாளன் | –மணாட்டி | வலைஞன் | –வலைச்சி |
| மணவாளன் | –மணவாட்டி | வாலன் | –வாலை |
| மருமகன் | –மருமகள் | வாலிபன் | |
| மருகன் | –மருகி | விருத்தன் | –விருத்தை |
| மருத்துவன் | –மருத்துவச்சி | வீரன் | –வீரி, வீராங்கனை |
| மாணாக்கன் | –மாணாக்கி | வெள்ளாளன் | –வெள்ளாட்டி |
| மாணவன் | –மாணவி | வேளாளன் | –வேளாட்டி |
| மாமன் | –மாமி | வேடன் | –வேடிச்சி |
| மித்திரன் | –மித்திரை | வேலைக்காரன் | –வேலைக்காரி |

## (ஆ) பொதுப்பாற் சொற்கள்

**விளக்கம் :** ஆணோ பெண்ணோவென்றறிய முடியாது ஒருமையிற் கூறப்படும் பெயர்கள் பொதுப்பாற் பெயர்களாகும். சில பொதுப்பாற் பெயர்கள் மேலே தரப்படுகின்றன அவைகள் ஆணையாவது பெண்ணையாவது சிறப்பாகக் குறிப்பிடாத தன்மையை உய்த்துணர்ந்து கொள்ளுக.

### உதாரணம் : 11

"ஓர் ஏழையுடைய பிள்ளை வளர்ந்து மேதையாக விளங்கியதினால், அரசசபையில் மந்திரியாகவும் நியமனம் பெற்றது' இவ்வசனத்தில் ஏழை, பிள்ளை, மேதை, மந்திரி என்னும் சொற்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவாய் அமைந்திருப்பதை அவதானித்துக் கொள்க.

(எடுத்துக்காட்டு)

| | | |
|---|---|---|
| அகதி | கொலையாளி | பாவி |
| அறிவிலி | சுத்தவாளி | பிரதிவாதி |
| அறிவாளி | சோம்பேறி | பிள்ளை |
| அநாதை | சுயம்பாகி | புத்திசாலி |
| உலோபி | சிற்பி | பேதை |
| உரோகி | ஞானி | மந்திரி |
| எதிரி | தந்திரி | மேதை |
| ஏழை | தளபதி | வழக்காளி |
| காமி | தனுதிகாரி | வாதி |
| காரியதரிசி | துரோகி | விவேகி |
| குழந்தை | நோயாளி | வியாபாரி |
| குற்றவாளி | | |

## பயிற்சி 8

1. மேல்வரும் சொற்களுக்கு எதிர்ப்பால் தருக :

   மித்திரன், பிராட்டி, கள்ளன், நங்கை, பார்ப்பான், வாலை.

2. மேல்வரும் வசனங்களை எதிர்ப்பாலில் மாற்றி அமைக்குக :

   (அ) ஒரு நடிகையே கதாநாயகியாகவும், வேலைக்காரியாகவும் நடித்தாள்.

   (ஆ) குருடனுக்கும் செவிடனுக்கும் ஊமையனுக்கும் கல்வி கற்பிக்க இக்காலத்தில் ஆசிரியன் உண்டு.

   (இ) ஒருத்தி தட்டானிடஞ் சென்று தன் புதல்விக்கு மோதிரம் செய்து தருமாறு கேட்டாள்.

3. மேல்வருஞ் சொற்களை எதிர்ப்பாலாக்கி அவற்றைத் தனித் தனி வாக்கியங்களில் அமைக்குக :

   உழவன், பாதகி, காதலி, பாலிகை, பாங்கி.

4. மேல்வரும் பொதுப்பாற் சொற்களை வசனங்களில் அமைத்துக் காட்டுக :

   மேதை, சோம்பேறி, நோயாளி, விவேகி, எதிரி.

---

## 2. எதிர்ப்பொருட் சொற்கள்

விளக்கம் : தமிழில் வழங்கப்பட்டு வரும் சொற்கள் பலவற்றிற்குப் பொருத்தமான எதிர்ப்பொருள் தரும் சொற்கள் உண்டு. அவ்விதமிருப்பவும் தகுதியான எதிர்ப்பொருட் சொற்களைத் தெரிந்து கொள்ளாது எதிர்மறைப் பொருள் தருஞ் சொற்களைத் பிரயோகித்து எண்ணிய பொருள் பெறுது இடர்ப்படுகின்றனர். உதாரணமாக: "அவன் எனது பகைவன்" என்பதை எதிர்ப் பொருளில் அமைத்துக்கூற எண்ணி "அவன் எனது பகைவன் அல்லன்" என்று எதிர்மறையிற் கூறிஞல் அவன் பகைவன் அல்லனுயினும் "நட்பினன்" என்னும் எதிர்ப்பொருள் தராமை புலப்படும். எனவே, "அவன் எனது நண்பன்" என்று கூறுதலே பொருத்தமானதாகும். ஆகவே பொருள் வழுவின்றிச் சொற்களைப் பிரயோகிப்பதற்கு உதவியாகச் சில சொற்களும், அவற்றின் எதிர்ப்பொருட் சொற்களும் மேலே தரப்படுகின்றன.

### உதாரணம் : 12

மேல்வரும் வசனத்திற் கீறிட்ட சொற்களுக்கு ஏற்ற எதிர்ப் பொருட் சொற்கள் வைத்து எழுதுக :

"சிக்கன வாழ்வு நடாத்திச் செல்வராஞேர் பலர் கீர்த்தியடைந்தமை கண்டோம்"

"இடாம்பீக வாழ்வு நடாத்தி வறிஞராஞேர் பலர் அபகீர்த்தியடைந்தமை கண்டோம்."

(எடுத்துக்காட்டு)

அ

| | | | |
|---|---|---|---|
| அறம் | –மறம் | ஆக்கம் | –கேடு |
| அடி | –முடி, நுனி | ஆக்கல் | –அழித்தல் |
| அணு | –மலை | ஆதி | –அந்தம் |
| அகம் | –புறம் | ஆண்டான் | –அடிமை |
| அடைத்தல் | –திறத்தல் | ஆத்திகன் | –நாத்திகன் |
| அண்மை | –சேய்மை | இசை | –வசை |
| அகழ்தல் | –தூர்த்தல் | இணை | –தனி |
| அழுகை | –சிரிப்பு | இறப்பு | –எதிர்வு, பிறப்பு |
| அன்பு | –வன்பு | இம்மை | –மறுமை |
| அகலம் | –நீளம், ஒடுக்கம் | இரவு | –பகல் |

| | | | |
|---|---|---|---|
| இழு | –தள்ளு | ஒழுக்கம் | –இழுக்கம் |
| இல்லறம் | –துறவறம் | கட்டுதல் | –அவிழ்த்தல் |
| இடு | –எடு | கலக்கம் | –தெளிவு |
| இன்பம் | –துன்பம் | கனவு | –நனவு |
| இலாபம் | –நட்டம் | கற்றூர் | –கல்லாதார் |
| இயற்கை | –செயற்கை | கருமை | –வெண்மை |
| இளமை | –முதுமை | காய்தல் | –உவத்தல் |
| இகம் | –பரம் | காலை | –மாலை |
| இகழ் | –புகழ் | காய் | –கனி, பழம் |
| இயக்கம் | –நிலைப்பு | கிழித்தல் | –பொருத்துதல் |
| இன்சொல் | –வன்சொல் | கீழ் | –மேல் |
| இணங்கல் | –பிணங்கல் | கீழ்மை | –மேன்மை |
| இணக்கு | –பிணக்கு | குறுக்கம் | –விரிவு, அகலம் |
| ஈதல் | –ஏற்றல் | குன்று | –குளி |
| ஈரம் | –வரட்சி, உலர்வு | குரு | –சீடன் |
| உண்மை | –இன்மை | குணம் | –குற்றம் |
| உண்டு | –இல்லை | குறைவு | –நிறைவு |
| உத்தமம் | –அதமம் | குனி | –நிமிர் |
| உபகாரம் | –அபகாரம் | கூடுதல் | –பிரிதல் |
| உபயம் | –தனி | கைதூக்கல் | –கைவிடுதல் |
| உலோபி | –வள்ளல் | கொந்தளிப்பு | –அமைதி |
| உயர்வு | –தாழ்வு. இழிவு | கொடுக்கல் | வாங்கல் |
| உருவம் | –அருவம் | சந்தோடம் | –துக்கம் |
| உறவு | –பகை | சற்குணம் | –துர்க்குணம் |
| உறக்கம் | –விழிப்பு | சாதகம் | –பாதகம் |
| உபசாரம் | –அபசாரம் | சாவு | –வாழ்வு |
| உதயம் | –மறைவு, அத்தமனம் | சிக்கனம் | –இடாம்பீகம் |
| | | சிறிது | –பெரிது |
| உவகை | –அவலம் | சிறுமை | –பெருமை |
| ஊடல் | –கூடல் | சிறப்பு | –பொது |
| எளிது | –அரிது | சிற்றின்பம் | –பேரின்பம் |
| எழுதல் | –விழுதல் | சீதளம் | –உட்டணம் |
| எரிதல் | –அவிதல் | சீதேவி | –மூதேவி |
| ஏற்றுமதி | –இறக்குமதி | சுகம் | –துக்கம் |
| ஏற்றம் | –இறக்கம் | சுருங்குதல் | –விரிதல் |
| ஐயம் | –துணிவு | சுருக்கம் | –பெருக்கம் |
| ஐது | –செறிவு | சுவர்க்கம் | –நரகம் |
| ஒருமை | –பன்மை | சுலபம் | –துர்லபம் |
| ஒற்றுமை | –வேற்றுமை | செங்கோல் | –கொடுங்கோல் |
| ஒற்றை | –இரட்டை | செல்வம் | –வறுமை |
| ஒளி | –இருள் | | |

| | | | |
|---|---|---|---|
| சோடு | –தனி | பாலர் | –விருத்தர் |
| ஞாபகம் | –மறதி | புலவன் | –பேதை |
| தண்மை | –வெம்மை | புதுமை | –பழமை |
| தமர் | –பிறர் | புண்ணியம் | –பாவம் |
| தவப்பொழுது | –அவப்பொழுது | பூரிப்பு | –வாட்டம் |
| தாமதம் | –துரிதம் | போற்றுதல் | –தூற்றுதல் |
| | விரைவு | மயக்கம் | –தெளிவு |
| திண்மை | –நொய்மை | மடைமை | –புலமை |
| திற | –பூட்டு, மூடு | மறைத்தல் | –வெளிப்படுத்தல் |
| திரவம் | –கடினம் | மருட்சி | –வெருட்சி |
| தூலம் | –சூக்குமம் | முன் | –பின் |
| தூக்கம் | –விழிப்பு | முதுமை | –இளமை |
| தூரம் | –சமீபம் | மூப்பு | |
| தேவர் | – ரகர் | மெய்மை | –பொய்மை |
| தேடுதல் | –அழித்தல் | மேடு | –பள்ளம், மடு |
| | தொலைத்தல் | மூடல் | –திறத்தல் |
| தொகை | –விரி | வரவு | –செலவு |
| தொடக்கம் | –முடிவு | வளர்தல் | –தேய்தல் |
| தோன்றல் | –மறைதல் | வன்மை | –மென்மை |
| நன்மை | –தீமை | வண்மை | –இவறன்மை |
| நண்பகல் | –நள்ளிரவு | வாட்டம் | –மலர்ச்சி |
| நண்பன் | –பகைவன் | விருப்பு | –வெறுப்பு |
| நடுதல் | –பிடுங்குதல் | வீரம் | –அச்சம் |
| நல்லோர் | –தீயோர் | வெப்பம் | –தட்பம் |
| நுண்மை | –பருமை | வெற்றி | –தோல்வி |
| பழி | –புகழ் | வெந்நீர் | –தண்ணீர் |
| பகை | –நட்பு | சாத்தியம் | –அசாத்தியம் |
| பண்டிதர் | –பாமரர் | | |
| பருத்தல் | –சிறுத்தல் | | |

## (ஆ)

| | | | |
|---|---|---|---|
| அங்கம் | –அனங்கம் | ஆதரவு | –நிராதரவு |
| அனுகூலம் | –பிரதிகூலம் | | அனாதரவு |
| அட்சம் | –நிரட்சம் | இதம் | –அகிதம் |
| அட்சரம் | –நிரட்சரம் | இலட்சணம் | –அவலட்சணம் |
| அவசியம் | –அனாவசியம் | இம்சை | –அகிம்சை |
| ஆசை | –நிராசை | ஈச்சுரவாதி | –நிரீச்சுரவாதி |
| ஆதாரம் | –நிராதாரம் | ஒழுங்கு | –ஒழுங்கீனம் |
| ஆதி | –அனாதி | களங்கம் | –நிர்க்களங்கம் |
| ஆரோகணம் | –அவரோகணம் | கவலை | –கவலையீனம் |
| ஆசாரம் | –அனாசாரம் | கதி | –நிர்க்கதி |

| | | | |
|---|---|---|---|
| காலம் | –அகாலம் | சௌக்கியம் | –அசௌக்கியம் |
| கிரமம் | –அக்கிரமம் | ஞானம் | –அஞ்ஞானம் |
| கீர்த்தி | –அபகீர்த்தி | தர்க்கம் | –குதர்க்கம் |
| கௌரவம் | –அகௌரவம் | தர்மம் | –அதர்மம் |
| சத்தியம் | –அசத்தியம் | தைரியம் | –அதைரியம் |
| சட்டை | –அசட்டை | தோசம் | –நிர்தோசம் |
| சலம் | –அசலம் | நம்பிக்கை | –அவநம்பிக்கை |
| சரீரி | –அசரீரி | நித்தியம் | –அநித்தியம் |
| சம்பவம் | –அசம்பவம் | நியாயம் | –அநியாயம் |
| சந்தர்ப்பம் | –அசந்தர்ப்பம் | நீதி | –அநீதி |
| சரம் | –அசரம் | பட்சம் | –விபட்சம் |
| சத்தம் | –நிசத்தம் | பாக்கியம் | –நிர்ப்பாக்கியம் |
| சாக்கிரதை | –அசாக்கிரதை | பூரணம் | –அபூரணம் |
| சித்து | –அசித்து | மங்கலம் | –அமங்கலம் |
| சிரத்தை | அசிரத்தை | மரியாதை | –அவமரியாதை |
| சீரணம் | –அசீரணம் | மலம் | –நிர்மலம், அமலம் |
| சுபம் | –அசுபம் | மானம் | –அவமானம் |
| சுரர் | –அசுரர் | மூலம் | –நிர்மூலம் |
| சுத்தம் | –அசுத்தம் | யோக்கியம் | –அயோக்கியம் |
| சுசி | –அசுசி | ரூபி | –அரூபி |
| சுமங்கலி | –அமங்கலி | வாதி | –பிரதிவாதி |
| சேதனம் | –அசேதனம் | விவேகம் | –அவிவேகம் |

## பயிற்சி 9

1. சாதகம், சற்குணம், திண்மை, குறைவு, அசுத்தம், புகழ் என்னுஞ் சொற்களுக்கு எதிர்ப்பொருட் சொற்கள் தருக.

2. மேல்வரும் வசனங்களிற் கீறிட்ட சொற்களுக்கு ஏற்ற எதிர்ப்பொருட் சொற்கள் வைத்து எழுதுக.

   (அ) நம்பிக்கையுடனும் சாக்கிரதையுடனும் முயற்சி செய்து வெற்றிபெற்றான்.

   (ஆ) பகைவர் செய்த தீமையை நல்லோர் மறப்பர்.

   (இ) காட்டின்கண் மனைவியைப் பிரிந்த நளன் துன்பமுற்றான்.

# 3. ஒருபொருட் பலசொற்கள்

விளக்கம் : தொன்மை மிக்க நந்தமிழ் மொழியில் மலிந்து கிடக்கும் செய்யுள் நூல்களில் மட்டுமன்றி, பின்னர் எழுந்த உரைநடை நூல்களிலும் ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்கள் பிரயோகிக்கப்பட்டிருப்பதினால் அவற்றைக் கற்பவர்களுக்கு ஒருபொருட் பலசொற்களின் அறிவு இன்றியமையாததாயிருக்கின்றது. அதனால், தமிழ்மொழியிற் செறிந்து கிடக்கும் ஒருபொருட் பல சொற்கள் சில ஈண்டு தரப்படுகின்றன. அவற்றைப் பயின்று கொள்வது பயன் தருவதாகும்.

உதாரணம் : 13

யானையின் பரியாய நாமங்கள் ஐந்து கூறுக.

யானை=களிறு, குஞ்சரம், மாதங்கம், வாரணம், சிந்துரம்

(எடுத்துக்காட்டு)

அணிதல்–சூடுதல், தரித்தல், புனைதல், பூணுதல், மிலைதல், அலங்கரித்தல்.

அந்தணர்–பார்ப்பார், பூசுரர், பிராமணர், வேதியர், மறையவர்.

அந்திப்பொழுது–சாயுங்காலம், மாலை, சந்தி, சாய்பொழுது.

அமைச்சர்–மந்திரர், சூழ்வோர், நூலோர், மந்திரிமார்.

அம்பலம்–சபை, பொதுவில், மன்றம், மன்று.

அம்பு–கணை, அத்திரம், சரம், பகழி, பாணம், வாளி, சலீமுகம்.

அரக்கர்–இராக்கதர், தானவர், நிருதர், நிசாசரர்.

அரசன்–மன்னன், வேந்தன், புரவலன், ஏந்தல், பூபாலன், நிருபன், கோ, கொற்றவன், இறைவன், அண்ணல், காவலன்

அரசி–இராணி, தலைவி, இறைவி.

அருள்–இரக்கம், கருணை, தயவு, கிருபை, அபயம்.

அலங்காரம்–அணி, அழகு, சிங்காரம், ஒப்பனை, பொற்பு.

அழகு–அணி, வடிவு, வனப்பு, பொலிவு, கோலம், பொற்பு, எழில், கவின்.

அழுதல்–அரற்றல், இரங்கல், அழுங்கல், கலங்கல், கலுழ்தல், பொருமல், விம்மல், புலம்பல்

அறிவு–உணர்வு, உரம், ஞானம், மதி, மேதை, விவேகம், புத்தி

அறிவாளிகள்-அறிஞர், உரவோர், சான்ருேர், நிபுணர், மேதாவியர், ஆய்ந்தோர், விபுதர்.
அன்பு-நேசம், ஈரம், நேயம், பரிவு, பற்று.
ஆகாயம்-அண்டம், விண், உம்பர், வானம், வான், விசும்பு, மாகம், மாதிரம், அந்தரம்.
ஆசிரியன்-உபாத்தியாயன், ஆசான், தேசிகன், குரவன்.
ஆசை-இச்சை, ஆவல், ஆர்வம், நசை, விருப்பம், வேட்கை, அவா; வாஞ்சை, பற்று, விழைவு, வேட்பு, மோகம் காதல்.
ஆடு-மேடம், தகர், மை, கடா, மேழகம், அசம்.
ஆபரணம்-அணி, ஆரம், இழை, கலன், கலம், நகை, பணி, பூண், பூடணம்.
இகழ்தல்-எள்ளல், பழித்தல், நிந்தித்தல், நகுதல்.
இரத்தம்-உதிரம், குருதி, சோரி, கறை.
ஈகை-அளி, வண்மை, கொடை, உபகாரம், தானம். [மேனி
உடல்-உடம்பு, மெய், சரீரம், சடம், குரம்பை, குதகம், யாக்கை,
உணவு-ஆகாரம், அசனம், உண்டி, போசனம், ஓதனம்.
உண்மை-சத்தியம், வாய்மை, மெய்.
உதயம்-வைகறை, புலரி, விடியல்.
உயிர்-ஆவி, ஆன்மா, சீவன்.
ஊமை-ஊமன், மூகன், மூகை, மூங்கை.
எருது-இடபம், நந்தி, பகடு, விடபம், விடை.
ஒலி-ஆர்ப்பு, அரவம், ஓசை, ஓதை, கம்பலை, தொனி.
ஒளி-கதிர், காந்தி, பிரகாசம், சுடர், சோதி.
கடவுள்-இறையோன், ஈசன், அமலன், தற்பரன், சருவேசுவரன், தேவன், நிமலன், பகவன், பிரான், பரமன்.
கடல்-உவரி, சாகரம், சமுத்திரம், ஓதம், பரவை, புணரி, முந்நீர் வாரி, வேலை.
கடை-அந்தம், இறுதி, ஈறு, எல்லை, முடிவு.
கல்வி-கலை, கேள்வி, வித்தை, விஞ்ஞை.
களவு-கரவு, கரப்பு, கரவடம், படிறு, சோரம்.
களிப்பு-உவகை, உவப்பு, களி, நகை, இறுமாப்பு, இன்பம், மகிழ்ச்சி, ஆனந்தம்.
கள்ளம்-களவு, கபடம், குற்றம், பொய், வஞ்சகம்.
காடு-கானகம், கானம், அடவி, ஆரணியம், வனம், சுரம்.
காதலன்-அன்பன், கணவன், கொழுநன், தலைவன், பதி, நாயகன், பத்தா, புருடன்
காதணி-குண்டலம், குழை, தோடு, குணுக்கு.
காமன்-அனங்கன், வேள், மாரன், மன்மதன், வில்லி, உருவிலி.
காலன்-இயமன், மறலி, கூற்றுவன்.
காரணம்-ஏது, நிமித்தம், மூலம், வழி.

கால்-கழல், அடி, சரணம், தாள், பாதம், பதம்.
காற்று-கால், பவனம், மாருதம், வளி, தென்றல், ஊதை.
கீழ்மக்கள்-தீயோர், புல்லர், அற்பர், கயவர், சிறியர், நீசர், பூரியர், பேதையர், அநீதர்.
குணம்-இயல், இயல்பு, சீலம், சால்பு, தகை, தகைமை, தன்மை, நீர்மை, பண்பு, பான்மை, பெற்றி.
குதிரை-அசுவம், அயம், பரி, துரகம், புரவி, பாய்மா.
குடித்தல்-பருகுதல், மாந்தல், அருந்தல், சுவைத்தல்.
குழந்தை-சேய், குழவி, பிள்ளை, மகவு.
குளித்தல்-ஆடல், குடைதல், தோய்தல், நானம், மஞ்சனம், படிதல், முழுகல்.
குளிர்ச்சி-அளி, ஈரம், சீதம், சீதளம், தண், நளி, நளிர், பனி,
குறைதல்-அஃகுதல், அருகுதல், குன்றுதல், சிறுத்தல், சுருங்குதல் தேய்தல், அல்குதல்.
குற்றம்-ஆசு, இழிவு, ஏதம், கசடு, களங்கம், கறை, காசு, குறை, கோது, தப்பு, தவறு, தீது, துகள், நவை, பழி, பிழை, பழுது, புரை, மறு, மாசு, வசை, வடு, இழுக்கு.
கூட்டம்-அவை, சபை, குழாம், கோட்டம், சமுகம், சமுதாயம், தொகுதி, தொகை.
கூந்தல்-குழல், கேசம், அளகம், ஓதி, கோதை.
கேடு-அழிவு, சிதைவு, சேதம், நட்டம்.
கொடி-துவசம், பதாகை, படம், துகில்.
கொடுமை-கோரம், வஞ்சகம், கடினம், குரூரம், வக்கிரம்.
கொத்து-குலை, மஞ்சரி, தாறு.
கொல்லுதல்-கோறல், ஒழித்தல், செகுத்தல், செறுத்தல், தெறுதல், தொலைத்தல், படுத்தல், மாய்த்தல், முருக்கல், வதைத்தல்.
சக்கரம்-ஆழி, திகிரி, நேமி, வட்டம்.
சத்தியம்-ஆணை, சபதம், சூழ், பிரமாணம், உண்மை.
சந்திரன்-அம்புலி, மதி, உடுபதி, சோமன், தாராபதி, திங்கள், நிசாபதி, நிலவு, மதியம், பிறை.
சபை-அவை, சங்கம், குழு, கூட்டம், தொகுதி.
சமயம்-தருணம், அவகாசம், வேளை, ஓரை, அற்பம்.
சம்மதி-அனுமதி, இணங்கு, உடன்படு, நேர், இசை.
சரசுவதி-கலைமகள், நாமகள், வாணி, இசைமடந்தை, பாமகள்.
சருக்கரை-கன்னல், பாகு, கட்டி.
சாதல்-இறத்தல், உலத்தல், ஒழிதல், தபுதல், துஞ்சல், பொன்றல். மடிதல், மாய்தல், மாளல், முடிதல், விளிதல், வீதல்,
சிங்கம்-அரி, ஆளி, கேசரி, கோளரி, சீயம்.
சிரிப்பு-ஆர்ப்பு, நகைப்பு, முறுவல், மூரல், இளிப்பு.

சினம்–கோபம், சீற்றம், காய்தல், செற்றம், முனிவு, வெகுளி, கதம், உடற்றல், குரோதம்.
சிநேகம்–நட்பு, தொடர்பு, நேயம், கேண்மை, மித்திரம்.
சுடுகாடு–ஈமம், சுடலை, மயானம், முதுகாடு, பிணக்காடு.
சுத்தம்–தூய்மை, புனிதம், வால், சுசி.
சுற்றம்–உறவு. ஒக்கல், பரிசனம், கிளை.
சூரியன்–அருக்கன், செய்யோன். ஆதித்தன், ஆதபன், இரவி, கதிரவன், சோதி, செங்கதிரோன், ஞாயிறு, தினகரன், பகலோன், பரிதி, பானு.
செல்வம்–திரு, நிதி, தனம்.
சொல்–கிளவி, கூற்று, மாற்றம், மொழி. வாக்கு.
சொல்லுதல்–மொழிதல், உரைத்தல், செப்புதல், கூறுதல், இயம்புதல், அறைதல், இசைத்தல், விளம்புதல்.
சோலை–கா, தண்டலை, பொழில், கானம், பூங்காவனம், உபவனம், நந்தவனம்.
சோறு–அடிசில், அமுது, அன்னம், சாதம், பருக்கை. புற்கை, போனகம்.
ஞானம்–அறிவு, ஆற்றல், உரம், போதம், வித்தகம், வித்தை, விவேகம்.
தடாகம்–ஏரி, கயம், குளம், தடம், பொய்கை, வாவி.
தந்தை–பிதா, தாதா, தாதை, தகப்பன், அப்பன்.
தமையன்–முன்னவன், அண்ணன், மூத்தோன்.
தம்பி–இளையோன், பின்னோன், இளவல், பின்னவன்.
தரித்திரம்–வறுமை, மிடி, இரப்பு, இலம்பாடு, நல்குரவு.
தருக்கம்–நியாயம், வாதம், யூகம்.
தலை–சென்னி, சிரம், முடி.
தாமரை–அம்புயம், பங்கயம். அரவிந்தம், கஞ்சம், கமலம், பதுமம், புட்கரம், முண்டகம், முளரி, வசனம், புண்டரீகம்.
தாய்–அன்னை, மாதா, யாய்.
திருடர்–கள்வர், கள்ளர், சோரர்.
துதித்தல்–ஏத்தல், தோத்தரித்தல், பரவல், புகழ்தல், போற்றுதல், வழுத்துதல், வியத்தல்.
துன்பம்–இடர், அல்லல், இடும்பை, இன்னல், இன்னா, இடுக்கண், துக்கம், துயர், நோய், பீடை, வேதனை.
தேன்–மது, நறவு, தேறல், மட்டு, கள்.
தோழன்–சிநேகிதன், துணைவன், நண்பன், பாங்கன், சகாயன், கேள்வன்
தோழி–சேடி, துணைவி, பாங்கி, சகி, சிநேகிதி.
நன்மை–உறுதி, நயம், நலம், விழுப்பம், விழுமம்.
நாள்–எல், தினம், பகல், வைகல்.
நித்திரை–சயனம், துஞ்சல், துயில், அனந்தல், உறக்கம், கண்படை
நீர்–அப்பு, சலம், தீர்த்தம், புனல், சிந்து.
நீதி–தருமம், நடு, நியாயம், நீதம், நெறி.
நூல்–புத்தகம், பனுவல்.

நெருப்பு-தீ, அக்கினி, அங்கி.
பகைவர்-ஒட்டார், ஒல்லார், ஒன்னார், செறுநர், சேரலர், செற்றார், துன்னார், தெவ்வர், நேரலர், மற்றவர்.
பக்கம்-பாங்கு, பாரிசம், பால், புடை, புறம், இடை, சிறை.
படுக்கை-அமளி, சயனம், கண்படை, சேக்கை, கிடக்கை, உறையுள்
படை-சேனை, தானை, தண்டம், தண்டு.
பல்-எயிறு, தந்தம், தசனம்.
பவளம்-துகிர், துவர், அரதிதம், துப்பு.
பன்றி-ஏனம், கேழல், வராகம்.
பாட்டு-கவி, கவிதை, செய்யுள், பா, தூக்கு, யாப்பு, தொடர்பு.
பாம்பு-அரவம், அரவு, உரகம், கட்செவி, சர்ப்பம், பணி, பன்னகம், பாந்தள், புயங்கம், மாசுணம்.
பாயிரம்-அணிந்துரை, தந்துரை, புறவுரை, நூன்முகம், பதிகம், புனைந்துரை பெய்துரை, முகவுரை.
பிரமன்-அயன், திசைமுகன், நான்முகன், மலரோன்.
பிறப்பு உற்பத்தி, உற்பவம், சனனம், சென்மம், சனிப்பு.
புகழ்-இசை, ஒளி, சீர், மீக்கூற்று, மேம்பாடு, கீர்த்தி.
புசித்தல்-அயிறல், அருந்தல், ஆர்தல், உண்ணல், சுவைத்தல், தின்னல், துய்த்தல், நுகர்தல், மிசைதல்.
புணர்தல்-கலத்தல், கூடல், சங்கமித்தல், சம்போகித்தல், புல்லல்
புலி-உழுவை, வரி, வேங்கை, வயமா.
புழுதி-துகள், தூளி, பொடி, பூழி, தூசி.
பூ-போது, மலர், புட்பம், அலரி, அலர், தாமம், தார், வீ.
பூமி-பார், அகிலம், காசினி, குவலயம், சகம், சக்கரம், ஞாலம், தரணி, புவனம், புவி, பூ, பொறை, மண், மண்டலம் வையகம், வையம்.
பெண்-மங்கை, மடந்தை, பாவை, பூவை, அணங்கு, காரிகை, கோதை, தையல், மாது, வனிதை, அரிவை, நாரி, பேதை, மகடூஉ,
பெருமை-தகை, தகைமை, பீடு, மாட்சி, மாண்பு, விறல், வீறு.
பொய்-தப்பு, படிறு, இழுக்கு, கிருத்திரமம். [அமையம்.
பொழுது-காலை, கால், பாணி, பருவம், போத்து, போது, வேலை
பொன்-சொர்னம், இரணியம், ஆடகம், தசும்பு, சாம்பூநதம் செய்பொன்.
போர்-அமர், இகல், சமர், செரு, மலைவு, யுத்தம்.
மகள்-புத்திரி, புதல்வி, குமாரத்தி, குமாரி, தனையை.
மகன்-குமரன், குமாரன், சுதன், புதல்வன், மதலை, மைந்தன், தனயன், புத்திரன்.
மதில்-அரண், இஞ்சி, எயில்,

மயக்கம்-அயர்வு, பித்தம், பிரமை, மயல், மருள், மைந்து,
மோகம், வெருந்.
மலை-கிரி, குன்று, அசலம், சிலம்பு, நகம், நாகம், வெற்பு,
பொருப்பு.
மனம்-அகம், உளம், உள், உள்ளம், சித்தம், நெஞ்சு.
மனிதர்-மாந்தர், ஆடவர், நரர், மாக்கள், மக்கள், மானிடர்,
மண்ணோர், மைந்தர்.
மான்-உழை, நவ்வி, ஏணம், புல்வாய், கலை, இரலை.
மாலை-ஆரம், அணி, அலங்கல், கண்ணி, கோதை, சரம், தாமம்,
தெரியல், தொடை, மஞ்சரி.
மிகுதி-சால, உறு, தவ, நனி, கழி, கூர், அதிகம், ஆற்றல்,
இறப்பு, சிறப்பு, பெரிது, மிகை.
முட்டை-அண்டம், கரு, கோசம், சினை
முருகன்-ஆறுமுகன், கந்தன், சேய், வேள், குமரன், காங்கேயன்,
சண்முகன்.
முலை-கொங்கை, கொம்மை, தனம், பயோதரம்.
முனிவர்-அடிகள், தபோதனர், துறவோர், நீத்தோர், மாதவர்,
தாபதர்.
மூங்கில்-அமை, பணை, வரை, வேணு, வேய்.
மெய்-ஆணை, உண்மை, சத்தியம், நிச்சயம், பட்டாங்கு,
வாய்மை, திடம், திண்மை.
மேகம்-முகில், கார், கொண்டல்.
யானை-கரி, களிறு, குஞ்சரம், பிடி, மாதங்கம், சிந்துரம், வார
ணம், வேழம்.
யாகம்-ஓமம், மகம், வேள்வி.
வண்டு-அரி, அளி, அறுபதம், சுரும்பு, ஞிமிறு, தும்பி, வண்டு.
விட்டம்-(சக்கரம் பார்க்குக)
வயல்-கழனி, செய், பழனம், பண்ணை, புலம், பானல்
வலி-அடல், ஆண்மை, ஆற்றல், இகல், உரம், உறுதி, திறம்,
துப்பு, பீடு, முரண், மைந்து, வன்மை, விறல், வீரம்.
வழி-ஆறு, நெறி, மார்க்கம், ஒழுக்கம்.
வளமை-செழுமை, கொழுமை, மல்லல், யாணர், வண்மை, வளம்,
வாசனை-கந்தம், கடி, கொங்கு, நறை, நாற்றம், மணம், மரு,
வாசம், வம்பு, விரை, முருகு, பரிமளம்.
வானம்-மேகம், எழிலி, கார், கொண்டல், கொண்மூ, மஞ்சு,
புயல், முகில், மை, விசும்பு, வான், விண்.
விட்டுணு-அரி, கேசவன், நாராயணன், பதுமநாயன், மாதவன்,
மாயவன், மால், முகுந்தன்.
விநாயகன்-கணபதி, கயமுகன், மூத்தோன், விக்கினேசுவரன்
விரைவு-வல்லை, ஒல்லை, விசை, வேகம், கெதி, துரிதம்.

வில்-சிலை, தனு, சாபம், கார்முகம், கோதண்டம்.
வீடு-அகம், இல், இல்லம், உறையுள், கிருகம், மனை, மாளிகை.
வெண்மை-வெள்ளை, தவளம், வெளிறு, வெள்ளி, நரை, வால், பால், விளர்.
வேசி-கணிகை, பரத்தை, பொதுமகள், விலைமகள்.
வேதம்-ஆரணம், மறை, சுருதி, ஓத்து, சமயம்.
வேற்றுமை-திரிவு, பின்னம், பேதம், மாற்றம், விகற்பம். விபரீதம், விரோதம், வேறுபாடு.
வேளாளர்-காராளர், உழவர், மேழியர், பூபாலர்.

## பயிற்சி 10

1. உடல், ஆசை, கொல்லுதல், தாமரை, பூமி, மலை, வில், என்பவற்றின் பரியாய நாமங்களை எழுதுக.
2. மேல்வரும் பகுதியில் கீறிட்ட சொற்களுக்கு ஒத்த பொருள் குறிக்கும் வேறு சொற்கள் வைத்து எழுதுக.

   (அ) நான்மறை அறங்கள் ஓங்க.
   (ஆ) அகத்தினழகு முகத்திற் றெரியும்.
   (இ) வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை.
   (ஈ) 'வானுறு மதியம் வந்ததும் மலர்க் கரம் குவியும்.'

---

# 4. பல பொருள் ஒரு சொல்

விளக்கம் : தமிழ்மொழியில் ஒரு பொருட் பல சொற்கள் இருப்பது போலவே பலபொருள் குறிக்கும் சொற்களும் உண்டு. பல பொருள் குறிக்கும் சொற்களைப்பற்றிய அறிவில்லாமையால், அவை பயின்று வருமிடங்களில் எப்பொருள் குறித்து அவை வந்தன என்பதையுணராது பலர் இடர்ப்படுவதுமுண்டு. உதாரணமாக, "காயத்தில் ஏற்பட்ட காயத்துக்குக் காயம் மருந்தாகுமா ?" என்னும் வசனத்தில் காயம் என்னும் மூன்று சொற்களும் முறையே உடல், இரணம், பெருங்காயம் என்னும் வெவ்வேறு பொருள்கள் குறித்து வருவதை உணராதார் அவ்வசனத்தின் பொருளை அறியவேமுடியாது. ஆகவே, சாதாரண வழக்கில் உள்ள பலபொருள் குறிக்கும் சொற்கள் சில மேலே தரப்படுகின்றன. அவை பயின்றுவரும் வகையை ஆராய்ந்தறிக.

## உதாரணம் : 14

கரி என்னும் சொல் குறிக்கும் வெவ்வேறு பெயர்கள் ஐந்து எழுதுக !

கரி : இருந்தை, நஞ்சு, யானை, வைரம், சாட்சி.

(எடுத்துக்காட்டு)

அகம்-வீடு, மனம்.
அங்கி-தீ, சட்டை, அக்கினிதேவன்.
அடி-கால், பன்னிரண்டு அங்குலங் கொண்ட ஓர் அளவு, செய்யுளுறுப்பு, ஆதி, அடியென்னேவல்.
அணங்கு-அழகு, தெய்வப்பெண்.
அணி-அழகு, ஆபரணம், நிரை, அணியென்னேவல்.
அணை-வரம்பு, செய்கரை, மெத்தை, அணையென்னேவல்.
அத்தி-யானை, எறும்பு, ஒருமரம்.
அப்பு-நீர், தந்தை, அப்பென்னேவல்.
அயில்-அழகு, இரும்பு, ஈட்டி, உண்ணென்னேவல்.
அரக்கு-மெழுகு, தேன், அரக்கென்னேவல்.
அரங்கம்-சபை, போர்க்களம், ஆற்றிடைக்குறை, கல்விச்சாலை.
அரசு-இராசா, அரசமரம்.
அரவம்-பாம்பு, ஒலி, சிலம்பு.
அரி-அழகு, குதிரை, சிங்கம், சிவன், வண்டு, அரியென்னேவல்.
அவதி-தவணை, ஆபத்து, முடிவு.
அவி-சோறு, தேவருணவு, அவியென்னேவல்.
ஆடி-அசைந்து, கண்ணாடி, ஒருமாதம்.
ஆடு-மறியாடு, மேடவிராசி, அசம், ஆடென்னேவல்
ஆடை-சீலை, பாலின்ஏடு, உடுப்பு.
ஆரம்-பூமாலை, விட்டத்தின் அரைப்பங்கு.
ஆழி-கடல், சக்கரம், தேருருளை, வட்டம்.
ஆறு-நதி, ஓரெண், வழி, ஆறென்னேவல்.
இடி-அசனி, இடியென்னேவல்.
இதழ்-உதடு, பூவிதழ், புத்தகத்தின் தாள், கண்ணிமை.
இசை-சங்கீதம், புகழ், பாட்டிசை, இசையென்னேவல்.
இரவு-இரத்தல், இராக்காலம், வறுமை.
இறப்பு-சாவு, கடத்தல், வீட்டிறப்பு.
ஈ-வண்டு, ஈயென்னேவல்.
ஈர்-இரண்டு, பேன்முட்டை, ஈரென்னேவல்.
ஈமம்-சுடுகாடு, விறகு, (பிரேதம்)
ஈரம்-அன்பு, குளிர்ச்சி.

ஈறு-முடிவு, பல்லிடைமுரசு.
உடு-நட்சத்திரம், உடுவென்னேவல்.
உடை-உடுப்பு, ஒருமரம், உடைமை, உடையென்னேவல்.
உத்தரம் வடதிசை, ஒரு நட்சத்திரம், மறுமொழி.
உமி-தானியத்தின் மேற்றோல், உமியென்னேவல்
உரம்-எரு, மார்பு, வலிமை.
உறுதி-தளராநிலை, ஆட்சிப்பத்திரம், சத்தியம். வலிமை.
ஊறு-காயம், தீமை, ஊறென்னேவல்.
ஊனம்-குறைபாடு, தீமை, சாரம்.
எச்சம்-சந்ததி, மிச்சம், பட்சிப் பீ.
எட்டு-ஓரெண், எட்டென்னேவல்.
ஏடு-பாலாடை, ஏட்டுப்புத்தகம், பூவிதழ், கண்ணிமை.
ஏறு-எருது சில விலங்குகளின் ஆண், ஏறென்னேவல்.
ஏற்றம்-உயர்ச்சி, துலா, ஏணி.
ஐயம்-பிச்சை, சந்தேகம்.
ஒட்டு-அருகு, ஒட்டென்னேவல்,
ஓடு-விதைகளினுறை, வீடுவேயுமோடு. உடைந்த மட்பாண்டம், ஓடென்னேவல்
கடகம்-கூடை, கைவளை, — [handwritten]
கடன்-கடமை, சந்தியாகருமம், இரவற்பொருள்.
கடா-வினா, ஆடு, எருமை, இவற்றின் ஆண்
கடி-அச்சம், அழகு, வாசனை, கூர்மை, ஒலி, கடியென்னேவல்
கடை-முடிவு, அங்காடி, வாயில், கடையென்னேவல்.
கட்டை-மரக்கட்டை, நீளம் குறைந்தது, பிரேதம்.
கணவாய்-ஒரு மீன், மலைகளுக்கிடையேயுள்ளவழி.
கண்டம்-கழுத்து, ஆபத்து, துண்டம், நிலத்தின் பெரும் பிரிவு.
கண்டி-ஓரூர், ஓரளவு, கண்டியென்னேவல்.
கதி-அடைக்கலம், மோட்சம், அதிட்டம், தஞ்சம்.
கதிர்-சூரியன், கிரணம், பயிர்க்கதிர்.
கதை-தண்டாயுதம், சம்பாடணை, கதையென்னேவல்.
கத்தரி-ஒரு செடி, கத்தரிக்கோல், கத்தரியென்னேவல்.
கந்தம்-கிழங்கு, வாசனை.
கம்பலை-ஒலி, துன்பம், ஆரவாரம்
கம்பு-ஒரு பயிர், மரக்கொம்பு, சங்கு.
கயம்-குளம், யானை.
கரி-இருந்தை, கருமை, சாட்சி, யானை, கரியென்னேவல், மிளகு, வைரம், நஞ்சு.
கலம்-ஆபரணம், மரக்கலம், மண்பாத்திரம்,

கலன்-ஆபரணம், ஆறுபோத்தல்கொண்ட அளவு.
களி-இறுகிய பழச்சாறு, களிப்பு, கள், வெறி, களிமண், தேன் களியென்னேவல்.
கலி-துன்பம், கடல், ஒலி, கடையுகம்.
கலிங்கம்-குதிரை, சீலை, போர்வை.
கவி-குரங்கு, நாற்கவிகள்பாடுவோன், கவியென்னேவல்,
களை-அயர்வு, அழகு, குற்றம், களைப்பூடு, களையென்னேவல்.
கள்ளி-ஒருமரம், திருடி,
கன்று-இளமரம், குட்டி.
காப்பு-காவல், கையணிகளில்ஒன்று, நூலின் தொடக்கத்திற் பாடப்படும் தெய்வ வணக்கக் கவி.
காயம்-தழும்பு, உடல், பெருங்காயம்.
காரி-கடைஎழு வள்ளல்களில் ஒருவன், சனி, இந்திரன், ஆவிரை கண்டங்கத்தரி.
கிரகம்-வீடு, கோள்.
குடி குறம், வீடு, கோத்திரம், குடியென்னேவல்.
குறி-அடையாளம், இலக்கு, குறியென்னேவல்.
கூடு-அடைப்பு, பறவைக்கூடு, உடம்பு, கூடென்னேவல்,
கூட்டு-உறவு, கலப்பு, கறிக்கூட்டு, கூட்டென்னேவல்.
கூறு-எள்ளு, பங்கு, கூறென்னேவல்.
கூற்றம்-இயமன், சொல், சத்துரு.
கூனல்-சங்கு, நத்தை, வளைதல், முதுகுவளைவு.
கொத்து-திரள், நாளி என்னும் அளவை, கொத்தென்னேவல்.
கொள்ளை-ஒருநோய், கொள்ளையடித்தல், மிகுதி
கோடி-புதுச்சீலை, நூறிலட்சம், வீட்டுப்பின்பக்கம்.
கோதை பெண், பூமாலை, குழல்.
சம்பு-நரி, நாவல்மரம், விட்டுணு, சிவன், பிரமன்.
சரணம்-கால், வணக்கம், தஞ்சம், அடைக்கலம்.
சலம்-நீர், மூத்திரம், பிடிவாதம்.
சிறை-சிறைச்சாலை, இறகு, அடிமை.
சினை-உறுப்பு, பூவரும்பு, கருப்பம், முட்டை, மரக்கொம்பு.
சுகம்-வருத்தமின்மை, இன்பம், கிளி.
சுரம்-அருநெறி, உட்டொளை, காடு, காய்ச்சல், வழி, பாலைநிலம், கொம்பினுட்குருத்து.
சுருதி-வேதம், சுதி, ஒலி, மந்திரம், இசை.
சூடு-அரிக்கட்டு, சேவற்சூடு, வெப்பம், வெடி, சூடென்னேவல்
செப்பு-சிமிழ், செப்பென்னேவல்
செல்-கறையான், செல்லென்னேவல்.

தட்டு-தராசு முதலியவற்றின் தட்டு, தட்டம், கப்பற்றட்டு, கட்டென்னேவல்.

தானம்-இடம், ஈகை.

திட்டம்-ஏற்பாடு, உறுதி, மதிப்பு, சரி.

திரி-மூன்று, விளக்குத்திரி, திரியென்னேவல்.

நீட்டு-எழுது, கூர்மையாக்கு, அழுக்கு.

துப்பு-கறை, சிவப்பு, பவளம், துப்பெனனேவல்.

தூக்கு-பாட்டு, நிறை, கழுத்திற் கயிறிட்டுத் தூக்கு, தூக்கென்னேவல்.

தேர்-இரதம், தேரென்னேவல்.

தை-ஒருமாதம், தையென்னேவல்.

நகம்-உகிர், மலை.

நவம்-புதுமை, ஒன்பது.

நகை-ஆபரணம், இகழ்ச்சி, களிப்பு.

நடு-இடை. நீதி, நடுவென்னேவல்.

நாகம்-பாம்பு, யானை, மலை,

நாடி-இருபத்துநாலு நிமிடங்கொண்டது, நரம்பு, தேடி, முகத்தின் நாடி,

படி-சம்பளம், நாழி, பூமி, படியென்னேவல்.

படை-சேனை, அடுக்கு, படையென்னேவல்.

பணி-ஆபரணம், தொண்டு, தொழில், பாம்பு, பணியென்னேவல்.

பதம்-பாதம், பக்குவம் சொல்.

பதி-அரசன், இடம், கடவுள், பதியென்னேவல்.

பத்திரம்-இலை, உறுதிப்பத்திரம், திருமுகம், பூவிதழ், உறுதி, சாக்கிரதை.

பந்தம்-உறவு, கட்டு, கயிறு, மலம், பாசம்.

பல்லி-கௌளி, பல்லையுடையவள்.

பற்று-அன்பு, பெற்றுக்கொண்டது, பற்றென்னேவல்.

பாகம்-சமையல், பங்கு, பக்குவம், இரண்டுயார்கொண்ட அளவு,

பாடு-துன்பம். வேலை, பக்கம், பாடென்னேவல்.

பார்-பாறை, பூமி, பாரென்னேவல்.

பிடி-பெண்யானை, கைபிடி, பற்றுகை, பிடியென்னேவல்.

பிணி-நோய், கட்டு, பிணியென்னேவல்.

பிரமாணம்-அத்தாட்சி, அளவு, விதி, மேற்கோள், சத்தியம்.

புலம்-அறிவு, வயல்.

புல்-புல்லு, இழிவு, அற்பம், புல்லென்னேவல்.

புனல்-நீர், ஆறு, வாய்குறுகிய பாத்திரத்திற் திரவப்பொருளை ஊற்ற உதவுங் கருவி.

பூசை-அன்னதானம், வழிபாடு, பூனை.

பூண்-ஆபரணம், கவசம், உலக்கை முதலியவற்றிலிடும் பூண், பூணென்னேவல்.
பொறை-பொறுமை. மலே, அடக்கம்.
போர்-யுத்தம், நெற்போர், போரென்னேவல்.
மஞ்சு-அழகு, மேகம், வலிமை, பனி, ஆபரணம்.
மடி-சோம்பல், சீலே, வயிற்றுமடிப்பு, மடக்கென்னேவல்.
மடை-சமையல்வேலே, நீரணை, ஒடை.
மட்டு-தேன், அளவு, எல்லே, மிதம்.
மணி-அறுபது நிமிடங்கொண்ட நேரம், நவமணிப்பொது, அடிக்கும்மணி, கண்ணினது விழி.
மதம்-சமயம், வலி, யானே மதம், வெறி.
மதி-சந்திரன், அறிவு, மாதம், மதியென்னேவல்.
மதியம்-சந்திரன், நண்பகல், நடு.
மாடு-பசுப்பொது, பக்கம், பொன்.
மகிழ்-ஒருமரம், களிப்பு, மகிழென்னேவல்.
மாறு-துடைப்பம், பகை, உத்தரம், எதிர், மாறென்னேவல்.
மாற்றம்-சொல், பகை, வேற்றுமை, இடமாற்றம்.
மானம்-மரியாதை, அபிமானம், கற்பு.
மீன்-மச்சம், நட்சத்திரம்.
முடி-கிரீடம், குடுமி, முற்றுவி, கட்டென்னேவல்.
முட்டி-கலசம், விரல்மடித்த கை, மோதியென்னும் வினேயெச்சம்
முதல்-ஆதி, காரணம், மூலதனம், கொள்விலே.
முறை-ஒழுங்கு, உறவுமுறை, ஆள்மாறி வேலேசெய்யும் நியமம்.
முனே-நுனி, கடலுட் செல்லும் நீண்ட தரைப்பாகம், முனேயென்னேவல்
மெய்-உடல், உண்மை, ஒற்றெழுத்து.
வங்கம்-ஈயம் தகரம், அலே, ஒருதேசம்.
வச்சிரம்-வச்சிராயுதம், மாட்டுத் தோலிலிருந்து எடுக்கும் பசை, வைரம், மிகவும் உறுதியானது.
வடம்-ஆலமரம், கயிறு, வட்டம்.
வடு-குற்றம், தழும்பு, வசை.
வண்ணம்-அழகு இராகம், ஒப்பனே, விதம்,
வதை-உபத்திரவம், கொலே, தேன்வதை, வதையென்னேவல்.
வம்பு-புதுமை, வாசனே, தீச்செயல்.
வலம்-வலப்பக்கம், வலி, வெற்றி, இடம்.
வலி-ஒரு நோய், வல்லெழுத்து, வலிமை, வலியென்னேவல்.
வாகை-வெற்றி, வெற்றிமாலே, ஒருமரம்.
வாசி-குதிரை, நல்லநிலே, அம்பு, வசிப்போன், வாசியென்னேவல்.
விடை-எருது, உத்தரம், எதிர்மொழி.

விதி-கட்டளை, ஒழுக்கமுறை, ஊழ், சூத்திரம்.
விருத்தம்-முதுமை, அறிவு, வட்டம், பாவினத்தொன்று.
விரை-வாசனை, நறும்புகை, வித்து, விரையென்னேவல்.
வில்-தனு, ஒளி, வில்லென்னேவல்.
வினை-தொழில், வஞ்சகம், நல்வினை திவினையாகிற பூர்வகருமம்.
விறு-பெருமை, வேகம். உயர்ச்சி, வெற்றி, கருமம்.
வெள்ளி-வெண்பொன், சுக்கிரன், வெள்ளிக்கிழமை.
வேய்-மூங்கில், மூடு, ஏயென்னேவல், வேயெனேவல்.
வேலை-கடல், தொழில், வேலைத்திறன்.
வேல்-வேலாயுதம், மூங்கில், ஒருமரம்.
வைரம்-நவமணியினொன்று, பகை, கடினம்.

## பயிற்சி 11

1. ஆடி, ஓடி, கரி, நகை என்னுஞ்சொற்கள் வெவ்வேறு பொருள் தர ஒவ்வொன்றையும் மும்மூன்று வசனங்களில் அமைக்குக.
2. மடி, பணி, ஆடை, மறை, கோதை என்னும் சொற்கள் எவ்வெவ் விவித பொருளைக் குறிக்கும் ?

---

## 5. பெயர்ச்சொல்லாகவும் வினைச்சொல்லாகவும் வழங்கும் சில சொற்கள்

விளக்கம் : பல பொருள் குறித்த சொற்களைப் படித்துக் கொண்ட பின்பு, அச்சொற்களில் சில பெயராகவும் வினையாகவும் நிற்றலை விளக்கிக்கொண்டு அவற்றை வசனத்திற் பிரயோகித்துப் பழகிக்கொள்ளுதல் நல்லது.

### உதாரணம் : 15

வினா :- 'ஓடு' என்னும் சொல் பெயராகவும் வினையாகவும் வர வசனங்கள் அமைக்குக.

விடை :- பெயர் : (1) குடிவெறியிலும் சூதாட்டத்திலும் தனது செல்வமெல்லாம் இழந்த சுந்தரன் கையில் ஓடு எடுத்து வீடு வீடாகப் பிச்சைக்குச் சென்றான்.

(2) புளியம் விதையின்மேல் உள்ள ஓடு நெருப்புச் சுட்ட புண்ணுக்கு மருந்தாக உபயோகப்படுகின்றது.

(3) வீடு வேய்வதற்கு உபயோகப்படும் ஓடுகளில் முடியடையாளம் இடப்பட்ட ஓடு சிறந்தது என்று கூறப்படுகின்றது.

வினை :- பிச்சைக்குச் சென்ற ஏழையைப் பார்த்து 'நாய் கடிக்கப் போகிறது, நில்லாமல் ஓடு' என்று வீட்டு எசமான் கூறினன்.

(எடுத்துக்காட்டு)

| | | | |
|---|---|---|---|
| அடி | எரி | கொறி | தூக்கு |
| அடை | எட்டு | கோபி | தேர் |
| அரி | ஏறு | கோல் | தேக்கு |
| அவி | ஏர் | சரி | தை |
| அறை | ஒட்டு | சாடு | தோல் |
| அணை | ஒன்று | சிதை | நடு |
| அளி | ஒளி | சிந்து | நகர் |
| அலை | ஒடி | சிக்கு | நகை |
| அணி | ஓடு | சுருட்டு | நாடு |
| அசை | கல் | சுழி | நாண் |
| அரை | கரை | சூடு | நாலு |
| ஆடு | கடி | செப்பு | நுங்கு |
| ஆறு | கடை | செல் | நூறு |
| இடி | கலை | சே | நெறி |
| இரை | களி | சேதி | நேர் |
| இசை | கவி | சொல் | நொடி |
| இணை | களை | சொட்டு | படி |
| ஈ | கால் | சொறி | பணி |
| ஈர் | கிழி | சோதி | பதி |
| ஈறு | கீறு | தடி | பார் |
| உடு | குடி | தட்டு | பாடு |
| உடை | குலை | தவறு | பாவி |
| உறை | குறை | தாளி | பிடி |
| உரை | குன்று | தாழ் | பிணி |
| உலை | குடை | திரி | புடை |
| உருக்கு | கூடு | தீட்டு | பூட்டு |
| உமி | கூறு | துடி | பெருக்கு |
| ஊர் | கேள் | துணி | பேதி |
| ஊறு | கொட்டு | துப்பு | பேர் |
| எண் | கொத்து | தூமி | பொறி |

| | | | |
|---|---|---|---|
| போதி | மிதி | மொழி | வாதி |
| மறி | முடி | வரி | விதை |
| மடி | முனி | வரை | வேய் |
| மறை | முனை | வஞ்சி | வேள் |
| மதி | மூடு | வளை | வை |
| மாறு | மெழுகு | வகை | |
| மாடு | மொய் | வாசி | |

## பயிற்சி 12

1. அறை, ஈறு, கரை, தட்டு, நாடு, பொறி என்னும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் அமைய ஒவ்வொன்றுக்கும் இவ்விரண்டு வசனங்கள் எழுதுக.
2. நீர் விரும்பிய ஐந்து சொற்கள் வினையாகவும், பெயராகவும் அமைய வசனங்கள் எழுதுக.

---

## 6. மரூஉச் சொற்கள்

விளக்கம்: தொன்றுதொட்டு வருதலின்றி, இடைக்காலத்திற் சில எழுத்துக்கள் கெட்டும், திரிந்தும், தோன்றியும் இலக்கணத்திற் சிதைந்து மருவிச் சில சொற்கள் வழக்கில் இடம் பெற்றுள்ளன. மருவிவரும் அத்தகைய சொற்கள் மரூஉ என அழைக்கப்படும் இலக்கணம் சிதைந்து வரினும் அறிஞர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டமையால் மரூஉச் சொற்கள் வழூஉச் சொற்களாகச் கருதப்படமாட்டா. சில மரூஉச் சொற்களும் அவற்றின் சரியான முன்னைய சொற்களும் மேலே தரப்படுகின்றன.

### உதாரணம்: 16

மேல்வரும் வசனத்தில் தடித்த எழுத்தில் இருக்கும் மரூஉச் சொற்களின் முன்னைய சொற்களை எழுதுக.

"**முக்காடு** இட்டுச் சென்ற பாத்திமாவை **நையாண்டி** செய்த **சோணாட்டு** மக்களின் **கீர்த்தி** குன்றியது."

முக்காடு.........முகக்கூடு
நையாண்டி.........நகையாண்டி
சோணாட்டு.........சோழ நாட்டு
கீர்த்தி.........சீர்த்தி

(எடுத்துக்காட்டு)

| மரூஉ | முன்னைய சொற்கள் | மரூஉ | முன்னைய சொற்கள் |
|---|---|---|---|
| அருமந்த | -அருமருந்தன்ன | சீதனம் | -ஸ்ரீதனம் |
| அவிழ்து, அமிழ்து, அமுது | -அவிழ் | சுதி | -சுருதி |
| | | சோணாடு | -சோழநாடு |
| | | தஞ்சை | -தஞ்சாவூர் |
| அமிர்தம், அமுதம் | -அவிழ்தம் | நையாண்டி | -நகையாண்டி |
| | | பாதி | -பகுதி |
| ஆங்காரம் | -அகங்காரம் | பாண்டிநாடு | -பாண்டியநாடு |
| அத்தனை | -அத்துணை | புதூர் | -புத்தூர் |
| அளகை | -அளகாபுரி | பேர் | -பெயர் |
| ஆனை | -யானை | பெருமான், பிரான் | -பெருமகன் |
| ஆசான் | -ஆசிரியன் | | |
| ஆறை | -ஆற்றூர் | பெருமாள் | -பெருமாட்டி |
| இத்தனை | -இத்துணை | பேத்தி | -பேர்த்தி |
| உறந்தை | -உறையூர் | பேரன் | -பெயரன் |
| எத்தனை | எத்துணை | போழ்து, போது | -பொழுது |
| என், என்னை என்ன | -எவன் | பொதியம், பொதிகை | -பொதியில் |
| கன்னடம் | -கருநடம் | மருகன் | -மருமகன் |
| களந்தை | -களத்தூர் | மீ | -மிகு |
| காமரு, காமம் | -காமம்மருவு | மீதி | -மிகுதி |
| காஞ்சி | -காஞ்சிபுரம் | முக்காடு | -முகக்கூடு |
| கிழவன் | -கிழா அன் | மோனை | -முகனை |
| கைலை | -கைலாயம் | மே-மி | -மேல் |
| கொழுகொம்பு, கொளுகொம்பு | கொள்கொம்பு | வாணன் | வாழ்நன் |
| | | வீழ் | விழு |
| கொழுநன் | -கொள்நன் | வீழ்து | -விழுது |
| சனகை | -சனகாபுரம் | வேவு | -வேய்வு |
| சாத்து | -சார்த்து | வைகுண்டம் | -வைகுந்தம் |
| கீர்த்தி | -சீர்த்தி | | |

## பயிற்சி 13

மேல்வரும் வசனங்களில் உள்ள மரூஉச் சொற்களையும் அவற்றின் சரியான முன்னைய சொற்களையும் எழுதுக :

(அ) சோணாட்டரசன் ஆனைமீதிவர்ந்து பாண்டிநாடு சென்றான்.

(ஆ) ஆராவது எப்போதாவது ஆசான் உரைத்த அத்தனையும் அகத்துக்கொண்டதில்லை.

## 7. தொகைப் பெயர்கள்

விளக்கம் : ஒரேயினப் பொருள்களைத் தொகுத்து, தொகுக்கப் பட்ட எண்ணிக்கையையும் பொருளின் பெயரையும் கூற, அதனாலே குறிப்பிடப்பட்ட பெயர்களே கருதப்பட்டு வருவதுண்டு. அவ்வித பெயர்கள் தொகைப்பெயர்கள் என்று கூறப்படும். தொகைப்பெயர்களை முன்னரே தெரிந்திரா விட்டால் வழக்கில் வரும்போது அவற்றின் பொருள் தெரியாது இடர்ப்பட நேரிடும். ஆகவே சிறப்பான சில தொகைப்பெயர்கள் மேலே தரப்படுகின்றன. அவற்றை மனனம் செய்துகொள்க.

### உதாரணம் : 17

வினா : "முக்கனியும் பாலும் உண்டான்" என்பதில் முக்கனி என்பதனாற் குறிக்கப்படும் கனிகள் எவை ?

விடை : முக்கனி என்பதினாற் குறிக்கப்படும் கனிகள் மாங்கனி, பலாக்கனி, வாழைக்கனி என்பனவாகும்.

(எடுத்துக்காட்டு)

இருதிணை : உயர்திணை, அஃறிணை.
இருமுதுகுரவர் : தாய், தந்தை.
இருமை : இம்மை, மறுமை.
இருவினை : நல்வினை, தீவினை.
இருசுடர் : சூரியன், சந்திரன்.
இருமரபு : தாய்மரபு, தந்தைமரபு.
இருநிதி : சங்கநிதி, பதுமநிதி.
இருவகைப்பற்று : அகப்பற்று, புறப்பற்று.
இருவகையறம் : இல்லறம், துறவறம்.
இருவகைப்பொருள் : கல்விப்பொருள், செல்வப்பொருள்.
முப்பொறி : வாக்கு, மனம், காயம்.
முக்காலம் : இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம்.
முத்தமிழ் : இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழ்.
மூவரசர் : சேரவரசன், சோழவரசன், பாண்டியவரசன்.
முப்பழம் : மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம்.
முப்பிணி : வாதம், பித்தம், சிலேட்டுமம்.
மும்முரசு : வீரமுரசு, கொடைமுரசு, மங்கலமுரசு.
மும்மூர்த்திகள் : சிவன், திருமால், பிரமன்.
முத்தேவியர் : உமாதேவி, இலக்குமி, சரசுவதி.
முத்தொழில் : படைத்தல், காத்தல், அழித்தல்.
மூவிடம் : தன்மை, முன்னிலை, படர்க்கை.
மூவுலகு : பூமி, அந்தரம், சுவர்க்கம்.
முக்குற்றம் : காமம், வெகுளி, மயக்கம்.

முச்சுடர் : சூரியன், சந்திரன், அக்கினி.
முச்சங்கம் : முதல், இடை, கடைச் சங்கங்கள்.
மும்மலம் : ஆணவம், கன்மம், மாயை.
முக்குணம் : இராசதம், சாத்வீகம், தாமதம்.
திரிகடுகம் : சுக்கு, மிளகு, திற்பலி.
திரிபுரம் : பொன்மதில், வெள்ளிமதில், இரும்புமதில்
நானிலம் : { முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம். காடு, மலை, கடல், வயல்
நால்வகைப்படை : தேர்ப்படை, யானைப்படை, குதிரைப்படை காலாட்படை.
நாலுவேதம் : இருக்கு, யசுர், சாமம். அதர்வணம்.
நாலுயுகம் : கிரேதயுகம், திரேதயுகம், துவாபரயுகம், கலியுகம்.
நால்வகைப்பா : வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா.
நால்வகை அளவை : எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல்.
நால்வகை ஆச்சிரமம் : பிரமச்சாரி, இல்வாழ்வோன், வானப் பிரத்தன், சந்நியாசி.
நான்கு உறுதிப்பொருள் : அறம், பொருள், இன்பம், வீடு.
நாற்குலம் : அந்தணர். அரசர், வணிகர், வேளாளர்.
நாற்குணம் : (ஆடவர்) அறிவு, நிறை, கடை, ஓர்ப்பு.
(பெண்கள்) அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு.
நால்வகைப் பூ : கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ.
நால்வகை உபாயம் : சாமம், பேதம், தானம், தண்டம்.
நால்வகைக்கவி : ஆசுகவி, மதுரகவி, சித்திரகவி, வித்தாரகவி.
நால்வகைச் சொல் : பெயர், வினை, இடை, உரி.
நால்வகை அரண் : காட்டரண், நாட்டரண், மலையரண், மதிலரண்
நால்வகை யாழ் : பேரியாழ், சகோடயாழ், மகரயாழ், செங்கோட்டியாழ்
ஐந்திணை : குறிஞ்சி, முல்லை, பாலை, நெய்தல், மருதம்
ஐம்பால் : ஆண்பால், பெண்பால். பலர்பால், ஒன்றன்பால் பலவின்பால்.
ஐம்பொறி : மெய், வாய், கண், மூக்கு, செவி.
ஐங்கணை : தாமரை, முல்லை, மா, அசோகு, கருங்குவளை என் பனவற்றின் மலர்கள்.
ஐம்பூதம் : நிலம், நீர், தீ, காற்று ஆகாயம்.
ஐம்புலன் : சுவை, ஒளி, ஊறு, ஓசை. நாற்றம்.
ஐம்பெருங் குரவர் : அரசன், உபாத்தியாயன், தாய், தந்தை தமையன்
ஐவகையிலக்கணம் : எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி,
ஐம்பெருங்காப்பியம் : சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம், மணி மேகலை, குண்டலகேசி, வளையாபதி.
ஐஞ்சிறுகாப்பியம் : சூளாமணி, உதயணன் காதை, நீலகேசி, நாககுமாரகாவியம், இயசோதரகாவியம்.

பஞ்சமாபாதகம் : கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், விபசாரம்.

பஞ்சபாண்டவர் : தருமன், வீமன், அருச்சுணன், நகுலன், சகாதேவன்.

பஞ்சாங்கம் : திதி, வாரம், நாள், யோகம், கரணம்.

கூந்தலின் ஐம்பால் : முடி, கொண்டை, குழல், பணிச்சை, சுருள்.

ஐவகைஇசைக்கருவி : தோற்கருவி, நரம்புக்கருவி, கஞ்சக்கருவி, கண்டக்கருவி, துளைக்கருவி.

பஞ்சஉலோகம் : பொன், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம்.

பஞ்சவருணம் : பச்சை, மஞ்சள், வெள்ளை, கருமை, செம்மை.

பஞ்சதரு : அரிசந்தனம், கற்பகம், சந்தனம், பரிசாதம், மந்தாரம்.

காடுபடுதிரவியமைந்து : மெழுகு, இருல், தேன், மயிற்பீலி, நாவி

கடல்படுதிரவியமைந்து : உப்பு, பவளம், முத்து, சங்கு, ஓர்க் கோலை.

நாடுபடுதிரவியமைந்து : செந்நெல், செவ்விளநீர், சிறுபயறு, வாழை, கரும்பு.

நகர்படுதிரவியமைந்து : கண்ணுடி பித்தன், கருங்குரங்கு, யானை, அரசன்.

மலைபடுதிரவியமைந்து : மிளகு, கோட்டம், அகில், தக்கோலம், குங்குமப்பூ.

ஆறுஉட்பகை : காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாற்சரியம்.

ஆறுசுவை : தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, உறைப்பு, கைப்பு.

ஆறங்கம் : மந்திரம், வியாகரணம், நிகண்டு, சந்தோபிசிதம், நிருதம், சோதிடம்.

எழுபருவம் : (பெண்கள்) பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்.

எழ்பிறப்பு : தாவரம், மச்சம், ஊர்வன, பறப்பன, விலங்கு, மக்கள், தேவர்.

~~கடை~~ ஏழுவள்ளல்கள் : பாரி, ஆய், எழிலி, நள்ளி, மலையன், பேகன், ஓரி.

சத்தசுரங்கள் : ச, ரி, க, ம, ப, த, நி.

அட்டாங்கம் : இருகால், இருகை, இருதோள், நெற்றி, மார்பு.

அட்டஐசுவரியம் : அரசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை.

அட்டஇலட்சுமி : தனம், தானியம், தைரியம், சௌகரியம், வித்தை, வெற்றி, கீர்த்தி, இராச்சியம்.

நவஇரத்தினம் : மரகதம், பவளம், நீலம், வச்சிரம், பதும ராகம், முத்து, கோமேதகம், புருடராகம், வைடூரியம்.

நவஇரசம் : சிங்காரம், வீரம், நகை, சாந்தம், கருணை, இழிவு, அற்புதம், பயம், கோபம்.

நவக்கிரகம் : சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி, சனி, இராகு, கேது.

நவதானியம் : உழுந்து, எள், கடலை, கொள்ளு, சாமை, தினை, துவரை, நெல்லு. பயறு.

தசாவதாரம் (விட்டுணு) : மீன், ஆமை, பன்றி, நரசிங்கம், வாமனன், பரசுராமன், தசரதராமன், கண்ணன், பலதேவன், கற்கி.

பத்துப்பாட்டு : திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப் பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப் பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம்.

பதினெண் கீழ்க்கணக்கு :- நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணைஐம்பது, ஐந்திணைஎழுபது, திணைமொழி ஐம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை.

## பயிற்சி 14

மேல்வரும் பகுதியில் உள்ள தொகைப் பெயர்களையும் அவைகளாற் குறிக்கப்படும் பெயர்களையும் எழுதுக.

1. (அ) "ஒன்றாய் இருசுடர் முத்தொழில் நான்மறை ஓதுமைந் தாய் நன்றாய வாறங்கம் யாவுக்கும் காரண நாதனு மாய் நின்றாய்."

   (ஆ) ஐம்புலன்களையும் அடக்கி அருந்தவம் புரியும் முனிவர்கள் பஞ்சமா பாதகங்களைச் செய்ய எண்ணுவரோ ?

2. மேல்வருவன எந்த எந்தத் தொகைப் பெயர்களைச் சேர்ந்தவை ?

   வச்சிரம், திருக்குறள், பித்தம், திற்பலி, காலாட்படை, காட்டரண், துளைக்கருவி.

---

## 8. பல சொற்களுக்கு ஒரு சொற்பிரயோகம்

விளக்கம் : பல சொற்களினுலே விளக்கிக் கூறப்படுவனவற்றை ஒரு சொல்லாலேயே விளங்கக் கூறலாம். அத் தகைய சில சொற்பிரயோகங்கள் மேலே தரப் படுகின்றன.

பலசொற்களிற் கூறுவது : பரமானந்தரும் பாரியாரும் தங்கள் திருமண வைபவத்தின் இருபத்தைந்தாவது வருட நிறைவு விழாவை நேற்றுக் கொண்டாடினர்.

ஒருசொல்லிற் கூறுவது :- பரமானந்தரும் பாரியாரும் தங்கள் திருமண வைபவத்தின் வெள்ளிவிழாவை நேற்றுக் கொண்டாடினர்.

(எடுத்துக்காட்டு)

| | |
|---|---|
| புதிய நூல்கள், நடனங்கள் முதலியவற்றை முதன் முதலாகச் சபையிற் காட்டி அங்கீகாரம் பெறுதல் | அரங்கேற்றுதல் |
| ஒரே நேரத்தில் எட்டுக் காரியங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவன் | அட்டாவதானி |
| ஆணுமற்றது பெண்ணுமற்றது | அலி |
| பெண்களுக்கெனப் புறம்பாக இருக்கும் உள்வீடு | அந்தப்புரம் |
| உற்ருர் பெற்ருர் முதலிய ஆதரிப்பவர் எவரும் அற்றவன் | அனுதை |
| தீயசொற்கள் பொருந்தி, தீயபயனுண்டாகப் பாடுதல் | அறம்பாடுதல் |
| முனிவர்கள் வசிக்குமிடம் | ஆச்சிரமம் |
| கடவுள் ஒருவர் இருக்கிருர் என்று கூறுபவன் | ஆத்திகன் |
| சபையிற் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறுசொல்லாற் சொல்லுவது | இடக்கரடக்கல் |
| பெற்றேர் அறியாமல் தலைவி தலைமகனுடன் செல்லுதல் | உடன்போதல் |
| பொருளைத்தேடி எவர்க்கும் ஈயாது வைத்திருப்பவன் | உலோபி |
| உலக முடிவின் காலம் | ஊழி |
| பிற்காலத்துக்கு உதவும்பொருட்டுச் சேமித்து வைக்கும் பொருள் | எய்ப்பில்வைப்பு |
| நாடகம், நடனம் முதலிய நிகழ்ச்சிகளைப் பழகியபின், சபையோர் முன்னிலையில் நடாத்துவதற்குமுன்பு சரி பிழை பார்த்தல் | ஒத்திகை |

| | |
|---|---|
| பகையரசருக்குக் கொடுக்கப்படும் காணிக்கை | கப்பம், திறை |
| உடலைப் பாதுகாக்க அணியப்படும் இரும்பு முதலியவற்றால் இயற்றப்பட்ட சட்டை | கவசம் |
| நம்பமுடியாத கதை | கட்டுக்கதை |
| ஒரு கூட்டத்தார் யாதாயினுமொரு காரணம் பற்றி ஒரு பொருளினது சொல்லை விட்டு, அதனை வேறொரு சொல்லாற் சொல்லுவது | குழூஉக்குறி |
| வைத்தியனின் உதவியின்றி, தானே தனது நோய்க்குச் செய்யும் மருந்து | கைமருந்து |
| ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்தவன் | சகபாடி |
| ஒரே நேரத்தில் நூறு காரியங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவன் | சதாவதானி |
| தெருக்கள் கூடுமிடம் | சந்தி, சதுக்கம் |
| சங்குபோன்ற வடிவுடைய பொன் | சங்கநிதி |
| வினாவும் விடையும் கூடி அமைந்த பேச்சு | சல்லாபம் |
| ஒரு தாய் வயிற்றிற் பிறந்தோர் | சகோதரர் |
| பிறரறியாது கோட்டையில் அமைக்கப்படும் கள்ளவழி | சுருங்கை |
| தானே தன்னைப்பற்றி எழுதும் சரிதை | சுயசரிதை |
| இரு கருத்துப் பயக்கும்படி அமைந்தது | சிலேடை |
| ஒரே நேரத்திற் பதினாறு காரியங்களை அவதானிக்கும் ஆற்றலுடையவன் | சோடசாவதானி |
| தன்னைத்தானே கொலைசெய்து கொள்ளுதல் | தற்கொலை |
| வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் உரிய பொது எழுத்துக்களாலாகி விகாரமின்றித் தமிழில் வழங்கும் வடசொல் | தற்சமம் |
| வடமொழியிலிருந்து திரிந்து தமிழ்மொழியில் வழங்கும் வடசொல் | தற்பவம் |
| போர்க்களத்தில் பல்வகைப்பட்ட படை வகுப்புகளின் முதல் வரிசையில் நிற்கும் படை | தூசிப்படை |
| புகழுடன் இறந்த போர்வீரனின் பெயரையும், அவனது வீரத்தின் தன்மையையும் பொறித்து நடும் கல். | நடுகல் |
| கடவுள் இல்லை என்று கூறுபவன் | நாத்திகன் |
| நூறாவது ஆண்டிலே செய்யப்படும் கொண்டாட்டம் | நூற்றாண்டுவிழா |
| முனிவர்கள் தங்குவதற்கு இலைகொண்டு வேய்ந்த குடிசை. | பன்னசாலை |

| | |
|---|---|
| தாமரைபோன்ற வடிவுடைய பொன் | பதுமநிதி |
| பகைமேற் சென்ருேர் உறைவிடம் | பாசறை |
| வலம்புரிச்சங்கு ஆயிரஞ்சூழ நடுவேயிருக்கும் சங்கு | பாஞ்சசன்னியம் |
| சூரிய சந்திரரைச் சுற்றித் தோன்றும் ஒளி வட்டம் | பரிவேடம் |
| தந்தைவழி மூதாதையர் | பிதுரர் |
| கற்று விரதங்காத்து விவாகமின்றி இருப்பவன் | பிரமச்சாரி |
| கோபுர வாயிற்கதவுவிட்டுப் புகும்வழி | புதவு |
| புராணம் பிரசங்கிப்பவர் | புராணிகர் |
| ஐம்பதாவது ஆண்டிலே செய்யப்படும் கொண்டாட்டம் | பொன்விழா<br>தங்கவிழா |
| மணம் புரிந்தும் பிள்ளையில்லாதிருக்கும் பெண் | மலடி |
| ஒரு நாட்டுக்கு உணவு முதலியன கிட்டாதவாறு தடுத்து அந்த நாட்டை நாற்புறமும் சூழ்ந்து நிற்றல் | முற்றுகையிடல் |
| யாவருக்கும் வரையாது கொடுக்கும் தன்மை வாய்ந்தவன் | வள்ளல் |
| புருடனை இழந்த பெண் | விதவை |
| உயிர் துறக்கும் துணிவுடன் வடதிசை நோக்கி ஊணின்றி இருத்தல் | வடக்கிருத்தல் |
| எந்த இடத்தில் எவ்விதம் நடந்து கொள்ள வேண்டுமோ அந்தஇடத்தில் அவ்விதம் நடப்பவன் | விவேகி |
| விகடமாகவும் பரிகாசமாகவும் பாடுவோன் | விகடகவி |
| இருபத்தைந்தாவது ஆண்டிலே செய்யப்படும் கொண்டாட்டம் | வெள்ளிவிழா |
| அறுபதாவது ஆண்டிலே செய்யப்படும் கொண்டாட்டம் | வைரவிழா |

## *பயிற்சி 15*

1. மேல்வருஞ் சொற்களின் கருத்தை விளக்கி எழுதுக.
   பாசறை, வடக்கிருத்தல், முற்றுகையிடுதல், நடுகல்.
2. மேல்வருவனவற்றை ஒரு சொல்லாற் குறிப்பிடுக.
   (அ) கற்ருேர் சபையில், தான் எழுதிய நூலைப் படித்துக் காட்டி ஏற்றுக் கொள்ளச் செய்தல்.
   (ஆ) தெய்வம் இல்லையென்று கூறித்திரிபவன்.
   (இ) வைத்தியனின் உதவியின்றி, தானே தனக்குச் செய்யும் மருந்து.

## 9. சில அருஞ்சொற்கள்

விளக்கம் : வளம்நிறைந்த தமிழ்மொழியின்கண் பல்லாயிரக் கணக்கான சொற்கள் இருப்பினும், ஒருசிறு தொகையான சொற்களே சாதாரண வழக்கில் வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், அறிஞரது நூல்களிலே பொருள் அறிதற்கரிய சொற்கள் அதிகம் பயின்று வருவதினால் அந்நூல்களைக் கற்றுப் பயனடைய விரும்புவோர் அவ்வருஞ் சொற்களையும் அவற்றின் பொருளையும் அறிந்திருத்தல் அவசியம். அதிகமாகப் பயின்றுவருஞ் சொற்களிற் சில அவற்றின் கருத்துடன் மேலே தரப்படுகின்றன. அவற்றை வசனங்களில் அமைத்துப் பயின்றுகொள்க.

### உதாரணம் : 19

வினா : பிராயச்சித்தம் என்னும் சொல்லின் பொருள் விளங்க அதனை ஒரு வசனத்தில் அமைக்குக.

விடை : நீதிபதி எதிரியைப் பார்த்து, 'வழக்காளி நட்டமடைய வேண்டுமென்று கருதியே நீ இத் தீச்செயலைச் செய்த படியால் பிராயச்சித்தமாக அவருக்கு ஐம்பது ரூபா கொடுக்க வேண்டும்' என்றார்

(எடுத்துக்காட்டு)

அனுசரித்தல்–சார்ந்து நடத்தல்
அறைகூவுதல்–போருக்கழைத்தல்
அறிதுயில்–யோகநித்திரை
அறுதியிடுதல்–முடிவுக்குக் கொண்டுவருதல், தீர்மானித்தல்
அங்கை–உள்ளங்கை, அழகியகை
அன்னியோன்னியம்–ஐக்கியம்
அங்கீகரித்தல்–ஒப்புக்கொள்ளுதல்
அழுக்காறு–பொறாமை
அனுகூலம்–காரியசித்தி
அனுவதித்தல்–முதல் வேண்டுகோளை வலியுறுத்துதல்
அரியணை, அரியாசனம் } சிங்காசனம்
அனவரதமும்–எப்பொழுதும்
அனுபவித்தல்–துய்த்தல்
அளப்பரிய–அளவிடமுடியாத
அனுமதி–சம்மதி
அத்தாட்சி–திருட்டாந்தம்
அங்கத்துவம்–உறுப்புரிமை
ஆருயிர்–அரியஉயிர்
ஆற்றொணு–சகிக்கமுடியாத
ஆசிகூறுதல்–வாழ்த்துதல்
ஆசைவார்த்தை-நம்பிக்கை உண்டாக்கத்தக்க இதமான பேச்சு
ஆட்கொள்ளுதல்–அடிமைகொள்ளுதல்
ஆணித்தரம்–முதன்மை, உறுதி

ஆற்றுப்படுத்துதல்-வழிச்
செலுத்துதல்
இல்லிக்குடம்-ஓட்டைக்குடம்
இறும்பூது-பெருமகிழ்ச்சி
இறுமாப்பு-தருக்கு
இலௌகிகம்-உலகுக்குரியது
இடுக்கண்-துன்பம்
இடைவிடாது-தொடர்பாக
இளந்தென்றல்-மெல்லியகாற்று
இடித்துரைத்தல்-தவறைக் கண்
டித்தல்
இலம்பாடு-வறுமை
இங்கிதம்-இனிமை, சமயோசித
நடை
இரு நிதி-பெருஞ்செல்வம்
ஈடேறுதல்-வாழ்வடைதல்
ஈரொட்டு-உறுதியின்மை
உபத்திரவம்-துன்பம்
உடலுறுதி-சரீரவலிமை
உற்பாதம்-முற்குறி
உறையுள்-இருப்பிடம்
உட்கிடக்கை-உள்ளக் கருத்து
உள்ளீடு-உள்ளேயிருப்பது
ஊன்றுகோல்-பற்றுக்கோடு
ஊடாட்டம்-நடமாட்டம்
எழுச்சி-கிளர்ச்சி
எழுந்தருளுதல்-வருதல்
எட்டுணை-எள்ளளவு
எண்ணற்ற-அளவில்லாத
எதிர்மாற்றம்-மறுவார்த்தை
ஐயமிடுதல்-தருமங்கொடுத்தல்
ஐயப்பாடு-சந்தேகம்
ஒருதலை-ஒருசார்பு
கற்பனை-கட்டளை, பாவனை
கண்காணிப்பு-மேல்விசாரணை
கருவிழி-கண்மணி
கட்டழகு-பேரழகு
கடைக்கணித்தல்-கிருபைபுரிதல்
கற்பகதரு-வேண்டியதெல்லாம்
தரும் மரம்
கண்கூடு-பிரத்தியட்சம்
கடைந்தெடுத்தல்-தெரிந்
தெடுத்தல்
கர்ணகடூரம்-காதுக்குக் கடுமை
யானது
கட்டளைக்கல்-உரைகல்
கட்டுக்கோப்பு-புலைந்துரை
மேற்கூரை, பாதுகாப்பு
கட்டுக்காவல்-பெருங்காவல்
கட்டுப்பாடு-சமூக ஏற்பாடு
கன்னிமாடம்-கன்னியர் வசிக்
கும் மாளிகை
காமதேனு-தெய்வப் பசு
கிளர்ச்சி-எழுச்சி, கலவரம்
குலாசாரம்-சாதி ஒழுக்கம்
குறிக்கோள்-கருமம் முடிக்கும்
துணிவு, இலக்கு
குருட்டுநம்பிக்கை-மூட எண்
ணம்
கைமாறு-பிரதி நன்றி
கையுறை-கைக்கவசம், காணிக்
கைப் பொருள்
கொழுகொம்பு-பற்றுக்கோடு
கோலாகலம்-ஆடம்பரம்
கோழைத்தனம்- மனத்திண்மை
யின்மை
கோரிக்கை-வேண்டுகோள்
சரணாகதி-தஞ்சமடைதல்
சராசரி-சரிவீதம், ஏகப்பொது
சற்பாத்திரர்-உத்தமர்
சட்டைபண்ணல்-பொருட்
படுத்துதல்
சாதனங்கள்-கருவிகள்
சாங்கோபாங்கம்-முழுவதும்
சாதுரியம்-கெட்டித்தனம்
சிரஞ்சீவி-நீடுவாழ்வோன்

சின்னம்-அடையாளம்
சீர்குலைத்தல்-ஒழுங்குகெடுத்தல்
சீராட்டல்-சிறப்புச் செய்தல்
சூருவளி-புயல்
செவிசாய்த்தல்-கேட்டல்
தடுமாற்றம்-கலக்கம்
தாளாண்மை-முயற்சி
தாயகம்-அடைக்கலப், சுய தேசம்
திண்டாட்டம்-கலக்கம்
துறைபோதல்-கற்றுத்தெளிதல்
தெற்றென-தெளிவாக
தெய்வ சங்கற்பம்-தேவதிருவுள [ம்
தொழுகை-வணக்கம்
தோட்கோப்பு-கட்டுச்சாதம்
தோன்றாத்துணை-காணப்படாத துணை
நடைமருந்து பத்தியமில்லாத மருந்து
நண்பகல்-நடுப்பகல்
நள்ளிரவு நடுச்சாமம்
நாப்பண்-நடு
நிராகரித்தல்-மறுத்தல்
நிருவகித்தல்-ஒழுங்காக நடத்துதல்
நிர்ப்பந்தம்-உபத்திரவம், பலவந்தம்
நிறைவேற்றல்-முற்றுப்படுத்தல்
நெட்டுயிர்ப்பு-பெருமூச்சு
நொடிப்பொழுது-கணப் பொழுது
பற்றுக்கோடு-ஆதாரம்
பண்டைக்காலம்-பழையகாலம்
பணிவிடை- குற்றேவல்
பரோபகாரம்-பிறர்க்குபகாரம்
பரித்தியாகம்-முற்றத்துறத்தல்
பரவசம்-தன்வசமற்றிருத்தல்
பராக்கிரமம்-வீரம்
பராமுகம்-அசட்டை
பகிரங்கப்படுத்துதல்-வெளிப் படுத்துதல்
பரிபக்குவம்-பூரண தகுதி
பாதாரவிந்தம்-பாதகமலம்
பாராட்டுதல்-புகழ்தல்
பிரயத்தனம்-முயற்சி
பிரேரணை-காரியப்படுத்துதற்கு முதல் வேண்டுகோள்
பிராயச்சித்தம்-குற்றப்பரிகாரம்
புகழுடம்பு-புகழாகிய உடல், கீர்த்தி
புனைந்துரை-பாயிரம்
புறக்கணித்தல்- அலட்சியம் செய்தல்
புறந்தருதல்-காப்பாற்றுதல்
புல்லறிவாளர்-அறிவீனர்
புறங்கொடுத்தல் } தோற்றோடுதல்
புறங்காட்டுதல் }
புத்தேளிர்-தேவர்
புல்லியர்-கீழ்மக்கள்
பெரும்பாலும்-மிகுதியும்
பெருந்தகை-பெருந்தன்மை, பெருமைப்பாடுடையோன்
பேரார்வம்-பெருவிருப்பு
பேணுதல்-பாதுகாத்தல், மதித்தல்
மனோதைரியம்-மனத்திடன்
மந்தமாருதம்-இளங்காற்று
மறைபொருள்-இரகசியம்
மாண்பு-மாட்சிமை
மானபங்கம்-மரியாதைக்கேடு
மீக்கூர்தல்-மிகுதியாதல்
முறையீடு-குறையிரத்தல்
முன்னேற்றம்-விருத்தி, உயர்ச்சி
மையிருள்-காரிருள்
வளர்பிறை-பூர்வபட்ச சந்திரன்

வரையறை-எல்லை, அளவு
வண்மை-கொடை
வலம்வருதல்-சுற்றிவருதல்
விதிவிலக்கு-முறையிலிருந்து நீங்கியிருப்பது
விண்ணப்பம்-வேண்டுகோள்
வீற்றிருத்தல்-சிறப்புற விருத்தல்
வீராவேசம்-வீரவெறி
வெற்றிடம்-வெறுமையான இடம்
வேற்றிடம்-பிறஇடம்
வைராக்கியம்-பகை
வைகறை-அதிகாலை

## பயிற்சி 16

1. மேல்வரும் சொற்களின் பொருள் விளங்க அவற்றைத் தனித் தனிவாக்கியங்களில் அமைக்குக.

   அபிப்பிராயம், தாளாண்மை, பெருந்தகை, கண்கூடு, தோன்றுத்துணை.

2. கற்பனை, எட்டுணை, இறும்பூது, ஆணித்தரம், அனுகூலம், தோட்கோப்பு என்பனவற்றின் கருத்தை எழுதுக.

---

# 10. வழக்கில் உள்ள சில மரபுச் சொற்கள்

விளக்கம் : சில சொற்கள் அறிஞர்கள் கூறியபடியே பண்டு தொட்டு வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றை நாமும் அவ்விதமே கூறுதல் வேண்டும். மரபை மாற்றிக் கூறுதல் பிழையாகும். அவ்வித மரபுச் சொற்களிற் சில மேலே தரப்படுகின்றன.

### உதாரணம் : 20

வினா : மேல்வரும் வசனத்தில் இருக்கும் மரபுப் பிழைகளைத் திருத்தி எழுதுக.

"யானை ஊளையிட்ட சத்தத்தைக் கேட்ட புலி கர்ச்சிக்க ஆந்தை கூவ, தேனீக்களோ வழக்கம்போல் பூக்களின் மேல் இரைந்து வட்டமிட்டுக் கொண்டிருந்தன."

விடை : "யானை பிளிறிய சத்தத்தைக்கேட்ட புலி உறும, ஆந்தை அலற, தேனீக்களோ வழக்கம்போல் பூக்களின் மேல் ரீங்காரம் செய்து வட்டமிட்டுக்கொண்டிருந்தன."

## (அ) தொனிகள்

பிராணிகள் தங்கள் உணர்ச்சிகளைப் பல விகற்பமான தொனிகள் மூலம் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, நாய் கோபமேற்பட்டால் உறுமியும், துக்கமேற்பட்டால் ஊளையிட்டும், அசுகை கண்டாற் குரைத்தும் தனது உணர்ச்சிகளை வெளிப் படுத்துகின்றது. ஆனால், நாயின் தொனியைக் குறிப்பிடும்போது அது சாதாரணமாகக் குரைத்தல்பற்றி ''நாய் குரைக்கும்'' என்று கூறுவது வழக்கம். இவ்வித வழக்கிலிருக்கும் சில பிராணி களின் தொனிகள் மேலே தரப்படுகின்றன.

(எடுத்துக்காட்டு)

| | | | |
|---|---|---|---|
| ஆடு | –கத்தும் | காகம் | –கரையும் |
| எருது | –முக்காரம்போடும் | கிளி | –பேசும் |
| கரடி | –கத்தும் | குயில் | –கூவும் |
| கழுதை | –கூவும் | குருவி | –கீச்சிடும் |
| குதிரை | –கனைக்கும் | கோழி | –கொக்கரிக்கும் |
| சிங்கம் | –கர்ச்சிக்கும் | சேவல் | –கூவும் |
| நரி | –ஊளையிடும் | மயில் | –அகவும் |
| பசு | –கதறும் | அணில் | –கீச்சிடும் |
| பன்றி | –உறுமும் | தவளை | –கத்தும் |
| புலி | –உறுமும் | தேனீ | –ரீங்காரம்செய்யும் |
| பூனை | –சீறும் | பல்லி | –சொல்லும் |
| யானை | –பிளிறும் | பாம்பு | –சீறும் |
| ஆந்தை | –அலறும் | வண்டு | –இரையும் |

## (ஆ) அஃறிணைப் பெயர்கள்

அஃறிணையில் ஆண்பால், பெண்பால் என்ற பகுப்பு இல்லா விட்டாலும் சில பிராணிகளுக்கு ஆண், பெண் என்பவற்றிற் குரிய சிறப்புப் பெயர்கள் வழக்கில் இருக்கின்றன. அவ்வித சில பிராணிகளின் ஆண், பெண் பெயர்கள் மேலே தரப்படுகின்றன.

(எடுத்துக்காட்டு)

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| ஆடு | கடா | மறி |
| ஆனை | களிறு | பிடி |
| குரங்கு | கடுவன் | மந்தி |
| குதிரை | குண்டு | வடவை |

| பிராணி | ஆண் | பெண் |
|---|---|---|
| கூகை | போத்து | — |
| கோழி | சேவல் | பேடு |
| சிங்கம் | ஏறு | — |
| நண்டு | அலவன் | பெடை |
| நாய் | கடுவன் | பெட்டை |
| புலி | போத்து | பிணை |
| பூனை | கடுவன் | பெட்டை |
| மான் | கலை | பிணை |
| மாடு | எருது | பசு |

## (இ) இளமைப் பெயர்கள்

பிள்ளை, கன்று, குட்டி, குஞ்சு முதலான இளமையைக் குறித்துவரும் பெயர்கள் வழங்கப்பட்டுவரும் மரபை அறிந்து கொள்வது அவசியம்.

(எடுத்துக்காட்டு)

| | | | |
|---|---|---|---|
| ஆடு | –குட்டி | பாம்பு | –குட்டி |
| ஆனை | –கன்று, போதகம் | கிளி | –குஞ்சு, பிள்ளை |
| குரங்கு | –குட்டி, பறள் | கோழி | –குஞ்சு |
| குதிரை | –குட்டி | எலுமிச்சை | –கன்று |
| நாய் | –குட்டி, குருளை | கமுகு | –கன்று, பிள்ளை |
| புலி | –குட்டி, குருளை | தென்னை | –பிள்ளை, கன்று |
| பூனை | –குட்டி, பறள் | நெல் | –நாற்று |
| மான் | –குட்டி, கன்று | பனை | –வடலி |
| அணில் | –குட்டி, குஞ்சு, பிள்ளை | பலா | –கன்று |
| கீரி | –குட்டி, பிள்ளை | மா | –கன்று |
| தவளை | –குஞ்சு, பேத்தை | வாழை | –குட்டி |
| மீன் | –குஞ்சு | வேம்பு | –கன்று |

## (ஈ) கூட்டத்தைக் குறிக்கும் சொற்கள்

| | |
|---|---|
| ஆனைப் பந்தி | சனக் கும்பல் |
| ஆ நிரை | சுருட்டுக் கட்டு |
| கற் குவியல் | சேனைத் திரள் |
| கள்ளர் கூட்டம் | திறப்புக் கோவை |
| காலாட் படை | தென்னந் தோப்பு |

| | |
|---|---|
| நாடக சபை | பூங் கொத்து |
| நூற் பந்து | மக்கட் டொகுதி |
| நெற் குவியல் | மணி மாலை |
| பழக் குலை | மலர்ச் செண்டு |
| பல் வரிசை | மலைத் தொடர் |
| புத்தக அடுக்கு | மாஞ் சோலை |
| புற் கற்றை | முகிற் கூட்டம் |
| புகையிலைச் சிப்பம் | |

## (உ) வேறு சில மரபுச் சொற்கள்

| | |
|---|---|
| ஆடு மேய்ப்பவன் ... ... ... | இடையன் |
| ஆனை செலுத்துபவன் / தேர் செலுத்துபவன் ... ... ... | பாகன் |
| பனை, தென்னையின் இளங்காய் ... ... | குரும்பை |
| மா, பலா, புளி இவற்றின் இளங்காய் ... | பிஞ்சு |
| பனை, தென்னையின் இலை ... ... ... | ஓலை |
| யானையின் மலம் ... ... ... | இலத்தி |
| மாடு, எருமை என்பவற்றின் மலம் ... | விட்டை |
| காகம், குருவி என்பவற்றின் மலம் ... | எச்சம் |
| மிளகாய், சுத்தரி என்பவற்றின் வித்து ... | விதை |
| நெல், கடுகு என்பவற்றின் வித்து ... | மணி |
| மா, பலா என்பவற்றின் வித்து ... ... | கொட்டை |
| நெல், கோதுமை என்பவற்றின் உள்ளீட்டுப் பொருள் ... ... | அரிசி |
| அவரை, உளுந்து என்பவற்றின் உள்ளீட்டுப் பொருள் ... ... | பருப்பு |
| கற்றாளையின் உள்ளீட்டுப் பொருள் ... ... | சோறு |
| பலாப்பழத்தின் உள்ளீட்டுப் பொருள் ... | சுளை |
| மாம்பழத்தின் உள்ளீட்டுப் பொருள் ... | சதை |

## (ஊ) சில சிறப்புப் பிரயோகச் சொற்கள்

பருகுதல் : திரவப் பொருள்களைப் பருகுதல்

உண்ணுதல் : திட்பொருள்களை உண்ணுதல்.

பிரயோகித்தல் : சொற்களைப் பிரயோகித்தல்.

உபயோகித்தல் : திடப்பொருள்களை உபயோகித்தல்.

பாவித்தல் : ஒன்றை வேறொன்றாகப் பாவனை செய்தல்.
வேண்டுதல் : கடவுளை வேண்டுதல் செய்தல்.
வாங்குதல் : ஒரு பொருளை வாங்குதல்.
கையாளுதல் : கையினால் பொருள்களை உபயோகித்தல்.

## (எ) ஒருமையைக் குறிக்கும் ஓர், ஒரு என்னும் சொற்களின் பிரயோகம்

ஒருமையைக் குறிக்கும்போது வழங்கப்படும் ஓர், ஒரு என்னும் சொற்கள் ஒரு நியதிபற்றி வழங்கப்படுகின்றன. ஆங்கில மொழியிலும் இவ்வித நியதியுண்டு. அம்மொழியில் அதனைப் பிழையாகப் பிரயோகித்தல் குற்றமாகும். ஆனால் தமிழ் மொழியில் அதனை நாம் அலட்சியம் செய்து வருகிறோம்.

'ஓர்' என்னும் சொல்லைப் பிரயோகிக்க வேண்டிய இடங்கள் :

உயிர் எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களின் முன் 'ஓர்' என்னும் சொல்லைப் பிரயோகிக்க வேண்டும்.

(உ-ம்) ஓர் ஆடு, ஓர் இலை, ஓர் ஊர்.

'ஒரு' என்னும் சொல்லைப் பிரயோகிக்க வேண்டிய இடங்கள் :

உயிர்மெய் எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களின் முன் 'ஒரு' என்னும் சொல்லைப் பிரயோகிக்க வேண்டும்

(உ-ம்) ஒரு நாள், ஒரு பூனை, ஒரு மயில்.

(உயிர் எழுத்தின் முன் 'ஒரு' என்பதும், உயிர் மெய் எழுத்தின் முன் 'ஓர்' என்பதும் பிரயோகிக்கப்படுதல் சிறப்புடையனவல்ல. செய்யுளில் இந்த நியதி மாறி வரும்.)

## (ஏ) சுட்டுச்சொற்களின் பிரயோகம்

i. உயிர் எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களின் முன் அது, இது, உது என்னும் சுட்டுச்சொற்கள் வரும்போது அவை, அஃது, இஃது, உஃது என மாற்றமடையும்.

(உ-ம்) அஃதாவது, அஃதெப்படி, இஃதிங்ஙனமாக, அஃது ஓர் அணில்.

ii. உயிர்மெய் எழுத்துக்களை முதலாகவுடைய சொற்களின் முன் அச்சுட்டுச் சொற்கள் இயல்பாகவே வழங்கப்படும்.

(உ-ம்) அது பிழை, இது சரி, இது நல்லது.
(இவைகள் செய்யுள்களில் மாற்றமடைந்தும் வரும்.)

## பயிற்சி 17

1. பிழைகளைத் திருத்தி எழுதுக :

   (அ) அதிகாலையிற் காகம் அலறும், சேவல் கொக்கரிக்கும், குருவி கரையும்.

   (ஆ) வாழைக்கன்றுகளையும், கமுகங்குட்டிகளையும், ஆட்டுக்கன்றுகள் தின்று அழித்தன.

   (இ) ஆனை இடையன் மாட்டுப் பிழுக்கையை ஆனையினது சாணம் என்று எண்ணினன்.

2. மேல்வரும் வசனத்தில் உள்ள ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றி எழுதுக :

   பிணை மானைத் துரத்திய புலிப்போத்து களிற்றைக் கண்டு அஞ்சி ஓடியது.

3. மேல்வரும் சொற்களை வசனத்தில் அமைக்குக :

   கோவை, கொத்து, வரிசை, நிரை, குலை, பிரயோகித்தல்

4. மேல்வரும் வசனத்தில் ஒருமையைக் குறிக்கும் ஒரு, ஓர் என்பன சிறப்பற்றவகையிற் பிரயோகிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைச் சிறப்புறத் திருத்தி எழுதுக :

   ''ஓர் நாள் ஓர் நரி ஒரு ஆற்றங்கரைக்குச் சென்றபோது அங்கு ஒரு மானைக்கண்டு அதனுடன் சினேகம் செய்ய உபாயம் தேடிற்று''

---

## 11 சொல்லிலக்கணம்

விளக்கம் : ஓர் எழுத்துத் தனித்தாயினும், இரண்டு முதலிய எழுத்துக்கள் சேர்ந்தாயினும், பொருள் தெரிவித்து நிற்பது சொல் எனப்படும். அச்சொல்லை நான்கு வகையாக வகுக்கலாம்.

அவை : i பெயர்ச்சொல்
ii வினைச்சொல்
iii இடைச்சொல்
iv உரிச்சொல் என்பனவாகும்.

## i. பெயர்ச் சொல்

யாதேனும் ஒன்றன் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் எனப்படும். அப்பெயர்ச்சொல் பற்பல இனங்களாகப் பிரிக்கப்படும்.

(அ) பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என்பன ஓரினம்.

(ஆ) பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப் பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்பன மற்றோரினம்.

பெயர்ச்சொல் இனம் 'அ':

1. பொதுப்பெயர் : பல பொருள்களுக்கும் பொதுவாக வழங் கும் பெயர் பொதுப்பெயர் எனப்படும்.

   (உ-ம்) மரம், மிருகம்

   (மரம் என்பது தென்னை, பனை, மா, பலா முதலிய எல்லா மரங்களையும் பொதுவாகக் குறித்து நிற்கின்றது. மிருகம் என்பது சிங்கம், புலி, கரடி, ஆடு, மாடு முதலிய எல்லா மிருகங்களையும் பொதுவாகக் குறித்து நிற்கின்றது.)

2. சிறப்புப்பெயர் : ஒரு பொருளுக்கே சிறப்பாக வழங்கும் பெயர் சிறப்புப் பெயர் எனப்படும்.

   (உ-ம்) பசு, கந்தையா, கொழும்பு

   (பசு என்பது, பல மிருகங்களில் ஒன்றையும், கந்தையா என்பது, பல மனிதரில் ஒருவனையும், கொழும்பு என்பது, பல பட்டினங்களில் ஒரு பட்டினத்தையும் சிறப்பாகக் குறித்து நிற்கின்றன.)

பெயர்ச் சொல் இனம் 'ஆ':

1. பொருட்பெயர் : பொருளின் பெயரைக் குறிப்பது.
   (உ-ம்) குதிரை, கோழி, மரம், செல்வன்.
2. இடப்பெயர் : இடத்தின் பெயரைக் குறிப்பது.
   (உ-ம்) யாழ்ப்பாணம், இந்தியா, இலண்டன், சீனு; கோவில், சந்தை
3. காலப்பெயர் : காலத்தின் பெயரைக் குறிப்பது.
   (உ-ம்) வருடம், மாதம், இரவு, பகல், புதன், வைகாசி.
4. சினைப்பெயர் : உறுப்பின் பெயரைக் குறிப்பது.
   (உ-ம்) கண், காது, கை, தலை, வேர், இலை.
5. குணப்பெயர் : பொருளின் தன்மையை (குணத்தை) குறிப்பது.
   (உ-ம்) நன்மை, அன்பு, உறைப்பு, புளிப்பு, பசுமை, வட் டம், சதுரம்.

6. தொழிற்பெயர் :-தொழிலின் பெயரைக் குறிப்பது.

(உ-ம்) நடத்தல், போதல், வரவு, செலவு, படிப்பு, உணர்ச்சி, பெயர்ச் சொற்கள் திணை, பால், எண், இடம் என்னும் தன்மைகளுக்கு ஏற்பவும் வகுக்கப்படும்.

## 1. திணை

திணை, என்பது (பொருள்களின்) சாதிப் பாகுபாடாகும். அஃது உயர்திணை, அஃறிணை என இருவகைப்படும்.

உயர்திணை : உயர்வாகிய சாதி. மக்கள், தேவர், நரகர், உயர் திணையின் பாற்படுவன.

(உ-ம்) அரன், கந்தன், குறத்தி

அஃறிணை : உயர்வு அல்லாத சாதி, மக்கள், தேவர், நரகர் தவிர்ந்த மற்ற உயிர் உள்ளனவும், உயிர் இல்லா தனவும் அஃறிணையின் பாற்படுவன.

(உ-ம்) ஆடு, கோழி, மரம், கல்.

## 2. பால்

பால் என்பது திணையின் உட்பிரிவாகும். உயர்திணையில் ஆண்களைக் குறிப்பது ஆண்பால் என்றும், பெண்களைக் குறிப்பது பெண்பால் என்றும் ஆண் பெண் இரு பாலிலும் பலரைக் குறிப்பது பலர்பால் என்றும் கூறப்படும். அஃறிணையில் ஆண் பெண் என்ற பாகுபாடின்றி ஒரு பொருளைக் குறிப்பது ஒன்றன்பால் என்றும், பல பொருளைக் குறிப்பது பலவின்பால் என்றும் கூறப்படும்.

(அ) ஆண்பால் : தலைவன், அவன், செல்வன் என்பன ஆண் பால்களாகும்,

(ஆ) பெண்பால் : தலைவி, அவள், செல்வி, என்பன பெண் பால்களாகும்.

(இ) பலர்பால் : தலைவர், அவர்கள், குறத்தியர் என்பன பலர்பால்களாகும்.

(ஈ) ஒன்றன்பால் : அது, பூனை, கல் என்பன ஒன்றன்பால்க ளாகும்.

(உ) பலவின்பால் : அவை, பூனைகள், கற்கள் என்பன பல வின் பால்களாகும்.

## 3. எண்

பொருள்களின் எண்ணிக்கை எண் என்று கூறப்படும். அஃது ஒன்றைக் குறிப்பது ஒருமை என்றும், பலவற்றைக் குறிப்பது பன்மை என்றும் இரு வகைப்படும்.

(அ) ஒருமை : ஆடு, மரம், அரசன்.
(ஆ) பன்மை : ஆடுகள், மரங்கள், அரசர்.

## 4. இடம்

இடம் என்பது பொருள்கள் வழங்கப்படும் தானமாகும். அது தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவகைப்படும்.

(அ) தன்மை: பேசுவோன் இடம் தன்மைஇடம் எனப்படும். தன்மையில் நான், யான் என்பன ஒருமை எண்ணிலும் நாம், யாம், நாங்கள் என்பன பன்மை எண்ணிலும் வழங்கப்படும்.

(ஆ) முன்னிலை : பேசுவோனுக்கு முன் நின்று கேட்போன் இடம் முன்னிலை இடம் எனப்படும். முன்னிலையில் நீ என்பது ஒருமை எண்ணிலும் நீர், நீவிர், நீயிர், நீங்கள் என்பன பன்மை எண்ணிலும் வழங்கப்படும்.

(இ) படர்க்கை : பேசப்படும் இடம் படர்க்கை எனப்படும், படர்க்கையில் அவன், அவள், அது என்பன ஒருமை எண்ணிலும் அவர், அவை என்பன பன்மை எண்ணிலும் வழங்கப்படும்.

## ii வினைச்சொல்

வினைச்சொல் என்பது ஒன்றின் தொழிலை உணர்த்தும் சொல்லாகும், அது வினைமுற்று, வினைஎச்சம், பெயரெச்சம் என மூன்று வகைப்படும்.

வினைமுற்று : நடந்தேன், அடித்தார், வந்தான், பறந்தது, விழுந்தன எனப் பொருள் முடிந்து நிற்கும் சொற்கள் வினைமுற்று எனப்படும்.

வினைஎச்சம் : நடந்து (வந்தான்), முரிந்து (விழுந்தது) என முற்றுப்பெறாத சொல்லாய் நின்று வேறொரு வினைச்சொல்லுடன் சேர்ந்து முற்றுப்பெறுவது வினைஎச்சம் எனப்படும்.

பெயரெச்சம் : சிரித்த (மனிதன்), வந்த (மாடு) என முற்றுப் பெறாத சொல்லாய் நின்று பெயர்ச்சொல்லைச் சேர்ந்து முற்றுப் பெறுவது பெயரெச்சமாகும்.

### வினைச்சொல்லின் வேறுசில வகைகள்

தன்வினை : கருத்தா, தானே செய்கின்றவினை, தன்வினை எனப்படும்.

(உ-ம்) அடித்தேன், படித்தான்.

பிறவினை: கருத்தா பிறரைக்கொண்டு செய்விக்கும் வினை பிறவினை எனப்படும்.

(உ-ம்) அடிப்பித்தேன், நடிப்பித்தேன்.

செய்வினை: கருத்தாவின் தொழிலை நேரே உணர்த்தும் வினை செய்வினை எனப்படும்.

(உ-ம்) சகுந்தலை பாட்டுப் பாடினாள்.
தச்சன் வீடு கட்டினான்.

செயப்பாட்டுவினை: கருத்தா செய்யும் தொழில் செயப்படுபொருளை அடைவதைக் காட்டும் வினை செயப்பாட்டுவினை எனப்படும்.

(உ-ம்) சகுந்தலையாற் பாட்டுப் பாடப்பட்டது.
தச்சனால் வீடு கட்டப்பட்டது.

செயப்படுபொருள் குன்றிய வினை: செயப்படுபொருள் இல்லாத வினை செயப்படுபொருள் குன்றிய வினை எனப்படும்

(உ-ம்) முருகன் வந்தான்.
வீடு எரிந்தது.

செயப்படுபொருள் குன்றாவினை: செயப்படுபொருள் உள்ள வினை செயப்படுபொருள் குன்றாவினை எனப்படும்.

(உ-ம்) கனகன் (பாடம்) படித்தான்.
பசு (புல்) மேய்கின்றது.

## iii இடைச்சொல்

பெயர்ச்சொல், வினைச்சொற்களைப்போல தனித்து வராது, பெயரையாவது வினையையாவது சார்ந்துவரும் சொல் இடைச்சொல் எனப்படும்.

(உ-ம்) கடவுளை வணங்கினான். இதில் கடவுள்+ஐ என்பதில் உள்ள 'ஐ' வேற்றுமை உருபாகும்.
வணங்கு+இன்+ஆன் என்பதில் இன் இடைநிலையும், ஆன் விகுதியுமாகும்.
இவ்விதமாக வேற்றுமையுருபுகள், இடைநிலைகள், சாரியைகள், விகுதிகள், உவம உருபுகள், சுட்டுக்கள், வினாக்கள் முதலியன இடைச் சொற்களாக வரும்

## iv உரிச்சொல்

குணத்தை உணர்த்தும் சொல் உரிச்சொல் எனப்படும். ஒரு குணத்தைக் காட்டும் உரிச்சொல், பல குணத்தைக் காட்டும் உரிச்சொல் என இஃது இருவகைப்படும்.

i. ஒரு குணத்தைக் காட்டும் உரிச்சொல் :

சால், உறு, தவ, நனி, கழி, கூர் என்பன மிகுதி என்னும் ஒரு குணத்தைக் காட்டுவனவாகும்.

(உ-ம்) சாலப்பேசினன், நனிதின்றான், உறுபுகழ், அன்பு கூர்ந்தான், தவப்பெரியன், கழிபேருவகை.

ii. பல குணத்தைக் காட்டும் உரிச்சொல் :

கடி என்னும் உரிச்சொல் காவல், கூர்மை, மணம், ஒளி, அச்சம், ஒலி முதலிய பல் குணங்களைக் காட்டுவதாகும்.

(உ-ம்) கடிநகர், கடிமார்பன், கடிவாள், கடிப்பேய், கடிமலர், கடிமுரசு.

## பயிற்சி 18

1. மேல் வருவனவற்றில் உள்ள பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என்பவற்றைப் பிரித்து அட்டவணைப்படுத்துக :

   சென்னை, குரங்கு, பறவை, ஆறு, உழவன், சிங்கம், வண்டு, மல்லிகை, காவேரி, சமுத்திரம்.

2. காலப்பெயர், தொழிற்பெயர், வினைப்பெயர் ஒவ்வொன்றுக்கும் மும்மூன்று உதாரணங்கள் தருக.

3. மேல்வருவனவற்றில் உள்ள உயர்திணைச் சொற்களை எழுதுக :

   பசு, இராமன், இந்திரன், கரடி, முத்து, கரும்பு, ஆசிரியன், குரவன், மலை, மகன்.

4. ஐந்துவகைப் பால்களையும் குறிப்பிட்டு ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

5. விழுந்து, பாடிய, எரிந்த, சிரிக்கும், உடைந்தது, பாடுவான், கொதித்து, சென்று என்னும் சொற்களை வினைமுற்று, பெயரெச்சம், வினையெச்சம் என்ற தலைப்புகளின் கீழ் பிரித்து எழுதுக.

6. "கண்ணாடியன்ன கடிமார்பனே! உறுபுகழ் விரும்பின் கடிவாள் கரத்தேந்திப் போர்க்களம் செல்வாயாக"

   (அ) இத்தொடரில் உள்ள உரிச்சொற்களையும் அவற்றின் பொருளையும் எழுதுக.

   (ஆ) இத்தொடரில் உள்ள மூன்று இடைச்சொற்களை எழுதுக.

7. பாங்கியர், பண்டிதன், வண்டுகள், குதிரை, பாடினேம், நீ என்னும் சொற்களின் திணை, பால், எண், இடம் என்பவற்றை அட்டவணைப்படுத்தி எழுதுக.

## மாதிரிகை வினாக்கள் 2

1. மேல்வருஞ் சொற்களுக்கு எதிர்ப்பால் தருக:
   தலைவன், கூனன், நங்கை, பெருமாட்டி.

2. மேல்வருஞ் சொற்கள் ஒவ்வொன்றினதும் எதிர்ப்பொருள் அமைய ஒவ்வொரு வசனம் எழுதுக:
   ஈதல், உறவு.

3. மேல்வருஞ் சொற்கள் ஒவ்வொன்றினதும் பரியாய நாமங்கள் ஐவைந்து எழுதுக:
   பாம்பு, சூரியன்.

4. மேல்வருஞ் சொற்கள் ஒவ்வொன்றும் மும்மூன்று பொருள் தர வசனங்கள் அமைக்குக:
   பணி, கடை.

5. மேல்வருஞ் சொற்களின் பொருள் நன்கு விளங்கத்தக்கதாக அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக:
   அறுசுவை, பிளிறும், அலவன், பாகன். பூங்கொத்து.

6. தன்வினை, பிறவினை செய்வினை, செயப்பாட்டுவினை என்பனவற்றை விளக்கி உதாரணங்கள் தருக.

7. "கடந்த ஐப்பசிமாதம், ஆறுந் திகதி காலை அரியாலையில் நாகமணியும் மனைவியும் பனங்கிழங்கு பிடுங்கினர். அங்கு அவர்களுக்கு அருகாமையில் நின்ற முருங்கை மரத்தின் கிளை முரிந்து அவர்கள் மேல் விழுந்தது. நாகமணியின் கால் முரிந்தது. மனைவி குழறி அழுதாள். அயலவர் வந்து நாகமணியை வைத்திய சாலைக்குக் கொண்டு போயினர்."
   —இப்பகுதியிலிருந்து:

   (1) பொருட்பெயர்கள் இரண்டு எழுதுக.
   (2) இடப்பெயர்கள் இரண்டு எழுதுக.
   (3) சினைப் பெயர்கள் இரண்டு எழுதுக.
   (4) பெயரெச்சம் ஒன்று எழுதுக.
   (5) வினைமுற்று இரண்டு எழுதுக.
   (6) குற்றியலுகரச் சொல் இரண்டு எழுதுக.
   (7) வினையெச்சம் இரண்டு எழுதுக.

# மாதிரிகை விடைகள் 2

1 எதிர்ப்பால் :

தலைவன் – தலைவி
கூனன் – கூனி
நங்கை – நம்பி
பெருமாட்டி – பெருமான்

---

2 எதிர்ப் பொருள் அமைய வசனம் எழுதுதல் :

ஈதல் : பிறரிடம் சென்று இரந்து பொருள் ஏற்றல் இகழ்ச்சியைக் கொடுப்பதாகும்.

உறவு : பாம்புக்குப் பகை கருடன்.

---

3 பரியாய நாமங்கள் :

பாம்பு : அரவு, சர்ப்பம், பணி, பன்னகம், மாசுணம்.

சூரியன் : ஞாயிறு, கதிரவன், ஆதித்தன், பரிதி, இரவி.

---

4 மும்மூன்று பொருள்தர வசனங்கள் அமைத்தல் :

பணி : (1) என் கடன் பணி செய்து கிடப்பதே.

(2) பிள்ளையே ! நீ உனது பெற்ருேரது கட்டளைகளுக்குப் பணி.

(3) பணிக்கொடியுடையவனுகிய துரியோதனன் பாண்டவரால் றனக்கு ஆபத்து ஏற்படுமென்று கலங்கினுன்.

கடை : (1) நமக்குத் தேவையான பலவகைப் பொருள்களும் கடையில் விற்கப்படுகின்றன.

(2) ஆசிரியர் மாணவர்களை அறிவு நோக்கி முதல், இடை, கடை என வகுத்தார்.

(3) தேவர்கள் மந்தரமலையை மத்தாகக் கொண்டு பாற்கடலைக் கடைந்தார்கள்.

5 பொருள் விளங்க வசனம் அமைத்தல்:

அறுசுவை : திருமண வைபவத்திற் பங்குபற்றிய வர்களுக்கு அறுசுவை உணவுகளுடன் விருந் தளிக்கப்பட்டது.

பிளிறும் : யானை பிளிறும் ஒலி கேட்டுக் காடும் நடுங்கும்.

அலவன் : ஆண் நண்டை அலவன் என்று கூறுவர்.

பாகன் : யானையைப் பராமரிக்கும் பாகன் அவ் வியானையாற் கொல்லப்படுதலுமுண்டு.

பூங்கொத்து : ஒரே தண்டிற் திரளான பூக்கள் சேர்ந்திருப்பது பூங்கொத்தெனப்படும்.

---

6 தன்வினை, பிறவினை :

தன்வினை : கருத்தா தானே செய்யும் வினை தன் வினை எனப்படும்.

(உ-ம்) கந்தன் நடத்தினுன், சீதை போக்கினுள்.

பிறவினை : கருத்தா பிறரைக் கொண்டு செய்விக் கும் வினை பிறவினை எனப்படும்.

(உ-ம்) கந்தன் நடப்பித்தான், சீதை போக்குவித்தாள்

செய்வினை, செயப்பாட்டுவினை :

செய்வினை : கருத்தாவின் தொழிலை நேரே உணர்த் தும் வினை செய்வினை எனப்படும்.

(உ-ம்) வள்ளி பாட்டுப் பாடினுள். பூனை எலி பிடித் தது.

செயப்பாட்டுவினை : கருத்தா செய்யுந் தொழில் செயப் படு பொருளை அடைவதைக் காட்டும் வினை செயப்பாட்டுவினை எனப்படும்.

(உ-ம்) வள்ளியாற் பாட்டுப் பாடப்பட்டது.
பூனையால் எலி பிடிக்கப்பட்டது.

---

7 (1) பொருட்பெயர் : நாகமணி, முருங்கை.
(2) இடப்பெயர் : அரியாலை, வைத்தியசாலை.
(3) சினைப்பெயர் : கிளை, கால்.
(4) பெயரெச்சம் : நின்ற.
(5) வினைமுற்று : பிடுங்கினர், விழுந்தது.
(6) குற்றியலுகரச்சொல் : அங்கு, கிழங்கு.

# III சொற்றொடர்ப் பயிற்சி

## 1. இணைமொழிகள்

விளக்கம் : தமிழ்மொழி, பொருள்வளத்தைக் கொடுக்கக்கூடிய இணைமொழிகள் பலவற்றைக் கொண்டுள்ளது. அநேக சொற்களிற் கூறவேண்டியவற்றை இவ்விணை மொழிகள் மூலம் விளக்கமாகவும் இலகுவாகவும் கூறிவிடலாம். உதாரணமாக, 'சேகரன் கடின வியாதியாற் பீடிக்கப்பட்டு, உடல் வலியிழந்து எழுந்திருக்க முடியாத நிலையில் நீண்ட காலமாக இருக்கிறான். என்பதை 'சேகரன் பாயும் படுக்கையுமாய் இருக்கிறான்'' என்று ஒரு வார்த்தையிற் கூறிவிடலாம். ஆதலால் பேச்சிலும் எழுத்திலும் பொருள் சிறக்க வேண்டிய இடத்து, இணைமொழிகளைப் பிரயோகிப்பதற்கு உதவியாக நம் நாட்டில் வழங்கிவரும் சில இணைமொழிகள் மேலே தரப் படுகின்றன,

(எடுத்துக்காட்டு)

(அ)

அகடவிகடம் குறும்புத்தனம், தந்திரம்
அக்கம் பக்கம்–அருகருகே
அங்குமிங்கும்–பலபக்கமும்
அத்தும்இத்தும்–பலதும்
அந்திசந்தி–எப்போதும், காலை மாலை
அல்லும்பகலும்–நாள் முழுவதும், எப்போதும்
அரைகுறை–முற்றுப்பெறாமை
அணைதுணை உதவி
அறம்மறம்–புண்ணியமும் பாவமும்
அருமை பெருமை சிறப்பு மேன்மை
அண்டபிண்டம்–உலகமுழுதும்
அணி அடுக்கு–சீர்வரிசை
அண்டரும் தொண்டரும்–தேவரும் தாசரும்
அடிமுடி–வரலாறு, கீழ் மேல்
அடிக்கடி–உடனுடன்
அந்தசந்தம்–உறுப்பழகு

அடிபிடி–சண்டை, சச்சரவு
அமளிதுமளி–பேராரவாரம்
அளவளாவுதல்–கலந்து பேசுதல்
அல்லோல கல்லோலம்–ஆரவாரம்
அற்பசொற்பம்–மிகக் கொஞ்சம்
ஆதி அந்தம் தொடக்கம் முடிவு
ஆடிப்பாடி–ஆறுதலாக, ஆனந்தமாக
ஆய்ந்தோய்ந்து–தீரவிசாரித்து
ஆரத்தீர–நன்றாக
ஆடைஆபரணம்–உடை அணி
ஆட்டமும்ஓட்டமும்–முயற்சி
ஆறி அமர்ந்து–மெதுவாய்
ஆறஅமர–அமைதியாய்
ஆறல்பீறல்–உபயோகமற்ற பீற்றற் பொருள்கள்
இன்ப துன்பம் சுகதுக்கம்
இக்கட்டு இடைஞ்சல்–துன்ப துயரம்
இளைத்துக் களைத்து–மெலிந்து தளர்ந்து

இங்குமங்கும்-எல்லாப்பக்கமும்
இகபரம்-இம்மை, மறுமை
இடக்குமுடக்கு-சங்கடம்
இடையீடு-தடை
இசக்குப்பிசக்கு-முறைகேடு
இடைக்கிடை-இடைவிட்டு
இல்லாததுபொல்லாதது-பொய்யும், தீயதும்
இன்னார்இனியார்-பகைவரும் நண்பரும்

ஈனஇரக்கம்-தயவு
ஈவிரக்கம்-மனக்கசிவு
ஈடும்எடுப்பும்-ஒப்புயர்வு
ஈடும்இணையும்-ஒப்பு
ஈவிடை-இடைவெளி
ஈவுசோர்வு-இளக்காரம்

உண்டுடுத்து-அனுபவித்து
உள்ளும்புறமும்-எல்லாவிடமும்
உருட்டுப்புரட்டு-தந்திரச்செயல்
உருவும்திருவும்-அழகும் பொருளும்
உற்றார்உறவினர்-இனசனர்
உள்ளதுஉரியது-சொந்தமான
உயர்வுதாழ்வு-ஏற்ற இறக்கம்
உண்டியும்உறையுளும்-ஊணும் இருக்கையும்

ஊண்உடை-உணவும் உடுப்பும்
ஊண்உறக்கம்-உணவும் நித்திரையும்

எலும்புந்தோலும்-மிகமெலிவு
எடுக்கப்பிடிக்க-ஏவியது செய்ய
எக்கச்சக்கம்-இடக்கு, தாறுமாறு

ஏழைஎளியர்-மிகவறியவர்
ஏடாகூடம்-தாறுமாறு
ஏந்திஎடுத்து-பேணி, மதித்து
ஏச்சுப்பேச்சு-வசைமொழி
ஏற்ற இறக்கம்-உயர்வு தாழ்வு
ஏறக்குறைய-கிட்டத்தட்ட
ஏட்டிபோட்டி-எதிருக்கெதிர்
ஏணல்கோணல்-ஒழுங்கின்மை

ஒட்டிஉலர்ந்து-மெலிந்து வரண்டு
ஒளிப்புமறைப்பு-இரகசியம்
ஒப்புயர்வு-ஈடும் எடுப்பும்
ஒப்பசெப்பம்-அழுத்தம்

ஓடிஆடி-முயற்சியுடன்
ஓய்வுஒழிவு-இளைப்பாற்றி

கட்டிமுட்டி-நருவல் நொருவல்
கணக்குவழக்கு-அளவு கொடுக்கல் வாங்கல்
கங்குகரை-அளவு, எல்லை
கண்கடை-கருத்துடைப் பார்வை
கண்ணும் கருத்தும்-ஆவல்
கண்டதுநின்றது } நல்லதும்,
கண்டதுகடையது } தீயதும்
காடுமாடு-ஒப்பசெப்பமற்றது
கண்டதுண்டம்-பலதுண்டம், சின்னபின்னம்
கள்ளங்கபடு-சூதுவாது
கஞ்சல் குப்பை-கூளம் முதலியன
கண்ணீரும்கம்பலையும்-அழுது கண்ணீருகுத்தல்
கன்னபின்ன-கண்டபடி (பிதற்றுதல்)
கட்டித்தழுவி-இறுக அணைத்து
கட்டிச்சுருட்டி-செய்தொழிலை நிறுத்தி
கற்பும்பொற்பும்-நிறையும் அழகும்

கட்டை நெட்டை-சிறிது பெரிது
கட்டிக்காத்து-கருத்துடன் பாதுகாத்து
கன்னங்கரேல்-மிகக்கருமை
கண்டுகாணாது-பார்த்தும் பாராததுபோல்
காய்கறி உணவுக்குரிய தாவரப் பொருள்கள்
கிட்டத்தட்ட-ஏறக்குறைய
கையுங்களவும்-உடன்
கையும்மெய்யும்-அத்தாட்சி, உறுதி
குணங்குறி-சுபாவமும், அடையாளமும்
குறைகுற்றம்-தவறுகள்
குணங்குறை-நன்மை தீமை
குறுக்குமறுக்கு-தாறுமாறு
குஞ்சுகுழந்தை-பிள்ளைகுட்டி
குன்றுங்குழியும்-மேடுபள்ளம்
குப்பைகூளம் - செத்தை முதலியன
கொண்டுகொடுத்து-கொடுத்து மாறி
கொஞ்சநஞ்சம்-சிறிதளவு
கோள்குண்டணி-பொய்புறணி
கோதிக்குடைந்து-துருவித் துடைத்து
கோட்டைகொத்தளம்-அரணுடைய கட்டடங்கள்
கோணிநாணி-வெட்கித்து
கோணல்மாணல்-தாறுமாறு, நெளிவு
சட்டதிட்டம்-ஒழுங்கு
சண்டைசச்சரவு-அடிபிடி
சந்துபொந்து-மூலைமுடுக்கு
சப்புச்சவர்-உபயோகமற்றது
சாக்குப்போக்கு-வீண்காரணம்
சாடைமாடை-குறிப்பு, கோள்
சின்னஞ்சிறிது-மிகச்சிறிய
சிம்பல்சிலும்பல்-கந்தை
சிரிப்புங்களிப்பும்-பகிடி பரிகாசம்
சிறிச்சினந்து-மிகக் கோபித்து
சீர்சிறப்பு-மிகு செழிப்பு
சீராட்டிப்பாராட்டி-குதூகலித்துப் புகழ்ந்து
சுகதுக்கம்-இன்பதுன்பம்
சுற்றும்முற்றும்-நான்கு பக்கமும்
சூதுவாது-திருட்டு, புரட்டு
சேறுசுரி-சதக்கல்
சொத்துச்சுதந்திரம்-பொருள் ஆதிக்கம்
தடல்புடல்-ஆரவாரம்
தங்கித்தரித்து-நிலைத்துநின்று
தங்குதடை-தாமதித்து
தட்டாமல்முட்டாமல்-தடையின்றி
தட்டுத்தடை-தடுமாற்றம்
தட்டுத்தடுமாறி-நிலைமாறி
தட்டுத்தடங்கல்-இடையூறு
தட்டுமுட்டு-வீட்டுப் பொருள்கள்
தண்டுமிண்டு-மூர்க்கத்தனம்
தப்பித்தவறி-தவறுதலாய்
தவிடுபொடி-பொடிப்பொடியாதல்
திருகல் முறுகல்-பின்னிவளைந்து
திக்குமுக்கு-மூச்சுமுட்டுகை
திட்டிக்கொட்டி-வைது சபித்து
திட்டவட்டம்-செவ்வை
துணிமணி-உடுபுடைவை
துன்பதுரிதம்-இன்னல் இக்கட்டு
துக்கதுயரம்-இக்கட்டு இடைஞ்சல்
தூள்துருத்தி-சின்னஞ்சிறியது

தொகைவகை—அளவு கணக்கு
தோட்டம்துரவு—புன்செய்நிலம்
தோலும்கோலும் எலும்பும் தோலும்

நருவல்நொருவல்—கட்டிமுட்டி
நருக்குப்பிருக்கு—மசிந்ததும் மசியாததும்
நகைநட்டு—ஆபரணம்
நரைதிரை—வயோதிபம்
நயபயம்—இதாகிதம்
நல்லதுபொல்லாதது—நன்மை தீமை
நன்மைதீமை—நல்லது பொல் லாதது, சுகதுக்கம்
நாளும்கோளும்—முகூர்த்தம்
நாயும்பேயும்—இழிந்தவர்கள்
நாளும்கிழமையும்-காலவேளை
நாடுநகர்—தேசம்
நொண்டி முடம்—சொத்தி, சப் பாணி
நோய்நொடி—வருத்தம்
பயிர்பச்சை—உபயோகமுள்ள சிறு செடிகள்
பழக்கவழக்கம்—ஒழுக்கம்
பங்குபிணை—பாகஉரிமை
பங்குபாகம்—பாகப்பிரிவு
பத்தியபாகம்—மருந்துக்கிசைந்த புசிப்பு
பாய்பறி—படுக்கை முதலிய தட்டுமுட்டுக்கள்
பாடுபறப்பு—அதிகவேலை
பாரதூரம்—மிகப்பெரிது
பேரும்புகழும்—கீர்த்தி
புல்பூண்டு—உபயோகமற்ற சிறு செடிகள்
பொய்யும் புரளியும்—உண்மை யற்ற உருட்டுப் பேச்சு



பொய்யும் புழுகும்—உண்மையற்ற மிகைப்பேச்சு
பொன்னும் மணியும்—செல்வம்
பொருள்பண்டம்-சொத்து
போற்றிப் புகழ்ந்து—மிகப் பாராட்டி
போக்குவரத்து-போதலும் வருத லும்
போர்த்து மூடுதல்—மறைத்துக் காத்தல்

மந்திரதந்திரம்—மாயம்
மாயமயக்கம்—வஞ்சகம்
மாவுந் தூளும்-பொடிப்பொடி (ஆக்கப்பட்டது)
முட்டிமோதி-நெருங்கி
முற்றமுடிய-பூரணமாக
முன்னும்பின்னும்-தொடர்பாக
முத்திமோந்து—கொஞ்சி
மூச்சுப்பேச்சு-சத்தம்
மூலைமுடுக்கு—சந்துபொந்து

வம்புதும்பு—அயோக்கியத்தனம்
வந்தனைவழிபாடு—வணக்கம்
வற்றிவரண்டு—உலர்ந்து
வரம்புவாய்க்கால்—வழிதுறை
வாட்டசாட்டம்-வடிவழகு
வாடிவதங்கி—காய்ந்து
வாழ்வுதாழ்வு—ஆக்கமும் கேடும், சுகதுக்கம்
விதிவிலக்கு—முறையினின்றும் நீங்கியிருப்பது
விருப்புவெறுப்பு—வேண்டுதல் வேண்டாமை
வீரசூரம் } பேராண்மை
வீரதீரம் }
வேற்றுப்பிரிவு—வித்தியாசம்

## (ஆ)

| | |
|---|---|
| அழுகையும் கண்ணீரும் | கூதல் குளிர் |
| ஆறித்தேறி | கூச்ச நாச்சம் |
| ஆண்டான் அடிமை | கொஞ்சிக் குலாவி |
| இட்டுத்தொட்டு | கொள்வன கொடுப்பன |
| ஈரும்பேனும் | சாடி மூடி |
| உடை நடை | சாதி சமயம் |
| ஊரும் பேரும் | சிந்திச் சிதறி |
| எண்ணும் எழுத்தும் | சின்னபின்னம் |
| ஏற்றத் தாழ்வு | சொறி சிரங்கு |
| ஒக்கல் உறவு | தாயும் பிள்ளையும் |
| ஓங்கி உயர்ந்து | தாயும் சேயும் |
| கல்லும் முள்ளும் | தாய் தந்தை |
| கண்டது கேட்டது | தான தருமம் |
| கனவு நனவு | திக்குத் திசை |
| காயும் பழமும் | தீன் ஊண் |
| காடு கரம்பை | தூணும் துரும்பும் |
| கால்கட்டு கைகட்டு | பற்றை பறுகு |
| காடு மேடு | பாலும் பழமும் |
| காலை மாலை | பாலும் தேனும் |
| கிளையும் கெட்டும் | பிறப்பு இறப்பு |
| குறை நிறை | போக்கு வரக்கு |
| குடியும் கூத்தியும் | வரவு செலவு |
| குன்றும் மலையும் | வேர் விராய் |
| குஞ்சு குருமான் | வேற்று விருந்து |
| கூன் குருடு | வேரும் தூரும் |

## *பயிற்சி 19*

*1.* *அணி அடுக்கு, ஒளிப்பு மறைப்பு, சாக்குப் போக்கு என்னும் இணை மொழிகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக.*

*2.* *துணி மணி, தோட்டம், துரவு, பயிர் பச்சை, திக்குத்திசை என்பவற்றின் பொருளை விளக்குக.*

---

## 2. இரட்டைக் கிளவி

விளக்கம் : ஒருசொல் இரட்டித்துவரின் இரட்டைக்கிளவி எனப்படும். அது பிரிந்து தனித்து ஒலியாததன்றி வலிந்து பிரித்தாற் பொருளுந் தராதது. பெரும்பாலும் ஒலிக் குறிப்பாகவே வருவதாகும். சாதாரண வழக்கிலிருக்கும் சில இரட்டைக் கிளவிகளும் அவற்றிலிருந்து பிறக்கும் சொற்களும் அவற்றினது பொருள்களும் மேலே தரப்படுகின்றன.

(எடுத்துக்காட்டு)

| | |
|---|---|
| கடகட | –கடகடப்பு : ஈடாட்டம் |
| கடுகடு | –கடுகடுப்பு : வலிப்பு, கோபிப்பு |
| கணகண | –கணகணப்பு : சூடு, கொதிப்பு |
| கணீர்கணீர் | –கணீர்கணீரெனல் : மிகவொலித்தல் |
| கதகத | –கதகதென்று : விரைவாக |
| கபகப | –கபகபெனல் : காந்தல் |
| கமகம | –கமகமத்தல் : மிகமணத்தல் |
| கரகர | –கரகரப்பு : அரிப்பு |
| கலகல | –கலகலத்தல் : அறக்காய்தல், ஒலித்தல் |
| களகள | –களகளத்தல் : உளறுதல், ஒலிப்பு |
| கறகற | –கறகறப்பு : தொந்தரவு, ஒலிப்பு |
| கிசுகிசு | –கிசுகிசுப்பு : சிறுசத்தம், விரைவு |
| கிடுகிடு | –கிடுகிடுத்தல் : நடுக்கம், அச்சம் |
| கிணுகிணு | –கிணுகிணுத்தல் : மெல்லென இரைதல் |
| கிலுகிலு | –கிலுகிலுத்தல் : கிலுகிலு என்னும் ஒலி |
| கிறுகிறு | –கிறுகிறுப்பு : தலைச்சுழற்சி, செருக்கு |
| குசுகுசு | –குசுகுசுத்தல் : இரகசியம் பேசுதல். |
| குணுகுணு | –குணுகுணுத்தல் : மூக்கால் சத்தம்வரப் பேசுதல் |
| குடுகுடு | –குடுகுடுத்தல் : துரிதமாய் ஓடித்திரிதல் |
| குதுகுது | –குதுகுதுப்பு : ஆவல், தேகம் நடுங்குதல். |
| குபீர்குபீர் | –குபீர்குபீரெனல் : விரைந்து பாய்தல் (நீர்) |
| குபுகுபு | –குபுகுபெனல். : விரைந்து செல்லல் (புகை) |
| குமுகுமு | –குமுகுமுத்தல் : மிகமணத்தல் |
| குருகுரு | –குருகுருத்தல் : நெஞ்சையுறுத்தல் |
| குலுகுலு | –குலுகுலுத்தல் : ஊருதல் |
| குளுகுளு | –குளுகுளுத்தல் : மெதுமெதுத்தல், ஒலிக்குறிப்பு |
| குறுகுறு | –குறுகுறுத்தல் : மனம் உறுதிக்கொண்டிருத்தல் |
| கொடுகொடு | –கொடுகொடுத்தல் : நடுங்குதல் |

கொலுகொலு –கொலுகொலுப்பு : ஈடாட்டம், உல்லாசம்
கொளகொள –கொளகொளத்தல் } தளர்தல், கசிவுகொள்ளுதல்
கொளுகொளு –கொளுகொளுத்தல் }
கொறகொற –கொறகொறத்தல் : ஒலிக்குறிப்பு
கொறுகொறு –கொறுகொறுத்தல் : அலட்டுதல்
சடசட –சடசடத்தல் : பரபரத்தல், ஒலிக்குறிப்பு
சதசத –சதசதப்பு : ஈரப்பற்று
சரசர –சரசரத்தல் : சருகுமுதலியன ஒலித்தல்
சலசல –சலசலத்தல் : நீராடும்பொழுதெழும் சத்தம்
சளசள –சளசளத்தல் : நீர்ப்பிடிப்புக் கொள்ளுதல், விருதாவாக அலட்டுதல்
சிடுசிடு –சிடுசிடுப்பு : கோபக்குறி
சிணுசிணு –சிணுசிணுத்தல் : அழுதற்குறிப்பு
சிலுசிலு –சிலுசிலுப்பு : கொதிக்கும் எண்ணெயில் நீர்ப்பிடிப்பான பொருள் சேருவதினல் உண்டாகும் ஒலி
சுரசுர –சுரசுரப்பு : வீக்கம்
சுறுசுறு –சுறுசுறுத்தல் : விரைதல், வேகமாதல்
தகதக –தகதகெனல் : நெருப்பெரி குறிப்பு, மினுங்குதல்
தடதட –தடதடப்பு : நாக்குத்தட்டுதல், நடுக்கக்குறிப்பு
தழுதழு –தழுதழுத்தல் : நாத்தடுமாறிப் பேசுதல்
தளதள –தளதளப்பு : இளக்கம், சோபை
திடுதிடு } திடுதிடுத்தல் : அச்சக் குறிப்பு
} திடுதிடெனல் : விரைவுக் குறிப்பு
துருதுரு –துருதுருப்பு : சுறுசுறுப்பு
தொளதொள –தொளதொளப்பு : சோர்வு, நெகிழ்வு
நறுநறு –நறுநறுத்தல் : வாய்க்குக் கடினமாயிருத்தல், ஒலிக்குறிப்பு
நெருநெரு –நெருநெருத்தல் : உறுத்துதல், நெருடுதல்
நொடுநொடு –நொடுநொடுப்பு : துடினம்
நொதுநொது –நொதுநொதுப்பு : இளக்கம், நுகைவு
நொளுநொளு –நொளுநொளுப்பு : குழைவு
பகபக –பகபகனெல் : வேகக்குறிப்பு, விரைவுக்குறிப்பு
படபட –படபடப்பு : விரைவு, கோபக்குறிப்பு
பரபர –பரபரத்தல் : தீவிரப்படுதல்
பளபள –பளபளப்பு : மினுக்கம்
பறபற –பறபறத்தல் : மிகவிரைதல்
பிசுபிசு –பிசுபிசுத்தல் : பசைத்தன்மையாதல்

| | |
|---|---|
| புறுபுறு | –புறுபுறுப்பு : குறை சொல்லுதல் |
| பொசுபொசு | –பொசுபொசுத்தல் : எளிதில் எரிதல் |
| பொடுபொடு | –பொடுபொடுத்தல் : விரைவாய்ப் பேசுதல், ஒலிக் குறிப்பு, வரட்சியடைதல் |
| பொலுபொலு | –பொலுபொலுத்தல் : உதிர்தல், சிந்துதல் |
| மடமட | –மடமடப்பு : சடசடப்பு, மிகவிரைவு |
| மளமள | –மளமளப்பு : விரைவுக்குறிப்பு |
| மினுமினு | –மினுமினுப்பு : மிளிர்வு |
| முணுமுணு | –முணுமுணுப்பு : வாய்க்குட்பேசுதல் |
| முறுமுறு | –முறுமுறுத்தல் : குறைகூறுதல் |
| மெதுமெது | –மெதுமெதுப்பு : மிருதுத்தன்மை |
| மொதமொத | –மொதமொதப்பு : உப்புதல் |
| மொரமொர | –மொரமொரத்தல் : பசையறக் காய்தல் |
| மொலுமொலு | –மொலுமொலுத்தல் : குறைகூறுதல் |
| மொறமொற | –மொறமொறத்தல் : மிகக்காய்தல் |
| வழவழ | –வழவழத்தல் : மழமழப்பு, உறுதியின்மை |
| வளவள | –வளவளத்தல் : பயனின்றிப்பேசுதல் |
| வளுவளு | –வளுவளுத்தல் : நொளுநொளுத்தல் |
| விதுவிது | –விதுவிதுப்பு : நடுக்கம் |
| விழுவிழு | –விழுவிழுப்பு : பசைப்பிடிப்பு |
| விறுவிறு | –விறுவிறுப்பு : மிகுகோபம், புண்கொதித்தல் |
| வெடுவெடு | –வெடுவெடுப்பு : சினக்குறிப்பு |
| வெதுவெது | –வெதுவெதுப்பு : இளஞ்சூடு |

## பயிற்சி 20

1. சளசள, படபட, தகதக, பொலுபொலு, சரசர, நறுநறு என்னும் இரட்டைக் கிளவிகளின் பொருள் விளங்க வசனங்கள் அமைக்குக.

2. மேல்வரும் சொற்களின் பொருள்தந்து அவற்றை வசனத்தில் அமைத்துக் காட்டுக :

   விறுவிறுப்பு, கமகமத்தல், தழுதழுத்தல், முணுமுணுப்பு, குருகுருத்தல்.

## 3. சில அருஞ் சொற்றொடர்கள்

விளக்கம் : இரண்டு மூன்று முதலிய பல சொற்கள் தொடர்ந்து சொன்னயம் பொருணயமுற வாக்கியத்தில் அமைந்து வருவதுண்டு சாதாரண வழக்கில் அவ் விதம் அதிகமாகப் பயின்றுவரும் சில சொற்றொடர்கள் மேலே தரப்படுகின்றன. அவற்றைப் பொருத்தமுற வாக்கியத்தில் அமைத்துப் பயின்று கொள்க.

(எடுத்துக்காட்டு)

| | |
|---|---|
| அடங்காப்பிடாரி | சரமாரியாக |
| அணைகடந்த வெள்ளம் | சர்வாலங்கார பூடணியாய் |
| அழுதகண்ணும் சிந்தியமூக்கும் | சொன்னயம் பொருணயம் |
| அண்டசராசரம் | சோனமாரியாக |
| ஆருயிர்த் தோழன் | தலை தடுமாற்றமாக |
| ஆசைகாட்டி மோசஞ் செய்தல் | தவிடு பொடியாக |
| இன்னோரன்ன | தலைகால் தெரியாத |
| இகபர நன்மை | தான்தோன்றித்தனமாக |
| இடம் பொருளேவல் | தெய்வ சங்கற்பமாக |
| இரண்டறக் கலத்தல் | தெற்றெனப் புலப்பட |
| உயிருக் குயிராய் | நாளொருவண்ணம் பொழுதொரு மேனியாய் |
| உள்ளங்கை நெல்லிக்கனி | நாவாரவாழ்த்தி |
| உள்ளொன்று புறமொன்று | நெஞ்சாரத்துதித்து |
| எட்டிலடங்காது | பாதாதிகேசம் |
| ஐயந்திரிபற | பாதாரவிந்தம் |
| ஒப்புயர்வில்லாத | பார்த்தகண்ணும் பூத்துப்போய் |
| ஒப்பாரும் மிக்காருமின்றி | பொன்னே போற்போற்றி |
| கண்கொள்ளாக் காட்சி | போலிக்கண்ணீர் வடித்து |
| கண்ணுக்குக் கண்ணாக | மனம்போன போக்காய் |
| கரதலாமலகம் | மையிருட்டாயினும் |
| கண்மூடித்தனமாக | முதலைக்கண்ணீர் விட்டு |
| காலத்துக்கேற்ற கோலம் | மாடமாளிகை கூடகோபுரம் |
| காலாவிட்டதைத் தலைமேற்சுமந்து | மேல்வரிச் சட்டமாய் |
| காகதாலீயமாக | வாழையடி வாழையாக |
| குற்றங்களைந்து குணமளைந்து | வாயார வாழ்த்தி |
| கைகட்டி வாய்புதைத்து | வீராவேசத்துடன் |
| சந்தேக விபரீதமற | |

## பயிற்சி 21

பாதாரவிந்தம், உள்ளங்கை நெல்லிக்கனி, கண்கொள்ளாக் காட்சி, தலைதடுமாற்றமாக என்னுஞ் சொற்றொடர்களைப் பொருத்தமுற வாக்கியத்தில் அமைக்குக.

---

## 4. உவமைச் சொற்றொடர்

**விளக்கம் :** எடுத்துக்கொண்ட பொருளைத் தெற்றென விளங்க வைப்பதற்கு உவமைகள் மூலம் விளக்குவது சாலச் சிறந்த வழியாகும். தமிழ்மொழியின்கண்ணே செய்யுளிலும், உரைநடையிலும் பேச்சுவழக்கிலும் ஆயிரக்கணக்கான உவமைச் சொற்றொடர்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுட் சில மேலே தரப்படுகின்றன.

(எடுத்துக்காட்டு)

(அ)

அகலாதணுகாது தீக்காய்வார்போல
அகழ்வாரைத் தாங்கும் நிலம்போல
அங்கணத்துளுக்க அமிழ்தம்போல
அடுங்காலை நீர்கொண்ட வெப்பம்போல
அடுத்தது காட்டும் பளிங்குபோல
அரங்கின்றி வட்டாடியதுபோல
அழல் மண்டுபோழ்தின் அடைந்தவர்க்கெல்லாம் நிழல்மரம்போல
அளப்பரிய ஆகாயத்துக்கு விளக்கமாகிய திங்களும்ஞாயிறும்போல
அறத்தாற்றின் வழங்காதான் ஆக்கம்போல
அறுகயிற் றூசல்போல ... ... ...
அற்றகுளத்தின் அறு நீர்ப்பறவைபோல
அற்றகுளத்திற் கொட்டியும் ஆம்பலும்போல
ஆறிடுமேடும் மடுவும்போல
இணைபிரிந்த அன்றில்போல
இழிந்தவை காமுறும் ஈப்போல
இழுமெனும் ஓசையின் ஒழுகுறும் அருவிபோல
உடுக்கை இழந்தவன் கைபோல
உருள் பெருந்தேருக்கு அச்சாணிபோல
உள்ளீடில்லாப் பதர்போல
ஊருணி நீர் நிறைந்தாற்போல ... ... ...

எரிமுன்னர் வைத் தூறுபோல
ஓராவிற் கிருகோடு பூத்தாற்போல
கடன்பட்டார் நெஞ்சம்போல
கனியிருப்பக் காய் கவர்வதுபோல
கடுகைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்தினாற்போல
கண்ணில்லான் கண் பெற்றிழந்ததுபோல
கருங்கோண்மூ வாய்திறந்த மின்னுப்போல
கருவமைந்த மாநகர்க்கு உருவமைந்த வாயில்மாடம்போல
கல்லின் மேலிட்ட கலம்போல
களைபறியா விளைநிலம்போல
கற்பிளப்பிற் தீயேபோல
கானலை நீரென்றெண்ணிக் கடுவழிதிரியும் மான்போல
கானமயிலாடக் கண்டு வான்கோழி ஆடினாற்போல
கிளந்தவா கிளத்தல் கிளியினது இயல்புபோல
குடங்கருட் பாம்பொடு உடனுறைவதுபோல
குன்றுமுட்டிய குரீப்போல
குறுச்சி புக்க மான்போல
கூத்தாட்டவைக் குழாம்போல
கொழுகொம்பற்ற கொடிபோல
கொழுச் சென்றவழி துன்னூசி சென்றாற்போல்
சகடக் கால்போல்
சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல
செங்கதிரின்முன் மதியம் தேசடங்கி நின்றிடல்போல
செங்கமலப் போதலர்ந்த செவ்விபோல
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
தடங்கரை பெயர்த்த தண்புனல் வெள்ளம்போல
தலையமைந்த யானைக்கு வினையமைந்த பாகன்போல
தாரகை நடுவண் தண்மதிபோல
திங்கள்கண்டு கடல்பொங்குவதுபோல
திரிசங்கு சுவர்க்கம்போல
தூரின் கரும்பு தின்றாற்போல
தொட்டனைத் தூறும் மணற்கேணிபோல
நடுவூரில் நச்சுமரம் பழுத்தாற்போல
நவில்தொறும் நூனயம்போல
நறுந்தாதுண்டு நயனில்காலை வறும்பூத்துறக்கும் வண்டுபோல
நீரொழியப் பாலுண் குருகினைப்போல
நீரிடைப் பாசிபோல
நீர்மேல் எழுத்துப்போல

நீர் வழிப்படூஉம் புணைபோல
நுணலையும் தன்வாயாற் கெடுவதுபோல
நெடுஞ் சுரத்தினின்ற தனிமரம்போல
நெடுஞ் சுழிப்பட்ட நாவாய்போல
நெருப்பிடை நெய் சொரிந்தாற்போல
பகலவன் முன்னர்ப் பாயிருள் மாய்ந்தாற்போல
பசுமட் கலத்துள் நீர்போல
படைகொண்டார் நெஞ்சம்போல
பருதி கண்ட பங்கயம்போல
பருந்தின் வழி நிழல்போல
பன்மீன் நடுவட் பான்மதிபோல
பாவிடையாடு குழல்போல
பாற்கடற் பனிமதிபோல
பிரையுறு பால்போல
புதர்மறைந்து வேடுவன் புள் சிமிழ்த்தாற்போல
புலிக்கஞ்சும் புல்வாய்போல
புன்னுனிமேல் நீர்போல
புனையான் ஓவியம்போல
பொன்மலர் நாற்றமுடைத்தாற்போல
பொறியறு பாவைபோல
மங்குலைக்கண்ட மயில்போல
மலையாடு மஞ்சுபோல
மலைமிசைத் தோன்றும் மதியம்போல
மோப்பக் குழையும் அனிச்சம்போல
யாற்றொழுக்குப்போல
யானையால் யானையை யாத்ததுபோல
வானூர் மதியம்போல
விளக்கு நெய் தேய்விடத்து சென்றிருள் பாய்வதுபோல்
விளக்குப்புக இருள் மாய்ந்ததுபோல
வெள்ளிடை மலைபோல

(அ)

அடியற்ற மரம்போல
அத்தி பூத்தாற்போல
அணைகடந்த வெள்ளம்போல
அழகுக்கு அழகு செய்வதுபோல
அருஞ்சுரத்து மரம்போல
அன்றிலும் பெடையும்போல

அச்சாணியற்ற தேர்போல
அவலை நினைத்து உரலை இடித்ததுபோல
அனலி லிடப்பட்ட மெழுகுபோல
அனலருகே வைத்த அரும்புபோல
அரிசி அள்ளின காகம்போல
அணில் ஏறவிட்ட நாய்போல ... ...
அன்னநடை நடக்கப்போய்க் காகம் தன்நடையும் இழந்ததுபோல
அல்லித் தண்டுபோல
அடிபட்ட பந்துபோல
அடியிலிருந்து கரும்பு தின்பதுபோல
அடிவயிற்றில் இடி விழுந்ததுபோல
அடைக் கோழிபோல
அம்பட்டன் குப்பையைக் கிளறுவதுபோல
அம்புபட்ட மான்போல
அறுத்தகோழி துடித்ததுபோல
ஆலையிலகப்பட்ட கரும்புபோல ... ...
ஆனை வாயிற் கரும்புபோல
ஆனைக் கூட்டத்திற் சிங்கம் புகுந்ததுபோல
ஆற்றிலே போட்டுக் குளத்திலே தேடியதுபோல
ஆற்றிற் கரைத்த புளிபோல
ஆற்றங்கரை மரம்போல
ஆழ்கடல் முத்துப்போல
ஆலை விழுது தாங்குவதுபோல
ஆயிரம் பாம்பினுள் ஒரு தேரை அகப்பட்டதுபோல
ஆடி ஓய்ந்த பம்பரம்போல
ஆப்பிழுத்த குரங்குபோல
ஆண்டிகள் மடங் கட்டியதுபோல
இடியேறு கேட்ட நாகம்போல
இருபாடெரி கொள்ளி எறும்புபோல
இலைமறை காய்போல
இருப்பைப்பூச் சொரிந்ததுபோல
இரவும் பகலும்போல
இருதலைப் புள்ளின் ஓருயிர்போல
இருல்போட்டுச் சுரு பிடிப்பதுபோல ... ...
இருதோணியிற் கால் வைத்ததுபோல
இஞ்சி தின்ற மந்திபோல

இலவுகாத்த கிளிபோல
இடிவிழுந்த மரம்போல
இடிகரைவாழ் மரம்போல
இரு நாய்களுக்கு அகப்பட்ட ஓர் எலும்புபோல
இரும்புங் காந்தமும்போல
இரும்புத்தூணை எறும்பு அரிக்க முயன்றதுபோல
இழந்த பொருள் கிடைத்ததுபோல
இனம் இனத்தை நாடுவதுபோல ... ... 140
இனம்பிரிந்த மானைபோல
உலக்கை தேய்ந்து உளிப்பிடியானாற்போல
ஊமைகண்ட கனாப்போல
ஊமையும் ஊமையும் மூக்கைச் சொறிந்ததுபோல
ஊழித் தீபோல
ஊர்க்கடனும் உள்ளங்கைச் சிரங்கும்போல
ஊர்க்குருவிக்கு இராமபாணம் தொடுத்ததுபோல
எடுப்பார் கைப்பிள்ளைபோல
எய்தவனிருக்க அம்பை நோவதுபோல
எண்ணெய்ச் சட்டிக்குத்தப்பி அடுப்புக்குள் விழுந்ததுபோல 150
எட்டாப் பழத்துக்குக் கொட்டாவி விட்டதுபோல
எட்டி பழுத்தாற்போல
எமன்கையில் அகப்பட்ட உயிர்போல
எமன் கையிலிருந்து மீண்டதுபோல
எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியதுபோல
எருமை முதுகிற் பெய்த மழைபோல
ஏறவிட்டு ஏணியை எடுத்ததுபோல
ஏட்டுச் சுரக்காய்போல
ஒருநாட் கூத்துக்கு மீசையைச் சிரைத்ததுபோல
ஒளியைக்கண்ட இருள்போல ... ... 160
ஓட்டைக் குடத்துள் வார்த்த நீர்போல
ஓடும் புளியம்பழமும்போல
கண்களைவிற்றுச் சித்திரம் வாங்குவதுபோல
கல்மேல் எழுத்துப்போல
கண்ணை இமை காப்பதுபோல
கரை காணாத கப்பல்போல
கன்றை இழந்த கறவைபோல
கண்கெட்டபிறகு சூரிய வணக்கம் செய்வதுபோல
கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல
கருங்காலிக் கட்டைக்கு வெள்ளிப்பூண் கட்டியதுபோல ... 170

கல்லிற் குத்திக் கை நொந்தாற்போல
கழுதை பொதி சுமந்ததுபோல்
கலியாணச் சந்தடியில் தாலிகட்ட மறந்ததுபோல
கரும்புதின்னக் கூலி கொடுத்ததுபோல
கட்டுக்கடங்காக் காளைபோல
கருடனைக் கண்ட பாம்புபோல
கலங்கரை விளக்குப்போல
கண்ணாடி வீட்டிலிருந்து கல்லெறிந்ததுபோல
கரடி பிறை கண்டதுபோல
கண்ணின் மணிபோல ... ... ... ... ... 180
காற்றில் அகப்பட்ட துரும்புபோல
காய்த்த மரத்துக்கு கல் எறி விழுவதுபோல
காட்டில் எறித்த நிலாப்போல
காட்டுத்தீ முன்னர்ப் பஞ்சுத்துய்போல
காதிலே நாராசம் ஊற்றியதுபோல
காந்தம் இரும்பை இழுப்பதுபோல
கார்த்திகைப் பிறைபோல
காகமிருக்கப் பனம்பழம் விழுந்ததுபோல
கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுத்ததுபோல
கிணறுவெட்டப் பூதம் புறப்பட்டதுபோல 190
கிணற்றிலே கல் போட்டதுபோல
கீரியும் பாம்பும்போல
குங்குமஞ் சுமந்த கழுதைபோல
குடத்துள் விளக்குப்போல
குட்டிபோட்ட நாய்போல
குருத்திலிருந்து கரும்பு தின்றதுபோல
குப்பையிற் கிடந்தாலும் குண்டுமணி மங்காததுபோல
குடல் கூழுக்கழ கொண்டை பூவுக்கழுவதுபோல
குருடன் இராசவிழி விழித்ததுபோல
குருடனுக்குக் குருடன் வழிகாட்டியதுபோல
குருடனது கைக்கோலைப் பிடுங்கியதுபோல ... 200
குருடுஞ்செவிடும் கூத்துப்பார்த்ததுபோல
குருவி கழுத்திற் தேங்காயைக் கட்டியதுபோல
குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக்காம்புபோல
குலைக்கிற நாய்க்கு எலும்பைப் போட்டதுபோல
குழந்தையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டியதுபோல
குரங்கின் கையில் அகப்பட்ட பூமாலைபோல
கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதுபோல
குளிக்கப்போய்ச் சேறுபூசினதுபோல

குரங்கு அப்பம் பங்கிட்டதுபோல ... ... 210
கூட்டத்திலே கட்டுச்சோறு அவிழ்த்ததுபோல
கூண்டிலே அகப்பட்ட கிளிபோல
கையாளாத ஆயுதம் துருப்பிடிப்பதுபோல
கொல்லர் தெருவில் ஊசி விற்றதுபோல
கோடையிடி இடித்ததுபோல
சருக்கரைப் பந்தலிலே தேன்மாரி பொழிந்ததுபோல
சணப்பன்வீட்டுக் கோழி தனக்குத்தானே விலங்குமாட்டிக் கொண்[டதுபோல
சந்திரனில்லா வானம்போல
சாடிக்கேற்ற மூடிபோல
சாறு பிழிந்த கரும்புபோல ... ... ... 220
சாம்பருள் நெருப்புப்போல
சிறகிழந்த பறவைபோல
சித்திரப் பதுமைபோல
சிலையில் எழுத்துப்போல
சிட்டுக்குருவி தலைமேலே பனங்காயை வைத்ததுபோல
சிரங்கு முற்றிப் பௌந்திரமானாற்போல
சிவபூசையிற் கரடிபுகுந்ததுபோல
சிலந்தி வலையில் விழுந்த ஈபோல
சிறுதுளி பெருவெள்ளம் என்பதுபோல
சுட்டமண்ணும் பச்சைமண்ணும்போல ... 230
சும்மா வந்தமாட்டின் பல்லைப்பிடித்துப் பார்த்ததுபோல
சுழல்காற்றில் அகப்பட்ட துரும்புபோல
சுடச்சுட ஒளிரும் பொன்போல
சூரியனைக் கண்ட தாமரைபோல
சூரியன் முன் மின்மினிபோல
செத்த நாயிலிருந்து உண்ணி கழன்றதுபோல
செவிடன் காதிற் சங்கு ஊதியதுபோல
சேற்றில் பூத்த செந்தாமரைபோல
சேற்றிலே நட்ட கம்பம்போல
தங்கக் கம்பிபோல ... ... ... 240
தங்கத்தை உருக்கி வார்த்ததுபோல
தண்ணீரிற் தத்தளிப்பவனுக்கு துரும்புகிடைத்ததுபோல
தனது நிழலை நோக்கித் தானே ஓடுவதுபோல
தாரகை நடுவிற் திங்கள்போல
தாமரை இலைத் தண்ணீர்போல
தாயில்லாச் சேய்போல
திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல

திரிகையில் அகப்பட்ட மணிபோல
துரும்பு பெருத்துத் தூணுவதுபோல
துணையிழந்த அன்றில்போல ... ...
தூண்டாமணி விளக்குப்போல
தூண்டிலில் அகப்பட்ட மீனபோல
தூங்குகிற புலியைத் தட்டிஎழுப்புவதுபோல
தென்றல் முற்றிப் பெருங்காற்றுனற்போல
தேடிய பூண்டு காலில் அகப்பட்டதுபோல
தேனில் ஈ மொய்த்ததுபோல
தோளில் இருந்து செவியைக் கடிப்பதுபோல
நண்டைச் சுட்டு நரியைக் காவல் வைப்பதுபோல
நஞ்சு தலைக்கேறியதுபோல ... ... ...
நண்டு கால் விரித்ததுபோல
நம்பியவரை நட்டாற்றிற் கைவிட்டதுபோல
நரிவாலைக் கொண்டு கடலாழம் பார்த்ததுபோல
நல்ல மரத்திற் புல்லுருவி பாய்ந்ததுபோல
நகமும் சதையும்போல
நரிப்பளையில் அகப்பட்ட மான்போல
நாய்க்கு வெற்றெலும்பு கிடைத்தாற்போல
நாயும் பூனையும் போல
நாய்க்குத் தவிசு இட்டாற்போல
நிலவுக்குத் தப்பிப் பரதேசம் போனதுபோல ...
நுனிக்கொம்பிலிருந்து அடிக்கொம்பை வெட்டுவதுபோல
நுனிப்புல் மேய்ந்ததுபோல
நீர்மேல் எழுத்துப்போல
நீர்க் குமிழிபோல
நீறுபூத்த நெருப்புப்போல
நெல்லிக்காய் மூடையைக் கொட்டியதுபோல
நெருப்பின்றிப் புகைவருவதுபோல
நெருப்பிலிட்ட புழுப்போல
பச்சை மரத்தில் இடிவிழுந்ததுபோல
பஞ்சுப் பொதியில் நெருப்புப்பொறி விழுந்தாற்போல
பசுத்தோல் போர்த்த புலிபோல
பசுவைக்கொன்று செருப்புத்தானம் செய்தாற்போல
பருத்தி புடவை காய்த்ததுபோல
பல்லுப் பிடுங்கிய பாம்புபோல
பழம்நழுவிப் பாலில் விழுந்தாற்போல
பசுமரத் தாணிபோல
பகலவனைக் கண்ட பனிபோல

பட்டப் பகல்போல
பறை யறைந்தாற்போல
பனையால் விழுந்தவனை மாடேறி மிதித்ததுபோல ... 290
பரமார்த்த குருவும் சீடரும்போல
பருதி முன்னர்ப் பனிபோல
பாய்மரக் கொடிபோல
பாலுந் தேனுங் கலந்தாற்போல
பாம்பின் வாய்த்தேரைபோல
பால்தொட்டுப் பால் கறந்தாற்போல
பாலைக்காய்ச்சிப் பூனையைக் காவல் வைத்ததுபோல
பாக்குவெட்டியில் அகப்பட்ட பாக்குப்போல
பாம்புக்குத் தலையும் மீனுக்கு வாலும் காட்டும் விலாங்குபோல
பாம்புக்குப் பால் வார்த்ததுபோல ... ... 300
பாம்புக்கு மருந்துகேட்க, தேளுக்கு மந்திரித்தாற்போல
பிஞ்சிலே பழுத்தாற்போல
பிறவிக்குருடனுக்குக் கண்ணொளி கிடைத்தாற்போல
புது வெள்ளம்போல
புறக்குடத்தில் வார்த்த நீர்போல
புல்லிடை உகுத்த அமுதுபோல
புயலிடைப்பட்ட ஓடம்போல
புதுமணப் பெண்போல
புண்ணிலே கோலிட்டதுபோல
புதையல் காத்த பூதம்போல் ... ... ... 310
புற்றிலிருந்து ஈசல் புறப்பட்டதுபோல
புற்றிலே கிடந்த புடையன் எழும்பியதுபோல
புண்ணிற் புளிபட்டதுபோல
புலித்தோல் போர்த்த பசுபோல
பூவாதே காய்க்கும் மரம்போல
பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறுவதுபோல
பூனையைக்கண்ட கிளிபோல
பெட்டிப் பாம்புபோல
பெருங்காயம் கரைத்ததுபோல
பொன்னின் குடத்துக்குப் பொட்டிட்டதுபோல ... 320
பொன்மலையைச் சார்ந்த காக்கைபோல
போர்முனையிலே ஆயுதம் தேடுவதுபோல
போன சுரத்தைப் புளியிட்டு அழைத்ததுபோல
போன சனியனைத் தாம்பூலம்வைத்து அழைத்ததுபோல
மலரும் மணமும்போல
மணியும் ஒளியும்போல

மடைதிறந்த வெள்ளம்போல
மந்திரம் கேட்ட மாசுணம்போல
மண்குதிரையை நம்பி ஆற்றிலிறங்கியதுபோல
மத்திடைப்பட்ட தயிர்போல
மதில்மேற் பூனைபோல
மலர்த்தேனை வண்டருந்துவதுபோல
மலைப்பாம்பு புரள்வதுபோல
மாரிகாலத்துப் பயிர்போல
மின்னுமல் முழங்காமல் இடி இடித்ததுபோல
மின்மினி ஒளிபோல
மீனை மீன் விழுங்கினாற்போல
மீகாமன் இல்லா மரக்கலம்போல
முடவன் கொம்புத்தேனுக்கு ஆசைப்பட்டதுபோல
முழுப்பூசினிக்காயை இலைச்சோற்றில் மறைத்ததுபோல
முயற் கொம்புபோல
மெரு கிட்டதுபோல
மொட்டைத்தலைச்சியைக் கூந்தலழகி என்றாற்போல
யானை தின்ற விளாங்கனி போல
வலையிற் சிக்கிய மான்போல
வளர்த்த கடா மார்பிற் பாய்ந்ததுபோல
வழுக்கு நிலத்திற் கிடைத்த ஊன்றுகோல்போல
வழங்காதானை வள்ளல் என்றாற்போல
வளர் பிறைபோல
வர வர மாமியார் கழுதைபோல
வடலி வளர்த்துக் கள்ளுக் குடித்ததுபோல
வாய்க்கொழுப்பு சீலையில் வடிந்ததுபோல
வாலறுந்த குரங்குபோல
வாய்த்தவிடும்போய் அடுப்பு நெருப்பும் அணைந்ததுபோல
வாழைப்பழத்தில் ஊசி ஏறியதுபோல
விழலுக்கிறைத்த நீர்போல
விளக்கிலே மொய்த்த விட்டில்போல
விளக்குமாற்றுக்குப் பட்டுக்குஞ்சம் கட்டியதுபோல
விளையும்பயிர் முளையிலே தெரிவதுபோல
வெண்கலக் கடையுள் யானை புகுந்ததுபோல
வெண்காயச் சருகுபோல
வெள்ளாடு குழை தின்றதுபோல
வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைவதுபோல
வெண்ணெய் திரண்டுவரும்போது தாழி உடைந்ததுபோல
வெந்த புண்ணில் வேல் பாய்ந்ததுபோல

வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைபோல
வெயில்முன் பனிபோல
வெள்ளம் பள்ளத்தை நாடுவதுபோல
வெறுவாய் மெல்லுபவனுக்கு அவல் கிடைத்ததுபோல
வேலியே பயிரை மேய்ந்தாற்போல
வேடர் கையில் அகப்பட்ட மான்போல
வைக்கோற் பட்டடை நாய்போல 372

## (இ)

அம்புபோல் விரைந்துசெல்லும்
அட்டைபோல உறிஞ்சுகின்ற
அறுகுபோல் வேரூன்றி
அரிச்சந்திரன்போல் வாய்மையுள்ள
அருந்ததிபோற் கற்பிற்சிறந்த
ஆகாயத்தைப்போல் விரிந்த
ஆல்போற் தழைத்த
ஆந்தைபோல் விழித்து
ஆலம்வித்துப்போற் சிறிய
ஆமைபோல் மந்தநடையாய்
இரும்புபோற் கடினமான
ஈட்டிபோற் குத்துகின்ற
உயிர்போல் அரிய
உருவும் நிழலும்போற் பிரியாத
ஊசிபோற் கூர்மையான
ஊமைபோற் பேசாத
ஊதாரிபோற் செலவு செய்கிற
எறும்புபோற் சுறுசுறுப்பான
எள்ளுப்போற் சிறிய
கடல்போல் { இரைகின்ற / ஆழ்ந்த / பரந்த
கல்லைப்போல் கடினமான
கம்பனைப்போற் கல்வியிற்சிறந்த
கத்திபோற் கூர்மையான
கரும்புபோல் இனிக்கின்ற
பஞ்சுபோல் { மென்மையான / பாரமற்ற

கண்மணிபோல் அருமையான
காற்றைப்போற் பரவுகின்ற
காட்டுத்தீபோல் பரவுகின்ற
காந்தம்போல் இழுக்கின்ற
குபேரனைப்போல் செல்வமுள்ள
குதிரைபோல் வேகமுள்ள
சங்குபோல் வெண்மையான
சந்தைபோற் சந்தடியான
சகுனிபோற் சூட்சி செய்கின்ற
சிங்கம்போல் ஆண்மையுள்ள
சூரியனைப்போற் பிரபையுள்ள
தருமனைப்போற் பொறுமையுள்ள
தாயைப்போல் அன்புள்ள
துலாக்கோல்போல் சமன்செய்கின்ற
தேனைப்போல் இனிமையான
நரிபோற் தந்திரமுள்ள
நளனைப்போற் சமையலிற்சிறந்த
நாயைப்போல் நன்றியுள்ள
நாரதரைப்போல் கோள் மூட்டுகின்ற
பன்றிபோல் அசுசியான
பனிக்கட்டிபோல் வெண்மையான
பசுவைப்போற் சாதுவான
பளிங்குபோற் களங்கமற்ற
மலைபோற் திண்மையான
மான்போல் வெருட்சியுள்ள

| | |
|---|---|
| பவளம்போற் சிவந்த | மின்னலைப்போல் { மறைகின்ற / ஒளியுள்ள |
| பால்போல் { வெண்மையான / இனிமையான | மீன்சினைபோல் நுண்ணிய |
| புழுப்போற் துடிக்கின்ற | முள்ளுப்போல் குத்துகின்ற |
| புலிபோற் பாய்கின்ற | யானைபோல் { பலமுள்ள / தோற்றமுள்ள |
| பூனைபோற் பதுங்குகின்ற | |
| பூப்போல் மென்மையான | விசயனைப்போல் வில்லிற் சிறந்த |
| பூமிபோற் பொறையுள்ள | வீமனைப்போல் புயபலமுள்ள |

(ஈ)

| | |
|---|---|
| கயல்போன்ற கண் | பிறை போன்ற நெற்றி |
| கல்லுப்போன்ற நெஞ்சு | மதி போன்ற முகம் |
| காந்தம்போன்ற கை | மலை போன்ற தோள் (ஆண்) |
| குயிலோசை போன்ற குரல் | மலர் போன்ற கரம் |
| குவளை போன்ற கண் | மின்னல் போன்ற இடை |
| கெண்டை போன்ற விழி | மாரி போன்ற கை |
| கொவ்வைக்கனி போன்ற இதழ் | மாந்தளிர் போன்ற மேனி |
| தாமரை போன்ற முகம் | முத்துப் போன்ற பல் |
| தாமரை போன்ற பாதம் | முல்லைப் பூப்போன்ற பல் |
| துடிபோன்ற இடை | முருக்கம் பூப்போன்ற இதழ் |
| தேன் போன்ற மொழி | மூங்கில் போன்ற தோள் (பெண்) |
| பவளம் போன்ற இதழ் | மேகம் போன்ற கூந்தல் |
| பளிங்கு போன்ற நெஞ்சு | வாள் போன்ற கண் |
| பாவை போன்ற பெண் | வேல் போன்ற கண் |

## பயிற்சி 21

1. மேல்வரும் உவமைச் சொற்றொடர்களை வைத்து வசனங்கள் அமைக்குக :

   (அ) மலையாடு மஞ்சுபோல
   
   (ஆ) இலவுகாத்த கிளிபோல
   
   (இ) காட்டுத் தீபோல் பரவுகின்ற
   
   (ஈ) மூங்கில் போன்ற தோள்

2. மேல்வரும் சொற்றொடர்களிற் கிறிட்ட இடங்களுக்கு ஏற்ற சொற்களை வைத்து எழுதுக :

(1) முள்ளுப் போல்——
(2) நரி போல்——
(3) முல்லை போன்ற——

3. மேல் வருவனவற்றிற்கு உவமைகள் தருக:
மேனி, மென்மை, நன்றி, ஒற்றுமை

4. துன்பத்தின்மேற் றுன்பம் வருதல், முடியாத கருமத்துக்கு முயலுதல், நியதியின்றி மாறிமாறி வருதல் என்பவற்றை உவமைகள் மூலம் விளக்குக.

---

## 5 மரபுச் சொற்றொடர்

விளக்கம்: சொற்றொடர்கள் சொல்லுக்குச் சொல்லு உரிய பொருளைக் கொடுப்பனவாக இருந்தாலும் அவைகளுட் சில, வழக்காற்றினாலே அவ்வவற்றிற்குரிய ஆதியர்த்தத்தினின்று விலகி வேறு சிறப்பான பொருளில் வழங்கப்பட்டு வருவது மரபாயிருக்கின்றது. உதாரணமாக: 'நடக்க முடியாதவனுக்கு நடக்கவும், விழுந்தவனுக்கு எழும்பவும் கைகொடுத்து உதவி செய்வர்' என்பதில் கைகொடுத்தல் என்னுஞ் சொற்றொடர் இவ் ஆதி அர்த்தத்தினின்று விலகி ஒருவர் செய்யும் எவ்வித உதவியையும் குறிப்பதற்குக் "கைகொடுத்தல்" என்று வழங்கி வருதல் மரபாயிற்று. இத்தகைய பொருட்செறிவு மிக்க மரபுச் சொற்றொடர்கள் தமிழ்மொழியில் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. அவைகளுட் சில மேலே தரப்படுகின்றன.

(எடுத்துக்காட்டு)

| | |
|---|---|
| அடுக்குப்பண்ணல் | –ஆயத்தம் செய்தல் |
| அடுக்குக்குலைதல் | –நிலைகெடுதல் |
| அச்சாணி | –இன்றியமையாதது |
| அழுங்குப்பிடி | –நெகிழாது பிடித்தபிடி |
| அலைகட்டிப்பேசுதல் | –பிழை தோற்றாது மழுப்புதல் |
| அண்டப்புழுகன் | –பெரும் புழுகன் |
| அண்டப்புரட்டன் | –பெரும் பொய்யன் |
| அமளிபண்ணல் | –கலகஞ் செய்தல் |
| அரைமனிதன் | –மதிப்புக் குறைந்தவன் |
| அலைக்கழித்தல் | –உலையச்செய்தல், வருத்துதல்... |
| அள்ளிக்கொட்டுதல் | –மிகச்சம்பாதித்தல், வருவாய்மிகுதல் |

| | |
|---|---|
| அள்ளியிறைத்தல்<br>அள்ளி வீசுதல் | } அளவுக்கு மிஞ்சிச் செலவு செய்தல் |
| அள்ளுகொள்ளை | –மிகமலிவு |
| ஆறப்போடுதல் | –பின்போடுதல், காலந்தாழ்த்தல் |
| ஆலாய்ப் பறத்தல் | –திண்டாடுதல், தத்தளித்தல் |
| ஆழம் பார்த்தல் | –ஒருவனது அறிவு, செல்வம் முதலியவற்றை அளவிடுதல் |
| உச்சிகுளிர்தல் | –உவகை கொள்ளுதல் |
| ஓட்டைக்கை | –வீண் செலவாளி |
| கசக்கிப்பிழிதல் | –விரும்பாத காரியத்தை செய்வித்தல் |
| கசக்கிமணத்தல் | –ஓரளவு விரும்பியகாரியத்தை மேலும் வருத்திச் செய்வித்தல் |
| கண்திறத்தல் | –அறிவுண்டாதல் ... ... 20 |
| கண்மூடல் | –இறத்தல் [றல் |
| கங்கணம் கட்டுதல் | –ஒருகாரியத்தை முடிக்க முனைந்துநிற் |
| கசகரணம் போடுதல் | –விடாப்பிடியாய்நிற்றல், பெருமுயற்சி செய்தல் |
| கடன் கழித்தல் | –மனமின்றிச் செய்தல் |
| கட்டுப்பெட்டி | –பழைய வழக்கங்களைவிட்டுப் புதிய வழக்கங்களைக் கொள்ளாத கருநாடக மனிதன் |
| கண்ணாயிருத்தல் | –மிகக் கருத்தாயிருத்தல் |
| கண்ணெடுத்துப்பார்த்தல் | –அருள் செய்தல் |
| கண்மூடித்தனம் | –மடைத்தனம் |
| கதைகட்டுதல் | –பொய்ச்செய்தி கிளப்புதல் ... 30 |
| கதைவளர்த்தல் | –பேச்சை விரித்தல் |
| கம்பிநீட்டுதல் | –காணாமல் ஓடிவிடுதல், மறைதல் |
| கரிபூசுதல் | –மானம் குலைத்தல் |
| கரையேறல் | –ஈடேறுதல் |
| கருவறுத்தல் | –நிர்மூலமாக்குதல் |
| கரைகண்டவன் | –முற்றாய் அறிந்தவன் |
| கரைத்துக்குடித்தல் | –முற்றறக் கற்றல் |
| கரைப்படுதல் | –அடையவேண்டிய நிலையை அடைதல் |
| கழுத்தறுத்தல் | –பெருந்துன்பத்துக்குள்ளாக்குதல் 40 |
| கல்லுப்போடுதல் | –காரியத்தைக் கெடுத்தல் |
| கண்மறைவு | –பிறர்பார்வைக்கு அகப்படாமை |
| கயிறுதிரித்தல் | –கற்பித்துச் சொல்லுதல் |
| கண்சாடையாய் | –அறிந்தும் அறியாததுபோல |

| | |
|---|---|
| கண்போடல்<br>கண்ணெறிதல்<br>கண்வைத்தல் | இச்சையுடன் ஒரு பொருளின் மேல் ஆசைவைத்தல் |
| கண்பூத்தல் | –அதிக காலம் காத்திருத்தல் |
| கண்வளர்தல் | –நித்திரைசெய்தல் |
| கண்விழிப்பு | –கருத்தாயிருத்தல் ... ... 50 |
| கள்ளேடு விடுதல் | –இடையில் நழுவவிடுதல் |
| காலமடைதல்<br>காலமாதல்<br>காலஞ்செல்லுதல் | இறத்தல் |
| காலந்தள்ளுதல் | –சீவித்தல் |
| காலில் விழுதல் | –மன்னிப்புக்கேட்டல், தஞ்சமடைதல் |
| காலூன்றுதல் | –நிலையுறுதல் |
| கால்கழுவுதல் | –மலங்கழித்தல் |
| காது குத்துதல் | –வஞ்சித்தல் |
| காட்டிக் கொடுத்தல் | –குற்றமேற்படச் செய்தல் ... 60 |
| காற்ருய்ப் பறத்தல் | –விரைவாகச் செல்லுதல் |
| கிணற்றுத் தவளை | –தனக்குத் தெரிந்ததுதான் பெரிதென்றிருத்தல் |
| கிள்ளுக்கீரை | –அற்பம், மிக எளியது |
| கிள்ளித் தெளித்தல் | –கொஞ்சம் கொடுத்தல் |
| கிளப்பிவிடுதல்<br>கிள்ளிவிடுதல் | தூண்டிவிடுதல், ஊக்குவித்தல் |
| குட்டிச் சுவராக்குதல் | –அழித்துக் குறைத்தல் |
| குரங்குப்பிடி | –பிடித்தபிடி விடாமை |
| குட்டிக்கரணமடித்தல் | –பெருமுயற்சி செய்தல் |
| குதிரைக்கொம்பு | –கிடைத்தற்கரியது ... ... 70 |
| குடிமூழ்குதல் | –முற்றுமழிதல் |
| குத்துமதிப்பு | –உத்தேசம் |
| குருட்டுப்படிப்பு | –பொருளறியாது படித்தல் |
| குழையடித்தல் | –வசப்படுத்தல் |
| கூலிக்குமாரடித்தல் | –தனதுவிருப்பமின்றிப் பிறருக்காக உழைத்தல் |
| கைதூக்குதல் | –துன்பத்திலிருந்து காப்பாற்றுதல் |
| கையைவிரித்தல் | –மறுத்தல் |
| கையிறுக்கம் | –உலோபத்தன்மை |
| கைநீட்டுதல் | –அடிக்கக் கையோங்குதல், இரத்தல் |
| கைகடத்தல் | –தவறிப்போதல் |

| | |
|---|---|
| கைகடன் | –ஈடு உறுதியில்லாத கடன் |
| கைகண்டது | –அனுபவபூர்வமான சித்தி |
| கைகலத்தல் | –சண்டை பிடித்தல் |
| கைகழுவுதல் | –பொறுப்பை நீக்கிக் கொள்ளுதல் |
| கைகுவிரல் | –திருப்தியடைதல் |
| கைகூடல் | –சித்தியாதல் |
| கைகொடுத்தல் | –உதவிசெய்தல் |
| கைக்காரன் | –சமர்த்தன், பணக்காரன் |
| கைச்சரக்கு | –கற்பித்துக் கூறும் வார்த்தை திறமை |
| கைதவறல் | –இறத்தல், தப்பிப்போதல் ... 90 |
| கைதொடல்<br>கையிடல் | –தொடங்குதல் |
| கைபரிமாறுதல் | –அடிபிடிசண்டையிடுதல் |
| கைபிசைதல் | –செயலறியாது திகைத்தல் |
| கைப்பிடியாய்ப்பிடித்தல் | –விடாது பிடித்தல் |
| கைமேலே | –உடனே |
| கைமோசம் | –எதிர்பாராது நேர்ந்தகேடு |
| கைமோசம்போதல் | –நம்பிக் கெடுதல் |
| கையடக்கம் | –சேமித்த பொருள் |
| கையாடுதல் | –நம்பிக்கைக்கு மாறுகப் பிறர் பொருளை அபகரித்தல் 100 |
| கையாலாகாதவன் | –எந்த வேலையும் செய்யத் திறமையற்றவன் |
| கையும்கணக்கும் | –வரவும் செலவும் |
| கையெடுத்தல் | –கும்பிடுதல் |
| கைவரிசை | –திறமை |
| கைவிடுதல் | –தள்ளிவிடுதல், நீக்கிவிடுதல் |
| கைவைத்தல் | –ஈடுபடுதல், அடித்தல் |
| கையிற் கடித்தல் | –எதிர்பார்த்ததிற்கு மேற் செலவாதல் |
| கைக்குதவல் | –சமயத்தில் உதவுதல் |
| கைதட்டிவிடுதல் | –நீக்கிவிடுதல், கடத்திவிடுதல் |
| கையைப்பார்த்தல் | –பிறர் உதவியை நோக்கியிருத்தல் 110 |
| கைபோதல் | –முற்றும் வல்லவனுதல் |
| கைமாற்று | –கைகடன் |
| கையமர்த்துதல் | –அமைந்திருக்கக் குறிப்புக்காட்டல் |
| கையளித்தல் | –ஒப்படைத்தல் |
| கையாறுதல் | –உதவிகெடல், செயலறல் |
| கையாளுதல் | –எடுத்து வழங்குதல் |
| கையாள் | –குற்றேவல் செய்பவன் |

கையிளைத்தல் –செல்வநிலை குன்றல்
கொடுக்குக்கட்டல் –ஊக்கமாயிருத்தல், விடாது செய்தல்
கொடுத்துவைத்தவன் –முன்னர் செய்த நன்மையாற் பயன் பெறுபவன் 120

கொட்டமடித்தல் –மனம்போனபடி குறும்பு செய்தல்
கொள்ளிசொருகுதல் –தீமை செய்தல்
கோடரிக்காம்பு –தன்குலத்தைத் தானே அழிப்பவன்
கோமாளிக்கூத்து –நகைப்பு விளைவிக்கும் செயல்
சக்கரம் சுற்றுதல் –பெரிதும் துன்புறுத்தல்
சக்கைவாங்குதல் / சக்கையாய்ப்பிழிதல் –அதிக வேலை செய்வித்தல்
சந்தியில் இழுத்தல் –குற்றத்தைநாலுபேர் அறியச்செய்தல்
சந்தியில் நிற்றல் –ஆதரிப்பாரின்றியிருத்தல்
சரடு விடுதல் –தந்திரமாகப் பேசி பிறர் கருத்தை அறிய முயலுதல் 130

சரிக்கட்டுதல் –ஒழுங்குபடுத்துதல், முடிவாக்குதல்
சரிக்குச்சரி –பழிக்குப்பழி, சமனாக
சாப்பறையடித்தல் / சாவுமணியடித்தல் –முடிவு கட்டுதல், முற்றுப்புள்ளி வைத்தல்
சிறப்புச் செய்தல் –ஒருவரை வரவேற்று உபசரித்தல்
சிட்டாய்ப் பறத்தல் –விரைவாய்ச் செல்லுதல்
சீட்டுக் கிழித்தல் –வேலையிலிருந்து விலகல்
சுருக்கிப்பிடித்தல் –செலவு முதலியவற்றைக் குறைத்தல்
சுருக்குப்போடுதல் –கொல்லுதல், தீங்கு விளைவித்தல்
சுருக்குப்போட்டுக் கொள்ளுதல் –தற்கொலை செய்தல் 140

சுருளவாட்டுதல் –வருந்த வேலைசெய்வித்தல்
சுற்றிச் சுழற்றுதல் –விளக்கமின்றி வளர்த்துப் பேசுதல்
சூடுபோடுதல் –மனநோகச் செய்தல்
தலையெடுத்தல் –கீழ்நிலையிலிருந்து மேனிலையடைதல்
தலையெழுத்து –விதி
தலையுடைத்தல் –பெரும் பிரயாசமெடுத்தல்
தலையுடைப்பு –உபத்திரவம் மிக்க வேலை
தலைகொடுத்தல் –பிறரது ஆபத்துக் காலத்தில் தனது உயிர் பொருள்களின் கேடு நோக்காது உதவி செய்தல்

தலையைத் தடவுதல் –ஏமாற்றிப் பொருள் பெறுதல்
தலைகவிழ்தல் –வெட்கமடைதல்

தலைகீழாக நிற்றல் –முறைதவருக நிற்றல், மிகச்செருக்குக் கொள்ளுதல்

தலைகொண்டு புரவியாடல் –கெட்டித்தனங் காட்டிப் பின்னர் வருந்துதல்

தலைக்கொழுப்பு
தலைப்பாரம்
தலைத்திமிர் } ஆங்காரம்

தலைமறைதல் –பிறர் பார்வைக்கு அகப்படாமல் ஒழித்துக் கொள்ளுதல்

தலைமுழுகுதல் –முற்ருக நட்டப்படுதல்

தலைமேற்கொள்ளல் –பயபக்தியாய் ஏற்றுக்கொள்ளுதல், பொறுப்பேற்றல்

தலைகாட்டுதல் –பலருமறிய வெளித்தோன்றுதல்

தலைதப்புறவிழுதல் –எடுத்தகாரியம் கைகூடாமற் துன்பப் படுதல் ... ... 160

தலைதெறிக்க –விரைவாக

தட்டிக்கழித்தல் –சாக்குப்போக்குச் சொல்லுதல்

தட்டிக்கொடுத்தல் –உற்சாகப்படுத்துதல்

தட்டிச்சொல்லல் –மறுத்துரைத்தல்

தட்டிப்பார்த்தல் –மறையறிய முயலுதல்

தட்டுக்கெடுதல் –வறுமையால் நிலைகெடுதல்

தட்டுண்டுபோதல் –தவறிப்போதல்

தட்டுமாறி –ஏமாற்றுபவன்

தலைசாய்த்தல் –வணங்குதல்

தரிப்பறிதல் –மனநிலை அறிதல் ... ... 170

தாரைவார்த்தல் –பொருளைத் திரும்பிப்பெருது கொடுத்தல், தத்தம்பண்ணுதல்

தாளம்போடுதல் –பிறரை மகிழ்விக்க அவர் கருத்துப்படி நடத்தல்

தாழ்ந்துகொடுத்தல் –இணங்கிப்போதல்

தாளித்துக்கொட்டுதல் –புனைந்து சொல்லுதல்

திறந்துபேசுதல் –மனம்விட்டுச் சொல்லுதல், மனதில் உள்ள எல்லாவற்றையும் மறைக்காமற் சொல்லுதல்

திருமுகம் அனுப்புதல் –ஓலை (கடிதம்) அனுப்புதல்

திரிசங்குசுவர்க்கம் –இடைநின்று வருந்தும் நிலைமை

துறட்டி போடுதல் –தன்வயப்படுத்த முயலுதல்

துண்டு விழுதல் –நட்டமாதல்

தூக்கிவாரிப்போடுதல் –திடுக்கிடும்படி செய்தல் ... 180

| | |
|---|---|
| தொய்யப்போடுதல் | –காலந்தாழ்த்துதல் |
| தோப்புக்கரணம் போடுதல் | –சொன்னபடியெல்லாம் செய்தல் |
| நடமாடுதல் | –ஊடாடுதல் |
| நடைப்பிணம் | –பயனற்றவன் |
| நடுத்தெருவில்விடல் | –ஆதாரமின்றிக் கைவிட்டுப்போதல் |
| நட்டாற்றில்விடல் | –ஆபத்துவேளையிற் கைவிடுதல் |
| நாக்குத்தெறிக்கப் பேசுதல் | –பெரியோரை நிந்தித்துப் பேசுதல் |
| நாக்குநீளுதல் | –அளவுகடந்து பேசுதல், துடுக்காகப் பேசுதல் |
| நாக்குப்புரளுதல் | –சொன்னசொற் தவறுதல் |
| நாக்குவளைத்தல் | –இகழ்தல் ... ... 190 |
| நிறுத்துப்பார்த்தல் | –ஒப்பிட்டுப் பார்த்தல் |
| நின்றாற்போல் | –திடீரென்று |
| நின்றுபோதல் | –முடிவடைதல் |
| நெஞ்சுபுண்ணுதல் / நெஞ்சுநோதல் | மனம் வருந்துதல் |
| நெல்லிக்காய்மூடை | –ஒற்றுமையீனம் |
| நெருப்பெடுத்தல் | –கோபித்துப் பேசுதல் |
| பச்சையாய்ப்பேசுதல் | –மறைத்துக் கூறவேண்டியதை வெளிப்படையாகக் கூறுதல் |
| பஞ்சங்கொட்டுதல் | –ஓயாமல் ஏழ்மைத்தனத்தைச் சொல்லுதல் |
| பஞ்சாய்ப்பறத்தல் | –வேகமாய் நடத்தல், வறுமையால் தவித்தல் ... ... 200 |
| படியளத்தல் | –சீவியத்துக்கு அளவாகப் பொருள் கொடுத்தல் |
| பட்டுத்தெளிதல் | –அனுபவத்தால் அறிதல் |
| பட்டோலைபோடல் | –அட்டவணை தயாரித்தல் |
| பட்டிமுறித்தல் | –கட்டுக்கடந்து போதல் |
| பண்பட்டவன் | –உலக அனுபவமுள்ளவன் |
| பதம்பார்த்தல் | –நிலைமை அறிதல் |
| பம்பரமாட்டுதல் | –அலைக்கழித்தல் |
| பரதேசித் தபால் | –ஊர்வதந்தி |
| பழிகிடத்தல் | –யாதாவதொன்றைப் பெறுவதற்கு ஒருவனது வாசலிற் பட்டினி கிடத்தல் |
| பழிக்குப்பழி | –தீமைக்குத் தீமைசெய்தல் 210 |
| பகற்கனு | –செய்துமுடிக்க இயலாததைச் செய்ய எண்ணுதல் |

| | |
|---|---|
| பகீரதப்பிரயத்தனம் | –விடாமுயற்சி |
| பலாக்காய்ப்பால் | –வெறுத்துநீக்கினும் விட்டுநீங்காதது |
| பல்லவி பாடுதல் | –திரும்பத்திரும்பக் கூறுதல் |
| பல்லைக்கடித்திருத்தல் | –பொறுத்திருத்தல் |
| பல்லைக்காட்டுதல் | –வேண்டுதல், இகழ்தல் |
| பாச்சல்காட்டுதல் | –ஏய்த்தல் |
| பால்பொழிதல் | –செழிப்பாயிருத்தல் |
| பிடிகொடுத்தல் | –அகப்பட்டுக்கொள்ளல் |
| பிடித்துக்கொள்ளல் | –விரும்புதல், சுளுக்குதல் ... 220 |
| பிட்டுக்காட்டுதல் | –மறைபொருளை வெளிப்படக் கூறுதல் |
| பித்தலாட்டம் | –மதியற்றசெயல் |
| புண்படுத்தல் | –மனம்நோகச்செய்தல் |
| புரட்டியடித்தல் | –உண்மையை மறுத்தல் |
| புளிப்புத்தட்டுதல் | –வெறுப்புண்டாதல் |
| புளிப்பிடித்தல் | –செருக்குண்டாதல் |
| புகைந்தல் | –எரிச்சற்படுதல், செய்தி வெளிப்படத் தொடங்குதல் |
| புறங்கொடுத்தல் | –தோற்றோடல் |
| புறங்காணல் | –வெற்றிபெறுதல் |
| புறந்தருதல் | –காப்பாற்றுதல் ... 230 |
| பூசிமெழுகுதல் | –குற்றத்தை மறைக்கப்பார்த்தல் |
| பூச்சிகாட்டுதல் | –அச்சம் காட்டுதல் |
| பேசாதபேச்சு | –இழிவான வார்த்தை |
| பொட்டுக்கேடு | –குறைவுபாடு |
| போட்டுவைத்தல் | –சேமித்தல் |
| மட்டந்தட்டல் | –செருக்கு அடக்குதல் |
| மண்டையுடைத்தல் | –அதிகமாக யோசித்தல் |
| மட்டையடித்தல் | –பயனின்றி முயற்சித்தல் |
| மனப்பால்குடித்தல் | –கிடைக்க முடியாதவற்றைக் கிடைக்கும் என்று எண்ணி மகிழ்தல் |
| மனக்கோட்டைகட்டுதல் | –வீணெண்ணமிடுதல் ... 240 |
| மற்கடமுட்டி | –பிடித்தபிடிவிடாமை |
| முகங்கவிழ்தல் | –அவமானப்படுதல் |
| முகங்கருகல் | –துக்கப்படுதல் |
| முகம்முறிதல் | –மனம்நோதல் |
| முன்னுக்குவருதல் | –உயர்ச்சியடைதல் |
| முயற்கொம்பு | –இல்லாத பொருள் |
| முடத்தெங்கு | –உடையவனுக்குப் பயன்கொடாதது |

| | |
|---|---|
| முகங்கொடுத்தல் | –இன்முகங் காட்டுதல் |
| முந்திரிகைக்கொட்டை | –அனுவசியமாக எதிலும் தலையிடுகை |
| முத்துமழை பெய்தல் | –செல்வம் பெருகுதல் [ஞேட்டம் |
| முகந்தாட்சணியம் | –ஒருவன் முன்னிலையிற் காட்டும் கண் |
| முகத்திலடித்தல் | –நேரே நிந்தித்தல் |
| மூச்சுக்காட்டுதல் | –சத்தமிடுதல் |
| மூச்சுப்பிடித்தல் | –தீவிரமாக முயலுதல் |
| மூடிவைத்தல் | –மறைவாக்குதல் |
| மெய்மறத்தல் | –தன்னினைவு கெடுதல் |
| மேலாட்டம் | –பருமட்டம் |
| மொட்டையடித்தல் | –முற்ருய் அழித்தல் |
| வம்பளத்தல் | –வீண்கதை பேசுதல் |
| வயிற்றிலடித்தல் | –சீவனத்தைக் கெடுத்தல் ... 260 |
| வலைவீசுதல் | –வசப்படுத்த முயலுதல் |
| வயிறுகழுவுதல் / வயிறுவளர்த்தல் | –அரும்பாடுபட்டுஉணவுதேடி வாழ்தல் |
| வயிறுகாய்தல் | –பட்டினியாயிருத்தல் |
| வயிற்றெரிச்சல் | –பொருமை, மனவருத்தம் |
| வயிற்றைக்கட்டி | –உண்ணது மிச்சம் பிடித்து |
| வாலாட்டுதல் | –வீண்பெருமை காட்டுதல் |
| வாயில்மண்போடுதல் | –கேடு விளைத்தல் |
| வாயில்மண்விழுதல் | –முற்றும் கெடுதல் |
| வாயடித்தல் | –வாய்ப்பேச்சால் மருட்டி வெல்லுதல், அதிகம் பேசுதல் ... 270 |
| வாயடைத்தல் | –பேச நாவெழாதிருத்தல் |
| வாயாட்டுதல் | –வாசாலகமாகப்பேசுதல், உண்ணுதல் |
| வாயாடி | –வாய்ச்சாதுரியமாகப் பேசுபவன் |
| வாயைக்கட்டுதல் | –சிக்கனமாக உண்ணுதல், இலஞ்சங் கொடுத்து குற்றத்தை மறைத்தல் |
| வாரியிறைத்தல் | –வீணுக அதிகம் செலவு செய்தல் |
| வால்முளைத்தல் | –வயதுக்கு மிஞ்சிய செயல் புரிதல் |
| வால்முறுக்குதல் | –தூண்டிவிடுதல் |
| வாயூறுதல் | –ஆசைப்படுதல் |
| வாய்க்கொழுப்பு | –அகங்காரம் |
| வாய்குளிரப்பேசுதல் | –பயனின்றி இனிமையாகப் பேசுதல் |
| விட்டுக்கொடுத்தல் | –இணக்கம் காட்டுதல் |
| விழலுக்கிறைத்தல் | –வீண்பாடுபடுதல் |
| வெளுத்துவாங்குதல் | –மிகத்திறமையாகச் செய்தல் |
| வேலைசாய்த்தல் | –கொலை செய்தல் |

## பயிற்சி 23

1. மேல்வருஞ் சொற்றொடர்கள் சாதாரண வழக்கிலும் மரபிலும் வர வாக்கியங்கள் அமைக்குக :

   ஒற்றைக்காலில் நிற்றல், பம்பரமாட்டுதல், தாளம் போடுதல், வயிற்றிலடித்தல், கிணற்றுத்தவளை.

2. ஓயாமல் ஏழ்மைத்தனத்தைச் சொல்லிக்கொண்டு திரிதல், தன் வருத்தம்பாராது பிறர்காரியத்தைத் தானேற்றுநின்று உதவிசெய்தல், பிறர்பார்வைக்கு அகப்படாது ஒளித்துக் கொள்ளுதல் என்பவற்றின் பொருள்களை விளக்கும் மரபுச் சொற்றொடர்கள் அமைய வாக்கியங்கள் எழுதுக.

---

## 6. முதுமொழிகள்

**விளக்கம் :** அறிவாற்றல் மிக்க நமது முன்னோர் தமது அனுபவ வாயிலாகக் கண்டறிந்த உண்மைகளை அழகுற அமைத்துக் கூறியுள்ளார்கள். அவர்கள் கூறிய பொருட்செறிவும் பழமையும் பொருந்திய அம்மொழிகள் பழமொழிகள் என்றும் முதுமொழிகள் என்றும் கூறப்படுகின்றன. எடுத்துக்கொண்ட விடயத்தை வலியுறுத்தி அழகுறக் கூறுவதற்கு அப்பழமொழிகள் பெரிதும் உதவியாக இருக்கும். அத்தகைய பழமொழிகள் தமிழ்மொழியில் ஆயிரக்கணக்காக இருக்கின்றன. அவற்றுட் சில மேலே தரப்படுகின்றன.

(எடுத்துக்காட்டு)

(அ)

அகத்தி ஆயிரங்காய் காய்த்தாலும் புறத்தியே புறத்தி
அகத்தினழகு முகத்திற் தெரியும்
அகப்பை பிடிக்கிறவன் தன்னுளானால் அடிப்பந்தியென்ன நுனிப் பந்தியென்ன ?
அசைந்து தின்கிறது யானை, அசையாமற் தின்கிறது வீடு
அச்சாணியில்லாத் தேர் முச்சாணும் ஓடாது
அடாதுசெய்தவன் படாதுபடுவான்
அடியைப்போல் அண்ணன் தம்பி உதவார்
அடிநாக்கில் நஞ்சும் நுனிநாக்கில் அமுதமும்
அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
அடியாதமாடு படியாது ... ... ... 10

அந்திமழை அழுதாலும்விடாது
அரசன் அன்றுகொல்லும் தெய்வம் நின்று கொல்லும்
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
அரைக்காசுக்கு அழிந்த கற்பு ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது
அவப்பொழுதிலும் தவப்பொழுது நன்று
அவளுக்கு இவள் எழுந்திருந்து உண்பாள்
அவனின்றி அணுவும் அசையாது
அரசனை நம்பிப் புருடனைக் கைவிடலாமா ?
அழகுக்கு அணியும் ஆபரணம் ஆபத்துக்கு உதவும்
அழுதபிள்ளை பால் குடிக்கும் ... ...
அழுதும் பிள்ளை அவளே பெறவேண்டும்
அழையாத விருந்துக்கு நுழையாதே
அழகேசனானாலும் அளவறிந்து செலவு செய்யவேண்டும்
அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு
அறக்கூர் முழுமொட்டை
அறநனைந்தவனுக்குக் கூதலென்ன, குளிரென்ன ?
அற்பனுக்குப் பவுள்சுவந்தால் அர்த்த இராத்திரியிற் குடைபிடிப்பான்
அற்ப ஆசை கோடி தரித்திரம்
அன்று எழுதினவன் அழித்து எழுதுவானா ? ...
அன்பான சிநேகிதனை ஆபத்திலறியலாம்
ஆக்கப் பொறுத்தவன் ஆறப் பொறுக்கமாட்டானா ?
ஆங்காலம் ஆகும் போங்காலம் போகும்
ஆசை வெட்கமறியாது
ஆடமாட்டாதவள் அரங்கு பிழையென்றாளாம்
ஆடிக் கறக்கிற மாட்டை ஆடிக்கறக்கவேண்டும், பாடிக்கறக்கிற மாட்டைப் பாடிக் கறக்கவேண்டும்.
ஆசை அறுபதுநாள் மோகம் முப்பதுநாள்
ஆடு நனைகிறதென்று ஓநாய் விழுந்து விழுந்து அழுததாம்
ஆபத்துக்குப் பாவம் இல்லை
ஆத்திரக்காரனுக்குப் புத்தி மத்திபம் ... ...
ஆயிரம் பே(வே)ரைக் கொன்றவன் அரைவைத்தியன்
ஆய்ந்தோய்ந்து பாராதான் கருமம் தான்சாந்துணையும் துயரம் தரும்
ஆலும் வேலும் பல்லுக்குறுதி நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூச் சருக்கரை
ஆழமறியாது காலையிடாதே
ஆறிலுஞ்சாவு நூறிலுஞ் சாவு
ஆறுகடக்கிறவரையில் அண்ணன் தம்பி, ஆறுகடந்தபின் நீ யார் ? நான் யார் ?

ஆறுபோவதே போக்கு அரசன் சொல்வதே தீர்ப்பு
ஆனை கறுத்தால் ஆயிரம் பொன்
ஆனைக்கொருகாலம் பூனைக்கொருகாலம் ... ... 50
ஆனைக்கும் அடி சறுக்கும்
ஆனைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே
ஆழ அமுக்கினும் நாழி முகவாது நானாழி
இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
இடங்கொடுத்தால் மடம் பிடுங்குவான்
இட்ட உறவு எட்டு நாளைக்கு நக்கின உறவு நாலு நாளைக்கு
இட்டுக் கெட்டார் எங்குமில்லை
இரவற் புடைவையில் இது நல்ல கொய்யகம்
இரவற் சீலையை நம்பி இடுப்பிற் கந்தையை எறியாதே
இருந்தால் மூதேவி நடந்தாற் சீதேவி ... ... 60
இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்தகையும் சும்மா இரா
இல்லாது பிறவாது அள்ளாது குறையாது
இளங்கன்று பயமறியாது
இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
இறைத்த கிணறே ஊறும் இறையாத கேணி நாறும்
இன்றைக்கு இலையறுத்தவன் நாளைக்குக் குலையறுப்பான்
ஈக்குவிடம் தலையில் தேளுக்குவிடம் கொடுக்கில்
ஈட்டி எட்டுமட்டும் பாயும், பணம் பாதாளம் மட்டும் பாயும்
உடையவன் பாராவேலை ஒருமுழம் கட்டை
உண்ணுச் சொத்து மண்ணுய்ப்போகும் ... ... 70
உப்பிட்டவரை உள்ளளவும் நினை
உண்மை சொல்லிக் கெட்டவரில்லை
உப்பின் அருமை உப்புச் சமைந்தாற் தெரியும், அப்பன் அருமை
அப்பன் மாண்டாற் தெரியும்
உலக்கை தேய்ந்து உளிப்பிடியாயிற்று
உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா ?
உப்பிருந்த பாண்டமும் உபாயம் இருந்த நெஞ்சமும் தட்டியுடை
யாமற் தானேயுடையும்
உருட்டும் புரட்டும் சிரட்டையும் கையும்
உழுகிற மாடானல் உள்ளூரில் விலைப்படாதா ?
உளவில்லாமற் களவில்லை
உப்பில்லாப் பண்டம் குப்பையிலே ... ... 80
போகாமற் கெட்டது உறவு கேட்காமற் கெட்டது கடன்
உறியில் வெண்ணெயிருக்க ஊரெல்லாம் நெய்க்கு அலைவானேன் ?
ஊசிபோகிற இடம் பார்ப்பார் உலக்கைபோகிற இடம் பாரார்

ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
எச்சிற்கையாற் காக்கை ஓட்டாதவன் பிச்சை கொடுப்பானு ?
எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு
எட்டாப்பழத்துக்குக் கொட்டாவி விட்டென்ன ?
எட்டி பழுத்தென்ன ஈயாதார் வாழ்ந்தென்ன ?
எதார்த்தவாதி வெகுசனவிரோதி
எத்தால் வாழலாம் ஒத்தால் வாழலாம் ... ... ... 90
எய்தவனிருக்க அம்பை நோவானேன் ?
எரிகிறவீட்டிற் பிடுங்கினது இலாபம்
எருமை வாங்குமுன்னே நெய்விலை கூறுதே
எருதுநோய் காக்கைக்குத் தெரியுமா ?
எலிக்குத் திண்டாட்டம் பூனைக்குக் கொண்டாட்டம்
எலிவளையானாலும் தனிவளை வேண்டும்
எழுதியவன் ஏட்டைக்கெடுத்தான் படித்தவன் பாட்டைக்கெடுத்தான்
எழுதிவழங்கான் வாழ்க்கை கழுதைபுரண்டகளம்
எழுத்தறக்கற்றாலும் பெண்புத்தி பின்புத்தி
எளியாரை வலியார் கேட்டால் வலியாரைத் தெய்வம் கேட்கும்
எறும்பும் தன்கையால் எண்சாண்
ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவுமா ?
ஏவுகிறவனுக்கு வாய்ச்சொல் செய்கிறவனுக்குத் தலைச்சுமை
ஏழை அழுதகண்ணீர் கூரியவாளை ஒக்கும்
ஏறச்சொன்னால் எருதுக்குக் கோபம், இறங்கச்சொன்னால் முடவனுக்குக் கோபம்
ஐயர் வருமட்டும் அமாவாசை காத்திருக்குமா ?
ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?
ஐந்தும் மூன்றும் உண்டானால் அறியாப்பெண்ணும் கறிசமைப்பாள்
ஐந்து பெண்பெற்றால் அரசனும் ஆண்டியாவான்
ஐந்துபணத்துக்குக் குதிரையும்வேண்டும் ஆறுகடக்கப் பாயவும் வேண்டும்
ஒட்டைக்கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாழ்
ஒருகாசு பேணின் இருகாசு தேறும்
ஒருகுடம் பாலுக்கு ஒருதுளி பிரை
ஒருகை தட்டினால் ஓசையுண்டாகுமா ?
ஒருபானை சோற்றுக்கு ஒருசோறுபதம்
ஒருபொய்யை மறைக்க ஒன்பதுபொய்
ஒருவர் அறிந்தால் இரகசியம் இருவர் அறிந்தால் பரகசியம்
ஒற்றுமையில்லாக்குடி ஒருமிக்கக்கெடும்
ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு
ஓட்டைச் சட்டிபானையானாலும் கொளுக்கட்டை வெந்தாற்சரி 120
கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா ?

கடனில்லாக்கஞ்சி கால்வயிறு போதும் [தென்ன ?
கடற்கரைத்தாழங்காய் காட்டிலேகிடந்தென்ன மேட்டிலேகிடந்
கடன்வாங்கியும் பட்டினி, கல்யாணம் பண்ணியும் சன்னியாசி
கடுகு சிறிது என்றாலும் காரம் பெரிது
கணக்கன் கணக்கறிவான் தன்கணக்கைத் தானறியான்
கண் கண்டது கை செய்யும் [மா ?
கடைத்தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைக்கலா
கண்கெட்டபிறகு சூரிய வணக்கமா ?
கண்டது கற்கப் பண்டிதனாவான் ... ... 130
கண்டதே காட்சி கொண்டதே கோலம்
கதைக்குக் காலும் இல்லை தலையும் இல்லை
கந்தையானாலும் கசக்கிக்கட்டு, கூழானாலும் குளித்துக் குடி
கம்பன்வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்
கரணம் தப்பினல் மரணம்
கரும்புதின்னக் கூலிவேண்டுமா ?
கரும்பு உருசியென்று வேரோடு பிடுங்கலாமா ?
கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
கல்லடிச்சித்தன் போனவழி காடுமேடெல்லாம் தவிடுபொடி
கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமோ ? ... 140
கல்லைக்கண்டால் நாயைக்காணவில்லை, நாயைக்கண்டால் கல்லைக் காணவில்லை.
கரைப்பார் கரைத்தாற் கல்லும் கரையும்
கல்வியென்ற பயிருக்குக் கண்ணீர் என்ற மழைவேண்டும்
கழுதைக்குபதேசம் காதிலே ஓதினாலும் அபயக்குரலேயன்றி அங்கொன்றுமில்லை
கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை
கறந்தபால் முலைபுகுமா ? கடைந்த வெண்ணெய் மோர்புகுமா?
கரும்பு கட்டோடிருந்தால் எறும்பு தானேவரும்
காக்கைக்கும் தன்குஞ்சு பொன்குஞ்சு
காடு வாவாவென்கிறது வீடு போபோவென்கிறது
காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம் 150
காயாமரத்துக்குக் கல்லெறி விழுமா ?
காவோலை விழக் குருத்தோலை சிரிக்கும்
காலைச் சுற்றின பாம்பு கடியாமல் விடாது
காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன் ?
கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்
குங்குமஞ் சுமந்த கழுதை வாசனையறியுமா ? [வேலை
குயவனுக்குப் பலநாள்வேலை தண்டடிமிண்டனுக்கு ஒரு நாள்

குடல் காய்ந்தால் குதிரையும் வைக்கோல் தின்னும்
குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர் ... ...
குட்டுப்பட்டாலும் மோதிரக் கையாற் குட்டுப்பட வேண்டும்
குதிரையின் குணத்தையறிந்து கடவுள் கொம்பு கொடுக்கவில்லை
குப்புற வீழ்ந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை
குப்பையிற் கிடந்தாலும் குன்றிமணி மங்காது
கும்பி கூழுக்கழுகிறது கொண்டை பூவுக்கழுகிறது
குருடனுக்கு வேண்டியது கோல்
குரைக்கிற நாய் கடிக்காது
குலம் குப்பையிலே பணம் பந்தியிலே
குலவித்தை கற்றுப்பாதி கல்லாமற்பாதி
குறைகுடம் தளும்பும் நிறைகுடம் தளும்பாது ...
குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்
குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
குரங்குக்கும் தன்குட்டி பொன்குட்டி
கூழுக்குமாசை மீசைக்குமாசை
கூருக்கு எதிரே காலை நீட்டாதே
கெடுமதி கண்ணுக்குத் தோன்றாது
கெடுவான் கேடு நினைப்பான்
கெட்டாலும் செட்டி கிழிந்தாலும் பட்டு
கெட்டிக்காரன் புளுகு எட்டுநாளிற் தெரியும்
கெலிப்பும் தோற்பும் ஒருவர் பங்கல்ல ... ...
கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே
கைக்கெட்டினது வாய்க்கெட்டவில்லை
கைப்புண்ணுக்குக் கண்ணாடி வேண்டுமா ?
கையாளாத ஆயுதம் துருப்பிடிக்கும்
கையிலுண்டானாற் காத்திருப்பார் ஆயிரம்பேர்
கையிற்பிடிப்பது துளசிமாலை, கக்கத்தில் இடுக்குவது கன்னக்கோல்
கொடிக்குச் சுரக்காய் கனக்குமா ?
கொட்டினாற் தேள் கொட்டாவிட்டால் பிள்ளைப்பூச்சிதான்
கொல்லர் தெருவில் ஊசி விற்கலாமா ?
கோவிற்பூனை தேவரை மதியாது ... ...
சந்திரனைப் பார்த்து நாய் குரைத்து ஆவதென்ன ?
சருக்கரை என்றால் தித்திக்குமா ?
சாகத் துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால்
சாணேற முழஞ்சறுக்கும்
சாராயத்தைக் கொடுத்துப் பூராயத்தைக் கேள்
சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
சிரைத்தால் மொட்டை வைத்தால் குடுமி

சிறிய பாம்பானாலும் பெரிய தடிகொண்டடி
சிறுகக் கட்டிப் பெருக வாழ்
சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்
சிறுமீனெல்லாம் பெருமீனுக்கிரை
சுகதுக்கம் சுழல் சக்கரம்
சுட்டமண்ணும் பச்சை மண்ணும் ஒட்டுமா ?
சுண்டங்காய் காற்பணம் சுமைகூலி முக்காற்பணம்
சுத்தம் சோறிடும் எச்சில் இரக்கவைக்கும்
சுத்தவீரனுக்கு உயிர் துரும்பு
சும்மா கிடக்கிற சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி
சுவரின்றிச் சித்திரமெழுதலாமா ?
சூடுமிதிக்கிற மாட்டுக்கு வாயைக் கட்டலாமா ?
சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது
சென்மத்திலே பிறந்தது செருப்பாலடித்தாலும் போகாது
சோழியன் குடுமி சும்மா ஆடாது
தட்டிப்பேச ஆள் இல்லாவிட்டாற் தம்பி சண்டப்பிரசண்டன்
தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்
தம்பியுள்ளான் சண்டைக்கஞ்சான்
தலையிடியும் காச்சலும் தனக்குத் தனக்கு வந்தாற் தெரியும்
தலையிருக்க வாலாடுமா ?
தலைக்குமேல் வெள்ளம் சாணுயர்ந்தென்ன முழமுயர்ந்தென்ன?
தவளையும் தன்வாயாற் கெடும்
தன்னினம் தன்னைக் காக்கும், வேலி பயிரைக்காக்கும்
தன்குற்றம் தனக்குத் தெரியாது
தன்நெஞ்சறியாத பொய்யில்லை, தாயறியாத சூலில்லை
தன்மூக்குப் போனாலும் எதிரிக்குச் சகுனப்பிழையாகவேணும்
தன்வினை தன்னைச்சுடும், ஓட்டப்பம வீட்டைச்சுடும்
தன்னாலே தான்கெட்டால் அண்ணாவியார் என்னசெய்வார்
தன்னைப் புகழாத கம்மாளன் இல்லை
தாடிபற்றி எரியும்போது சுருட்டுப் புகைக்க நெருப்புக் கேட்டானும்
தாயும் பிள்ளையுமானாலும் வாயும் வயிறும் வேறு
தாயைச் சந்தையிற் கண்டால் மகளை வீட்டிலே பார்க்க வேண்டுமா ?
தாயைப்போற் பிள்ளை நூலைப்போற் சேலை
தாய்க்குப்பின் தாரம்
தானே கனியாத பழத்தை தடி கொண்டடித்தாற் கனியுமா ?
தானொன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்
தான் கள்ளன் பிறரை நம்பான்
தான் தேடாப் பொன்னுக்கு மாற்றுமில்லை உரையுமில்லை
தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்

திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை
திருடனைப் பிடிக்கத் திருடனே வேண்டும் [அறுப்பான் 240
தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை
தீட்டின மரத்திலே கூர் பார்க்கிறதா?
துட்டரைக் கண்டால் தூர விலகு
துணை போனாலும் பிணை போகாதே
துள்ளுகிற மாடு பொதி சுமக்கும்
துறவிக்கு வேந்தன் துரும்பு
தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சி
தெய்வம் விடை கொடுத்தாலும் பூசாரி விடை கொடான்
தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்
தோட்டிபோல் உழைத்துத் துரைபோற் சாப்பிடவேண்டும்
நடந்தால் நாடெல்லாம் உறவு படுத்தாற் பாயும் பகை ... 250
நட்டுவன் பிள்ளைக்கு நொட்டிக் காட்டவேண்டுமா?
நக்குகிற நாய்க்குச் செக்கென்ன சிவலிங்கமென்ன?
நண்டு கொழுத்தால் வளையில் இராது
நத்தை வயிற்றிலும் முத்துப் பிறக்கும்
நல்ல மாட்டுக்கு ஒரு சூடு, நற்பெண்டாட்டிக்கு ஒரு வார்த்தை
நா அசைய நாடசையும்
நாடறிந்த பார்ப்பானுக்கு பூணூல் வேண்டுமா?
நாய்க்கு வேலையுமில்லை நடக்க நேரமுமில்லை
நாற்பது வயதுக்குமேல் நாய்க்குணம்
நித்தம் போனால் முத்தம் சலிக்கும் ... ... ... 260
நிழலின் அருமை வெயிலிற் போனால் தெரியும்
நீராழம் கண்டாலும் நெஞ்சாழம் காணமுடியாது
நீலிக்குக் கண்ணீர் இமையிலே
நூறுநாள் ஓதி ஆறுநாள் விடத்தீரும்
நெருப்பில்லாமற் புகை வருமா?
நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினது சாட்டு
நொறுங்கத் தின்றவன் நூறு வயதிருப்பான்
நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்
பகலிற் பக்கம் பார்த்துப் பேசு. இரவில் அதுதானும் பேசாதே
பசி உள்ளவன் உருசி அறியான் ... ... ... 270
பசிவந்திடப் பத்தும் பறந்துபோம்
படிக்கிறது திருவாசகம் இடிக்கிறது சிவன் கோவில்
படை முகத்திலும் அறிமுகம் பெரிது
பட்டகாலிலே படும் கெட்டகுடியே கெடும்
பட்டறி கெட்டறி பத்தெட்டிறுத்தறி
பணம் பந்தியிலே குலம் குப்பையிலே

பணம் ஓரிடம் பழி பத்திடம்
பண்ணிய பயிரிற் புண்ணியம் தெரியும்
பதருத காரியம் சிதருது
பலகால் எறும்பூரக் கல்லும் குழியும் ... ...
பழகப்பழகப் பாலும் புளிக்கும்
பள்ளிக்கணக்குப் புள்ளிக்குதவாது
பனங்காட்டுநரி சலசலப்புக்கு அஞ்சுமா ?
பன்றியோடு கூடிய கன்றும் மலந்தின்னும்
பந்திக்கு முந்து படைக்குப் பிந்து
பாடின்றிப் பட்டமில்லை
பாகற்கொட்டை போடச் சுரைக்கொட்டை முளைக்குமா ?
பாம்பென்ருற் படையும் நடுங்கும்
பார்த்தாற் பூனை பாய்ந்தாற் புலி
பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் ... ...
பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்
பானையில் உள்ளதுதானே அகப்பையில் வரும்
பால்தொட்டுப் பால் கறக்கவேண்டும்
பாத்திரமறிந்து பிச்சைகொடு, கோத்திரமறிந்து பெண்ணைக்கொடு
பிறர்பிள்ளை தலைதடவத் தன் பிள்ளை தானேவளரும்
புத்திமான் பலவான்
புலிக்குப் பிறந்தது பூனையாகுமா ?
புலி பதுங்குவது பாய்ச்சலுக்கு அடையாளம்
புலி பசித்தாலும் புல்லுத் தின்னுமா ?
பூ விற்ற காசு மணக்குமா ? புலால் விற்ற காசு நாறுமா ?
பூனை இல்லாத வீட்டில் எலிக்குக் கொண்டாட்டம்
பூனைக்கு விளையாட்டு சுண்டெலிக்குச் சீவன்போகிறது
பெட்டைக்கோழி கூவி விடியுமா ?
பெண்ணென்ருற் பேயுமிரங்கும்
பெற்றமனம் பித்தும் பிள்ளைமனம் கல்லும்
பேராசை பெருநட்டம்
பொய்சொன்ன வாய்க்குப் பொரியும் கிடையாது
பொறுத்தார் அரசாள்வார் பொங்கினுர் காடுறைவார்
பொன்னின் கத்தியென்று வயிற்றிற் குத்தலாமா ?
போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து ...
போரோடு தின்ற மாட்டுக்கு பிடுங்கிப் போட்டுக் கட்டுமா ?
மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா ?
மதியாதார் முற்றம் மிதியாதே
மந்திரம் கால் மதி முக்கால்
மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்

மருந்தாயினும் விருந்தோடுண்
மருந்தும் விருந்தும் மூன்றுவேளை
மலிந்தசரக்குச் சந்தைக்கு வரும்
மழைவிட்டும் தூவானம் போகவில்லை ... ... ... 320
மனமுண்டானால் இடமுண்டு
மனம்போல வாழ்வு
மா பழுத்தாற் கிளிக்கு, வேம்பு பழுத்தாற் காக்கைக்கு
மாமியார்மெச்சிய மருமகளில்லை, மருமகள்மெச்சிய மாமியாரில்லை
மீன்குஞ்சுக்கு நீச்சல் பழக்கவேண்டுமா ?
முக்காலும் காகம் முழுகிக்குளித்தாலும் வெள்ளைக்கொக்காகுமா?
முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா
முதுகிற் புண்ணுண்டானால் காடு நுழையப் பயம்
முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்
முருக்குப் பெருத்துத் தூணுக்குதவுமா ? ... ... 330
முள்ளிலே சீலையைப்போட்டால் மெல்ல மெல்ல எடுக்கவேண்டும்
மூக்குள்ளவரை சளி போகாது
மெல்லமெல்லப்பாயும் தண்ணீர் கல்லையுமூடுருவிப்பாயும்
மௌனம் கலகநாசம்
வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்
வல்லவனுக்கு வல்லவன் வையகத்தில் உண்டு
வழவழத்த உறவைப் பார்க்கிலும் வைரம்பற்றிய பகை நன்று
விளையாட்டு வினையாய் முடிந்தது
விளையும் பயிரை முளையிலே தெரியும்
வெட்டொன்று துண்டிரண்டு
வெள்ளம் வருமுன்னே அணைபோடவேண்டும் ... ... 340
வெளுத்ததெல்லாம் பாலல்ல, மின்னுவதெல்லாம் பொன்னல்ல
வெறுங்கை முழமிடுமா ? [றம்
வேண்டாப் பெண்டாட்டி கைபட்டாற்குற்றம் கால்பட்டாற் குற்
வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது
வேலைக்கள்ளிக்குப் பிள்ளைச் சாட்டு ... ... ... 345

## (ஆ)

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்
ஆலயம் தொழுவது சாலவும் நன்று
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்
எண்ணு மெழுத்தும் கண்ணெனத் தகும் ... ... 350

ஏவா மக்கள் மூவாமருந்து
ஐயம் புகினும் செய்வன செய்
ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற் கழிவு
கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை
கிட்டாதாயின் வெட்டென மற
கீழோராயினும் தாழவுரை
குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை
கூரம்பாயினும் வீரியம் பேசேல்
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
சான்றோன் என்கை ஈன்றோர்க்கழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு
சூதும் வாதும் வேதனை செய்யும்
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தை சொன்மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்தொரு கோவிலுமில்லை
திரைகடலோடியும் திரவியம் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
தூற்றும் பெண்டிர் கூற்றெனத்தகும்
தெய்வஞ் சீறிற் கைதவம் ஆளும்
தேடாதழிக்கின் பாடாய் முடியும்
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
தோழனோடாயினும் ஏழமை பேசேல்
நல்லிணக்க மல்லது அல்லற் படுத்தும்
நீரகம் பொருந்திய ஊரகத்திரு
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத்தொழுகு
நெஞ்சை ஒளித்தொரு வஞ்சகமில்லை
நைபவரெனினும் நொய்யவுரையேல்
பாலோடாயினும் காலமறி துண்
பேதைமை என்பது மாதர்க்கணிகலம்
மருந்தேயாயினும் விருந்தோடுண்
மின்னுக்கெல்லாம் பின்னுக்குமழை
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்
மேழிச் செல்வம் கோழைபடாது
மோனமென்பது ஞானவரம்பு
வெள்ளைக்கில்லை கள்ளச்சிந்தை

(இ)

அரவ மாட்டேல்
அனந்த லாடேல்
அறஞ்செய விரும்பு
ஆறுவது சினம்
இடம்பட வீடெடேல்
இளமையிற் கல்
இணக்கமறிந் திணங்கு
ஈவது விலக்கேல்
உடையது விளம்பேல்
ஊக்கமது கைவிடேல்
ஊருடன் கூடிவாழ்
எண்ணெழுத் திகழேல்
ஏற்ப திகழ்ச்சி
ஐயமிட்டுண்
ஒப்புரவொழுகு
ஓரஞ் சொல்லேல்
ஔவியம் பேசேல்
ஙப்போல் வளை
சான்றோர் இனத்திரு
சூதுவிரும்பேல்
செய்வன திருந்தச்செய்
சேரிடமறிந்து சேர்
சோம்பித் திரியேல்
தந்தை தாய் பேண்
தெய்வ மிகழேல்
தேசத்தோடொத்துவாழ்
தொன்மை மறவேல்
நன்மை கடைப்பிடி
நன்றி மறவேல்
நாடொப்பன செய்
நிலையிற் பிரியேல்
நீர் விளையாடேல்
பருவத்தே பயிர்செய்
பழிப்பன பகரேல்
பாம்பொடு பழகேல்
பூமிதிருத்தி உண்
பெரியாரைத் துணைக்கொள்
மிகைபடக் கூறேல்
மீதூண் விரும்பேல்
மூக்கரோ டிணங்கேல்
வல்லமை பேசேல்
வித்தை விரும்பு
வெட்டெனப் பேசேல்
வைகறைத் துயிலெழு

(ஈ)

அறிஞர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்
உழவர்க்கழகு உழுதூண் விரும்பல்
கல்விக்கழகு கசடறமொழிதல்
குலமகட்கழகு தன் கொழுநனைப் பேணுதல்
சுற்றத்துக்கழகு சூழவிருத்தல்
பெண்டிர்க்கழகு எதிர்பேசா திருத்தல்
வறிஞர்க்கழகு வறுமையிற் செம்மை
அறிவுடைஒருவனை அரசனும் விரும்பும்
எழுத்தறிவித்தவன் இறைவனாவான்

ஞானிக்கில்லை இன்பமும் துன்பமும்
தன்கையே தனக்குதவி
பிச்சைபுகினும் கற்கைநன்று

## பயிற்சி 24

1. மேல்வருந்தருணங்களிற் பிரயோகிக்கத்தக்க பழமொழிகளைத் தருக :

(அ) துன்பத்துக்குமேலே துன்பம்வரும்போது
(ஆ) இளமையில் இருந்து பழகியபழக்கத்தைத் திருத்த முடியாதபோது
(இ) எல்லாவற்றிலும் சுகவாழ்வே சிறந்ததென்றுசொல்லும்போது
(ஈ) காரியம் கைகூடும் நேரத்திலே தவறிப்போகும் போது

2. மேல்வரும் பழமொழிகளிற் கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்கள்வைத்து எழுதுக :

(1) உயரப்பறந்தாலும் – –பருந்தாகுமா ?
(2) சிறு– –பல்லுக் குத்த உதவும்
(3) – – என்றாற் பேயுமிரங்கும்
(4) அடம்பன்கொடியும் திரண்டால்– –

# 7. சிலேடை மொழிகள்

விளக்கம் : சில சொற்கள் தத்தமக்குரிய பொருளைக் கொடுப்பதோடு அவற்றைப் பிரித்து நோக்கும்போது வேறு பொருள் தருவதும் உண்டு. அவ்வித சொற்கள் சிலேடை மொழிகள் என்று கூறப்படும். சில சிலேடைச் சொற்கள் மேலே தரப்படுகின்றன. அவைபோன்ற வேறு சொற்களை ஆராய்ந்தறிக.

(எடுத்துக்காட்டு)

அடிப்பார் { அடிப்பார் — அடிப்பவர்கள்
அடி + பார் — அடியில் உள்ள கற்படை

| | |
|---|---|
| அரியுண்ணும் | அரியுண்ணும் — அரியப்படும்<br>அரி + உண்ணும் — சிங்கம் தின்னும் |
| இளவாலை | இளவாலை — ஒரூர்<br>இளமை + வாலை — இளம்பெண் |
| எட்டு | எட்டு — எட்டென்னுமெண்<br>என் + து — எள்ளை உண் |
| எழுவாய்பயனிலை | எழுவாய் + பயனிலை — எழுவாயும் பயனிலையும்<br>எழுவாய் + பயன் + இலை — எழும்புவாய் (உன்னால்) நன்மை இல்லை |
| ஐம்பால் | ஐம்பால் — கூந்தல்<br>ஐந்து + பால் — ஆண் பெண் முதலிய ஐந்து பால்கள் |
| கண்ணாடி | கண்ணாடி — பளிங்கு<br>கள் + நாடி — கள்விரும்பி |
| கற்பார் | கற்பார் — கற்பவர்கள்<br>கல் + பார் — கற்படை |
| காசாலேசா | காசா + லேசா — பணமா, சும்மாவா ?<br>காசாலே + சா — பணத்தால் இற |
| கைமா | கைமா — கைம்பெண்<br>கை + மா — கையையுடைய விலங்கு |
| செவ்வாய் | செவ்வாய் — வாரத்திலொருநாள்<br>செம்மை + வாய் — சிவந்த வாய் |
| தங்கை | தங்கை — சகோதரி<br>தம் + கை — தமது கை |
| தலைவிதிவசம் | தலை + விதி + வசம் — தலைவிதிப்படி<br>தலைவி + திவசம் — மனைவியினது திவசம் |
| தாமரை | தாமரை — கமலம்<br>தாவு + மரை — தாவுகின்ற மரை |
| திருக்கை | திருக்கை — ஒருவகை மீன்<br>திரு + கை — பரிசுத்த கை |
| நங்கை | நங்கை — பெண்<br>நம் + கை — நமது கை |
| பலகை | பலகை — (மர) பலகை<br>பல + கை — அநேக கை |

| | |
|---|---|
| பழங்கறி | பழங்கறி—பழயகறி<br>பழம்+கறி—பழமும் கறியும் |
| புத்தியில்லாதவன் | புத்தி+இல்லாதவன் — அறிவற்றவன்<br>புத்தியில்+ஆதவன் — அறிவிற் சூரியனைப் போன்றவன் |
| பிண்ணாக்கு | பிண்ணாக்கு — நெய் நீக்கிய சக்கை<br>பிள்+நாக்கு—பிளவுடைய நாக்கு |
| மாதங்கம் | மாதங்கம்+யானை<br>மா+தங்கம்—மேலான பொன்<br>மாது+ அங்கம்—பெண் அங்கம் |
| மிக்கவன்பு | மிக்க+அன்பு—மிகுந்த நேசம்<br>மிக்க+வன்பு—மிகுந்த கோபம் |
| வழிப்போக்கர்கள் அருந்துமிடம் | வழிப்போக்கர்கள்+அருந்துமிடம்—பிரயாணிகள் உண்ணுமிடம்<br>வழிப்போக்கர்+கள்+அருந்துமிடம்-பிரயாணிகள் கள் பருகுமிடம் |
| வாருமிரும்படியும் | வாரும்+இரும்பு+அடியும் — வந்து இரும்பை அடியும்<br>வாரும்+இரும்+படியும்--வந்திருந்துபடியும் |
| வேங்கை | வேங்கை—ஒரு மரம், புலி<br>வேகும்+கை—வேகின்ற கை |

## பயிற்சி 25

1. கண்ணாடி, பிண்ணாக்கு, செவ்வாய் என்னும் சொற்களின் வித்தியாசமான கருத்துக்களை எழுதுக.

2. மேல்வருஞ் சொற்கள் சிலேடைப்பொருள் தருமாறு ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக:
பழங்கறி, நங்கை, இளவாலே.

# 8. சொற்றொடரிலக்கணம்

விளக்கம் : தமிழ்ச் சொற்களைப் பொருள்பயக்கும்படி ஒன்று சேர்க்கும்போது சில ஒழுங்குகளைக் கைக்கொள்ள வேண்டியது அவசியமாகும். அவ் ஒழுங்குகள் பொருட்சிறப்பை உண்டாக்கவும், கேட்பவர் மலைப்பின்றி விளங்கவும் மிகவும் உதவி செய்வன. அவ் ஒழுங்குகளே இலக்கணங்களாகும் ஆகவே, சில முக்கிய சொற்றொடர் இலக்கணங்கள் இங்கு தரப்படுகின்றன.

## 1 பகுபதம், பகாப்பதம்

சொற்கள் பகுக்கப்படக்கூடியன, பகுக்கப்படக்கூடாதன என இருவகைப்படும். அவை முறையே பகுபதம் பகாப்பதம் என்று கூறப்படும்.

(அ) பகுபதம் :- பகுதி, விகுதி, இடைநிலை முதலியனவாகப் பிரிக்கப்படக் கூடியது.

(உ-ம்) அறிஞன்- இதனை அறி + ஞ் + அன் எனப் பிரிக்கலாம். பகுபதம் பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இரு வகைப்படும்.

பெயர்ப்பகுபதம்: கலைஞன் (கலை + ஞ் + அன்)
வினைப்பகுபதம் : ஓடினன் (ஓடு + இன் — ஆன்)

(ஆ) பகாப்பதம் :- பகுதி, விகுதி முதலியனவாகப் பிரிக்க முடியாதது. ஆ, வா, கை என்பனவும் இவைபோன்றனவும் ஓர் எழுத்தாலாகிய பகாப்பதங்களாகும். மணி, அறம், கிளி, அலங்காரம் என்பனவும் இவைபோன்றனவும் பல எழுத்துக்களாலாகிய பகாப்பதங்களாகும்.

பகாப்பதம் பெயர், வினை, இடை, உரி என்னும் நான்கு அடியாகவும் பிறக்கும்.

i பெயர்ப்பகாப்பதம் : மா, மண், பொன்,
ii வினைப்பகாப்பதம் : உண், அடி, போ.
iii இடைப்பகாப்பதம் : மற்று, கொல்.
iv உரிப்பகாப்பதம் : உறு, நனி

(இ) பகுபத உறுப்புகள் : பகுபதங்களைப் பிரிக்கும்போது சில சொற்கள் பகுதி விகுதி மாத்திரமுடையனவாகவும், சில இவ்விரண்டுடன் இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என்பவற்றுள் ஏற்பன கொண்டனவாகவும் இருப்பதைக் காணலாம்.

(உ-ம்) அடிக்கின்றான். இதில் அடி பகுதி, ஆன் விகுதி, கின்று இடைநிலை, க் சந்தி.
(அடி + க் + கின்று + ஆன்)

குறிப்பு :- பகுதி முதலிலும், விகுதி கடைசியிலும் நிற்கும். இடைநிலை இடையில் நிற்கும். பகுதிக்கும் இடைநிலைக்குமிடையில் சந்தியும், இடைநிலைக்கும் விகுதிக்கு மிடையில் சாரியையும் நிற்கும். விகாரம் வேண்டிய இடத்து வரும்.

(அ) பகுதி :- பகுபதங்களின் முதற்கண் நிற்கும் பகாப்பதங்களே பகுதிகளாகும். பொருள், இடம், காலம், சினை குணம், தொழில் என்னும் ஆறு வகைச் சொற்களும், நட, வா, மடி முதலிய வினைச்சொற்களும் இதில் அடங்கும்.

(உ-ம்) பொன்னன் :- பொருட்பெயர்ப்பகுதி
தையான் :- காலப்பெயர்ப்பகுதி
நடந்தான் :- வினைச்சொற்பகுதி

(ஆ) விகுதி :- பகுபதங்களின் இறுதியில் நிற்கும் பகாப்பதங்களாகிய இடைச் சொற்கள் விகுதிகளாகும்.

## சாதாரணமாகப் பயின்றுவரும் விகுதிகள்

பெயர்விகுதிகள் :- அன், ஆன், அள், ஆள், அர், ஆர், இ, மார் வை முதலியன.

தொழிற்பெயர்விகுதிகள் : தல், அல், அம், ஐ, வி, மை, து முதலியன.

பண்புப்பெயர்விகுதிகள் :- மை, ஐ, சி, பு, கு, று முதலியன.

தெரிநிலைவினைமுற்றுவிகுதிகள் :- அன், ஆன், அள், ஆள், து, று, அம், எம், ஓம், க, மின் முதலியன.

(இவ்விதம் பல வகைப்பட்ட விகுதிகள் உண்டு. அவற்றைத் தேவை நோக்கிக் கற்றுக்கொள்ளலாம்)

(இ) இடைநிலை :- பெயரிடைநிலை, வினை இடைநிலை என இடைநிலை இருவகைப்படும்.

பெயரிடைநிலை :- பெயர்ப்பகுபதத்தின் இடையிலே நிற்கும் இடைநிலை பெயரிடைநிலையாகும்.

(உ-ம்) அறிஞன் :- (அறி + ஞ் + அன்) ஞ் இடைநிலையாகும்.

வினையிடைநிலை :- வினைப்பகுபதத்தின் இடையில் நிற்கும் இடைநிலை வினையிடைநிலையாகும்.

இவ் விடைநிலை:
i. இறந்தகால இடைநிலை
ii. நிகழ்கால இடைநிலை
iii. எதிர்கால இடைநிலை என மூன்று வகைப்படும்

i. இறந்தகால இடைநிலை: த், ட், ற், இன், என்னும் நான்கும் இறந்தகால இடைநிலைகளாகும்.

(உ-ம்) அடித்தான், உண்டான், தின்றான், பாடினான்.

ii. நிகழ்காலஇடைநிலை: ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றும் நிகழ்கால இடைநிலைகளாகும்.

(உ-ம்) நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

iii. எதிர்கால இடைநிலை: ப், வ், என்னும் இரண்டும் எதிர்கால இடைநிலைகளாகும்.

(உ-ம்) நடப்பான, செல்வான்

(ச) சாரியை: சொற்களைச் சார்ந்து இயைந்து நிற்கும், அன், இன், அல், அற்று, இற்று, அத்து, அம், ஆம் முதலிய சொற்கள் சாரியை எனப்படும்

(உ-ம்) படித்தனன். (படி + த் + த் + அன் + அன்)
இதில் இடைநிலையாகிய 'த்' துக்கும், விகுதியாகிய 'அன்' னுக்கும் இடையே நிற்கும் 'அன்' சாரியையாகும்.

(உ) சந்தி: பதிக்கும் இடைநிலைக்குமிடையில் சந்திக்கும் எழுத்து சந்தியாகும்.

(உ-ம்) படித்தான். (படி + த் + த் + ஆன்)
இதில் படி என்னும் பகுதிக்கும் 'த்' என்னும் இடைநிலைக்கும் இடையில் நிற்கும் 'த்' சந்தியாகும்.

(ஊ) விகாரம்: வல்லினத்தை மெல்லினமாக்குவதும், மெல்லினத்தை வல்லினமாக்குவதும், நெடிலைக் குறிலாக்குவதும், குறிலை நெடிலாக்குவதும் பிறவும் விகாரமாகும்.

(உ-ம்) கண்டான்: (காண் + ட் + ஆன்)
இதில் 'காண்' என்னும் பகுதி 'கண்' எனவிகாரமாயிற்று.

## 2 வேற்றுமை

சொற்கள் சேரும்போது பொருள்பயத்தற் பொருட்டுச் சில மாற்றங்களடையும். அவ்வித மாற்றங்கள் அடைவது வேற்றுமை எனப்படும். வேற்றுமையை உண்டாக்கும் குறியாக வருவன

வேற்றுமை உருபுகள் எனப்படும். வேற்றுமை : முதல் வேற்றுமை, இரண்டாம் வேற்றுமை, மூன்றும் வேற்றுமை, நான்காம் வேற்றுமை ஐந்தாம் வேற்றுமை. ஆறும் வேற்றுமை, ஏழாம் வேற்றுமை எட்டாம் வேற்றுமை என்றே கூறப்படும்.

முதல்வேற்றுமை : ஒருவித மாறுதலுமில்லாமல் இயல்பாகச் சொற்கள் சேருவது முதல் வேற்றுமையாகும்.

(உ-ம்) 1. கண்ணன் ஆடு மேய்த்தான்.
2. முருகன் குழல் ஊதினான்.

இவற்றில் கண்ணன், முருகன் என்பன இயல்பாக நிற்கின்றன. இவ்வேற்றுமை எழுவாய் வேற்றுமை எனவும் கூறப்படும்.

இரண்டாம் வேற்றுமை: ஐ என்னும் உருபை ஏற்று, பெயர்ப் பொருளைச் செயப்படுபொருளாக்குவது இரண்டாம் வேற்றுமையாகும்.

(உ-ம்) 1. கண்ணன் ஆடுகளை மேய்த்தான்.
2. முருகன் தேரைச் செலுத்தினான்.

மூன்றும் வேற்றுமை : ஆல், ஒடு, ஓடு, உடன், கொண்டு என்னும் உருபுகளில் ஒன்றை ஏற்று, பொருள் வேறுபாடு செய்வது மூன்றும் வேற்றுமையாகும்.

(உ-ம்) 1. தச்சனால் கோவில் கட்டப்பட்டது.
2. தந்தையொடு மைந்தன் சென்றான்.
3. கன்னனோடு போர்புரிந்தான்.
4. கண்ணன் குழலுடன் ஆடினான்.
5. அரசன் வாள்கொண்டு வெட்டினான்.

நான்காம் வேற்றுமை : கு என்னும் உருபை ஏற்று, பொருள் வேறுபாடு செய்வது நான்காம் வேற்றுமையாகும்.

(உ-ம்) 1. கூலிக்கு வேலை செய்தான்.
2. பாரி இரவலர்க்கு ஈந்தான்.

ஐந்தாம் வேற்றுமை : இல், இன், இருந்து, நின்று என்னும் உருபுகளை ஏற்று, பொருள் வேறுபாடு செய்வது ஐந்தாம் வேற்றுமையாகும்.

(உ-ம்) 1. காக்கையிற் கரியது களாப்பழம்.
2. செல்வத்தின் மிக்கது கல்வி,
3. பாடசாலையிலிருந்து வந்தேன்.
4. ஆலமரத்தினின்று வந்தது.

ஆறும்வேற்றுமை : அது, ஆது, அ, உடைய என்னும் உருபுகளை ஏற்று, பொருள் வேறுபாடு செய்வது ஆறும் வேற்றுமையாகும்.

(உ-ம்) 1. எனது வீடு
2. எனது பொருள்
3. தன தாள்கள்
4. என்னுடைய பசுக்கள்

ஏழாம்வேற்றுமை : இல், இடம், கண் என்னும் உருபுகளை ஏற்று பொருள்வேறுபாடு செய்வது ஏழாம் வேற்றுமையாகும்.

(உ-ம்) 1. நீங்கள் பாடசாலையில் படிக்கிறீர்கள்
2. என்னிடம் புத்தகம் இருக்கிறது.
3. கோவிலின்கண் இருந்தனர்.

(இல் உருபு ஐந்தாம் வேற்றுமையில் ஒப்புமையிலும், ஏழாம் வேற்றுமையில் இடப்பொருளிலும் வரும்)

எட்டாம் வேற்றுமை : எட்டாம் வேற்றுமைக்கு உருபு இல்லை. ஆனால், படர்க்கையோரை விளித்து, தன்முகப்படுத்தும் போது சொற்களின் ஈற்றில் சில மாறுதல்களைச் செய்து திரிதல், குறைதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றியல் எழுத்துத் திரிதல் என்னும் மாற்றங்களில் ஏற்பனபெறும்.

(உ-ம்)

| | | | |
|---|---|---|---|
| 1. | தந்தை — தந்தாய்<br>பிள்ளை — பிள்ளாய்<br>அம்மை — அம்மா, அம்மே | } | திரிதல் |
| 2. | குமரன் — குமர<br>ஐயன் — ஐய | } | குறைதல் |
| 3. | முருகன் — முருகனே<br>குரு — குருவே | } | மிகுதல் |
| 4. | தோழி — தோழி<br>சீதை — சீதை | } | இயல்பாதல் |
| 5. | மக்கள் — மக்காள்<br>புலவர் — புலவீர் | } | ஈற்றியல் திரிதல் |

## 3 தொகை நிலைத்தொடர்

சொற்கள் ஒன்றோடொன்று தொடரும்போது வேற்றுமை உருபுகள் தொக்குநிற்பது தொகைநிலைத்தொடர் எனப்படும்.

இத் தொகைநிலைத் தொடர் :
(1) வேற்றுமைத் தொகை
(2) வினைத் தொகை
(3) பண்புத் தொகை
(4) உவமத் தொகை
(5) உம்மைத் தொகை
(6) அன்மொழித் தொகை என ஆறுவகைப்படும்.

1. வேற்றுமைத்தொகை : இஃது இரண்டாம் வேற்றுமை முதல் ஏழாம் வேற்றுமை வரையில் உள்ள ஆறு வேற்றுமையுருபுகள் தொக்கு நிற்கச் சொற்கள் தொடருவதாகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | பால் குடித்தான் | –2 ஆம் | வேற்றுமைத் | தொகை |
| | தலை வணங்கினான் | –3 ஆம் | ,, | ,, |
| | காடு சென்றான் | –4 ஆம் | ,, | ,, |
| | ஊர் நீங்கினான் | –5 ஆம் | ,, | ,, |
| | கந்தன் மலை | –6 ஆம் | ,, | ,, |
| | மலைக்குகை | –7 ஆம் | ,, | ,, |

இவ்வேற்றுமைத் தொகைகள் வேற்றுமை உருபுகளை வெளிப்படையாகக் காட்டி நிற்கும்போது வேற்றுமை விரி எனப்படும்.

| | | | | |
|---|---|---|---|---|
| (உ-ம்) | பாலைக் குடித்தான் | –2 ஆம் | வேற்றுமை | விரி |
| | தலையால் வணங்கினான் | –3 ஆம் | ,, | ,, |
| | காட்டுக்குச் சென்றான் | –4 ஆம் | ,, | ,, |
| | ஊரின் நீங்கினான் | –5 ஆம் | ,, | ,, |
| | கந்தனது மலை | –6 ஆம் | ,, | ,, |
| | மலைக்கண் குகை | –7 ஆம் | ,, | ,, |

இவ்வுதாரணங்களில் வேற்றுமையுருபுகள் வெளிப்படையாக நிற்பதைக் காண்க.

வேற்றுமைத் தொகையில் வேற்றுமை உருபுகளன்றி, வேறு சில சொற்களும் தொக்கு வருதலுமுண்டு. பொற்குடம் என்னும் போது பொன்னாற் செய்யப்பட்ட குடம் என்றும், நீர்க் குடம் என்னும்போது நீரையுடைய குடம் என்றும், உருபுகளுடன், 'செய்யப்பட்ட' 'உடைய' என்னும் பொருள்களும் வெளிப்படையாக வருகின்றமையின் இவைகளை அடக்கியுள்ள தொகைகள் உருபும் பயனும் உடன் தொக்க தொகை என்று கூறப்படும்.

2. வினைத்தொகை :- இது காலங்காட்டும் இடைநிலையும், பெயரெச்சவிகுதியும் தொக்குநிற்க, பகுதி மட்டும் நின்று பெயர்ச்சொல்லோடு தொடர்வதாகும்.

(உ-ம்) சுடுகோப்பி : (சுட்ட, சுடுகின்ற, சுடும்) கோப்பி
கொல்யானை : (கொன்ற, கொல்கின்ற, கொல்லும்) யானை

3. **பண்புத்தொகை :-** இது வட்டம், சதுரம், செம்மை, நன்மை முதலிய பண்புச் சொற்களுக்கும், அப்பண்பையுடைய பெயர்களுக்குமிடையே 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கு நிற்க வருவதாகும்.

(உ-ம்) வட்டக் கல் (வட்டமாகிய கல்)
செந்தாமரை (செம்மையாகிய தாமரை)

பொதுப் பெயருக்கும் சிறப்புப் பெயருக்கு மிடையேயாயினும், சிறப்புப் பெயருக்கும் பொதுப் பெயருக்கு மிடையேயாயினும், 'ஆகிய' என்னும் பண்புருபு தொக்கு வரும்போது இரு பெயரொட்டுப் பண்புத்தொகை எனப்படும்.

(உ-ம்) சாரைப்பாம்பு.

4. **உவமைத்தொகை :-** இது போல, புரைய, ஒப்ப முதலிய உவமை உருபுகள் உவமானத்துக்கும் உவமேயத்துக்கு மிடையில் தொக்குநிற்க வருவதாகும்.

(உ-ம்) துடி இடை (துடி போன்ற இடை)
பவளவாய் (பவளம் போன்ற வாய்)

5. **உம்மைத்தொகை :-** எண்ணுப் பொருளில் சொற்கள் தொடர்ந்து வரும்போது 'உம்' என்னும் இடைச்சொல் ஒவ்வொரு சொல்லின் கடைசியிலும் தொக்குவருவது உம்மைத்தொகையாகும்.

(உ-ம்) ஒன்றேகால் (ஒன்றும் காலும்)
இராப்பகல் (இரவும் பகலும்)

6. **அன்மொழித்தொகை :-** வேற்றுமைத்தொகை, வினைத் தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத் தொகை என்னும் ஐந்து தொகைக்கும் புறத்தில் வேறு மொழி தொக்குவருவது அன்மொழித்தொகையாகும்.

(அ) பொற்றொடி :- பொன்னால் ஆகிய (செய்யப்பட்ட) தொடி, இதில் ஆல் என்னும் உருபும் ஆகிய என்னும் பயனைக் குறிக்கும் சொல்லும் தொக்கதினால் இஃது உருபும் பயனும் உடன் தொக்க தொகை எனப்படும்.
பொற்றொடி வந்தாள் :- இஃது 3ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும். இவ்விதமே மற்ற வேற்றுமைகளிலும் வருவதைக் கண்டுகொள்க.

(ஆ) தாழ்குழல் வந்தாள் :- (இது தாழ்ந்த, தாழ்கின்ற, தாழும்) குழலினையுடைய பெண் வந்தாள் என விரிந்து வினைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

(இ) கருங்குழல் வந்தாள் :- இது கருமையாகிய குழலையுடைய பெண் வந்தாள் என விரிந்து பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகும்.

(ஈ) தேன்மொழி வந்தாள் :- இது தேன் போன்ற மொழியை யுடைய பெண் வந்தாள் என விரிந்து உவமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகையாகும்.

(உ) உயிர்மெய் இருநூற்றுப் பதினாறு :- இது உயிரும் மெய் யும் கூடிப் பிறந்த இருநூற்றுப் பதினாறு எழுத்து என விரிந்து உம்மைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகும்.

## 4 தொகாநிலைத் தொடர்

சொற்களிடையே வேறு மொழிகள் தொக்கு நில்லாது இயல்பாக நிற்கத்தொடர்வது தொகாநிலைத்தொடர் எனப்படும். அஃது எழுவாய், விளி, பெயரெச்சம், வினையெச்சம், வினைமுற்று, இடைச்சொல், உரிச்சொல், அடுக்குச்சொல் என்பவற்றைக் கொண்டு தொடர்வதாகும்.

(உ-ம்)
1. எழுவாய்த்தொடர் :- விசயன் வந்தான்.
2. விளித்தொடர் :- பொன்னு வா.
3. பெயரெச்சத்தொடர் :- வந்த மாடு.
4. வினையெச்சத்தொடர் :- வந்து போனான்
5. வினைமுற்றுத்தொடர் :- வந்தான் கந்தன்
6. இடைச்சொற்றொடர் :- மற்றொன்று
7. உரிச்சொற்றொடர் :- கடிமலர்
8. அடுக்குச்சொற்றொடர்:- பாம்பு பாம்பு

## 5 ஆகுபெயர்

ஒரு பொருளுக்கு இயல்பாக உள்ள பெயர் அதனோடு சம்பந்த முடைய வேறொரு பொருளுக்கு ஆகித் தொன்று தொட்டு வழங்கிவருவது ஆகுபெயராகும். ஆகுபெயர் பதினாறுவகைப்படும். அவையாவன :-

1. பொருளாகுபெயர் :- தாமரைபோன்ற முகம் : இதில் தாமரை என்னும் முதற் பொருளின் பெயரைக் கூறவே அதனோடு சம்பந்தமுடைய (உறுப்பாகிய) பூவைக் கருதுவதினால் பொருள் (உறுப்புக்கு) ஆகுபெயர் எனப்படுகின்றது.

2. இடவாகுபெயர் :- ஊர் சிரித்தது : ஊர் என்னும் இடப் பெயரைக்கூற அவ்விடத்தில் உள்ள மக்கள் சிரித்தனர் என்று பொருள்படுத்தலினால் இடவாகு பெயராகும்.

3. காலவாகுபெயர் :- சித்திரை வந்தான் : சித்திரை என்பது சித்திரை மாதத்திற் பிறந்த மனிதனைக் குறிப்பதால் கால ஆகு பெயராகும்.

4. சினையாகுபெயர்:- வெற்றிலை நட்டான் : வெற்றிலை என்னும் சினைப்பெயர் அதன் முதலாகிய கொடியைக் குறிப்பதால் சினை ஆகு பெயராகும்.

5. குணவாகுபெயர் :- வண்டியில் வெள்ளையைப் பூட்டினான் : வெள்ளை என்பது வெள்ளை நிறத்தை (குணம்) யுடைய மாட்டுக்கு ஆயினமையின் குணவாகு பெயர் எனப்படும்

6. தொழிலாகுபெயர் :- பொங்கல் உண்டான் : பொங்கல் என்னும் தொழிலின் பெயர் அத்தொழிலையடைந்த உணவுக்கு ஆயினமையின் தொழிலாகுபெயர் எனப்படும்.

7. எண்ணலளவை ஆகுபெயர்:- கால்நொந்தது: கால்என்னும் எண்ணுப் பெயர் அவ் அளவைக்கொண்ட உறுப்பாகிய காலுக்கு ஆயினமையின் எண்ணலளவை ஆகுபெயராகும்.

8. எடுத்தலளவை ஆகுபெயர் :- வீசை தந்தாள் : வீசை என்னும் எடுத்தல், (நிறுத்தல்) அளவை ஆகுபெயராயிற்று

9. முகத்தலளவை ஆகுபெயர் :- கலம் விளைந்தது : கலம் என்னும் முகத்தலளவை, ஆகுபெயராயிற்று.

10. நீட்டலளவை ஆகுபெயர் :- காதம் நடந்தான் : காதம் என்னும் (10 மைல்) நீட்டலளவை, ஆகுபெயராயிற்று :

11. சொல்லாகு பெயர்:- உரைசொன்னார்: உரை என்னும் சொல்லின் பெயர் ஆகுபெயராயிற்று.

12. தானியாகுபெயர் :- விளக்கு ஒடிந்தது : விளக்கு என்னும் விளக்கம் செய்கின்ற ஒளிப்பொருளையுடைய தானத்துக்கு ஆகினதால் தானி ஆகு பெயராயிற்று.

13. கவியாகுபெயர் :- திருவாசகம் படித்தான் ; வாசகம் என்னும் கருவியின் பெயர் அதன் காரியமாகிய நூலுக்கு ஆயினமையின் கருவியாகு பெயராயிற்று

14. காரியவாகுபெயர் :- அலங்காரம் கற்றான் : அலங்காரம் என்னும்காரியத்தின் பெயர் அதனை உணர்த்துதற்குக் கருவியாகிய நூலுக்கு ஆயினமையின் காரிய ஆகுபெயராயிற்று.

15. கருத்தாவாகுபெயர் :- அவன்திருவள்ளுவர் படித்தான் : திருவள்ளுவர் என்னும் கருத்தாவின் பெயர் அவரால் எழுதப்பட்டநூலுக்கு ஆயினமையின் கருத்தா ஆகுபெயராயிற்று.

16. உவமையாகுபெயர் :- பாவை வந்தாள் : பாவை போன்ற என்னும் உவமை, அதனைக்கொண்ட பெண்ணுக்கு ஆயினமையின் உவமை ஆகுபெயராயிற்று.

## 6. சொற்புணர்ச்சி

சொற்கள் ஒன்றோடொன்று சேருவது சொற்புணர்ச்சி எனப்படும். சேரும் சொற்களில் முன்நிற்கும் சொல் நிலைமொழி என்றும், பின்நிற்கும் சொல் வருமொழி என்றும் கூறப்படும். சொற்கள் புணரும் போது சில சொற்கள் ஒரு மாற்றமுமின்றிப் புணரும் ; சில சொற்கள் விகாரமடைந்து புணரும். அதனால் சொற்புணர்ச்சியை :

1. இயல்புப் புணர்ச்சி
2. விகாரப்புணர்ச்சி என இருவகையாகப் பிரிக்கலாம்.

1. இயல்புப் புணர்ச்சி:- ஒரு விகாரமுமின்றி இயல்பாகப் புணருவது இயல்புப் புணர்ச்சியாகும்.

(உ-ம்) மாடு + வந்தது = மாடுவ தது.
நாய் + கடித்தது = நாய் கடித்தது.

2. விகாரப்புணர்ச்சி :- நிலைமொழியின் ஈற்றெழுத்தாவது வருமொழியின் முதல் எழுத்தாவது விகாரமடைவதுவிகாரப் புணர்ச்சியாகும். இது தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று வகையில் ஏற்றதுகொண்டு விகாரமடையும்.

(உ-ம்) (அ) தோன்றல் விகாரம்
பலா + பழம் = பலாப்பழம்
புளி + பழம் = புளியம்பழம்

(ஆ) திரிதல் விகாரம்
பல் + பொடி=பற்பொடி
கல் + தூண் =கற்றூண்

(இ) கெடுதல் விகாரம்
மரம் + வேர் = மரவேர்
பாதம்+சேவை = பாதசேவை

விகாரப்புணர்ச்சி :

i உயிர்முன் உயிர்புணர்தல் (பனை + ஓலை)
ii உயிர்முன் மெய்புணர்தல் (பலா + மரம்)
iii மெய்முன் உயிர்புணர்தல் (பொன் + அடி)
iv மெய்முன் மெய்புணர்தல் (தேன் + கூடு)

## I உயிர்முன் மெய்புணர்தல்

(அ) இ, ஈ, ஐ என்னும் இவற்றுள் ஒன்று நிலைமொழியின் கடையில் நிற்க, வருமொழியில் உயிர்வந்து புணரின் அவற்றினிடையே 'ய்' என்னும் மெய் தோன்றும். இது யகர உடம்படுமெய் எனப்படும்.

மணி + அழகு = மணியழகு
நீ + உண் = நீயுண்
பனை + ஓலை = பனையோலை

(ஆ) அ, ஆ, உ, ஊ, ஒ, ஒள என்னும் ஆறு உயிர்களில் ஒன்று நிலைமொழியாக நிற்க உயிர்வந்து புணரின் 'வ்' என்னும் வகர உடம்படுமெய் தோன்றும்.

பல + ஆடுகள் = பலவாடுகள்
மா + இலை = மாவிலை
குரு + உபதேசம் = குருவுபதேசம்
பூ + அழகு = பூவழகு
கோ + இல் = கோவில்
கௌ + என்பது = கௌவென்பது

(இ) 'ஏ' என்னும் உயிர் எழுத்து நிலைமொழியின் ஈற்றில் நிற்க, உயிர்வந்து புணரின் சில இடங்களில் 'வ்' என்னும் வகர உடம்படு மெய்யும், சில இடங்களில் 'ய்' என்னும் யகர உடம்படு மெய்யும் தோன்றும்.

தே + ஆரம் = தேவாரம்
அவனே + அடித்தான் = அவனேயடித்தான்

(ஈ) குற்றியலுகரச் சொற்களுடன் உயிரை முதலாகவுடைய சொற்கள் வந்து புணரின், குற்றியலுகரம் மெய்யை விட்டுச் செல்ல, நின்ற மெய்யுடன் உயிர் புணரும்.

நாகு + ஈன்றது = நாகீன்றது
ஓடு + என்றான் = ஓடென்றான்

(உ) முற்றியலுகரச் சொற்களும், சில இடங்களில் குற்றியலுக ரச் சொற்கள் போற் புணரும்.

செலவு + ஆயிற்று = செலவாயிற்று
வரவு + என்ன ? = வரவென்ன ?

## II உயிர்முன் மெய்புணர்தல்

(அ) உயிர் எழுத்துக்கள் நிலைமொழியின் ஈற்றில் நிற்க, க, ச, த, ப என்னும் வல்லின எழுத்துக்களை முதலாகவுடையமொழி கள் வந்து புணரின் அவற்றினிடையே அவ் எழுத்துக்களே பெரும்பாலும் மிகுந்து நிற்கும்.

படிக்க + கண்டேன் = படிக்கக் கண்டேன்
ஓடி + சென்றான் = ஓடிச் சென்றான்
யானை + தந்தம் = யானைத் தந்தம்
ஆடி + பிறப்பு = ஆடிப் பிறப்பு

(ஆ) உயிர் எழுத்துக்கள் நிலைமொழியின் ஈற்றிலே நிற்க, மெல் லின மெய்யாவது, இடையின மெய்யாவது முதலாக வுடைய சொற்கள் வந்து புணருமாயின் அவை இயல் பாகவே இருக்கும்.

பனை + நார் = பனைநார் (மெல்லினமெய்)
குதிரை + வண்டி = குதிரைவண்டி (இடையினமெய்)

(இ) பூ என்னும் பெயர்ச் சொல்லின் முன், வல்லின உயிர்மெய் வந்தது புணரும்போது அவ்வல்லெழுத்து மிகுதலேயன்றி அதற்கினமாகிய மெல்லெழுத்தும் மிகுந்து நிற்கும்.

பூ + செடி = பூச்செடி
பூ + கன்று = பூங்கன்று

(ஈ) அ, இ, உ என்னும் சுட்டுகளின் முன்னும் 'எ' என்னும் வினு எழுத்தின் முன்னும் உயிரும், யகரமும் வந்தால் வகர மெய் தோன்றும்.

i. அ + உயிர் = அவ்வுயிர்
இ + உடல் = இவ்வுடல்
உ + உடம்பு = உவ்வுடம்பு
எ + ஊர் = எவ்வூர்
} உயிர் வர வகரம் தோன்றியது

ii. அ + யானை = அவ்யானை
இ + யானை = இவ்யானை
உ + யானை = உவ்யானை
எ + யானை = எவ்யானை
} யகரம் வர வகரம் தோன்றியது

(உ) அ, இ, உ என்னும் சுட்டுகளின், முன்னும் 'எ' என்னும் வினா எழுத்தின் முன்னும் யகரம் ஒழிந்த மெய்கள் வரின் வந்த அவ் எழுத்துக்கள் மிகும்.

அ + கள்வன் = அக் கள்வன்
இ + மாடு = இம்மாடு
உ + வீதி = உவ்வீதி
எ + நாள் = எந்நாள்

## III மெய்முன் உயிர் புணர்தல்

(அ) மெய் எழுத்தை ஈற்றிலேயுடைய நிலைமொழியோடு, உயிர் எழுத்தை முதலாகவுடைய வருமொழி சேரும்போது, வருமொழி முதலில் உள்ள உயிர், நிலைமொழி ஈற்றில் உள்ள மெய்யோடு ஒன்று சேர்ந்து நிற்கும்.

வேல் + ஆயுதம் வேலாயுதம்
வரம் + அளித்தார் = வரமளித்தார்

(ஆ) தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்எழுத்தை ஈற்றிலே கொண்ட நிலைமொழியுடன், உயிரை முதலாகவுடைய வருமொழி சேரின் நிலைமொழியில் உள்ள மெய் இரட்டும்.

நல் + அரசு = நல்லரசு
பொய் + உரை = பொய்யுரை

## IV மெய் முன் மெய்புணர்தல்

(அ) ய், ர், ழ் என்னும் மூன்று மெய்யீற்று நிலைமொழிகளோடு வல்லின மெய்களை முதலாகவுடைய வருமொழிசேரின் வேற்றுமைப் புணர்ச்சியில் அவ் எழுத்துக்கள் மிகும். அன்றி, அவ் வல்லெழுத்துக்களுக்கு இனமாகிய மெல்லெழுத்துக்கள் உறழ்தலும் உண்டு.

நாய் + கால் = நாய்க்கால்
தேர் + கால் = தேர்க்கால்
ஊழ் + பயன் = ஊழ்ப்பயன்
} மிகுதல்

வேய் + குழல் = வேய்ங்குழல்
ஆர் + கோடு = ஆர்ங்கோடு
} உறழ்தல்

(ஆ) ய், ர், ழ், என்னும் மூன்று மெய்யீற்றுச் சொற்களோடு வல்லின மெய்கள் புணரும்போது அல்வழியில் இயல்பாகும்.

வேய் + சிறிது = வேய்சிறிது
வேர் + சிறிது = வேர்சிறிது
வீழ் + பெரிது = வீழ்பெரிது
பேய் + பூதம் = பேய்பூதம்
இகழ் + புகழ் = இகழ்புகழ்

பண்பு, உவமை, வினையெச்சத்தொடர்களில் அவை மிகும்.

மெய் + கீர்த்தி = மெய்க்கீர்த்தி
யாழ் + கருவி = யாழ்க்கருவி
போய் + சேர் = போய்ச்சேர்

(இ) ல், ள் என்னும் எழுத்துக்களை ஈற்றிலேயுடைய சொற்கள் வல்லினத்தோடு புணரும்போது பல மாற்றங்களடையும்

i கல் + குடம் = கற்குடம்
முள் + குறை = முட்குறை
} வேற்றுமையில் திரிந்தன

ii கல் + குறிது = கல்குறிது
முள் + சிறிது = முள்சிறிது
} அல்வழியில் இயல்பாயின

இவை திரிந்து கற்குறிது, முட்சிறிது என்றும் வரும்.

iii கல் + முனை = கன்முனை
முள் + முனை = முண்முனை
} வேற்றுமையில் திரிந்தன

இவை அல்வழியிலும் கன்மாண்டது, முண்மாண்டது எனத் திரியும்

iv விரல் + வலிது = விரல்வலிது
வாள் + வலிது = வாள்வலிது
} அல்வழியில் இடையினம் இயல்பாயிற்று

இவை விரல் வன்மை, வாள் வன்மை என வேற்றுமையிலும் இயல்பாகும்.

(ஈ) ண், ன் என்னும் எழுத்துக்களை ஈற்றிலேயுடைய சொற்கள் வல்லினத்தோடு சேரும்போது வேற்றுமையில் முறையே ட, ற ஆக மாறும்.

மண் + கலம் = மட்கலம்
பொன் + குடம் = பொற்குடம்

அல்வழியில் இவை இயல்பாகும்

மண் + பெரிது = மண்பெரிது
மண் + மாண்டது = மண்மாண்டது
பொன் + பெரிது = பொன்பெரிது
பொன் + மாண்டது = பொன்மாண்டது

## பயிற்சி 26

1. பகுபத உறுப்புக்கள் எவை? 'நடந்தனன்' என்னும் சொல்லில் அவ்வுறுப்புக்கள் அனைத்தும் இருக்கின்றன என்பதை விளக்கிக் காட்டுக.

2. 'ஐய, நாட்டின்கண் நிலவும் அமைதியீனத்தை நீங்கள் உணராததென்ன? குடிகளினது அன்பினாலன்றோ நீண்டகால அரசாட்சி செய்ய முடியும்'- இப் பகுதியில் வேற்றுமை ஏற்ற சொற்களை எடுத்து எழுதி, அவை எந்த எந்த வேற்றுமை உருபுகள் ஏற்றன என்பதைக் குறிப்பிடுக.

3. வினைத்தொகை, உவமத்தொகை, நான்காம் வேற்றுமை விரி, இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை என்பவற்றை உதாரணந் தந்து விளக்குக.

4. துவையல் உண்டான், நாட்டை வருத்தினான், கொவ்வை இதழ் என்பவை எவ்வெவ்வகை ஆகுபெயர்கள்? கால ஆகுபெயர், சினையாகுபெயர் என்பவற்றிற்கு ஒவ்வோர் உதாரணந் தருக.

5. விகாரப்புணர்ச்சி எத்தனை வகைப்படும்? ஒவ்வொன்றையும் உதாரணத்தால் விளக்குக.

6. புணர்த்தி எழுதுக.

காடு + அடைந்த + அவ் + அரசன் + தனது + அன்பிற்கு + உரிய + பத்தினியை + எண்ணி + எண்ணி + புலம்பினான்.

---

## மாதிரிகை வினாக்கள் 3

1. மேல்வருவனவற்றின் பொருள் விளங்க அவைகள் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக.

தடதடப்பு, வாடி வதங்கி, இன்னோரன்ன, சகடக்கால்போல, கோடரிக் காம்பு.

2. மேல்வருஞ் சொற்களின் கருத்தை எழுதுக :

கங்குகரை, முறுமுறுத்தல், கரதலாமலகம், புறந்தருதல்

3. மேல்வரும் வசனங்களில் உள்ள இடவெளிகளைப் பொருத்தமான சொற்களிட்டு நிரப்புக.

(அ) ——இமை——போல, தாய் தன் குழந்தையைப் பேணி வளர்த்தாள்.

(ஆ) அவன்—போலத் தந்திரமுள்ளவன்.

(இ) அவள்—போன்ற — காட்டிப் புன்முறுவல் செய்தாள்.

4. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள மரபுச்சொற்களின் கருத்தை எழுதுக :

(அ) மானமுள்ள பெற்றோர் சிலர், இழிசெயல் புரியும் மக்களாற் கரிபூசப் படுதலுமுண்டு.

(ஆ) ஒருவன் குடிவெறியினுற் தன் செல்வம் முழுவதையும் அழித்து, மனைவி மக்களை நடுத் தெருவில் விட்டுச் சென்றான்.

5. மேல்வருந் தருணங்களிற் பிரயோகிக்கக்கூடிய பழமொழிகளை எழுதுக:-

(அ) ஒருவருடைய வீட்டுக்கு அடிக்கடி போய் வருவதால் அன்பு குறையும்.

(ஆ) நன்மை செய்தவன் நன்மையடைவான், தீமை செய்தவன் தீமையடைவான்.

6. மேல்வரும் பகுதிகளிற் தடித்த எழுத்துகளிற் தரப்பட்டிருக்கும் சொற்கள் சிலேடையாக எவ்வெப் பொருள்கள் தருகின்றன ?

(அ) "செவ்வாய் சத்திர சிகிச்சை செய்யப்பட்டது"

(ஆ) "தங்கையே தமக்கு உதவியென்றிருந்தார்"

7. சங்கு, கதவு, புல்லு, நாடு, அஃது, பசு, கன்று, பாட்டு, வரகு, உயர்வு, கொள்ளு இவற்றில் உள்ள குற்றியலுகரச் சொற்களை எடுத்து எழுதி அவை எந்த எந்த இனத்தைச் சேர்ந்தன எனக் குறிப்பிடுக.

8. பற்பொடி, காடடைந்தான், பொன்னுருவம், பூங்கொம்பு. சோர்விலன், பொற்றட்டம் என்பவற்றைப் பிரித்தெழுதுக,

---

## மாதிரிகை விடை 3.

1 பொருள் விளங்க வசனங்களமைத்தல் :

தடதடப்பு : வயோதிபத்தினுற் தடதடப்பு ஏற்படுபவர்கள் கோலூன்றி நடப்பர்.

வாடிவதங்கி : பூஞ்செடிகள் தண்ணணீரின்றி வாடி வதங்கிப் பட்டன.

இன்னோரன்ன : கொலை, களவு, பொய், கள்ளுண்ணல், குருநிந்தை இவையும், இன்னோரன்ன பிறவும் பாவச் செயல்களாகும்.

சகடக்கால்போல: செல்வமும் வறுமையும் ஒருவருக்குச் சகடக்கால்போல மாறிமாறி வருவதாகும்.

கோடரிக்காம்பு: இராவணன் தனது தீச்செயல்களினால் தன் குலத்துக்குக் கோடரிக்காம்பானான்.

2 கருத்து எழுதுதல்:

கங்குகரை-எல்லை,-அளவு.

முறுமுறுத்தல்-குறை கூறுதல்.

கரதலாமகலம்-உள்ளங்கை நெல்லிக்கனி

புறந்தருதல்-பாதுகாத்தல்

3 இடைவெளி நிரப்புதல்;

(அ) கண்ணை இமை காப்பது போல, தாய் தன் குழந்தையைப் பேணி வளர்த்தாள்.

(ஆ) அவன் நரி போலத் தந்திரமுள்ளவன்.

(இ) அவள் முத்துப் போன்ற பற்களைக் காட்டிப் புன்முறுவல் செய்தாள்.

4 மரபுச் சொற்களின் கருத்து எழுதுதல்:

கரிபூசப்படுதல்-அவமானப்படுத்தப்படுதல்

நடுத்தெருவில்விட்டு-ஆதரிப்பார் எவருமின்றி விட்டு

5 பழமொழிகள்:

(அ) நித்தம்போனால் முற்றம் சலிக்கும்

(ஆ) தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

6 சிலேடைப் பொருள்:

(அ) செவ்வாய்-செவ்வாய்க்கிழமை, சிவந்த வாய்

(ஆ) தங்கையே-சகோதரியே, தமது கையே

7 சங்கு :-மென்றொடர்க் குற்றியலுகரம்.

நாடு :-நெடிற்றொடர்க் ,,

அஃது :-ஆய்தத்தொடர்க் ,,

கன்று :-மென்றொடர்க் ,,

பாட்டு :-வன்றொடர்க் ,,

வரகு :-உயிர்த்தொடர்க் ,,

8

| | | |
|---|---|---|
| பற்பொடி | =பல் | +பொடி |
| காடடைந்தான் | =காடு | +அடைந்தான் |
| பொன்னுருவம் | =பொன் | +உருவம் |
| பூங்கொம்பு | =பூ | +கொம்பு |
| சோர்விலன் | =சோர்வு | +இலன் |
| பொற்றட்டம் | =பொன் | +தட்டம் |

## பரீட்சை வினுக்கள்

### I

1. மேல்வருஞ் சொற்களே எதிரே கொடுக்கப்படும் அவ்வவற்றின் கருத்திற்கேற்பத் தேவையெனிற் திருத்தியெழுதுக :

| சொல் — கருத்து | சொல் — கருத்து |
|---|---|
| வழி — பாதை | பொழி — பெய் |
| வளி — தெரு | பொளி — கொத்து |
| சுழி — கோபி | வாழி — அம்பு |
| சுளி — வளைத்துவிடு | வாளி — வாழ்த்து |

2. மேல்வரும் கருத்தமைந்த சொற்கள், சில எழுத்துக்களின்றித் தரப்படுகின்றன. அவ் எழுத்துக்களை நிரப்பி எழுதுக :

| | |
|---|---|
| அலறி | — அ—து |
| ஒருவகைக் கூத்து | — கு—வை |
| சிவன் | — —ரன் |
| அப்படிப்பட்டவர் | — அ —ர் |
| கட்டு | — பி— |
| குமரி | — க— — |
| அழகு | — வ—மை |
| குளிர்மை | — —ண்மை |
| இசைப்பாட்டு | — ப— |
| மாலை | — —ண்ணி |

3. மேல்வரும் பகுதிகளைத் திருத்தி எழுதுக :
   (அ) ஏப்பை கையில் ஏந்திய அறுதலி முளகாய்க் கரியைச் சோத்தில் வாத்தாள்.
   (ஆ) முதலை அடையாளம் போட்ட மம்பெட்டி முதலியவை ரொம்ப நேத்தி.
   (இ) ஆம்பிளைப்பிள்ளை நல்லாப் படிச்சாத்தான் உலைச்சுச் சம்பாரிக்கலாம்.

4. மேல்வருஞ் சொற்கள் ஒவ்வொன்றையும் அதனதன் எதிர்ச் சொல்லுடன் ஒவ்வொரு வசனத்தில் அமைக்குக :

   உலோபி, இணே, பாலர், கனவு, சாதகம், நீதி.

5. தமிழ் இலக்கிய நூல்களில் மேலே கூறப்படுவன யாவற்றைக் கருதும் ?

   நானிலம், நான்மறை, ஐம்புலன், பஞ்சலோகம், அறுசுவை, ஐம்பெருங்காப்பியம், மூவரசர், முக்குற்றம், முத்தமிழ், இருவினே.

6. ''ஏன் அந்தப் பசுவை அடித்தாய் அஃது உனக்குச் சொந்தமானதா. யாருடைய பசுவென்று அறிவாயா. இங்கே நில்லாதே ஓடு''-இப்பகுதியில் உள்ள சுட்டு, வினச்சொற்களை எழுதுக.

## II

1. மேல்வருஞ் சொற்றொடர்களை, சந்தர்ப்பமுண்டாக்கி விளக்குக :

   கண்ணீரும் கம்பலையுமாய், கன்னங்கரேலென, உயர்வு தாழ்வின்றி, ஆய்ந்தோய்ந்து பாராது, கங்குகரையற்று

2. மேற்கூறப்படுவனவற்றிற் காணப்படும் உவமைகளின் நயத்தைத் திறம்பட விளக்குக :

   (அ) கும்பிடப்போன தெய்வம் குறுக்கிட்டதுபோல.
   (ஆ) கருங்காலிக் கட்டைக்கு வெள்ளிப் பூண் கட்டியது போல
   (இ) ஊமை கண்ட கனாப்போல.

3. மேல்வரும் முதுமொழிகளை எந்தெந்தச் சந்தர்ப்பங்களிற் பிரயோகிக்கலாம் ?

   (அ) ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா ?
   (ஆ) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
   (இ) ஒரு பானை சோற்றுக்கு ஒருசோறு பதம்
   (ஈ) அற்பனுக்குப் பவுள்சுவந்தால் அர்த்தராத்திரியிற் குடைபிடிப்பான்.

4. மேல்வரும் சொற்களுக்கு எதிர்ப்பாற்சொற்கள் தருக :

   புதல்வன், மணுட்டி, நம்பி, வேலைக்காரன், ஆண்டவன், சிறுவன்.

5. மேல்வரும் மரபுச்சொற்களை, கீறிட்ட இடங்களிற் பொருத்தமுற இசைத்து எழுதுக :

   கம்பிநீட்டல், குருட்டுப் படிப்பு, கங்கணங்கட்டுதல் கையெடுத்தல், கண்வளர்தல்.

   (அ) இக்கால மாணவரின் — அவர்களின் பிற்காலசீவியத்தைப் பாதிக்கும்.
   (ஆ) நற்கிரிகைகளற்றவனுய் இருந்துகொண்டு தெய்வங்களை — பலனற்றதாகும்.
   (இ) கடுங்காவலில் வைக்கப்பட்ட மறியற்காரன் — என்ற வதந்தி எட்டுகிறது.
   (ஈ) ஊக்கமுடைய ஒருவன் தான் எடுத்த முயற்சியை முடிக்க — நிற்பான்.
   (உ) என் ஆரமுதே— !

6. ஓடினுன், விழுந்தது, சிரித்தோம், கண்டனர், கற்பர் — இவற்றிற்கு பகுதி, விகுதி, இடைநிலை என்பன கூறுக.

## III

1. அம்பு, காடு, பாம்பு, யானை, சூரியன் என்னும் பொருள் பயக்க ஒவ்வொன்றிக்கும் ஐவைந்து சொற்கள் எழுதுக.

2. கனவான், பாலன், தூர்த்தன், பண்டிதன், பத்தா இவற்றை எதிர்ப்பாலாக்கி வாக்கியங்களில் அமைக்குக.

3. மேல்வருஞ் சொற்களிற் பிழைகள் உளவேல் திருத்தி எழுதுக:
   பிராந்து, சொற்பனம், மம்பட்டி, தீவட்டி, கோர்வை பூர்க்கும்.

4. மேல்வருஞ் சொற்கள் ஒவ்வொன்றும் மூன்று பொருள் தரக் கூடியதாக அவற்றை வாக்கியங்களில் அமைக்குக.
   உரம், மெய், மதி, போர்.

5. விகடகவி, பாஞ்சசன்னியம், அரங்கேற்றம், முத்தமிழ் என்னும் சொற்களை, அடியிற் கீறிடப்பட்ட இடங்களில் பொருத்தமுற வைத்து நிரப்பி எழுதுக.
   (அ) கம்பர் தாம்பாடிய இராமாயணத்தை வித்துவான்கள் கூடியசபையில்---செய்தார்.
   (ஆ) ---நூலாகச் சிலப்பதிகாரம் திகழ்கின்றது.
   (இ) காளியின் அருள் பெற்ற பின் தென்னுலிராமன்--- ஆனுன்.
   (ஈ) ஆயிரம் வலம்புரிச்சங்குகள் சூழ நடுவே இருப்பது--

6. அரிசி, எருது, கம்பர், மரங்கள், வறிஞர், நாங்கள், நீவிர்--என்பவற்றிற்குத் திணை, பால், எண், இடம் என்பவற்றை எழுதுக

## IV

1. கீறிட்ட இடங்களிற் பொருத்தமான சொற்களைவைத்து எழுதுக. (காட்டில் மிருகேந்திரனுக்குப் பட்டாபிடேகம் நடைபெற்றபோது பிராணிகளின் ஆரவாரம்)

   "—முக்காரம் போட, --கனைக்க, --கதற, --உறும, --ஊளையிட,--பிளிற,--அலற, --கரைய, --கூவ, --கொக்கரிக்க, --அகவ, --பேச, --சொல்ல, --ரீங்காரம்செய்ய மிருகேந்திரனுக்குப் பட்டாபிடேகவிழா நடைபெற்றது"

2. எச்சந்தர்ப்பங்களில் மேல்வரும் பழமொழிகளை எடுத்தாளலாகும்?
   (அ) எட்டாப்பழத்திற்குக் கொட்டாவி விட்டென்ன?
   (ஆ) பட்டகாலிலே படும், கெட்டகுடியே கெடும்.
   (இ) தொட்டிலிற் பழக்கம் சுடுகாடு மட்டும்.

3. மேல்வரும் தொடர்களில் அமைந்த சிலேடையை விளக்குக:
தலைவிதிவசம், காசாலேசா, தாவடி, சந்தனஞ்சும்மா வரிற் பூசலாம்.

4. தலைப்பாரம், கைகலந்தன, குட்டிக்கரணம், தட்டிக்கழித்தான், சாவுமணி அடிக்கப்பட்டது, தலையெடுத்தது.
இச்சொற்ருெடர்களுள் பொருத்தமானஒருசொற்ருெடரைத் தெரிந்து அடியிற் கீறிட்ட இடத்தில் வைத்து நிரப்பி எழுதுக:

இராவணன் உதித்ததால் அரக்கர்குலம்——, ஈசன் அருளிய வரத்தால் இராவணனுக்கு——அதிகரித்தது—. கற்பின் செல்வியாகிய சீதையை மணக்க——அடித்தான். அடாதென அமைச்சர் கூறிய அறிவுரைகளையெல்லாம்——. இதன் பயனுகவே இராமர் படையும் இராவணன் படையும்—— இறுதியில் இராமபிரானுல் இராவண ஆட்சிக்குச் ——

5. மேல்வரும் பகுதிகளிலே அமைந்துள்ள உவமைகளை எடுத்துக் காட்டி அவற்றின் கருத்தையும், பொருள் விளக்கத்துக்கு உபயோகமாகும் விதத்தையும் விளக்குக.

(அ) மேகநாதன் இறந்தபோது அரக்கர்படை அடியற்ற மரம்போல அலைவுற்றது.

(ஆ) தாரகை நடுவண் தண்மதிபோலத் தோழியர் புடைசூழத் தலைவி வீற்றிருந்தாள்.

(இ) யுத்தகளத்திலே 'கன்னன் இறந்தான்' என்றதைக் கேட்டதும் குந்தி கன்றையிழந்த கறவைபோலத் தேம்பித் தேம்பி அழுதாள்.

6. மூன்று பெயரெச்சமும் மூன்று வினையெச்சமும் எழுதி, அவற்றைத் தனித்தனி வசனத்தில் அமைத்துக்காட்டுக.

## V

1. மேல்வருஞ் சொற்ருெடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவை ஒவ்வொன்றினையும் ஒவ்வொரு வாக்கியத்திலமைத்து எழுதுக :

(அ) மானபங்கம் (ஆ) கோலாகலம்
(இ) பராமுகம் (ஈ) இடித்துரைத்தல்
(உ) மந்தமாருதம்

2. மேல்வருஞ் சோட்டுப் பதங்களை அவற்றின் பொருள் வேறுபாடு தோன்றத்தக்கதாக வாக்கியங்களில் அமைத்தெழுதுக:
ஆணை, ஆனை; பிரை, பிறை; மணை, மனை.

3. மேல்வருவனவற்றின் இலக்கணைப் பொருள் (Figurative) நன்கு புலப்படுமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

(அ) திரிசங்கு சுவர்க்கம், (ஆ) முயற்கொம்பு
(இ) பகீரதப் பிரயத்தனம். (ஈ) நட்டாற்றில்விடுதல்

4. மேல்வருஞ் சொற்களை வைத்து இரு பொருள்தரத் தனித் தனியே வசனம் அமைக்குக :

(அ) அகம் (ஆ) அடி (இ) ஆறு

5. மேல்வருஞ் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வரத் தனித்தனி வசனம் அமைக்குக :

(அ) கூடு (ஆ) படி (இ) பார்

6. இடைநிலைகள் எத்தனை வகைப்படும்? உதாரணமூலம் விளக்குக.

## VI

1. மேல்வரும் வாக்கியங்களில் வரும் ஆண்பாற் பெயர்களைப் பெண்பால்களாகவும், பெண்பாற் பெயர்களை ஆண்பால்களாகவும் மாற்றி வாக்கியத்தை ஏற்றபடி திருத்தி எழுதுக :

(அ) குலமகட்கழகு தன் கணவனைப் பேணுதல்,
(ஆ) எனது தோழன் நடிகனுகி சேவகன் வேடம் பூண்டு திறம்பட நடித்தான்.

2. மேல்வரும் வசனங்களிற் கீறிட்ட சொற்களுக்கு எதிர்ப் பொருட் சொற்கள் வைத்தெழுதுக :

(அ) காணுதை விடத்து பிறரை இகழ்ந்து பேசலாகாது.
(ஆ) பாவிகள் மறுமையில் நரகத் துன்பத்தை அனுபவிப்பர்.

3. மேல்வரும் பகுதியிற் கீறிட்ட சொற்களுக்கு ஒத்தபொருள் குறிக்கும் வேறு சொற்கள் வைத்து எழுதுக :

(அ) ஆறு, தடாகம், ஓடை, மடு முதலியவைகளிலே நீராடுதல் நல்லது.
(ஆ) அதிதியானவன் வேற்றூரினின்றும் வழிப்போக்கனுய் அன்னம் முதலிய உதவி பெறும்பொருட்டு வருபவன்.

4. பிழைகளைத் திருத்தி எழுதுக :

(அ) பிரபுவின் மாழிகைக்குப் பக்கத்தை ஓர் குடிசையில் ஒரு ஏழை வாள்ந்துவந்தது.
(ஆ) அற்ப்ப இக்கள் பொளுதை வீணாக்காமல் உழைப்பதால் தமக்கும் பிறற்கும் நன்மையை உண்டாக்கின்றன.

5. இரு பக்கத்துத் தொடர்களையும் பொருட் பொருத்தமுற இணைத்து வசனங்கள் அமைக்குக :

| | |
|---|---|
| (அ) ஐம்பூதம் | சூரியன், சந்திரன், அக்கினி என்பனவாம் |
| (ஆ) பிரமச்சாரி என்பவன் | முனிவர்கள் வசிக்குமிடம் |
| (இ) ஆச்சிரமம் என்பது | கட்டுக்கதை எனப்படும் |
| (ஈ) நம்பமுடியாத கதை | நிலம், நீர், காற்று, ஆகாயம் |
| (உ) முச்சுடராவன | கற்று விரதங்காத்து விவாகமின்றி இருப்பவன் |

6. மேல்வருவனவற்றைப் புணர்த்தி எழுதுக :

[1] கண் + ஓட்டம் [2] மாசு + அற்றவள்
[3] மரம் + வேர் [4] சோலை + அழகு
[5] பொன் + சுரங்கம் [6] மண் + பாத்திரம்
[7] வீடு + யாது [8] குரங்கு + இனம்

## VII

1. கோடரிக்காம்பு, பல்லவிபாடுதல், நடைப்பிணம், கயிறுதிரித்தல் என்பவற்றின் இலக்கணைப்பொருள் [Figurative] நன்கு புலப்படுமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

2. பார், மடி, பிணி என்னும் சொற்கள் பெயராகவும் வினையாகவும் வரத் தனித்தனி வசனங்கள் எழுதுக.

3. தோன்றுத்துணை, பேரார்வம், கைம்மாறு, சரணுகதி, பிராயச்சித்தம் என்னும் சொற்றொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு ஒவ்வொன்றினையும் ஒவ்வொரு வாக்கியத்தில் அமைத்து எழுதுக.

4. (அ) சீயம் பசிவந்தவிடத்து அணித்தேபடுத்துறங்கும் குள்ள நரியை ஏறிட்டுப்பாராது குஞ்சரத்தைத் தேடுகிறது.

(ஆ) "மகன் பாம்பு கடித்து இறந்தான்" என்று கேட்டதும் சந்திரமதி எவ்வளவுதுன்பம் அடைந்திருப்பாள்?--இப் பகுதியில் கீறிட்ட சொற்களுக்கு ஒத்த பொருள் குறிக்கும் வேறு சொற்கள் வைத்து எழுதுக.

5. வண்மை, வன்மை ; பொரி, பொறி ; வளமை, வழமை ; என்னும் சோட்டுப் பதங்களின் பொருள் வேறுபாடு தோன்றத்தக்கதாக அவற்றை வாககியங்களில் அமைத்து எழுதுக.

6. "அரசினர் காடுகளை அழித்து, நெல்வயல்களாக்கிக் கமத் தொழிலை விருத்தி செய்து வருகின்றனர்." இவ்வசனத்தைச் செயப்பாட்டு வசனமாக மாற்றி எழுதுக.

## VIII

1. "தமையன் மனைவியைக் குருபத்தினியாகவும், தம்பி மனைவியை மருமகளாகவும் பிறர் மனைவியரைத் தாயும், தமக்கையும், தங்கையுமாகவும் பாவித்தல் வேண்டும்"—இவ் வாக்கியத்தில் உள்ள ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாகவும், பெண்பாற் பெயர்களை ஆண்பாலாகவும் மாற்றி வாக்கியத்தை ஏற்றபடி திருத்தி எழுதுக.

2. (அ) "முயர்ச்சியுடையார் இகட்சியடையார்"
   (ஆ) கிணத்துத் தவக்கைக்கு நாட்டுவளப்பமேன் ?
   (இ) ஞாயிற்றுக்கிழமை காலமை அவன்கள் காச்சலாய்க் கிடந்தான்கள், —இப்பகுதிகளில் உள்ள பிழைகளைத் திருத்தி எழுதுக.

3. ஐயம், கவி, அரவம் என்னும் சொற்கள் இரு பொருள்தரத் தனித்தனியே வசனங்கள் அமைக்குக.

4. (அ) வள்ளல் எனப்படுபவன் ; எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்பவை ; விதவை என்பாள் ; கடவுள் இல்லை என்பவன்.
   (ஆ) புருடனை இழந்தவள் ; நாத்திகன் எனப்படுவான் வரையாது கொடுப்பவன் ; நால்வகை அளவைகளாம்;
   (அ) பகுதியில் ஒரு தொடரும் (ஆ) பகுதியில் ஒரு தொடருமாக இரு தொடர்களைப் பொருட் பொருத்தமுற இயைத்து வசனங்கள் அமைக்க.

5. (அ) நீதியும் தருமமும் இன்பமும் கீர்த்தியும் பெருமையும் உறவும் வென்றியும் செல்வமுடையவர்க்கே உண்டு.
   (ஆ) பகலில் வரும் அதிதிக்குப் போசனம் கொடாத பாவத்தினும் இரவில் வந்த அதிதிக்குப் போசனம் கொடாத பாவம் எட்டு மடங்கு அதிகம்—இவ் வசனங்களிற் கீறிட்ட சொற்களுக்கு எதிர்ப்பொருட் சொற்கள் வைத்தெழுதுக.

6. காடு சென்றான், இராவணன் மனைவி, மலையருவி, என் கால்கள், மரம் தறித்தான்—இவ் வேற்றுமைத் தொகைகளை, வேற்றுமை விரிகளாக மாற்றி எழுதுக.

## IX

1. மேல்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் இரு பொருள்தர வாக்கியங்களில் அமைக்குக :

   இடி, பதி, பறி, பெருக்கு, ஓடு,

2. ஒற்றுமை, நீண்ட, சாதகமான, இயற்கை, கற்றார், ஈரம், புதுமை, மங்கலம்—இவைகளின் எதிர்ப்பதங்களை எழுதுக.

3. ஒருவொரு சொற்றொடருக்கும் இணையான ஒவ்வொரு தனிச் சொல் எழுதுக :

(அ) நீதி மன்றத்தில் வழக்குகளை விசாரணைசெய்து தீர்ப்பளிப்பவர்.
(ஆ) கலியாணம் செய்து கணவனை இழந்தவள்.
(இ) தாயினுடைய சகோதரனின் மகள்.
(ஈ) உற்றார் உறவினர் முதலிய ஆதரிப்பார் எவருமில்லாதவன்.

4. மேல்வரும் ஒவ்வொரு பதத்துக்கும் அதே பொருள் தரும் வேறு மூன்று சொற்கள் எழுதுக :

தேன், உலகம், மனைவி, வீடு, சந்திரன், சமுத்திரம்

5. மேல்வரும் சொற்றொடர்களை அமைத்து வசனங்களாக்குக.

(அ) பரிதி முன் பனிபோல
(ஆ) வாயுவேகம் மனோவேகம்
(இ) நாளொருவண்ணம் பொழுதொருமேனியாய்
(ஈ) உள்ளங்கை நெல்லிக்கனி

6. ஆகு பெயராவது யாது ? காளை வந்தான், ஊர் திரண்டது, வற்றல் உண்டான், தாமரைபோன்ற முகம், கார் அறுத்தான் — என்பவை எவ்வெவ் ஆகுபெயர்கள் எனக் கூறுக.

## X

1. கீழ்வருஞ் சொற்கள் ஒவ்வொன்றையும் வைத்து ஒவ்வொரு வாக்கியம் எழுதுக :

(அ) உலகம்
(ஆ) விழுந்
(இ) பெய்தது
(ஈ) பஞ்சம்
(உ) உதவாது
(ஊ) சிங்களவர்
(எ) பலவகையான
(ஏ) விடுதலை
(ஐ) இனிமையாக
(ஒ) போல

2. பின்வருஞ் சொற்றொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவை ஒவ்வொன்றினையும் ஒவ்வொரு வாக்கியத்தி லமைத்தெழுதுக.

(அ) ஆருயிர்
(ஆ) நடைப்பிணம்
(இ) அளப்பரிய
(ஈ) உருவச்சிலை
(உ) புனைந்துரை
(ஊ) இத்துணை
(எ) செய்வினை
(ஏ) கருங்குழல்
(ஐ) எதிர்மாற்றம்
(ஒ) இன்சுவை

3. பின்வரும் வாக்கியங்களில் உள்ள பிழைகளைத் திருத்திஎழுதுக.

(அ) என்றை புத்தகங்களை யாரோ எடுத்துக் கொண்டு போயிட்டான்.

(ஆ) ஒரு காட்டில் ஒரு சிங்கமொன்றும் கழுதையும் சினேகமாயிருந்தது.

(இ) கரும்பலகையில் எழுதுவதற்கு வெண்கட்டியைப் பாவிப்பார்கள்.

(ஈ) கன்னனைப்போல ரெம்பக்குடுக்க நம்ம உலகத்தில் ஒருவருமில்லை.

(உ) பளம் நழுவிப் பாலுக்கை விளுந்திரிச்சு.

4. கீழ்வரும் சொற்கள் ஒவ்வொன்றும் மூன்று பொருள் தரக் கூடியதாக அவற்றை வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

அரை, படி, கடை, அரி, பணி

5. முத்தொழில் புரியும் கடவுளரும் மூவுலகத்தோரும் மெச்சும் நான்மறையாளர் வாக்கைத் திரிகரண சுத்தியுடன் ஏற்றல் வேண்டும்---இப்பகுதியிற் கீறிட்ட சொற்களாற் குறிக்கப் படுபவை யாவை ?

6. மேல் வருவனவற்றை, இயல்புப்புணர்ச்சி, விகாரப்புணர்ச்சி என்னும் தலைப்புகளிற் பிரித்து எழுதுக :

அரையடி, முரசொலி, மரம்வளர்ந்தது, வேற்படை, ஊர்யாது, முட்செடி, கழல் பணிந்தான், கற்கைநன்று.

ஆசீர்வாதம் அச்சகம், 32, கண்டி வீதி யாழ்ப்பாணம்—1965

தமிழ்

துக.
ண்டு

தயும்

ளையப்

த்தில்

தரக்
ுக :

மச்சும்
ஏற்றல்
றிக்கப்

ணர்ச்சி

ற்படை,
க நன்று.

–1965

Sharmila Industrie
PALALY ROAD, KANDARMADAM, JAF